
3008

# திசைகள்


01.08.1989 மலர் 2. இதழ் 3

16.08.1989 மலர் 2. இதழ் 4.

JL
1989.20.
127078



தமிழரசு
TAMARAI
1-8-1989 ரூ.1



சென்னை, எழும்பூர் மண்டல கண் மருத்துவ இயல் நிலையத்தில் ரூ.20 இலட்சம் மதிப்புள்ள நவீன கருவிகளை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 14.7.89 அன்று தொடங்கி வைத்தார்.



# தமிழரசு


திருவள்ளுவர் ஆண்டு 2020


சுக்ல - ஆடி - 17

மலர்:20 இதழ்:3

1-8-1989


## இந்த இதழில்...


| | |
|---|---|
| திட்டங்களின் பலன்கள் விரைவாக மக்களுக்குப்போய்ச் சேர வேண்டும்... | 2 |
| மதுரைமாவட்டத்தில் முதல்வர் தொடங்கி வைத்த முத்தான திட்டங்கள்... | 9 |
| தமிழகம் தொழில் பூமியாக... | 10 |
| மாநிலத் திட்டக் குழு... | 11 |
| 'தாமரை' துவக்க விழா... | 13 |
| இராமநாதபுரம் மாவட்டத்தில் முதல்வர் நிகழ்ச்சிகள் ... | 17 |
| உரைவேந்தர் ஒளவை துரைசாமி... | 21 |
| கைவண்ணம் இங்கே கண்டோம்... | 24 |
| வெண்பாப் போட்டி ... | 26 |
| கண்ணும் கடமையும்... | 33 |
| இந்நாட்டுப் பெண்ணினம் என்றும் கடமைப்பட்டிருக்கிறது... | 35 |
| பெரியார்மாவட்டம்:பல்துறைப் பணிவிளக்க முகாம்... | 37 |
| படமும் செய்தியும்... | 38 |
| காமராசர் பிறந்த நாள் கற்றோர்க்குச் சிறந்த நாள்... | 41 |
| கதர் கிராமத் தொழில்... | 43 |
| மனிதநேயத்துடன் அரசு ஊழியர்க்கு அளிக்கப்பட்ட சலுகைகள்... | 45 |
| தமிழினத்தின் ஒற்றுமையே தகுந்த பரிசாக அமையும்... | 48 |

## முதுநிலையில் உள்ள அரசுப் பணியாளர்கள் குறை நீங்கப் புதிய ஊதிய உயர்வு நிர்ணயம்

மத்திய அரசுக்கு இணையாக ஊதிய விகிதங்கள் மற்றும் அகவிலைப்படி ஆகியவைகள் வழங்க வேண்டும் என்ற நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றிய இந்த அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ 400 கோடி கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளது.

அடிப்படை ஊதிய உயர்வு குறைந்த பட்சம் ரூ 100 ஆகவும், மொத்தத்தில் குறைந்த பட்ச உயர்வு (படிகள் மற்றும் இடைக்கால நிவாரணம் உட்பட) சுமார் ரூ 185 என்ற அளவிற்கும் உயர்ந்துள்ள போதிலும், பணியில் முதுநிலையில் உள்ள ஒரு சிலருக்குப் புதிய ஊதிய விகிதங்களில் தங்களின் பணிக்காலத்திற்கு ஏற்ற ஊதிய பலன் கிடைக்கவில்லை என்ற குறைபாடு இருந்தது.

இந்த அளவிற்கு நீண்ட காலக் கோரிக்கையை நிறைவேற்றும் போது, அரசு அலுவலர்களிடமும் முழு மனநிறைவு ஏற்பட வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் குறைந்த பட்ச அடிப்படை ஊதிய உயர்வு ரூ 100 ல் இருந்து ரூ 150 ஆக உயர்த்துப் படுகிறது.

குறைந்த பட்ச அடிப்படை ஊதிய உயர்வு ரூ 150 ஆக உயர்த்தியதனால், மொத்த குறைந்த பட்ச ஊதிய உயர்வு (படிகள் மற்றும் இடைக்கால நிவாரணம் உட்பட) ரூ 185 ல் இருந்து ரூ 250 ஆக உயரும்.

1984 ல் நான்காவது ஊதியக் குழுவின் பரிந்துரையைக் கடந்த கால அரசு ஏற்ற போது குறைந்த பட்ச உயர்வு ரூ 30 ஆக இருந்தது.

தற்போது குறைந்த பட்ச உயர்வு ரூ 150 ஆக அமைக்கப்படுகிறது.

இஃதன்னியில் அகவிலைப்படி உயர்வும் தரப்பட்டுள்ளது.

இந்த குறைந்த பட்ச அடிப்படை ஊதிய உயர்வினால் அரசுக்கு ஆண்டொன்றுக்குக் கூடுதலாக ரூ 21.75 கோடி செலவாகும்.

இதனை அரசு அலுவலர்கள் மேலும் மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள் என நம்புகிறேன்.

-இவ்வாறு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார் (19.7.89).



# திட்டங்களின் பலன்கள் விரைவாக மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும்!

சென்னை-600 008.
12-20-78

## மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் தொடக்கவுரை

அமைச்சர் பெருமக்களே, தலைமைச் செயலாளர் அவர்களே, அரசுத் துறை அதிகாரிகளே, மாவட்ட ஆட்சித் தலைவர்களே, உங்கள் அனைவரையும் இந்த கூட்டத்தில் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

கடந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு ஏப்ரல் திங்கள் 15, 16 தேதிகளில் நடைபெற்றது; அந்த மாநாட்டைத் தொடங்கிவைத்துப் பேசிய போது, புதிய அரசு பொறுப்பேற்ற 75 நாட்களுக்குள் மாநாடு கூட்டப்பட்டிருந்தது என்று குறிப்பிட்டேன். அந்தக் குறுகிய காலத்திற்குள்ளாகவே "சொன்னதைச் செய்வோம்; செய்வதைச் சொல்வோம்" என்பதற்கேற்ப தேர்தல் வாக்குறுதிகளில் பலவற்றை நாம் நிறைவேற்றியிருந்ததையும், வரவு-செலவுத் திட்டத்தில் புதிய திட்டங்கள் பலவற்றை அறிவித்திருந்ததையும் சுட்டிக் காட்டினேன். அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதில் உங்களுடைய ஆர்வமும் உற்சாகமும் கலந்த ஒத்துழைப்பு தேவை என்று கேட்டுக் கொண்டேன். வறட்சி நிவாரணப் பணிகளுக்கு முதன்மையும் முக்கியத்துவமும் கொடுக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்திக் கூறினேன்.

கடந்த மாநாட்டுக்குப் பின்னர் மூன்று திங்கள் இடைவெளிக்குப் பிறகு இந்த மாநாடு கூட்டப்பட்டுள்ளது. இந்த இடைக்காலத்தில் அரசு நிதி நிலை அறிக்கையில் அறிவித்திருந்த திட்டங்களில் எல்லாவற்றுக்குமே அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. வறட்சி நிவாரணத் திட்டங்களுக்காக, குறிப்பாக குடிநீர் வழங்குதல், வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல் ஆகியவற்றுக்காக நிதி



ஒதுக்கீட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டிருந்த சமூக பாதுகாப்பு, சமூக நலத் திட்டங்களுக்காக விரிவான ஆணைகளும் பிறப்பிக்கப்பட்டுவிட்டன. கடந்த இரண்டு மாதங்களாக நானும் நமது அமைச்சர்களும் பல மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்துள்ளோம். எங்களுடைய சுற்றுப்பயணங்களின் போது உங்களில் பலரைச் சந்திக்கவும், அலுவலர்களையும் பொது மக்களையும் பரவலாகச் சந்தித்து திட்டங்களை நிறைவேற்றுவதில் உள்ள நிலைமையையும், முன்னேற்றத்தையும், குறைபாடுகளையும் மதிப்பிடவும் வாய்ப்பு கிட்டியுள்ளது.

தலைமைச் செயலாளர் தனது தொடக்க உரையில் நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள விஷயங்களை அறிமுகப் படுத்தியுள்ளார். இவையாவன: வறட்சி நிவாரணப் பணிகள், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், கொள்முதல், பொது விநியோகம், சமூகப்பாதுகாப்பு—சமூக நலத் திட்டங்கள், சிறு சேமிப்பு, தொழில் அனுமதிகள், கள்ளச் சாராய ஒழிப்பு, திரைப்படத் துறை தொடர்பான சட்டங்கள், மோட்டார் வாகனச் சட்டங்கள், மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக்ஷா, மகளிர் நல்வாழ்வுத் திட்டங்கள், ஏழைகளுக்கு இலவச வேட்டி/சேலை வழங்குதல். இவற்றில் மிகவும் முக்கிய மானவற்றைப் பற்றியே எனது தொடக்க உரையில் குறிப்பிட விரும்புகிறேன்.

1989ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலேயே குடிநீர் வழங்குவதற்காக அரசு ரூ. 23.31 கோடி ஒதுக்கியது. இதில் 5,000 ஆழ்குழாய்க் கிணறுகள் தோண்டுவதற்கு மட்டும் ரூ. 12.5 கோடி ஒதுக்கப்பட்டது. ஆழ்துளைக் கிணறுகள் தோண்டும் பணியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் மற்றும் அலுவலர்களுடன் அடிக்கடி கலந்து பேசி மதிப்பீடு செய்து வருகிறோம். ஜூன் மாத இறுதியில் 4,523 ஆழ்துளைக் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. குடிநீர் வடிகால் வாரியம், எஞ்சியுள்ளவற்றை செப்டம்பர் இறுதியில் முடித்து விடுவதாக உறுதியளித்துள்ளது. மேலும், அதன் வழக்கமான திட்டத்திலும், சிறப்புத் திட்டத்தின்கீழும் 9,850 குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் பொறுப்பு குடிநீர் வடிகால் வாரியத்துக்கு உள்ளது. இப்படி வறட்சி நிவாரணப் பணிகளையும், வழக்கமான திட்டங்களையும், சிறப்புத் திட்டங்களையும் குறித்த காலத்தில் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு குடிநீர் வடிகால் வாரியத்தைச் சார்ந்தது தான் என்றாலும், அப்பணியை கண்காணிக்கும் பொறுப்பில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும் முக்கிய பங்கை பெறுவர். குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளுடன் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அன்றாட அடிப்படையில் தொடர்பு வைத்து குடிநீர் திட்டங்கள் அனைத்தையும் முனைப்பாக செயல்படுத்த வேண்டும். திட்டங்களை நிறைவேற்றுவதில் இடர்பாடுகள்



ஏற்படுமானால் அவற்றை மாவட்டத் தலைவர்கள் நீக்க வழி வகை செய்ய வேண்டும். ஆழ்துளைக் கிணறு தோண்டும் பணி எல்லா வகையிலும் நிறைவு பெறுவதில் நாமதம் ஏதும் ஏற்படாதவாறு கவனித்துக் கொள்வது மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலையாய பொறுப்பாகும்.

கடந்த காலத்தில் புதிதாகத் தோண்டப்பட்ட பல கிணறுகள் ஒரு சில ஆண்டுகளுக்குள்ளாகவே வறண்டு போய்விட்டன என்பது பல இடங்களில் தெரிய வருகிறது. இதற்கான காரணங்கள் என்ன என்பதை ஆராய்ந்து அறிய வேண்டும். தெரிந்தெடுக்கப்பட்ட இடம் சரியில்லையா, அல்லது கிணற்றின் ஆழம் போதாதா என்று கண்டறிய வேண்டும். தற்போது நிறைவேற்றப்படுகிற திட்டங்களின்கீழ் தோண்டப்படுகிற கிணறுகளில் நிரந்தரமாக தண்ணீர் கிடைக்க முயல வேண்டும்.

ஆழ்துளைக் கிணறு தோண்டுவது போக குடிநீர் வழங்கும் திட்டத்தின்கீழ் கிணறுகளை ஆழப்படுத்துதல், ஏற்கனவே இருக்கிற ஆழ்துளைக் கிணறுகளைச் சுத்தப்படுத்துதல், லாரிகள் மூலம் குடிநீர் வழங்குதல், குடிநீர் வழங்கி வருகிற பழைய திட்டங்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளைச் சரிபார்த்தல், நகர்ப்புறங்களுக்கு ஜெனரேட்டர்கள் வாங்குதல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்தகைய திட்டங்களில் முன்னேற்ற வேகம் மேலும் அதிகரிக்க வேண்டும். இவ்வகை பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ. 10.81 கோடி ஆகும். ஜூன் மாதம் 30ஆம் தேதிவரை ரூ. 3.62 கோடி செலவிடப்பட்டுள்ளது. நிகழ்ச்சி நிரல் குறிப்புகளில் ஒவ்வொரு திட்டத்திற்கும் ஒவ்வொரு மாவட்டத்திலும் அனுமதிக்கப்பட்ட தொகை எவ்வளவு, செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்ற விவரங்கள் தரப்பட்டுள்ளன. இவைபற்றி தொடர்ந்து விவாதிக்கும்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் செலவிடப்பட்ட அளவையும், அது குறைவாக இருந்தால் அதற்கான காரணத்தையும் கண்டறியலாம்.

விவசாய வேலைகள் குறைந்துள்ள கோடை காலத்தில் வேலை வாய்ப்புகளை உருவாக்கி நிவாரணம் அளிப்பது மிகவும் முக்கியமாகும். ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் இவ்வாண்டுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகையை முழுமையாக செலவிட காலவரையினை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒவ்வொருவரும் குறிப்பிட்டு அதன் அடிப்படையில் செயல்பட வேண்டும். இந்தக் கால எல்லை 1989 அக்டோபர்–டிசம்பர் திங்களைத் தாண்டக் கூடாது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், சுய



வேலை வாய்ப்புக்கு துணைபுரியும் பெரியதோர் மற்றுமொரு திட்டமாகும். இதிலும் விரைவான முன்னேற்றம் உருவாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முனைப்பாகச் செயல்பட வேண்டும். இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுபவர் யார் யார் என்பதைத் தெரிவு செய்யும் பணி முடிந்துவிட்டதா என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் இருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன், கடன், மானியம் வழங்குவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் என்ன? இப்பணிகளில் தாமதம் ஏற்பட்டிருப்பின் அதற்குக் காரணங்கள் யாவை என்றும் அறிய விரும்புகிறேன்.

கொள்முதல், பொது விநியோகம், இலவச ஐந்து கிலோ அரிசி வழங்கும் திட்டம் இவை வறட்சி நிவாரண பணியோடு தொடர்புள்ள அம்சங்களாகும். நிகழ்ச்சி நிரல் குறிப்புகளில் காண்பது போல சம்பா லெவி கொள்முதல் நிறைவு தருவதாக இல்லை. 36,693 டன் அளவுக்குத்தான் லெவி கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. லெவி கொள்முதலை அதிகப்படுத்த நெல் போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவதிலும், ஏனைய கட்டுப்பாடு விதிகளை நடைமுறைப்படுத்துவதிலும், தமிழ்நாடு உணவுப் பொருள் வாணிபக் கழகத்துடன் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முழுமையாக ஒத்துழைக்க வேண்டும்.

நியாயவிலைக் கடைகள் பற்றிய புகார்கள் மாநிலத்தில் சில பகுதிகளிலிருந்து வந்து கொண்டிருக்கின்றன. நியாய விலைக் கடைகள் முறையாக நடைபெற வேண்டும் என்பதில் நாம் மிகவும் அக்கறை காட்டி முக்கியத்துவம் கொடுத்து வருகிறோம். அந்தக் கடைகளை தாமே நேரில் சென்றும் தமது உதவியாளர்கள் மூலமும் மேற்பார்வையிடுவதில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டும். திடீர் சோதனைகள் மூலமும், அடிக்கடி முறையாக சோதனையிடுவதன் மூலமும் Flying Squads மூலமும் கடைகளை அடிக்கடி சோதனையிடுவது அவசியமாகும். வட்ட அளவிலும், கடைகள் அடிப்படையிலும் கண்காணிப்புக் குழுக்களை அமைத்து அவைகளை ஊக்குவிப்பது மிகவும் முக்கியமாகும். நியாய விலைக் கடைகள் சீரிய முறையில் இயங்குவதற்குத் தக்க ஆலோசனைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் வழங்க வேண்டுமென விரும்புகிறேன்.

இனி சமூகப் பாதுகாப்பு, சமூக நல் வாழ்வுத் திட்டங்கள் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். நீங்கள் அறிந்திருப்பது போல, கீழ்க்கண்ட புதிய திட்டங்கள், சீரமைக்கப்பட்ட திட்டங்கள் குறித்து ஆணைகளைப் பிறப்பித்துள்ளோம்.



(1) எண்ணிக்கை வரம்பின்றி அனைவருக்கும் உதவும் முதியோர் ஓய்வூதியத் திட்டம். ஓய்வூதியத் தொகை மாதம் ரூ. 35 லிருந்து ரூ. 50 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

(2) மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின் கீழ் எட்டாவது வகுப்புவரை படித்த ஏழைப் பெண்களுக்கு திருமணச் செலவுக்கு ரூ. 5,000 வழங்குதல்.

(3) டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம்—இதன் மூலம் கருவுற்ற ஏழைப் பெண்களுக்கு ரூ. 200 உதவித் தொகை வழங்குதல்.

(4) ஏழை மற்றும் நடுத்தரப் பெண்களுக்கு பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி அளித்திடும் வகையில் ஈ.வே.ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவச பட்டப்படிப்புத் திட்டம்.- ஆதி திராவிடர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோருக்கும் சீர் மரபினருக்கும் பி.ஏ., பி. எஸ்ஸி, பி.காம், ஆகிய கல்லூரி இளங்கலை பட்டப்படிப்பு இலவசமாக வழங்குதல்.

(5) குடும்பத் தலைவர் இறந்தால் அந்த ஏழைக் குடும்பத்திற்கு ரூ. 2,000 உதவித் தொகை வழங்குதல்.

(6) விபத்து உதவித் திட்டம்—இதுவரை சேர்க்கப்படாத தொழிலாளர்களும் இத்திட்டத்தில் இடம் பெறுகின்றனர். விபத்தில் இறந்தால் இறந்தவரின் குடும்பத்திற்கு ரூ. 10,000 வழங்குதல்.

(7) கலப்புத் திருமணத்திற்கு உதவியாக ரூ. 4,000 மதிப்புள்ள ஆறாண்டு சேமிப்புப் பத்திரம் மற்றும் ரொக்கமாக ரூ. 300 வழங்குதல்.

(8) விதவை மறுமணத்திற்கு ரூ. 5,000 உதவித் தொகை வழங்குதல்.

இத்திட்டங்களை நிறைவேற்றும் அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வழங்கப் பட்டுள்ளது. மாவட்ட வாரியாக நிதி ஒதுக்கீடும் செய்து அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இத்திட்டங்களின் மூலம் யாருக்காக திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளனவோ அவர்கள் முழுமையாகவும் விரைவாகவும் உரிய பயனைப் பெறவேண்டு மென்பதில் நான் மிகுந்த அக்கறை கொண்டுள்ளேன். இதன் பொருட்டு இத்திட்டங்களை பற்றிய விவரங்கள் தெளிவான முறையில் மக்களுக்கு தெரிய வழிவகை செய்யப்பட வேண்டும். பயன்களை பெறுவதற்காக அவர்கள் மேற்கொள்ள வேண்டிய முறைகளையும் அவர்கள் எளிதாக புரிந்து கொள்ளும் வகையில் தெளிவுபடுத்துவது அவசியம்.

இதற்கு உதவுகிற வகையில் ஒவ்வொரு திட்டத்தையும் செவ்வனே விளக்க துண்டுப் பிரசுரங்களையும் மற்றும் புதிய திட்டங்கள் பற்றிய அனைத்து விவரங்களையும் கொண்ட சிறு கையேடுகளையும் அரசு தயாரித்து வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இந்தத் திட்டங்களை மாவட்டங்களில் உள்ள அனைத்துக் கிராமங்களிலும் விளம்பரப் படுத்த வேண்டும். பெறப்படும் விண்ணப்பங்களை விரைவில் பரிசீலித்து உடன் நிவாரணமும், தீர்வும் வழங்கிட வேண்டும். இப்பணிகளை விரைவாகவும் நிறைவாகவும் செய்திடுகிற வகையில் அந்தந்த துறையைச் சார்ந்த அலுவலர்களுக்கு விண்ணப்பங்களை சரிபார்த்தல், உதவித் தொகைகளை அனுமதித்தல், உதவித் தொகைகளை வழங்குதல் ஆகியவைகளுக்கான தேவையான பயிற்சி வகுப்புகளை



நடத்துவது நல்லது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இத்திட்டங்கள் நல்ல முறையில் நிறைவேற தங்களது நேரடி கவனத்தைச் செலுத்த வேண்டும். ஒவ்வொரு புதுத் திட்டத்தின்கீழும் எவ்வளவு நபர்கள் பயனடைந்தனர், உதவி அளிக்கப்பட்ட தொகை எவ்வளவு என்ற விவரங்களை ஒவ்வொரு மாதமும் தலைமைச் செயலருக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நேர்முகக் கடிதம் மூலமாக அனுப்ப வேண்டும்.

1982ஆம் வருடத்தில் — முந்தைய ஆட்சி— தொன்று தொட்டு கிராம நிர்வாகத்தைக் கவனித்து வந்த கிராம அதிகாரிகளை பதவிநீக்கம் செய்துவிட்டது. அவர்களுக்குப் பதிலாக கிராம நிர்வாக அதிகாரிகளை நியமித்து இந்தப் புதிய முறையில் ஒன்றுக்கு மேற்பட்ட கிராமங்களுக்கும் சேர்த்து ஒரே அதிகாரி நிர்வாகத்தைக் கவனிக்க வேண்டியவரானார். இதன் விளைவாக கிராமப்புற மக்கள் தங்கள் குறைகளையும் —கோரிக்கைகளையும் நிறைவேற்றிக் கொள்வதற்குப் பெரும்பாடு படவேண்டிய சூழ்நிலை உருவானது. கிராமக் கணக்குகளை ஒழுங்காக எழுதுவதிலும் பராமரிப்பதிலும் தேக்கமும் குறைபாடுகளும் ஏற்பட்டன. புதிய நிர்வாக முறையினால் ஊழல்கள் அதிகரித்துவிட்டன என்ற புகாரும் பரவலாக நிலவி வந்தது.

தேர்தல் அறிக்கையில் — கழகம் ஆட்சிக்கு வந்தால் கிராம நிர்வாகம் உயிர்ப்பிக்கப்படவும், செம்மையாக் கப்படவும் ஆவன செய்யும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதே சமயம் 1982-க்குப் பின் நியமிக்கப்பட்ட புதிய கிராம நிர்வாக அதிகாரிகளுக்கு பாதகம் எதுவும் வராமல் பார்த்துக்கொள்ளப்படும் என்றும் அறிக்கையில் தெளிவுபடுத்தப்பட்டு இருந்தது. இந்த வாக்குறுதியின் அடிப்படையில் கிராம நிர்வாகத்தை சீர்திருத்தி அமைக்க ஒரு ஆலோசனைக்குழு அமைக்கப்பட்டது. திரு. கே. லட்சுமிகாந்தன் பாரதி தலைமையில் இக்குழு ஜூன் 30-ந் தேதி தனது அறிக்கையை அரசுக்கு கொடுத்தது. கிராம நிர்வாகத்தை மேம்படுத்த, பல ஆலோசனைகளையும் இக்குழு கொடுத்துள்ளது. குழுவின் பரிந்துரைகளை நல்ல முறையில் செயல்படுத்தும் பொருட்டு வருவாய்த் துறை செயலாளர், வருவாய்த்துறை ஆணையர், நிதித்துறை கூடுதல் செயலாளர் இவர்களைக் கொண்ட அதிகாரிகள் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இவர்கள் இரண்டு வாரங்களில் இதுபற்றி விரிவான பரிந்துரைகள் செய்வர். அதன் அடிப்படையில் புதிய அமைப்பு படிப்படியாக கொண்டு வரப்படும்.

சிறு சேமிப்பு நிதி வசூலில் பெருமளவில் பின்தங்கியுள்ளோம். கொடுக்கப்பட்ட இலக்கின்படி நிகரமாக 1989 மே வரை, வசூலிக்கப்பட வேண்டிய ரூபாய் 66 கோடியே 66 லட்சத்துக்கு மாறாக 61 லட்ச ரூபாய் மட்டுமே—அதாவது நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் சுமார் ஒரு சதவீதம் மட்டுமே வசூலிக்கப் பட்டுள்ளது. நமது நிதிநிலை மிகவும் இக்கட்டான நிலையில் உள்ளது என்பதை அனைவரும் அறிவீர்கள். இந்த இடர்பாடுகளுக்கு இடையேயும், நாம் பல்வேறு திட்டங்களை செயல்படுத்த வேண்டியதோடு, தாராள மனப்பான்மையுடன் ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளையும் நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் அரசுக்கு கூடுதல் செலவு ரூ. 400 கோடி.

விவசாயக் கடனை ரத்து செய்வதன் மூலம் 39 கோடி ரூபாய்; ஏற்கனவே கடந்த கால அரசு சலுகைகளை அறிவித்து கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படாமல் இருக்கக் கூடிய 67 கோடி ரூபாய் உட்பட ரூபாய் 106 கோடியை நாம் வழங்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

நெஞ்சிலே வலுவிருப்பின் வெற்றி தஞ்சமென்று உரைத்து வந்து நம்மிடம் கொஞ்சிடுவது உறுதி.

கண்டனத்தைத் தாங்கிக் கொள்ளும் திடமனம் இல்லையென்றால், கடமையை நிறைவேற்ற முடியாது.

—பேரறிஞர் அண்ணா

விவசாயிகள் மின் வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய தாமதக் கட்டணம் மற்றும் அபராதத் தொகை அறவே ரத்து செய்ததன் மூலம் 10 கோடி ரூபாய் செலவாகும்.

விவசாயிகள் நலன் கருதி 3 மற்றும் 5 குதிரை சக்தியுள்ள மோட்டார் பம்புகளுக்கு விற்பனை வரி ரத்து செய்ததில் அரசுக்கு ரூ. 4 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது.

கோழி தீவனத்திற்கு ஏற்கனவே இருந்த விற்பனை வரியை ரத்து செய்ததன் மூலம் ரூ. 2.5 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது.

முதலில் ஆண்டு ஒன்றுக்கு மூன்று முறை 5 கிலோ இலவச அரிசி வழங்கும் திட்டத்தை அறிவித்து பிறகு ஆண்டு ஒன்றுக்கு ஐந்து முறை வழங்கப்படும் என்று அறிவித்து இலவச அரிசி வழங்குவதால் கிட்டத்தட்ட 39 கோடி ரூபாய் செலவாகும்.

மைய அரசு அரிசி விலையை ஏற்றியிருந்த போதிலும் நாம் அரிசி விலையை ஏற்றாமல் அதே விலையில் அரிசியை வழங்குவதால் அரசுக்கு ஏற்படும் மேலும் கூடுதலான மானியச் செலவு ரூ. 23 கோடி.

மகளிர் நலத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதால் கிட்டத்தட்ட 13 கோடி ரூபாய் செலவாகக் கூடும்.

முதியோர் உதவித் தொகையும் மற்றும் குடும்பத் தலைவரை இழந்த குடும்பங்களுக்கு உதவித் தொகையும் போன்ற சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதால் அரசுக்கு ரூ. 27 கோடி ரூபாய் செலவாகும்.

50 இலட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்குவதன் மூலம் ரூ. 27 கோடி செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தள்ளுபடி தொகை கடந்த மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்படாமல் இருந்த ரூ. 26 கோடியையும் இந்த ஆண்டு வழங்கப்படக் கூடிய ரூ. 15 கோடியையும் சேர்த்து ரூ. 41 கோடி வழங்குகிறோம்.

சத்துணவு மையங்களில் முட்டை வழங்குவதன் மூலமாக இந்த ஆண்டு ரூ. 11 கோடி கூடுதலாக செலவாகும்.

இவ்வாறு பல்வேறு சமூக நலத் திட்டங்கள், சமூக பாதுகாப்புத் திட்டங்கள், விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கும் திட்டங்கள் போன்ற திட்டங்களை செயல்படுத்துவதன் காரணமாக அரசுக்கு நிதிச் சுமை அதிகமாகியுள்ளது. இந்தச் சூழ்நிலையில் சிறு சேமிப்பு நிதியினை விரைந்து திரட்டுவதில் இலக்குகளை அடைவது மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். அண்மையில் சிறு சேமிப்பு ஊக்கத் தொகைகளை வகைப்படுத்தவும், செவ்வனே வழிப்படுத்தவும், அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்தப் பணியிலும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்களது தனி கவனத்தைச் செலுத்தும்படி கேட்டுக் கொள்கிறேன்.

நமது அரசு மக்களுக்கு உடனடியாகவும், வரும் ஆண்டுகளிலும் பயனளிக்கக் கூடிய பல புதிய திட்டங்களை பல துறைகளில் கொண்டு வந்துள்ளது. தொடர்ந்து வரும் திட்டங்களுக்கும் போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நிதிநிலை அறிக்கையில் அடங்கிய எல்லாப் பணிகளுக்கும் நிதி ஆண்டின் தொடக்கத்திலேயே ஒப்புதல் ஆணைகள் பிறப்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். இந்த முயற்சிகள் எல்லாம் ஏட்டு அளவில் இல்லாமல் மக்களுக்கு முழுமையாகவும் விரைவாகவும் போய்ச் சேர வேண்டும். இந்தத் தலையாய குறிக்கோளை நடைமுறையில் நிறைவேற்றுவது மாவட்ட ஆட்சித் தலைவர்களான உங்களுடைய பொறுப்பும் கடமையும் ஆகும். உற்சாகத்துடனும், சலியாத உழைப்புடனும் நீங்கள் மாவட்ட, கோட்ட, வட்ட, ஒன்றிய, நகராட்சி, ஊராட்சி, அனைத்து மட்டங்களிலும் அரசு அலுவலர்களை ஊக்குவித்து இந்தப் பணியில் ஈடுபடுவீர்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக் கொண்டு மக்களுக்கான அரசுப்பணிகள் முறைப்படுத்தப்பட்டு செம்மையாகவும், நேர்மையாகவும், விரைவாகவும் நடைபெறுவதற்கான ஆக்கபூர்வ யோசனைகளை வெளியிடுமாறு கேட்டுக் கொண்டு எனது தொடக்க உரையை நிறைவு செய்கிறேன்.

(14-7-89)





## மதுரை மாவட்டத்தில்: முதல்வர் தொடங்கி வைத்த முத்தான திட்டங்கள்

**மா**ண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் மதுரை மாவட்டத்திற்கு 5.7.89 அன்று வருகை தந்தார். அப்போது அவர், மதுரை மருத்துவக் கல்லூரி மைதானத்தில் அமைந்துள்ள அரங்கில் பல்வேறு நலத் திட்டங்களைத் தொடங்கி வைத்தார். ரூ.1,265 இலட்சம் மதிப்புள்ள பல்வேறு அரசுத் திட்டங்களைத் துவக்கி வைத்தும், ரூ.243 இலட்சம் மதிப்புள்ள திட்டங்களுக்குக் கால்கோள் நாட்டியும், 20,570 பேர்களுக்கு நலிந்தோர் திட்ட உதவிகள் வழங்கியும், பேருந்து வழித்தடங்கள் தொடங்கி வைத்தும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் விழாப் பேருரையாற்றினார்.

மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்தார். மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன், மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு, மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. எஸ். தங்கவேலு ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

தேனியில், 230/110 கி.வோ. துணை மின் நிலையம் மற்றும் மின் கோபுரப்பாதை அமைத்தல், திருப்பாலையில் 110/11 கி.வோ. துணை மின் நிலையம் மற்றும் மின்கோபுரப் பாதை அமைத்தல், கம்பம் சமவெளி நகரக் கூட்டுக் குடிநீர்த் திட்டம், பரவை கூட்டுக் குடிநீர்த் திட்டம் போன்ற பல்வேறு அரசுத் திட்டங்கள் விழாவில் தொடங்கி வைக்கப்பட்டன.


ராஜாமில் சாலை - தத்தனேரி இணைப்புப் பாலம், பத்திரகாளிபுரம் மற்றும் இரண்டு குடியிருப்புகளுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம், தேனி ஸ்ரீரங்கம் சாலையில் மேம்பாலம் கட்டுதல், வருச நாடு சாலை கி.மீ. 4/4 இல் பாலம் கட்டுதல், ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடம் கட்டுதல் (சேடபட்டி), தேனியில் 125 ஆதிதிராவிடர் மாணவியருக்குத் தங்கும் விடுதி கட்டுதல், நகராட்சிப் பேருந்து நிலையம் கட்டுதல் (பெரிய குளம்) ஆகியவற்றிற்கான கால்கோள் நாட்டப்பட்டன.


மாண்புமிகு முதல்வர் அவர்களின் புதிய ஆணைப்படி தகுதியுள்ள அனைத்து முதியோர்களுக்கும் அதாவது 5,310 பேர்களுக்கு ஓய்வூதியமும் 5,259 பேர்களுக்கு வீட்டு மனைப்பட்டாக்களும் வழங்கப்பட்டன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், கறவை மாடுகள், சிறுதொழில், பட்டுப் பூச்சி வளர்ப்பு முதலான வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கும் கடனும், மானியமும் வழங்கப்பட்டன.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம், ஓட்டுநர்களுக்கு ஆட்டோ ரிக்ஷா, புதிய மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக்ஷா வழங்குதல், போன்ற அரசு நலத் திட்டங்களின் கீழ் 20,570 பேர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன.

விழாத் தொடக்கத்தில், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மா. தேவராஜ் அனைவரையும் வரவேற்றார். கூடுதல் ஆட்சியர் மற்றும் திட்ட அலுவலர் திரு. கண். தீனதயாளன் நன்றி நவின்றார்.






# தமிழகம் தொழில் பூமியாக...

கூட்டுறவுத்துறை நிறுவனம் என்கிற ஒரு புதிய இலக்கணத்தை உருவாக்கி அதை ஏற்கெனவே 76க்கு முன்பு தி.மு. கழக ஆட்சியில்தான் செயல்படுத்திக் காட்டினோம். அதன்படி 26 சதவிகிதம் அரசின் நிறுவனப் பொறுப்பிலும், மீதமுள்ள சதவிகிதம் தனியார் பொறுப்பிலும் இருக்கும் வகையில் இந்தக் கூட்டுத்துறை-ஜாயிண்ட் செக்டார் அமையப்பெற்று, அதற்குப் பிறகு இந்த இரு நிறுவனத்தாரில் யார் அதனை முழுமையாக ஏற்று நடத்த விரும்புகிறார்களோ அவர்களுக்கு மற்றவர் அளிப்பது என்ற ஒப்பந்த அடிப்படையில் உருவாவதுதான் ஜாயிண்ட் செக்டார்.

இப்பொழுது மீண்டும் கழக அரசு உருவான பிறகு "அசோசியேட் செக்டார்" என்ற மற்றொன்றையும் இப்போது உருவாக்கி, 26 சதவிகிதம் என்பதற்குப் பதிலாக 11 சதவிகிதம் அரசு நிறுவனத்தின் சார்பில் உதவி செய்வது என்றும், அப்படி தொடக்கத்தில் செய்யப்பட்ட உதவியை அந்த நிறுவனம் வளர்ந்த பிறகு - அசோசியேட் செக்டாராகவே இருந்து, பிறகு அதிலிருந்து திரும்பப் பெற்றுக்கொண்டு, அந்தப் பணத்தை வேறு ஒரு தொழிலுக்கு முதலீடு செய்வது என்றும் ஒரு முயற்சியை இந்த அரசு தொடங்கியிருக்கிறது.

இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களிலும் இந்த முறை இன்றைக்குக் கண்டறியப்பட்டு, எப்படி இந்த முறை உருவாக்கப்பட்டுள்ளது, எப்படி இந்த உதவிகள் செய்யப்படுகின்றன என்று கேட்டறிந்து மற்ற மாநிலங்களிலும் இம்முயற்சியை மேற்கொள்ள ஆர்வம் காட்டுகிறார்கள். எனவே ஜாயிண்ட் செக்டார் மூலமாக-அசோசியேட் செக்டார் மூலமாகத் தமிழகத்தில் இருக்கிற தொழில் அதிபர்கள், அல்லது தமிழகத்தில் வந்து தொழில் நடத்த வேண்டுமென்று விரும்புகிற வேறு மாநில அதிபர்கள் எல்லாம் தமிழகத்தைத் தொழில் பூமியாக-தொழில் வளம் குலுங்குகிற இடமாக ஆக்கிட வேண்டுமென்று நான் அவர்கள் அனைவரையும் அழைக்கிறேன்.

இந்த அரசு பொறுப்பேற்று, ஏழை எளிய மக்களுக்கு, அவர்களுடைய துன்ப துயர்களைத் துடைப்பதற்காகப் பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்களை அறிவித்து அவைகளை நடைமுறைப்படுத்தி வருகிறது.

உதாரணமாக ஆண்டுக்கு ஐந்து முறை ஐந்து கிலோ அரிசி இலவசமாக வழங்குகிறோம். இடைக்காலத்தில் துவண்டுபோன கண்ணொளி வழங்கும் திட்டத்தை மீண்டும் தொடங்கி வைத்திருக்கிறோம். வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற ஏழைகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் ஒரு வேட்டியும் ஒரு சேலையும் வழங்கத் தீர்மானித்திருக்கிறோம். ஆனால் இந்த முயற்சிகளால் மாத்திரம் ஏழ்மையைப் போக்க முடியுமா என்றால் முடியாது. இந்த முயற்சியைச் செய்யாமல் இருந்தால், தற்காலிகமாகப் படுகிற வேதனையிலிருந்து ஏழை மக்களை விடுவிக்க முடியாது. அவர்கள் மனதில் ஆறுதலை ஏற்படுத்த முடியாது. எனினும் நிரந்தரமான திட்டங்கள் தேவை.

அவர்களே சம்பாதித்து அவர்கள் வீட்டுப் பிள்ளைகள் சத்துணவு அருந்தவும் - முட்டையோடு சேர்த்து சத்துணவு அருந்தவும், அதைப் போலவே இலவசமாக அரிசியைப் பெறாமல் அவர்களே அரிசியை வாங்கி உண்ணவும், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கிறவர்கள் இலவசமாக வேட்டி சேலைகள் வாங்கும் நிலை மாறி அவர்களே சுயமாகச் சம்பாதித்து வாங்கும் ஒரு நிலையை ஏற்படுத்த வேண்டுமேயானால் நம்முடைய மாநிலம் தொழில்துறையிலே இன்னும் பல மடங்கு முன்னேறியாக வேண்டும்.

—மாண்புமிகு முதல்வர்

(மதுரையில் 5.7.89 அன்று இண்டஸ்ட்ரியல் டைமண்ட்ஸ் தொழிற்சாலையைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரையிலிருந்து)

---

நம் பகுத்தறிவைக்கொண்டு நமது விவகாரங்களைச் சரியான வழியில் நடத்த வேண்டும். மனிதனிடம் அறிவு உறங்கினால், மிருகஇச்சைகள், கண்விழித்துக் குதியாட்டம் போடும்.

—பிளாட்டோ

---





## மாநிலத் திட்டக்குழு: முதல் கூட்டம்

மாநிலத் திட்டக் குழுவின் முதலாவது கூட்டம், 12.7.89 அன்று சென்னை எழிலகத்தில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

'தமிழ்நாட்டுக்கான எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட அளவு 8,500 கோடி ரூபாய்க்கும், 11,500 கோடி ரூபாய்க்கும் இடைப்பட்டதாக இருக்க வேண்டும் என்று இக்கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது' எனத் தலைமைச் செயலாளர் திரு. எம்.எம். இராஜேந்திரன் செய்தியாளர்களிடையே தெரிவித்தார். மேலும் அவர் கூறியதாவது:

திட்டக் குழுவின் இந்த முதல் கூட்டத்தில் - வேளாண்மை, நீர்ப்பாசனம், தொழில் மேம்பாடு, கல்வி வளர்ச்சி, உயர்கல்வியின் தரம், மகளிர் மேம்பாடு, மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் ஆகியவைபற்றி விவாதிக்கப்பட்டது.

மூன்று மாதங்களுக்குள் பல்வேறு துறைகள் சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கான திட்டங்களைத் தயாரிக்குமாறு மாநிலத் திட்டக் குழு கேட்டுக் கொள்ளப்பட்டது. மாநிலத் திட்டக் குழுச் செயலாளர் மத்திய திட்டக் கமிஷன் செயலருடன் தொடர்பு கொண்டு வருவார்.

இக்கூட்டத்தில் பல்வேறு பணிக்குழுக்கள் அமைக்கப்பட்டு, அதற்குத் திட்டக் குழுத் தலைவர் ஒப்புதல் அளித்திருக்கிறார். அவ்வாறு அமைக்கப்பட்ட பல்வேறு பணிக்குழுக்களின் தலைவர்கள் பற்றிய விவரம் வருமாறு:

வேளாண்மை மற்றும் அது தொடர்பான துறைகள் குழு-டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன்.

கிராம வளர்ச்சி-டாக்டர் ஆர். என். பொடுவால்.

தொழிலாளர் மற்றும் தொழிலாளர் நலன் - டாக்டர் சிதம்பரம்.

தொழில்கள் - திரு. சிவஞானம்.

கல்வி - டாக்டர் வெங்கட சுப்பிரமணியம்.

மருத்துவக் கல்வி மேம்பாடு-டாக்டர் பி.ராமமூர்த்தி.

மருத்துவம்-டாக்டர் ரமணி சிவராமன்.

நகர்ப்புற வளர்ச்சி - டாக்டர் சிவஞானம்.

சமூகநலன் - திருமதி ஆண்டாள் தாமோதரன்.

ஊட்டச்சத்து - டாக்டர் சி. கோபாலன்

விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம் - டாக்டர் வி.சி. குழந்தைசாமி

திட்டத்திற்கான வசதிகள் - டாக்டர் மால்கம் ஆதிசேஷையா.

மின்விசை - தமிழ்நாடு மின்வாரியத் தலைவர்.

வீட்டு வசதி - வீட்டு வசதித் துறைச் செயலாளர்.

போக்குவரத்து - போக்குவரத்துத் துறைச் செயலாளர்.

நகராட்சி நிர்வாகம், தண்ணீர் வழங்கல்-நகர நிர்வாகத் துறைச் செயலாளர்.

## முதல்வர் - பத்திரிகையாளர் சந்திப்பு

தற்சமயம் அரசுப் பணியில் நேரடித் தேர்வு மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு, அந்த வகுப்புகளைச் சேர்ந்த தகுதி பெற்றவர்கள் கிடைக்கவில்லையென்றால் நியமனங்கள் 4 ஆண்டும், அதற்கடுத்த 3 ஆண்டுகளுமாக ஆண்டுகளுக்கு நிரப்பப்படாமல் வைக்கப்பட்டு அதற்குப் பின், பிற வகுப்பினரால் நிரப்பப்பட்டு வருகின்றன.

இனி, இதுபோன்ற பிற வகுப்பினரால் நிரப்பப்படும் முறைக்கு உடனடியாகத் தடை விதிக்கப்படுகிறது. இத்தடை மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குப் பொருந்தும்.

தற்போது மாநிலச் சாலைகள், பெரிய மாவட்டச் சாலைகள் மற்றும் பிறசாலைகள் ஆகியவற்றில் பாலங்கள் கட்டப்படும் போது அப்பாலங்கள் ஒவ்வொன்றுக்கும் ஆகும் செலவு 10 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமானால் சுங்கவரி விதிக்கப்படுகிறது.

இதனை, 25 இலட்சம் ரூபாய்க்கு அதிகமாகும் பாலங்களுக்கு மட்டும் வசூலிப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்படி வசூல் செய்யப்படும் சுங்க வரி ஒவ்வொரு பாலமும் கட்டுவதற்குச் செலவிடப்படும் தொகையானது ஈடுகட்டப்பட்டதும் முழுமையாக நிறுத்தப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சுங்கவரி சைகிள்கள், மாட்டு வண்டி ஆகியவைகளுக்கு விதிக்கப்பட மாட்டாது.

-மாண்புமிகு முதல்வர்
(13.7.89 ல் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில.)

## 1989 அக்டோபர் இறுதிக்குள் ஆரம்பக் கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் நடைபெறும்

**1.7.89** அன்று தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள் திருத்தத்திற்கும், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களுக்கு, தனி அதிகாரிகள் நியமனத்திற்கும், அங்கீகாரம் அளித்து, தமிழக ஆளுநர் இரண்டு அவசரச் சட்டங்களைப் பிறப்பித்துள்ளார்.

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983 மற்றும் அதன் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகள், 13.4.89 அன்று அமலுக்கு வந்தன.

1988-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல்கள் நடத்த ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. ஆனால் பிறகு புதிய உறுப்பினர்களைக் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ப்பதற்கு மேலும் கால அவகாசம் தர வேண்டும் என்ற காரணத்திற்காக 1988-ல் நடைபெறவிருந்த தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டன.

இன்றைய அரசு கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்துவதற்கு முன்பு 1983-ஆம் ஆண்டைய கூட்டுறவுச் சட்டத்தில் இடம் பெற்றுள்ள வரையறைகளை உண்டாக்கக்கூடிய சில வழி முறைகளை அகற்றி விடவேண்டுமென்று முடிவெடுத்தது.

அத்தோடு தமிழ்நாடு கூட்டுறவுச் சட்டத்தில் திருத்தங்களை அறிமுகம் செய்யும் போது, கூட்டுறவுச்சட்டம் பற்றிய அர்த்த நாரீஸ்வரன் குழுவின் பரிந்துரைகள், தேசிய பால் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் கொடுத்துள்ள கருத்துக்கள் மற்றும் கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபாடு கொண்டுள்ள பலருடைய யோசனைகள் ஆகியவைகளெல்லாம் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

இந்தப் பின்னணியில் கூட்டுறவுச் சட்டத்திற்கு திருத்தம் கொண்டுவர அரசு முடிவெடுத்தது. அத்தோடு கூட்டுறவுச் சட்டத்தில் மகளிருக்கு 30 சதவிகித ஒதுக்கீடும், தாழ்த்தப்பட்டோர், மலைஜாதியினர் ஆகியோருக்கு 18 சதவிகித ஒதுக்கீடும் கூட்டுறவுச் சங்கங்களில் இருந்திட வேண்டும் என்ற கொள்கை முடிவும் இன்றைய அரசால் எடுக்கப்பட்டிருக்கிறது.

கூட்டுறவுச் சங்கங்கள் ஆக்கப்பூர்வமாகவும், அமைதியாகவும் செயல்பட வேண்டும் என்ற நோக்கமும் சட்ட திருத்தத்திற்குக் காரணமாகும்.

1976-க்கு முன் தேர்ந்தெடுக்கப்பட்ட, கூட்டுறவுச் சங்கங்களின் குழுக்கள் இன்றளவும் தொடர்கின்றன. அந்த கூட்டுறவுச் சங்கங்களின் பழைய குழுக்கள் கூட்டுறவு இயக்கத்தின் முறையான வளர்ச்சிக்கு உகந்ததாக இல்லை எனக் கருதுகிறது.

எனவே புதிய உறுப்பினர்களைக் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சேர்த்து, சுதந்திரமான நேர்மையான தேர்தல்களை நடத்துவதற்கும், கூட்டுறவு இயக்கத்தில் கிராமப்புற மக்களை மிகுதியாக ஈர்த்து ஈடுபடுத்தலாம். 1976-க்கு முன் தேர்ந்தெடுக்கப்பட்டு இன்றளவும் தொடரும் கூட்டுறவுச் சங்கங்களின் பழைய குழுக்களைத் தவிர்த்து ஒரு புதிய அமைப்பு தற்காலிகமாக வேண்டும் என்று அரசு முடிவெடுத்துள்ளது.

இதன் அடிப்படையில் தற்போதுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் குழுக்களுக்குப் பதிலாக தனி அதிகாரிகளைத் தற்காலிகமாக நியமனம் செய்ய அரசு முடிவு செய்திருக்கிறது.

இந்தத் தனி அதிகாரிகள் நியமனம் 31.10.89 வரைதான் கூட்டுறவுச் சங்கங்களில் நீடிக்கும். 31.10.1989க்குள்ளாக தமிழ் நாட்டிலுள்ள எல்லா ஆரம்பக் கூட்டுறவுச்சங்கங்களுக்கும், புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள ஒதுக்கீடுகளின் அடிப்படையில் சுதந்திரமான நியாயமான தேர்தல்களை நடத்தி ஜனநாயக அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்கள் எல்லா கூட்டுறவுச் சங்கங்களிலும் பொறுப்பேற்க சட்டத்தில் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

31.10.1989க்குள்ளாக கீழ்க்காணும் கால அட்டவணைப்படி தமிழ்நாட்டில் உள்ள எல்லா ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தேர்தல்கள் நடத்திட அரசு முடிவெடுத்துள்ளது.

ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்துவதற்கான கால அட்டவணை:

1. புதிய உறுப்பினர்கள் சேர்த்தல் 31.8.89 வரை
2. தேர்தல் தயாரிப்புப் பணிகள் 16.8.89 முதல் 31.8.89 வரை.
3. தேர்தல் திட்டம் அனுப்புதல் 1.9.89 முதல் 30.9.89 வரை.
4. நிர்வாகக் குழுவிற்கு தேர்தல் நடத்துதல் 1.10.89 முதல் 10.10.89 வரை.
5. மகளிர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரின் பிரதிநிதிகள் நியமனம் 11.10.89 முதல் 20.10.89 வரை.
6. தலைவர் மற்றும் துணைத் தலைவர் தேர்தலுக்கு அறிவிப்பு வழங்குதல் 21.10.89 முதல் 25.10.89 வரை.
7. தலைவர் மற்றும் துணைத் தலைவர் தேர்தல் முடிவு 26.10.89 முதல் 31.10.89 முடிய.


## சார் தபால்!

**1988-89**-ஆம் ஆண்டில் புதிதாக 2548 அஞ்சலகங்கள் திறக்கப்பட்டன. இதனையடுத்து நாட்டில் உள்ள அஞ்சலகங்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 47 ஆயிரத்து 377 ஆக உயர்ந்தது. இவற்றில் ஒரு இலட்சத்து 31 ஆயிரத்து 305 அஞ்சலகங்கள் கிராமப்புறங்களிலும் எஞ்சிய 16 ஆயிரத்து 72 அஞ்சலகங்கள் நகர்ப்புறங்களிலும் செயல்படுகின்றன. சராசரியாக, ஒவ்வோர் அஞ்சலகமும் நான்கு அல்லது ஐந்து கிராமங்களுக்கு அதாவது சுமார் 4,700 பேருக்குச் சேவை செய்கிறது.

1987-88-ஆம் ஆண்டில் சுமார் ஐநூறு கோடி தபால்களை அஞ்சல்துறை பட்டுவாடா செய்திருக்கிறது. இதில் சுமார் 12 கோடி மணியார்டர்களும், 24 கோடி பதிவுத் தபால்களும் அடங்கும்.

அஞ்சலகச் சேமிப்பு வங்கிகளில் கடந்த ஆண்டு மார்ச்சு மாத இறுதியில் 28 ஆயிரத்து 400 கோடி ரூபாய் சேமிக்கப்பட்டிருந்தது.





## முதல் அட்டை சொல்லும் செய்தி:

# தாமரை துவக்க விழா

சென்னைக்கு அருகிலுள்ள போரூரில் அமைந்திருக்கும் ஸ்ரீராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி வளாகத்தில் - தமிழ்நாடு அரசு மருத்துவ அறிவியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனமான 'தாமரை' தொடக்க விழா 12.7.89 அன்று மாலை மிகச் சிறப்போடு நடைபெற்றது.

இவ்விழாவில் பங்கேற்ற மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் இந்த மருத்துவ அறிவியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தைத் தொடங்கி வைத்துச் சிறப்புரையாற்றினார்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி தலைமையில் விழா நடைபெற்றது. மக்கள் நல்வாழ்வுத் துறைச் செயலாளர் கே.ஜே.எம். ஷெட்டி வரவேற்புரையாற்றினார்.

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் டாக்டர் மு. தமிழ்க்குடிமகன், மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன், தமிழக அரசு தலைமைச் செயலாளர் திரு. எம். எம். இராஜேந்திரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்களும் பல்கலைக் கழகத் துணைவேந்தர்களும் கலந்து கொண்ட இவ்விழாவிற்கு வருகை தந்த மாண்புமிகு முதல்வர் அவர்களை, மருத்துவக் கல்லூரி மாணவ மாணவிகள் மிகுந்த மகிழ்வோடு வரவேற்றார்கள். பின்னர், கல்லூரியின் பகுதிகளையெல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சுற்றிப் பார்த்தார்.

அலங்காரப் பந்தலில் நடைபெற்ற இவ்விழா முடிவில், 'தாமரை'யின் தனி அலுவலர் எம். பி. பிரானேஷ் நன்றி கூறினார்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி அவர்கள் தலைமையுரையில் குறிப்பிட்டதாவது,

"இந்தத் தாமரை, தமிழகத்தின் மருத்துவ வரலாற்றில் ஒரு புதிய மைல் கல். கடந்த கால அரசுகளையே ஏமாற்றும் அளவிற்கு இந்த நிறுவனம் கட்டப்பட்டிருந்ததை மக்கள் அறிவார்கள். அரசு நிலத்தை ஆக்கிரமித்து இந்த மாபெரும் வளாகம் உருவாக்கப்பட்டிருக்கிறது. புறம்போக்கு நிலத்தில் சிறிய குடிசை கட்டப்பட்டாலும் கூட அதைப் பிய்த்துப் போடும் காலம் இருந்தது.ஆனால், அரசுக்குச் சொந்தமான நிலத்தில் அனுமதி இன்றி இந்தக் கட்டடம் எழுப்பப்பட்டது. மக்கள் சொத்து மக்களைச் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்துடனேயே இப்போது இது அரசுடைமையாக்கப்பட்டுள்ளது. உண்மைகள் மூடப்பட்டுக்கிடந்தன. முதல்வர் கலைஞர் அவர்கள் உதயசூரியனாக வந்த பிறகு இந்த நிறுவனம் தாமரை மலர்ந்திருக்கிறது. இதன் புகழ் திக்கெட்டும் பரவும் வகையில் இங்கே பயிலுவோர் படிக்கவேண்டும்."

அரசு தலைமைச் செயலாளர் திரு. எம்.எம். இராஜேந்திரன் அவர்கள் பேசியதாவது:



"இந்தத் தாமரை மலர நம்முடைய முதல்வர் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகள் ஏராளம். இந்தியா சுதந்திரம் பெற்றபோது, தமிழகம் மருத்துவத் துறையில் பெரும் புகழ் பெற்றுத்தான் இருந்தது. அதன் பிறகுதான் வேறுசில மாநிலங்கள் இத் துறையில் மேம்பட்டன. அவைகளைப் போலவே, மீண்டும் தமிழகம் மேம்பட வேண்டும், அத்தகைய வளர்ச்சி பெற வேண்டும் என்ற உயர் எண்ணத்துடனேயே முதல்வர் அவர்கள் இதைச் செய்திருக்கிறார். அதனாலேயே இதைத் தன்னாட்சி பெற்ற தாக- அட்டானமஸ் பாடியாக வைத்திருக் கிறார். நிதிப் பற்றாக்குறை காரணமாக இதற்கு எந்தத் தடையும் ஏற்படாது. இந்த நிறுவனம் நன்கு வளர்ந்து தமிழகத்திற்குத் தனிச்சிறப்பை ஏற்படுத்தட்டும்."

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் டாக்டர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் வாழ்த்துரையில் குறிப்பிட்டதாவது:

"பொதுவாகவே நமது நாட்டில் புரட்சி என்பது வெவ்வேறு உருவில் இருக்கிறது. ஒன்றை மாற்ற வேண்டும்; அல்லது ஒன்றைச் செம்மையாகச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தைச் செயல்படுத்துவதுதான் புரட்சி என்பது. பிரஞ்சுப் புரட்சியின் போது, கில்லட்டில் வைத்துக் கொல்லுவதும் ஒன்றாக இருந்தது. ஆனால், நம்முடைய முதல்வர் அவர்கள் இங்கே இந்தப் புரட் சியை மிக மென்மையாகச் செய்திருக்கிறார். தொடர்புடையவர்களோடு கலந்துபேசி, பிற ருக்குச் சொல்லாமல் செய்த புரட்சி இது. இதை அரசு ஏற்கும் முயற்சியில் ஒத்துழைத்த இராமசாமி உடையாரையும், இந்த வளாகம் உருவாகக் காரணமாக இருந்த மறைந்த முதலமைச்சர் எம்.ஜி.ஆரையும் இந்த நேரத் தில் நாம் பாராட்ட வேண்டும். அல்லி இரவில்தான் மலரும். தாமரை பகலில் மலரும். இந்தத் தாமரை உதயசூரியன் வந்தபிறகு மலர்ந்திருக்கிறது. இந்த உயர் ஆராய்ச்சி மையத்தைத் தமிழகத்திற்குத் தந்த டாக்டர் கலைஞரைப் பாராட்டுகிறேன். இந்த ஆராய்ச்சி மையத்தில் உள்ள டாக் டர்கள் சிலர் அரசிலும் வேலை பார்த்துக் கொண்டு தனி கிளினிக்கிலும் கவனம் செலுத்துவார்களே? அப்படியில்லாமல் அர்ப் பணிப்பு உணர்வோடு நடந்து கொண்டால் நல்லது. அப்போதுதான் இதன் பெருமை வானில் பறப்பதற்கு ஒப்பாக அமையும்".

மாண்புமிகு கல்வியமைச்சர், பேரா சிரியர் க. அன்பழகன் அவர்கள் தமது வாழ்த்துரையில் தெரிவித்ததாவது:

"தாமரை என்று வழங்கப்படுகிற தமிழ் நாடு அரசின் மருத்துவ அறிவியல் ஆராய்ச்சி நிறுவனம் மருத்துவ ஆராய்ச்சிப் பணிகளைத் திறம்படச் செய்ய வேண்டும் என்பதற்காகத் தகுதிமிக்க மருத்துவர்கள் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆய்வு நிலையம் எந்தெந்தத் துறையிலே எந்தெந்த வகையிலே ஆய்வுகளை நடத்துவது - எப்படி அதை நிர்வகிப்பது - எப்படிச் செயல்படுத்து வது என்பதற்கான தகுந்த ஆலோசனையை அவர்கள் வழங்கவிருக்கிறார்கள். அந்தக் குழுவிலே உள்ள நிபுணர்கள் விவரத்தை இங்கே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டி ருக்கிறேன். டாக்டர்கள் பி. இராமமூர்த்தி, டாண்டே மதுரநாயகம், ஏ. வேணுகோபால், ஏ.எஸ். தம்பையா, எஸ்.எஸ். பத்ரிநாத், என். ரங்கபாஷ்யம், எஸ். கிருஷ்ணமூர்த்தி, கே.வி. திருவேங்கடம், எம். மதனகோபாலன், லாம் மோஸஸ், எஸ். காமேஸ்வரன், தமிழக அரசு மருத்துவக் கல்வி இயக்குநர் - ஆகிய பன்னிருவர் அந்த ஆலோசனைக் குழுவிலே இடம் பெற்றிருக்கிறார்கள். நம் முடைய சமுதாயத் தேவையை நிறைவேற்றும் வகையில்; இங்கே பணிபுரிவோரின் ஆய் வுகள் அமைய வேண்டும். இன்று துவக்கப் படுகின்ற 'தாமரை' இங்குள்ள மருத்துவ மனைக்கு உறுதுணை புரிவதாக அமையும்"

—இந்த வாழ்த்துரைகளுக்குப் பின்னர், மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், 'தாமரை'யைத் துவக்கிவைத்தார்.

-நிகழ்ச்சித்தொகுப்பு:
பி.எல். ராஜேந்திரன்.

## தாமரை -
## தண்டு -
## தண்ணீர்!

"தாமரையைத் தாங்குவது ஒரு சிறிய தண்டுதான். பெரிய மலர் - அதனைத் தாங்குவது ஒரு சிறிய தண்டு.

"ஆனாலும் அந்தத் தண்டும் தாமரையும் தனியாக நின்றால், தண்டு வளைந்து விடும்; தாமரையும் கீழே விழுந்து விடும். ஆனால், அந்தத் தண்டைப் பக்கத் துணையாக இருந்து அரவணைத்து நிற்பது தடாகத்தில் தேங்கியிருக்கும் தண்ணீர்.

"அந்தத் தண்ணீர்போல் - தண்டாக இருக்கின்ற இந்த அரசை, பொதுமக்களாகிய நீங்களெல்லாம் அரவணைத்துத் தாங்கி நின்றால், தாமரை என்றைக்கும் விழாமல் மேலும் மேலும் மலர்ந்து வளர்ந்து அதனுடைய குறிக்கோளை எய்திடும் என்ற நம்பிக்கையை நான் பெறுகிறேன்."

—மாண்புமிகு முதல்வர்
(12.7.89-இல் நடைபெற்ற 'தாமரை' துவக்கவிழாவில்)

## ஒரு நிபந்தனை

நான் ஒரு சுதந்திர மனிதன் எனக்குச் சுதந்திர நினைப்பு, சுதந்திர அனுபவம் சுதந்திர உணர்ச்சி உண்டு. அதை உங்கள் முன் சமர்ப்பிக்கிறேன். நீங்கள் என்னைப் போலவே உங்களது சுதந்திர நினைப்பு, அனுபவம், உணர்ச்சி ஆகியவைகளால் பரிசீலனை செய்து ஒப்பக்கூடியவைகளை ஒப்பி, தள்ளக்கூடியவைகளைத் தள்ளி விடுங்கள் என்கிற நிபந்தனையின் பேரிலே தான் எதையும் தெரிவிக்கிறேன்.

—தந்தை பெரியார்

## வெண்பாப் போட்டி - 3

**ஈற்றடி: 'அண்ணாவே சொன்னார் அறிந்து'**

வெண்பா வந்துசேர வேண்டிய இறுதிநாள்: 1.9.89

த்குதி படைத்த வெண்பாக்கள் வெளியிடப் பெறும். அவற்றில் பரிசு பெற்ற வெண்பாவை எழுதியவருக்கு ஓராண்டு 'தமிழரசு' இலவசமாக அனுப்பப் பெறும்.

குறிப்பு


அஞ்சலட்டையில் வெண்பா எழுதி அனுப்பினால் போதும்.

நேரிசை வெண்பாக்களே அனுப்பப் பெறல் வேண்டும்.

வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர் (வெண்பாப் போட்டி)
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை - 600 002.






# உயர் மருத்துவக் கல்வி-ஆராய்ச்சி: 'தாமரை' தனிக்கவனம் செலுத்தும்!

## -முதல்வர் கலைஞர்

சென்ற ஐந்தாறாண்டுக் காலமாக இந்த வழி யாகப் பயணம் செய்த போதெல்லாம் மேகங்களைத் தொடுகின்ற அளவிற்கு உயர்ந்து நிற்கின்ற இந்த மாட மாளிகைகளை - கூடகோபுரங்களை நான் கண்டிருக் கிறேன். அப்படிப்பட்ட நேரத்திலெல்லாம் இது உரு வாகியிருக்கின்ற இடம் எது என்பதையும் அறிந்திருக் கின்றேன், உணர்ந்திருக்கின்றேன்.

ஆகவே, இந்தக் கட்டடங்கள், இடத்திற்கு உரியவர் களிடம் வரவேண்டும், அது எப்போது என்ற கேள்வி என் இதயத்தில் எழுந்ததுண்டு. அதற்கு விடை காணும் சிரமத்தை எனக்கு அதிகம் அளிக்காமல், இந்த இராமச் சந்திரா அறக்கட்டளையைச் சேர்ந்த அறங்காவலர்கள், அதனுடைய தலைவர் உட்பட அனைவரும் இதனை அர சுடைமையாக்க எனக்குத் துணை நின்றனர். அதற்காக அவர்களுக்கு நான் என்னுடைய நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

இந்த இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியும் ஆராய்ச்சி நிறுவனமும், அதைச் சேர்ந்த மருத்துவ மனையும் 1.7.89 அன்று தமிழக அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. ஏறத்தாழ 174 ஏக்கர் பரப் பளவில் இந்தக் கட்டடங்கள் அமைந்துள்ளன. இம் மருத்துவக் கல்லூரிக் கட்டடம், சுமார் இரண்டு இலட்சம் சதுர அடி கட்டடப் பரப்பைக் கொண்டது. மருத்துவமனை சுமார் 4.75 இலட்சம் சதுர அடி கட் டடப் பரப்பினை உடையது.

இந்த மருத்துவமனை இப்போது 700 நோயாளி களைப் பேணக்கூடிய திறம் உடையது. சுமார் 250 நோயாளிகள் உள்நோயாளிகளாக இருக்கிறார்கள். நாளடைவில் இந்த மருத்துவமனை ஆயிரத்திற்கு மேலான படுக்கைகளைக் கொண்டதாக அமையும். இங்கே 600 மாணவர்கள் தங்குவதற்கு வசதியிருக்கிறது. 300 செவிலியர்களும், 32 மருத்துவர்களும், மற்றும் சில பணி யாளர்களும் தங்குவதற்கான வீடுகள் இருக்கின்றன. 252 ஆண்கள் 205 பெண்கள்- ஆக

மொத்தம் 457 மாணவர்கள் இந்தக் கல்லூரியிலே படித்து வருகிறார்கள்.

இங்கே உருவாகும் 'தாமரை' ஒரு தன்னாட்சி பெற்ற நிறுவனமாகத் திகழும். உயர்மட்ட மருத்துவ அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சியில் ஒரு தனிப் பெரும் நிறுவனமாகத் தாமரை மலர்வதற்கு ஏற்ற வகையில் இது அமையவிருக்கின்றது.

சண்டிகார், டில்லி, ஐதராபாத், பாண்டிச்சேரி, மற்றும் பல இடங்களில் அமைந்துள்ள இத்தகைய உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களின் அமைப்பை நன்கு ஆராய்ந்து, அதன் அடிப்படையில் இந்த நிறுவனம் அமைக்கப்படும். இது முழு வடிவம் பெறும்வரை, அரசால் நியமிக்கப்பட்ட தனி அதிகாரியின் கீழ் இயங்கவிருக்கிறது.

'தாமரை' - உயர்மட்ட மருத்துவக் கல்வியில் தனிக் கவனம் செலுத்தும். எம்.பி.பி.எஸ்., படிப்பிற்கான இடங்கள் குறைக்கப்பட்டு, இங்கிருக்கும் வசதிகள் முதுகலைக் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்காகப் பெருமளவில் பயன்படுத்தப்படும். 'தாமரை' தனிக்கவனம் செலுத்த வேண்டிய துறைகளைத் தேர்ந்தெடுக்க புகழ்பெற்ற மருத்துவ நிபுணர்களைக் கொண்டதோர் தொழில் நுட்ப ஆலோசனைக் குழுவையும் அரசு அமைத்துள்ளது. இந்தக் குழுவானது 'தாமரை' நிறுவப்பட வேண்டிய முறையைப் பற்றியும், அதன் அமைப்புகளைப் பற்றியும், அதன் வளர்ச்சியைப் பற்றியும் ஆலோசனைகள் வழங்கும்.

இந்தக் கல்லூரியில் மாணவர்கள் பெறும் எம்.பி.பி.எஸ்., பட்டம் இந்திய மருத்துவக் குழுவினால் (மெடிகல் கவுன்சில்) அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பது பற்றி இங்கே படிக்கும் மாணவர்கள் கவலைப்படுவதாக நான் அறிகிறேன். இது குறித்து, முந்திய நிர்வாகம் இந்திய மருத்துவக் குழுவிற்கு ஏற்கெனவே விண்ணப்பித்துள்ளது. மேற்படி குழுவும் ஓர் ஆய்வாளர் குழுவை இங்கே அனுப்பிவைத்தது.

தமிழக அரசும் இந்திய மருத்துவக் குழுவுடன் இவ்விஷயமாகத் தொடர்பு கொண்டு, இக்கல்லூரியிலே பெறும் பட்டத்திற்கு அங்கீகாரம் பெறத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கும் என்று இந்த நேரத்தில் மாணவர்களுக்கு நான் உறுதி கூறுகிறேன்.

உயர் மருத்துவக் கல்விக்கென்று ஒரு தனிப்பெரும் நிறுவனம் தமிழ்நாட்டில் நீண்ட காலத் தேவையாக இருந்து வந்துள்ளது. அந்த நீண்ட காலத் தேவையை நிறைவேற்றுவதன் முதல் படி தான் 'தாமரை'யின் தொடக்கமாகும்.

இந்த நல்ல நேரத்தில் - ஏற்கெனவே நான் சென்னை மருத்துவக் கல்லூரி விழா ஒன்றில் தெரிவித்த உறுதி மொழியை இங்கே நிறைவேற்ற விரும்புகிறேன். அன்று நான் அளித்த வாக்குறுதி, ஹவுஸ் சர்ஜன்கள் இதுவரை உதவிப் பணமாக (ஸ்டைஃபண்ட்) 550 ரூபாய் பெற்று வருகிறார்கள். இனி அந்தத் தொகை 750 ரூபாய் அளவிற்கு உயர்த்தப்படும் என்பதை உறுதிப்படுத்துகிறேன். நான் - சர்வீசஸ் போஸ்ட் கிராஜுவேட் டாக்டர்களுக்கு இதுவரை உதவிப்பணம் 600 ரூபாய் என்றிருந்தது. இனி அத்தொகை 800 ரூபாய் என்ற அளவிற்கு உயர்த்தப்படும்.

அதைப் போலவே 'சர்வீசஸ் போஸ்ட் கிராஜுவேட்' டாக்டர்களுக்கு உதவிப்பணம் இதுவரை 650 முதல் 850 ரூபாய் வரை என்றிருந்தது. இனிமேல் அத்தொகை 850 ரூபாய் முதல் 1,050 ரூபாய் அளவிற்கு உயர்த்தப்படும் என்பதையும் இங்கே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்."

## பார்த்தோம் படித்தோம்

20-வது ஆண்டுத் 'தமிழரசு' இதழ் எல்லா வகையிலும் பட்டறிவு முத்திரையோடு பாங்குற மிளர்கிறது. படிக்க வேண்டிய - பாதுகாக்க வேண்டிய அரிய பல செய்திகளைத் தாங்கி வெளிவந்துள்ளது. தமிழரசு பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன்.

— டாக்டர் அரு. கோபாலன்,
சென்னை - 94

இருபது வயதிலும் அறுபதுக்குரிய அனுபவ அறிவு முதிர்ச்சி கொண்டு, வியப்புமிகு செய்திகளைத் தந்து, தமிழர்தம் கரங்களில் ஊன்றுகோலாய்த் திகழும் தமிழரசு இதழே நீ வாழ்க.

— எம்.பி. இளங்கோ,
கவுந்தப்பாடி

1.7.89 தமிழரசு 20-ஆம் ஆண்டுத் தொடக்க இதழில், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களின் கட்டுரை, தமிழரசின் பெருமையைப் பறைசாற்றியது.

— ராதா ராமலிங்கம்.
திருவண்ணாமலை-1

1.7.89 இதழில், செய்தி - மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் கட்டுரை மிகவும் நன்றாக இருந்தது. தமிழரசுக்கு 20-வது ஆண்டு பிறக்கின்றது. வாழ்த்துக்கள். புதிய பகுதிகளை எதிர்பார்க்கின்றோம்.

— அ. சந்தசுவாமி
திருப்பூர்

'வான் சிறப்பு' கவிதை தேனாக இனித்தது.

— எஸ். ரெங்கன்,
ஸ்ரீவில்லிப்புத்தூர்

கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் கட்டுரை - அவர் நாட்டுக்கு ஆற்றிய சீரிய தொண்டினையும், சிறந்த கொடை வளத்தையும் மிளரச் செய்தது.

— சு. கோபி
சென்னை - 109

திருமண உதவி, இலவசப் பட்டுப் படிப்பு, மகப்பேறு உதவி பற்றிய திட்டங்களின் விரிவான. விளக்கங்கள் பயனுள்ளவை.

— பா.மா. வெங்கடாசலபதி
பாப்பாங்காட்டூர்

தமிழரசு புதுப் பொலிவுடன் வெளிவருகிறது. வளர்க; வாழ்க!

— துரை வேணுகோபால்,
பரங்கிப்பேட்டை





# இராமநாதபுரம் மாவட்டத்தில்
# முதல்வர் நிகழ்ச்சிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 4.7.'89 அன்று இராமநாதபுரம் மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்து வளர்ச்சிப்பணிகளைப் பார்வையிட்டார்.

முன்னதாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை இராமநாதபுரம் மாவட்ட எல்லையான மரிச்சிக்கட்டி என்ற இடத்தில் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் டாக்டர் மு. தமிழ்க்குடிமகன், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. அர. செல்லமுத்து ஆகியோர் மாலை அணிவித்து வரவேற்றனர்.

பின்னர், மதுரை - இராமநாதபுரம் தேசிய நெடுஞ்சாலையிலிருந்து வெங்காளூருக்கு இணைப்புச்சாலை அமைக்கப்படும் பணியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்று பார்வையிட்டார். இந்த 3.6. கி.மீ. இணைப்புச் சாலையை மேம்பாடு செய்யும் பணி ரூ.3.6 இலட்சம் செலவில் நடைபெற்று வருகிறது. இந்த இணைப்பினால் ஆதிரேந்தல், சங்கன்கோட்டை, வெங்காளூர் ஆகிய கிராம மக்கள் பயனடைவார்கள்.

அடுத்ததாக-கூத்தங்கால் வரத்துக் கால்வாய் சீரமைக்கும் பணியினைப் பார்வையிட்டார் இந்தக் கால்வாயின் தூரெடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதற்கான மதிப்பீடு ரூ.30,000/- ஆகும்.

இராமநாதபுரம் பெரிய கண்மாய் செப்பனிடும் பணியையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பார்வையிட்டார்கள். இந்தக் கண்மாய்க் கரையில் மொத்த நீளம் 10.05 கி.மீ. ஆகும். பின்னர் இராமநாதபுரம் அருகே ரூ.26 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள தனியார் ரெக்சின் தொழிற்சாலை திறப்பு விழாவில் கலந்து கொண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசினார்.

மாலை 5.30 மணிக்கு இராமநாதபுரத்தில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கு விழா மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் டாக்டர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அர. செல்லமுத்து வரவேற்புரையாற்றினார். மாவட்ட வருவாய் அலுவலர் திரு. கோ. சந்தானம் அரசு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்ட அறிக்கையினைப் படித்தார்.

விழாவில், இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் திரு. மு. கிருஷ்ணன், நயினார்கோவில் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் சுப. தங்கவேலன், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் வி. ராஜேசுவரன், மாண்புமிகு செய்தி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் டாக்டர். சந்திரசேகரன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. எஸ்.எஸ். தென்னரசு, திரு. எஸ். காதர்பாட்சா என்ற வெள்ளைச்சாமி, திரு. ஏ.எம். ஹமீது இப்ராஹிம் ஆகியோர் வாழ்த்துரையாற்றினார்கள். மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி, மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு ஆகியோரும் இவ்விழாவில் பங்கேற்றார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி விழா நிறைவுப் பேருரையாற்றினார்கள்.

திட்ட இயக்குநர் திரு. கு. வள்ளிநாயகம், நன்றியுரையாற்றினார்.

இவ்விழாவில், அரசு மூலம் வழங்கப்பட்ட நலத்திட்ட உதவிகள் வருமாறு:

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் - 300 பேருக்கு மானியத் தொகை, கடன் உதவி ரூ.9 இலட்சம் அளவிற்கு வழங்கப்பட்டது. ரூ.126.9 இலட்சம் செலவில், 894 ஆதிதிராவிடர் குடியிருப்பு கட்

டும்பணி தொடங்கி வைக்கப்பட்டது. ரூ.1.20 இலட்சம் செலவில் உருவாக்கப் பட்ட பள்ளிக் கட்டடத்திறப்பு விழா நடை பெற்றது.

வருவாய்த்துறை சார்பில் - 500 பேருக்கு வீட்டு மனைப்பட்டா, நிலப்பட்டா, முதி யோர் உதவித் தொகை ரூ.3,50,000 அளவில் வழங்கப்பட்டது. ரூ.22.27 இலட் சம் செலவில், பரமக்குடியில் வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.



சமூக நலத்துறை மூலம் 10 பேருக்குத் தையல் இயந்திரமும், உடல் ஊனமுற்றோர் 10 பேருக்கு மூன்று சக்கர வண்டிகளும் வழங்கப்பட்டன.

பிற்பட்டோர் நலத்துறை சார்பில் 2 பேருக்கு முடிதிருத்தும் கருவிகளும், 10 பேருக்குச் சலவைப்பெட்டிகளும் அளிக்கப் பட்டன.

ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் 122 பேருக்கு வீட்டு மனைப்பட்டா வழங்கப் பட்டது.

ரூ.18.64 இலட்சம் திட்ட மதிப்பீட்டில், இராமேசுவரத்தில் சுற்றுலா மற்றும் வர வேற்பு மையம் கட்டுவதற்கு அடிக்கல் நாட் டப்பட்டது.

பேரூராட்சித் துறை மூலம், ரூ.47.50 இலட்சம் திட்ட மதிப்பீட்டில், இராமேசுவரம் பேருந்து நிலையக் கட்டடத்திற்காக அடிக்கல் நாட்டப்பட்டது.

கதர் - கிராமத் தொழில்துறை சார்பில், கதர் - கிராமக் கை வினைஞர்கள் ஐவருக்கு ரூ.48,500 நிதியுதவி அளிக்கப்பட்டது.

வனத்துறை மூலம் 10 பேருக்கு ரூ.40 ஆயிரம் ஊக்கத் தொகை வழங்கப்பட்டது.

இராமநாதபுரம் மாவட்டக் கூட்டுறவு நூற்பாலைத் தொழிலாளர்கள் 47 பேருக்கு ரூ.9,40,000 திட்ட மதிப்பீட்டில் வீடு கட்டும், பணி துவக்கி வைக்கப்பட்டது.

—வி. சச்சிதானந்தம்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
இராமநாதபுரம்.

# சந்திர சூரியனும் நட்சத்திரங்களும்

"சிறு துளி பெருவெள்ளம் என்பதற்கேற்ப இதுபோன்ற சிறிய பெரிய தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் பெருகவேண்டும் என்பது இந்த அரசினுடைய நோக்கம்.

"பலகோடி ரூபாயில் பெரிய தொழில்கள் மட்டுமே உருவானால், அத்தொழிற்சாலை அமைக்கப்பட்டிருக்கும் இடங்களிலே உள்ள - அந்த வட்டாரத்திலேயிருக்கும் நூற்றுக்கணக்கான அல்லது ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு அந்த ஆலைகளிலே வேலை கிடைக்கக் கூடும்.

"இதுபோன்ற பகுதிகளிலே உள்ளவர்கள், தொலைவிலே இருக்கின்ற அத்தொழிற்சாலைகளுக்குச் சென்று பணியாற்றவோ, அதன்மூலம் தங்கள் வாழ்க்கையில் நிம்மதி பெறவோ இயலாது. எனவேதான் சிறியசிறிய தொழிற்சாலைகள் இதுபோல ஆங்காங்கே அமையுமேயானால் - இந்தத் தொழிற்சாலையிலே ஒரு ஐம்பது பேர் பணியாற்றுகிறார்களென்றால், அந்த ஐம்பது பேர் மட்டுமல்ல; அந்த ஐம்பது பேரைச் சார்ந்திருக்கின்ற ஐம்பது குடும்பங்கள் இந்தத் தொழிற்சாலையின் மூலம் வாழப் போகின்றன என்று பொருள்.

"இத்தகைய ஒரு நல்ல நிலைமை ஆங்காங்கு - பகுதி பகுதியாக - பிரிவு பிரிவாக - வட்டாரம் வட்டாரமாகப் பெருகி அவர்களுக்குத் துணை நிற்கின்ற வகையில் இதுபோன்ற சிறிய மத்திய தொழிற்சாலைகள், ஆங்காங்கே அமைந்திடவேண்டும்.

'தமிழ்நாட்டிலே இப்போது பொறுப்பேற்றுக்கொண்டுள்ள இந்த அரசு, ஏழை எளியவர்களுக்குத் தற்காலிக மனநிறைவு, வாழ்க்கை நிறைவு அளிக்கக்கூடிய இந்தத் திட்டங்கள் பலவற்றைத் தீட்டி நிறைவேற்றி வருகிறது.

"எதிர்காலத்திலே ஒரு நல்ல நிலையான நிரந்தரமான வளத்தைத் தமிழ்நாட்டிலே ஏற்படுத்த இந்த மாநிலம் தொழில்மயமாக ஆக்கப்பட வேண்டும். அந்த எண்ணத்தோடுதான் சென்னையில் 700 கோடி ரூபாயிலே ஒரு பெரிய திட்டம். அனல் மின் நிலையத் திட்டம் அண்மையில் துவக்கப்பட்டது. இப்படி மின்சார நிலையங்களை அதிகமாக உருவாக்கி, தேவையான மின்சாரத்தைப் பெற்று மின்சாரத்தைக் கொண்டு நடைபெறக்கூடிய பல்வேறு தொழிற்சாலைகளைத் தமிழ்நாட்டிலே அமைக்க வேண்டும்.


'அப்படித் தொடங்கப்படுகின்ற' அந்தத் தொழிற்சாலைகளெல்லாம், வானத்திலே இருக்கின்ற சூரியனைப் போல - சந்திரனைப் போல - கோள்களைப் போல பெரிய, மத்தியத் தொழிற்சாலைகள் என்றால், இந்த ரெக்சின் தொழிற்சாலை வானத்திலே இருக்கின்ற நட்சத்திரங்களைப் போல இருந்தாலும் - நிலவில்லாத நேரத்தில் நட்சத்திரம் கூட வெளிச்சம் காட்டும் என்பதை மறந்துவிடக்கூடாது.

"அப்படிப்பட்ட ஒரு முயற்சியாக, இங்கே இந்தத் தொழில் நிறுவனத்தை உருவாக்கியிருக்கின்றவர்களுக்கும் - அவர்களைச் சார்ந்து துணையாக இருக்கின்ற அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகளையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்."

-4.7.89-இல் மாண்புமிகு முதல்வர் அவர்கள், இராம நாதபுரம் ரெக்சின் தொழிற் சாலையைத் திறந்துவைத்து ஆற்றிய உரையிலிருந்து.








அறிஞர் அண்ணாநகர் கிழக்கில் உள்ள அன்னை சத்தியா நகரில் ஏற்பட்ட தீ விபத்தில், வீடுகளை இழந்த ஏழை எளிய மக்களுக்கு, 1.7.89 அன்று வீடு கட்ட கடனுதவி வழங்கப்பட்டது.

மாண்புமிகு கல்வி அமைச்சர் பேரா சிரியர் க. அன்பழகன் அவர்கள் பாதிக்கப் பட்ட மக்களுக்கு வீடு கட்டக் கடனுதவியை வழங்கிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"இங்குள்ள குடிசை வீடுகளைவிட, மோசமான குடிசைகளும் உள்ளன. சென்னை நகரக் குடிசை மாற்று வாரியம் திட்டங்களை அமைக்கும்போது, அதில் பத்தில் ஒரு பகுதியைக் குடிசை மாற்றுவாரியப் பணிக்கு ஒதுக்க வேண்டும்.

"வீடு கட்டக் கொடுக்கும் கடன் உதவியை, நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்."

விழாவிற்கு, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திரு. எஸ். தங்கவேலு அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்:-

"இங்கு 328 குடும்பங்கள் வீடு கட்ட 4 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நிலம் கொடுக் கப்பட்டுள்ளது. குடிநீர் வசதி, சாக்கடை வசதி, சாலை வசதி போன்ற அடிப்படை வசதி மேம்பாட்டுக்காக 9 இலட்சத்து 61 ஆயிரம் ரூபாய் செலவிடப்படும்.

"நிதி நிலையைப் பொறுத்து, தமிழ்நாடு முழுவதும் இதுபோன்ற திட்டங்களை நிறைவேற்ற 15 கோடி ரூபாய்க்குத் திட்ட மிடப்பட்டுள்ளது."

விழாவில், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத் தலைவர் திரு. சி. செல்லப்பன், [illegible] நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் அ. கலாநிதி, முன் னாள் சட்டப் பேரவை உறுப்பினர் திரு. சோ. மா. இராமச்சந்திரன் ஆகியோர் பேசினர்.

தீ விபத்தில் பாதிக்கப்பட்ட அன்னை சத்தியா நகர் குடிசைப்பகுதி 79 மனைப் பரப்பில் 328 குடும்பங்களைக் கொண்டுள் ளது. இப்பகுதி சாலை வசதி, மழைநீர்க் கால்வாய் வசதி, குடிநீர் வசதி, தெருவிளக்கு வசதி ஆகிய அத்தியாவசியமான மேம் பாட்டுப் பணிகள் ஏதுமின்றி, மழைக் காலங்களில் தண்ணீர் தேங்கி மிகவும் அசுத்த மான சூழ்நிலையில் இருந்து வந்தது.

எனவே, குடிசைப்பகுதி மாற்று வாரியம் இக்குடிசைப்பகுதி அமைந்துள்ள நிலத்திற்கு உரிமையாளரான வீட்டு வசதி வாரியத்திடம் அந்நிலத்தினைப் பெற்று, அப்பகுதியை உலக வங்கி உதவியுடன், தமிழ்நாடு நகர்ப் புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளத் திட்டமிட்டது.

தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாடு வளர்ச்சித் திட்டத்தின் சிறப்பு அம்சங்கள் குடிசை வாழ்வோருக்கு மனை உரிமை வழங்குதலும், குடிசைப் பகுதிக்கு அத்தியாவசியமான மேம்பாட்டுப் பணிகள் செய்வதும் ஆகும். அன்னை சத்தியாநகர் குடிசைப் பகுதியில் ரூ.9.611 இலட்சம் செலவில் மேம்பாட்டுப் பணிகளான குடிநீர் வழங்குதல், மழைநீர்க் கால்வாய் அமைத்தல், சாலை வசதி செய் தல், தெரு விளக்குகள் அமைத்தல், குப்பைத் தொட்டிகள் அமைத்தல் போன்ற மேம் பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஒரு குடும்பத்திற்குச் செலவினம் ரூ.2,810 என்ற அளவில் இப்பணிகள் நிறைவேற்றப் பட்டு வருகின்றன. [illegible] நில மதிப்பீட்டின் ரூ.4.00 இலட்சத்தையும் சேர்த்தால், திட்ட மதிப்பீடு ரூ.13.611 இலட்சம் ஆகும்.

இந்தக் குடிசைப் பகுதியில் 2.4.89 அன்று ஏற்பட்ட பெரிய தீ விபத்தில், குடிசைவாசிகள் அனைவரும் தங்கள் வீடு களை இழந்ததுடன், உடைமைகளையும் பறி கொடுத்தனர். தீ விபத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அனைவரும் தாங்கள் வீடு கட்டிக்கொள்ளக் கடனுதவி வேண்டி வாரி யத்திற்கு விண்ணப்பித்தனர். அவர்களின் கோரிக்கையைப் பரிசீலித்த பின்னர், ஹட்கோ நிதியுதவியுடன் நிறைவேற்றப்பட்டு வரும், "குடும்பம் ஒன்றுக்குப் புதிதாக வீடு கட்டிக் கொள்ள ரூ.8000 வீதம் கடனுதவி அளிக்கும் திட்டத்தின்" கீழ் இக் குடும் பங்கள் பயன்பெறும் திட்டம் உருவாக்கப் பட்டது.


ஒரு குடும்பத்திற்குப் புதிதாக வீடு கட்டிக் கொள்ள அளிக்கப்படும் கடனுதவித் தொகையான ரூ.8000 நான்கு தவணை களில் அளிக்கப்படும். இவ்விதம் அளிக்கப் படும் கடன் தொகையை குடிசைவாழ் மக்கள் 21 ஆண்டுகளில் 7% வட்டி வீதத்தில் திருப்பி அளிக்க வேண்டும். இதன்படி ஒவ்வொரு குடும்பமும் மாதத் தவணையாக ரூ.80 வாரியத்திற்குச் செலுத்த வேண்டும்.

அன்னை சத்தியா நகர் குடிசைப் பகுதியில் ஒரு குடும்பத்திற்கு ரூ.8000 வீதம் 328 குடும்பங்களுக்கு ரூ.26.24 இலட்சம் கடனுதவி அளிக்கப்பட உள்ளது. இக் கடனுதவி அளிக்கும் திட்டம் செயல்படுத்தப் பட்டபின், இப்பகுதியில் உள்ள குடிசைவாழ் குடும்பங்கள் மனை உரிமை, மேம்பாட்டுப் பணிகள் ஆகிய பயன்களை அடைவதுடன், தாங்கள் வாழ்வதற்கான நல்ல இல்லங்களை யும் பெறுவர். [illegible]

-நமது செய்தியாளர்

**“குடல் புழுக்களை ஒழிக்க எல்லா வழிகளையும் பார்த்துட்டேன். கடைசீயிலே எங்க கால்நடை மருத்துவர் கொடுத்த பான்மின்த்* தான் பலிச்சுது...பால் நஷ்டம் தராமலே!”**

கறவைப் பிராணி உலகுக்கு நல்ல சேதி!



தன்னிகரற்ற

# பான்மின்த்*

(மொரண்ட்டல் ஸிட்ரேட்)

**குடற் புழுக்களை அழிக்கிறது, பாலைக் காப்பாற்றுகிறது.**

“பாழும் குடல் புழுக்களால் — அம்மம்ம, நான் பட்ட பாடு : பலவீனம், பசியிராது, கறந்த பாலும் குறைவு. பிறகு, எங்க கால்நடை மருத்துவர் தந்த பான்மின்த் தான் பலிச்சுது —அதுவும் ஒரே ஒரு டோஸ்லே!”

**பால் இழப்பே இல்லை.**

“அருமையான சேதி — எங்க மாதிரி எல்லாக் கறவைகளுக்கும் சினைப் பிராணிகளுக்கும் கூட பத்திரமான மருந்து பான்மின்த். மற்ற மருந்துகளைப் போல் இல்லாமல், பான்மின்த் உபயோகித்த பிராணிகளின் பால் மனிதருக்குக் கெடுதலே இல்லை — நூற்றுக்கு 100 பத்திரமானது.”

**சினைக் காலத்தில் எந்த சமயத்திலும் தீங்கற்றது.**

“என் தங்கச்சி — பிள்ளைத் தாய்ச்சி — அவளுக்கு ஒத்துக்குமான்னு கவலைப்பட்டேன். ஆனால் பான்மின்த் சினைக்காலம் முழுக்க எந்த கெடுதலும் செய்யலை; ஏன் பலவீனக் காலங்களிலே கூட பாதிக்கலை. பக்க விளைவுகளே கிடையாது. குணமானதும் ஆ! ஆறுதலான சுகம்!”

**வசதி மிக்கதும் கூட.**

சாப்பிட வெகு இலகு பான்மின்த். கண்டி விடுங்க ஒரு போலஸ் (பெரிய மாத்திரை) — எங்கமாதிரி பெரிய பசு எருமைகளுக்கு இரண்டு, உடம்பு சுகமாயிடுது! ஆடு, கன்று மாதிரி சின்னப் பிராணிகளுக்கு சின்ன மாத்திரையா வருது. சாப்பிடத் தயாரான கரைசலாகவும் கிடைக்குது. வேறென்ன வேணும் நம்மவர்களுக்கு!”

பால் இழப்பே இராது
பான்மின்த்*
விலையை ஈடு செய்வது

கால்நடை மருத்துவரிடம் பெறுவீர் : சிறந்த மருந்து

**பான்மின்த்***

குடற் புழுக்களைக் கொல்லும், ஆரோக்கியத்தை வெல்லும்!

LINTAS BMT 4 2217 TM

* யு எஸ் ஏ ஃபைஸர் நிறுவன டிரேடு மார்க்

pfizer

மேலும் விவரமறிய எழுதுவீர் இம் முகவரிக்கு:
ஃபைஸர் லிட்., பி.ஓ. பாக்ஸ் நம்பர் 11602, பம்பாய் 400 021.




# உரைவேந்தர் ஒளவை துரைசாமி

**த**மிழ் நூற் பதிப்பாசிரியர்களைப் பற்றி நினைக்கும்பொழுது நம் மனக்கண் முன் வந்துநிற்கும் மாபெரும் அறிஞர்களுள் ஒருவர் சித்தாந்த கலாநிதி - உரைவேந்தர் - ஒளவை துரைசாமி அவர்களாவார்.

இவர் சுந்தரம் பிள்ளைக்கும் சந்திரமதி அம்மையாருக்கும் சோபகிருது ஆண்டு ஆனித் திங்கள் 28-ஆம் நாள் (11-7-1903) அவிட்ட மின்னிணைந்த இடப ஓரையில் இரட்டையில் ஒருவராக ஒளவையார் குப்பம் என்ற சிற்றூரில் பிறந்தார். மயிலம் அருகில் இருந்த ஊரினராதலால் முருகன் பெயரை நினைந்து துரைசாமி என்று பெயரிடப் பெற்றார்.


உடன் பிறந்த (இரட்டையில் மற்றொருவர்) தங்கை பூமாதேவி பத்தாம் அகவையில் மறைந்தார். இவருக்கு மூத்தவர் மூவர். அவர்கள் மயிலாசலம், முத்துக்குமாரசாமி, சுப்பிரமணியன் ஆகியோர். அன்புத் தந்தையை ஐந்தாம் வயதிலேயே இழந்த இவர், மூத்த தமையனார் மயிலாசலனார் அரவணைப்பில் வளர்ந்தார். பள்ளியில் படிக்கும் காலத்தேயே தமிழுணர்வு சான்றவராய் விளங்கினார்.

பொருள் முட்டுப்பாடும் குடும்ப நிலையும் கல்லூரிப் படிப்பைத் தொடராதவாறு தடுத்தன.

முதலில் துப்புரவு ஆய்வாளர் பணியில் அமர்ந்து, சில திங்களுக்குப் பிறகு விலகி, ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் பயின்று, அதன் மூலம் படிப்படியாக உயர்ந்து, மதுரை தியாகராசர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகச் சேர்ந்தார். 1964-இல் ஓய்வு பெற்றார்.

இளமையில், இவர் இருந்த ஊரிலிருந்து இவருடன் இவர் பள்ளியில் சேர்ந்து ஒன்றாகப் படித்த இன்னொரு மாணவர் பெயரும் 'துரைசாமியே!''

அதனால், யாரும் இவரை எளிதில் அறிந்து கொள்ள, இவரின் தமிழ் மொழியார்வமும், பற்றும் கண்டு இவரின் ஆரம்பப் பள்ளி ஆசிரியர் சீர்காழி கோவிந்தசாமி ரெட்டியார் இவரை விளித்து, “ஒளவையார் குப்பம் ஊரிலிருந்து வரும் நீ; இனி, ஒளவை துரைசாமியெனக் கை சாத்திடத் தொடங்குக!” என்றார். சைவத்தை வளர்ப்பது



அறம் ஆகவும், தமிழைத் தழைக்கச் செய்வது பொருள் ஆகவும் இருந்த இவருக்கு 1930 தூன் திங்களில் இன்பம் ஆக வந்து சேர்ந்தார் நெல்லி அண்ணாப்பிள்ளை என்பாரின் மகளார் உலகாம்பாள்.

இத்தம்பதியினருக்கு முதலில் ஒரு பெண் மகவு பிறந்தது. பெயர் பாலகுசம். அடுத்து நடராசன், மணிமேகலை, திலகவதி, தமிழரசி, திருநாவுக்கரசு, ஞானசம்பந்தன், மெய்கண்டான், நெடுமாறன் ஆகியோர் மக்கட் செல்வங்களாக அமைந்தனர். தந்தையார் பெயரிலிருந்த 'ஒளவை' அவரது மக்கள் பெயரின் முன்னும் தொடர்ந்து விளங்கிவரத் தொடங்கியது.

உயர்நிலைப் பள்ளி வாழ்விலேயே கம்பராமாயணச் சொற்பொழிவு நிகழ்த்தி

**மா.லோ. தாமோதரம்**

மக்களின் நன் மதிப்பைப் பெற்றார். அப்பொழுதே சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி ஆகிய காப்பிய நூல்களுக்குச் சுருக்கங்கள் எழுதி வெளியிட்டார்.

பேராசிரியர் ஒளவையவர்கள் சைவத் துறையிலும், தமிழ் இலக்கியவுலகிலும் மிக்க விளக்கம் பெற்ற நற்றமிழ்ச் சான்றோர். திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் அடிகள், மறைமலையடிகள், பண்டித மணி கதிரேசன் செட்டியார், தமிழ்த் தென்றல் திரு.வி.க., ந.மு. வேங்கடசாமி நாட்டார், கவியரசு வேங்கடாசலம் பிள்ளை, நாவலர் சோம சுந்தர பாரதியார் முதலியோருடைய நன் மதிப்பை நிரம்பப் பெற்றவர். “சொலல் வல்லன் சோர்விலன் அஞ்சான்” என்று அப்பெரு மக்கள் பாராட்டும் புகழ் பெற்றவர்.

> “கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்
> சொற்றெரிதல் வல்லா ரகத்து.”

என்ற மெய்ம் மொழிக்கு ஒப்ப, நம் உரை வேந்தரது புலமை நலம் அப்பெரு மக்களிடையே ஒளி மிக்குத் திகழ்ந்தது. காட்டாகச் சூளாமணியில் - சடியரசனும் அவன் தேவி வாயுவேகையும் துய்க்கும் இன்பநிலையை விளக்கும் உரை, கல்வி நலம் கொண்ட உள்ளங்களைக் களிப்புக் கடலில் மூழ்குவிக்கும். பாடலும் உரையும் காண்போம்:

> கோவை வாய்க் குழல் அம்குளிர் கொம்பனாள்,
> காவி வாள் நெடுங் கண்ணி, அக் காவலற்கு
> ஆவியாய், அணங்காய், அமிழ்தாய், அவன்
> மேவும் நீர்மையளாய், விருந்தாயினாள்.

சூளாமணி - சுருக்கம் - பாடல் 61

*(கோவை வாய் - கோவைப் பழம் போலும் வாய், காவி - நீலமலர். வாள் - ஒளி. தான் உறுவதனை அவளும் உறுதலின் 'ஆவியாய்' என்றும், புலப்பது குறித்து அச்சமே நிகழ்தலின் 'அணங்காய்' என்றும், அவன் உயிர் தளிர்க்குமாறு முயங்கலின் 'அமிழ்தாய்' என்றும் கூறினார். புணருந்தோறும் புத்தின்பம் பயந்து மகிழ்வித்தலின், 'விருந்தாயினாள்' என்றார்.)*

சங்கத் தொகை நூல்களான புறநானூறு, பதிற்றுப்பத்து, ஐங்குறு நூறு என்ற மூன்றிற்கும் நிகரற்ற விளக்கவுரைகள் வரைந்த இவரது நன் மாண்பை வியந்து மதுரைத் திருவள்ளுவர் கழகம் இவருக்கு உரைவேந்தர் என்ற பட்டம் அளித்துச் சிறப்பித்தது. தந்தையாருக்கு வழங்கப் பெற்ற இப்பட்டம் அவருடைய மகனார்க்கும் வழங்கப்பட்டது ஒரு பெரும் புதுமையாகும்.

பன்னூறு ஆண்டுகள் பனையேட்டிலே இருந்த நற்றிணை முன்னே பின்னத்தூர் அ. நாராயணசாமி அவர்களால் உரையெழுதி வெளியிடப்பட்டது. எனினும் ஆசிரியர் ஔவையவர்கள் தமக்குக் கிடைத்த ஏடுகள் சிலவற்றைக் கொண்டு ஆராய்ந்து, பாட வேறுபாடுகள் மிகப்பல தோன்றிய மையின் மூலத்தோடு உரையும் எழுதி வெளியிட்டார். பாட வேறுபாடுகள் ஒவ்வொரு பாட்டிலும் அடிக் குறிப்பாகக் காட்டப் பட்டுள்ளன.

பாடவேறுபாடு கூறுமிடத்து, இவர், "இது புதுப்பட்டிச் செட்டியார் ஏட்டில் காணப்பட்டது" எனவும், "வருதுணை யாகிய" என்ற பாடம் புதுப்பட்டி ஏட்டில் காணப்படுகிறது எனவும், "இது தேவர் ஏட்டில் இல்லை" எனவும், "இது அச்சுப் பிரதியில் இல்லை" எனவும் காட்டுவன இவரது ஆராய்ச்சியின் நேர்மையைப் புலப் படுத்துகின்றன. "இப்பாட்டின் இறுதிப் பகுதி ஏடுகளில் சிதைந்துள்ளது" என்றும், "இப்பாட்டு ஏனோ ஏடுதோறும் பாட வேறு பாடு பல பெற்றுள்ளது" என்றும் கூறுவன வற்றால், ஏடுகளை எத்துணை ஆர்வத்தோடு ஆராய்ந்துள்ளார் என்பதை நாம் அறிய முடிகிறது. சுவடிகளில் பாட்டுக்கள் சிதைந்து காணப்படும்போது உரை வேந்தரின் உள்ளம் எய்தும் வருத்தத்தையும் இக் குறிப்புகள் நன்கு வெளிப்படுத்தி விடு கின்றன.

'நற்றிணைப் பாடல்களுக்கு இவர் இயற்றிய உரை கற்போர்க்கன்றி ஆராய்ச்சி யாளர்க்கும் பெரிதும் பயன்படுவது. முதற் கண் புலவரைப் பற்றிய விரிந்த குறிப் பொன்றை நமது ஆசிரியர் வரைகின்றார். புலவர் தம் பெயரும், பெயர்க் காரணமும், ஊரும், ஊரின் பழைய இருப்பும், இப்போது அதற்கு வழங்கப்பெறும் பெயரும், இருக்கும் இடமும், புலவர் பாடிய பாடலும், அவரால் பாடப்பெற்ற அரசும் ஆகியன முதற் குறிப்பில் இடம் பெறுகின்றன. பாடலைப் படிக்கும் முன்னர்ப் புலவரைப் பற்றிய முழு ஓவியமும் நமக்குப் புலனாகிறது. இதனால் விளையும் நன்மை ஒன்றுண்டு. இத்தகைய புலவரின் பாடலை விரைவில் நுகர வேண்டுமென்ற வேட்கையெழுகிறது. அவ்வாறு பாடலைப் படிக்கும்பொழுது பாடல் பன்மடங்கு சுவை தருகிறது. அடுத்துப் பாடலைப் பாட வேறுபாடுகளோடு பதித்து இருக்கிறார் ஔவையவர்கள். காட்டாக நற்றிணை 149-வது பாடலினைக் காண்போமாக:

"சிலரும் பலரும் கடைக் கண் நோக்கி
மூக்கின் ஊக்கி வாய்விரல் பொத்தி
மறுகிற் பெண்டீர் அம்பல் தூற்ற..."

முன் வந்த பதிப்பில் "மூக்கின் உச்சிச் சுட்டு விரல் சேர்த்தி" எனும் பாடம் காணப் பெறுகின்றது. இரண்டு பாடல்களும் ஏடுகளிற் காணப் பெறுபவையே; ஆயினும் பாடங்களைத் தேர்ந்து அச்சிடும்போது உரையாசிரியர் நுணுகி ஆய்தல் வேண்டும்.

> ***திருவள்ளுவர் பிறந்த நாட்டுக்கு உரியவர்கள் நாம், அவர் வாழ்ந்த மண்ணில் வாழத் தக்கவர்கள் நாம் என்பதைப் பேச்சினால் அல்ல செயலினால் மெய்ப்பித்துக் காட்ட வேண்டும்.***
>
> **-பேரறிஞர் அண்ணா**

பெண்கள், பிற மகளிரின் 'அம்பல் தூற்ற' ஒருவர்க்கொருவர் கூறும்போது எவ்வாறு காட்சியளிப்பர் என்பதனை நன்குணர்ந்து எழுதுகிறார் ஔவையவர்கள். ஒருத்தி கூறுவாள்! மற்றொருத்தி வியப்பால் வாயில் கைபொத்திப் பெருமூச் செறிந்து, அச் செய்தியின் புதுமையை வியந்து நிற்பாள். அப்பொழுது அம்பலுக்குரிய தலைவியோ, அவளின் உறவினரோ அவ்வழி வருவாராயின் பேசியிருந்த பெண்டிர் அனைவரும் பேசாத பெருநிலையுற்றுத் தம் கைகளால் வாய் பொத்தி மூக்கினின்றும் பெருமூச் செறிந்து தமது அலரைச் சொல்லாமற் சொல்வர். இக்காட்சியை எங்கேயோ கண்டுணர்ந்த உரையாசிரியர் சொல்லோவியமாக அதனை விளக்கி அதற்கொத்த பாடத்தினைப் பதிப்பித்துள்ளார்கள்.

நற்றிணை உரையினைப் படிக்குந்தோறும் ஔவையவர்களின் பன்னூற் பயிற்சியும் விளங்குகிறது. தேவார திருவாசகப் பெருநூல்களில் அவர் நன்றாகத் தோய்ந்தவர்.

நற்றிணை உரையெழுதி முடித்து புத்தகமாக வெளிவரும்பொழுது அதற்கு அணிந்துரையைத் தம் மாணவப் பெருமாட்டி திருமதி இராதா தியாகராசனிடம் பெற்றிருக்கிறார் எனில், என்னே அவர்தம் உயர்ந்த உள்ளப்பாங்கு!

"சைவ சித்தாந்தம்" கலை (முதுநிலை) தேர்வுக்குப் பாடப் புத்தகமாகப் பல்கலைக் கழகத்தாரால் வைக்கப்பட்டிருந்தது. அப்பொழுது உரைவேந்தரின் குடும்பத்தில் நெடுங்காலம் பழகிய வித்துவான் மாவண்ணா தேவராசன் அவர்கள், புத்தகம் எங்கும் கிடைக்காமற் போகவே, உரை வேந்தரிடமே பாடங்கேட்கச் சென்றார். அப்பொழுது ஔவையவர்கள் தோட்டத்திற்குக் குளிக்கச் செல்லும் நேரம் மாவண்ணாவைக் கூட அழைத்துக் கொண்டு போய்ப் "பாடம்" சொல்லி, குளித்து முடியும் நேரத்தில் "பாடத்தை" முடித்து - விளக்கம் கூறி - முடித்து விட்டார். மாவண்ணாவும் கலை (முதுநிலை) தேர்வும் நன்றாக எழுதி பட்டம் பெற்றுவிட்டார்! என்றால் உரைவேந்தரின் நினைவு ஆற்றல், பாடஞ் சொல்லும் முறை, எழுத்தாற்றல் ஆகியன எத்துணை மேம்பாடு உடையதாக இருந்திருக்க வேண்டும்.

திருவருட்பாவின் உரையினைப் பல ஆண்டுகள் ஓய்வின்றி எழுதிப் பல்லாயிரம் பக்கங்களில் முழுமைபெறச் செய்து, உரியவர் கையில் ஒப்படைத்து உரை இலக்கியப் பணி இனிது முடிந்தது என்ற மனநிறைவு கண்ட சித்தாந்த கலாநிதி - உரைவேந்தர் - ஔவை துரைசாமி அவர்கள் அவ்வுரை அச்சில் வரும்வரை வாழ்ந்திருக்கவில்லை!

மதுரை காமராசர் பல்கலைக் கழகம், "தமிழ்ப் பேரவைச் செம்மல்" என்னும் பெருமையளித்துப் பொன்னாடை போர்த்திப் பொற்கிழி அளித்துப் பாராட்டியது.

மதுரையில் உலகத் தமிழ் மாநாடு நடந்த போது ரூ.10,000/- கொண்ட பொற்கிழி வழங்கித் தமிழக அரசுபாராட்டிப்பெருமைப் படுத்தியது. இத்துணைப் பாராட்டுகளும் சிறப்புகளும் பெற்றிருந்தும் அவர் தன்னடக்கம் கொண்டவராகவே விளங்கினார்.

"ஒன்றுக்கும் பற்றாத எளிய என்னை இப்பெரும் பணியில் ஈடுபடுத்தி, மயங்குங்கால் தெளிவு பிறப்பித்தும், மருளுங்கால் தெருள் நிறைவித்தும் அருள்புரியும் அங்கயற்கண்ணியோடு அமர்ந்த ஆலவாய் அண்ணலின் திருவடிகளை வணங்குகிறேன்" என்று அடக்கமாகவே கூறிக்கொள்கிறார்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பாவேந்தர் முதலியோரிடம் பெரும்பரிவு பூண்டிருந்த ஔவையவர்கள் கோவையில் நடந்த முத்தமிழ் மாநாட்டில் இன்றைய முதல்வர் டாக்டர் கலைஞர் பேசிய விரிவுரையைக் கேட்டுப் பெரிதும் நெகிழ்ந்தார்.

அன்று முதல் அழகிய தோற்றமும், அறிவு ததும்பும் ஆற்றலும் நிரம்பிய கலைஞரை, 'என் கண்ணையும் கருத்தையும் கவர்ந்த தமிழ்மகன்' என்று பலமுறை பாராட்டியுள்ளார்.

சென்னைக்கு வந்திருந்த போது தம் கையால் நற்றிணை உரை நூலைக் கலைஞரிடம் வழங்கினார். 'உரிய இத்தமிழன் இந்நூலை ஊரறியச் செய்யும் வரம் பூண்டவன்' என்று அன்று மாலை கோகலே மன்றத்தில் புறநானூற்று விழாவில் பேசிய போது ஔவையவர்கள் பாராட்டினார்.

"தமிழ்நாட்டின் வரலாற்றினை தமிழ் நன்கறிந்த தமிழுள்ளம் படைத்த தமிழ் மக்களே முற்பட்டுத் தமிழிலும் ஆங்கிலத்திலும் விரிய நினைந்து எழுதுங்காலம் உண்டாயின், நன்று" என்று அவரது அருள் நிறை உள்ளம் வேட்கையுற்றது.

கற்றார்க்குக் கழிநலம் சேர்க்கும் கருத்துக் கருவூலம், தமிழ்மரபின் புதிய திறவுகோல், உரைநடைச்செறிவின் உயர்ந்த தோற்றம் 1981-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் மூன்றாம் நாள் வெள்ளிக்கிழமை காலை 8.05 மணியளவில் இவ்வுலகை முடித்துச் சித்திக் கொண்டது.






## சுதந்திரச் சிற்பி

### பண்டித ஜவகர்லால் நேரு

ஆசிரியர் : டாக்டர் கலைமதி,
வெளியீடு: கவிதா பப்ளிகேஷன்,
8, முத்துக்கிருஷ்ணன் தெரு,
தியாகராயநகர்,
சென்னை-600 017.

விலை: ரூ.10 பக்கம்: 94

பண்டித ஜவகர்லால் நேருவின் வாழ்க்கை வரலாற்றை விளக்கிடும் நூல் இது.

நேருவின் இளமைப் பருவம், அவரது அனுபவ மொழிகள் ஆகியவை குறிப்பிடத்தக்க அம்சங்கள்.

நேருவின் வாழ்க்கையில் நடந்த சில முக்கிய நிகழ்ச்சிகளும் நூலில் இடம் பெற்றுள்ளன.

மாணவர்கள் படித்துப் பயன் பெறத்தக்க நூல்.

-பி.வி.கிரி

### மாதர் நோயும் மருத்துவமும்

ஆசிரியர் : டாக்டர் சி. இராமகிருஷ்ணன்
வெளியீடு: நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிமிடெட்
41-பி, சிட்கோ எஸ்டேட்,
சென்னை-600 098

விலை: ரூ.20 பக்கம்:156

பெண்களுக்கே உரியதான நோய்களைப் பற்றிய விளக்க நூல் இது. பெண்கள் தங்கள் உடல்நலனைப் பேணிக்காக்கவும், நோய் வருமுன் காக்கவும், அது வந்தபின் தடுக்கவும் சிகிச்சை முறைகளை இந்நூல் தெரிவிக்கிறது.

பெண் கருவுறுப்புகளின் உடற்கூறு, பூப்பெய்தலும் மாத விலக்குகளும், மாத விடாய் சார்ந்த நோய்கள், கருப்பை - சினைப்பையில் தோன்றும் நோய்கள் போன்றவற்றை விரிவாக எடுத்துக்கூறி அதற்கான ஹோமியோபதி வைத்திய முறைகள் விளக்கப்பட்டுள்ளன.

தமக்கு வந்துள்ள, அல்லது தம்மைத் தாக்கக்கூடிய நோயின்தன்மை பற்றி தாமே அறிந்துகொள்ள பெண்களுக்கு இந்நூல் ஒரு வரப்பிரசாதம்.

-வி. இராவணன்,

### அயராத் தொண்டின்

### அஞ்சுகச் செல்வன்

ஆசிரியர் : இளமுருகு பொற்செல்வி
வெளியீடு: இளப்பாசறைப் பதிப்பகம்,
அன்னையகம்,
குழித்தலை-639 104

விலை: ரூ.9 பக்கம்: 80

திருவள்ளுவர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முதல்வர் கலைஞர், கல்வியமைச்சர் பேராசிரியர் ஆகியோரின் முழுப் பக்க வண்ணப்படங்களோடு தொடங்குகிறது இந்த நூல். கலைஞர் அவர்களின் பெற்றோர் படமும் இதற்கு அணிசேர்க்கிறது.

'தமிழர்களுக்குப் புதுவாழ்வு தந்தவர்' என்பதில் தொடங்கி, 'ஏடுகள் இயம்புகின்றன' என்பது வரை தனித்தனித் தலைப்புகளிலான 31 கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் விளங்குகிறது. கவிதைகளும் உண்டு. அத்தனையும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் புகழ்மிக்க வாழ்க்கை வரலாற்றுச் சம்பவங்களை ஆட்சிச் சிறப்பை - அமைச்சரவை அமைப்பை விளக்குபவை.

அதுமட்டுமல்ல - தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, கல்வியமைச்சர் பேராசிரியர் ஆகியோரின் கட்டுரைகளும், மாணவப் பருவத்தில் கலைஞரால் தொடங்கப்பட்ட தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றத்திற்குப் பாவேந்தர் பாரதிதாசனார் எழுதி யனுப்பிய வாழ்த்துக்கவிதை ஆகியவைகளும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. படித்துப் பயன் பெறலாம்.

### புகழ்க்கோபுரம்

ஆசிரியர் : கோ. செல்வம்,
வெளியீடு: புவனம் பதிப்பகம்,
18, சின்னப்ப ராவுத்தர் தெரு,
சென்னை - 600 005

விலை ரூ.15 பக்கம்: 160

அனைத்திந்திய வானொலியின் இயக்குநராகப் பணியாற்றியவர் நூலாசிரியர். பொறுப்பிலிருந்த காலத்தில் அவரெழுதி வானொலியில் ஒலிபரப்பப்பட்ட நாடகங்கள் ஐந்து இந்நூலில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. அத்தனையும் பழந்தமிழ்ப் பண்பாட்டையொட்டி எழுதப்பட்ட நாடகங்கள்.

இந்நூலில் உள்ள புகழ்க்கோபுரம், விசுவநாத நாயக்கர் ஆகிய இரண்டு நாடகங்களும் வரலாற்றுச் சான்றுகளோடு எழுதப்பட்டுள்ளன. சதுக்க பூதம் என்பது கற்பனை நாடகம். குண்டலகேசி, ஒருத்தியின் இரண்டு தாயார் ஆகியவை பெருங்காப்பியக் கதைகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப் பட்டுள்ளன.

நாடகங்களுக்காக ஆசிரியர் எடுத்துக் கொண்டிருக்கும் மூலக்கரு, நெருடலானவைகளாக இருந்தபோதிலும் எளிய தமிழில் இனிமையாக எழுதப்பட்டிருக்கின்றன. பல இடங்களில் கவிதை நடையிலேயே உரையாடல்கள் செல்கின்றன. கேட்டு மகிழ்ந்த இந்நாடகங்களை இப்புத்தகத்தின்மூலம் படித்துக் களிக்கலாம்.

'சோழ ராஜா'

> **நாம் கொண்டிருக்கும் கருத்து சரி என்று நமக்குத் தெரிந்தும், அது சரியோ தப்போ என்று நாம் அச்சப்படுவதுதான், நம்மிடத்தில் உள்ள பெரிய பலவீனமாகும்.**
>
> **—ஹால்டேன்**

### நீதியின் முன்

ஆசிரியர் : உதவை மு. வீரையன்,
வெளியீடு: மக்கள் பதிப்பகம்
4, சிங்கப் பெருமாள்
கோயில் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை-600 005.

விலை: ரூ.8.00 பக்கம்: 104

இது ஒரு நீள் கதையல்ல. ஒவ்வொரு கிராமத்திலும் நடைபெற்ற, நடைபெற்றுக் கொண்டிருக்கிற உண்மைச் சம்பவங்களின் தேரோட்டம்.

ஒவ்வொரு கிராமத்தானும் அன்றாடம் சந்திக்கும் மனிதர்களே இக்கதையின் பாத்திரங்கள்.

வார்த்தை ஜாலமற்ற எளிய நடை

படிக்க வந்த கிராமத்துப் பெண்கள், காதலின் பெயரில் பட்டணத்தில் சீரழியும் உண்மை. காதலியைத் தேடிக் கிராமம் வந்த பட்டணத்தான் மரத்தில் தொங்கும் உண்மை. ஜாதி வெறியால் நிகழும் சம்பவங்களின் உண்மை. இப்படிப் பல உண்மைகளின் ஊர்வலம் இந்நூல்.

இந்நூலின் சிறப்புரையே இந்நூலுக்கு ஓர் அற்புதமான விமரிசனம்.

காளியப்பனைப் பற்றி இன்னும் கொஞ்சம் சொல்லி இருக்கலாம்.

காதலர்களின் பேச்சைக் கொஞ்சம் குறைத்திருக்கலாம்.

சிலசம்பவங்கள் மிகத் துணிவோடு எழுதப்பட்டுள்ளன.

படித்துப் பாராட்ட வேண்டிய நூல்.

என். குமாரசாமி.

# கை வண்ணம் இங்கே கண்டோம்

சின்னஞ் சிறிய விரல்கள் உருவாக்கும் (வி)சித்திர வேலைப்பாடுகள்!

சிந்தை மகிழும் விந்தைக் கைவினைப் பொருள்கள்!

காணக் கண் கோடி வேண்டும் என்கிற வகையில் அமைந்திருந்தது அந்தக் கண்காட்சி!

ஆம். பண்டித ஜவகர்லால் நேரு நூற்றாண்டு விழாவையொட்டி நடந்த, அகில இந்தியக் கதர் மற்றும் கிராமக் கைத்தொழில் கண்காட்சிதான் அது!

தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், தமிழ்நாடு சர்வோதய சங்கம், காந்தி கிராமம், காதி கிராமோத்யோக் பவன் ஆகியவை இணைந்து நடத்திய இந்தக் கண்காட்சி, 30-6-'89 அன்று சென்னைக் கோபாலபுரத்தில் உள்ள காதி கிராமோத்யோக் பவனில் நடந்தது.


மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் - கண்காட்சியைத் தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசுகையில்:

"கதர் மற்றும் கிராமக் கைத்தொழில்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். கிராமக் கைத்தொழிலைப் பொறுத்தவரை, தமிழ்நாடு இந்தியாவிலேயே முதல் இடத்தைப் பெற்றுள்ளது. ஆனால், கதர்த் தொழிலில் 2-வது இடத்தைத்தான் பிடித்துள்ளது. இரு தொழில்களிலும் தமிழ்நாடு முதலிடம் வகிக்க வேண்டும்.

"இந்தத் துறையின் மூலம் 9½ இலட்சம் மக்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அவர்களால் ரூ.105 கோடிக்குப் பொருட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தத் துறையை வளர்ப்பதன் மூலம், வேலைவாய்ப்பைப் பெருக்குவதோடு, கிராமப் பொருளாதாரத்தில் அபிவிருத்தி ஏற்பட வைக்கலாம்" என்றார்.

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்-

"இந்தக் கண்காட்சியைப் பார்க்கும் போது, கிராம மக்களின் கைத்திறன் எந்த அளவுக்கு உள்ளது. என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.



"கதர் கிராமத் தொழில் பொருட்களை வாங்கி ஆதரிக்க வேண்டுகிறேன். இப்படிப் பட்ட தொழில்களை ஊக்குவிப்பதால், கிராமப் பொருளாதார வளர்ச்சி அடையும். வேலை இல்லாத திண்டாட்டம் குறையும் என்பதோடு, இத்தகைய கைவினைக் கலைகள் கொண்ட தொழிலைக் காப்பாற்றுவதன் மூலம் நம் பண்பாட்டைக் கட்டிக் காக்க முடியும் என்பதையும் உணர வேண்டும்".

இந்தக் கண்காட்சியில் முதலில் தரி வகைகளைப் பார்க்கிறோம். நேபாளத் தரி, மஸ்லின் ராட்டை முதலானவை நம்மைக் கவர்கின்றன.


தமிழ்நாடு மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவு இணைய அரங்கில் அழகிய பனை ஓலைப் பொருள்கள், பனை வெல்லப் பண்டங்கள் வைக்கப்பட்டிருந்தன. இதில் சிறப்பு அம்சம் என்னவென்றால், பழங்களைப் பதப்படுத்துவதைப் போல, நுங்கை டப்பாவில் பதப்படுத்தி விற்பனை செய்வது தான்! இவ்வாறு பதப்படுத்தப்பட்ட நுங்கு ஓராண்டுக்கு மேலாகவும் கெடாமல் இருக்குமாம்!

நரிக்குறவர் கூட்டுறவுச் சங்கத்தின் அரங்கில், பல வண்ண மணிமாலைகள் உள்ளன. மண் பொம்மைகள் செய்வதை நேரிலேயே கண்டு மகிழலாம். வாசனை சோப்புகள் தயாரிப்பதையும் இங்கு பார்க்கலாம்.

இந்தக் கண்காட்சியில் தமிழ்நாடு தவிர, ஆந்திரம், கேரளம், கர்நாடகம், மகாராஷ்டிரா, ஒரிசா, பஞ்சாப், ராஜஸ்தான், உத்திரப்பிரதேசம், அசாம், பீகார், மேற்கு வங்கம், குஜராத் ஆகிய மாநிலங்களும் பங்கு கொண்டு, தத்தம் கைவினைப் பொருள்களைக் காட்சிக்கு வைத்திருந்தன.

சித்திர வேலைப்பாடு மிக்க வண்ணத் துணிகள், பித்தளைப் பொருட்கள், மரச் சிற்பங்கள் மற்றும் சோப்பு, தேன் வகைகள் காணக் கிடைக்கின்றன இங்கே!





காட்சியில் மின்விசைச் செக்கு ஒன்று வைக்கப்பட்டிருந்தது. எண்ணை நன்கு சுத்தம் செய்து, தரமான 'நல்ல' எண்ணெய்யைத் தயாரிக்கும் விதம் காண்பிக்கப்படுகிறது.

காதி கிராமோத்யோக் பவன் தயாரிக்கும் தரமான பொருள்கள் குறித்து, அதன் மேலாளர் திரு சி.டி.வி. ராகவலு அவர்கள் செய்தியாளர்களிடம் கூறுகையில்,

"இங்குத் தயாராகும் ஊறுகாய்கள் நன்கு பதப்படுத்தப்படுகின்றன. மிளகாய்ப் பொடி, இட்லிப் பொடி, மஞ்சள் பொடி முதலானவை சுகாதார முறைப்படி தயாரிக்கப்படுகின்றன. காம்பு நீக்கிய மிளகாய்ப் பொடி இயந்திரத்தின் உதவியால் பெண்களால் தயாரிக்கப்படுகிறது. இதேபோல ரொட்டி, பிஸ்கட் ஆகியவையும் தயாரிக்கப்படுகின்றன. இலாப நோக்கம் இல்லாமல்; தரமான பொருள்கள் மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பொருள்களைத் தயாரிக்கிறோம். வருகின்ற இலாபத்தைக் கொண்டு, சமுதாயப் பணிகளைச் செய்கிறோம். கண்காட்சிக்குப் பிறகும், காதி பவனில் கைவினைப் பொருள்கள், பண்டங்கள் முதலானவை வழக்கம்போல எப்போதும் கிடைக்கும்" என்றார்.

கதரில் பனியன் தயாரிக்கவும், சரிகை உற்பத்திச் செய்யவும், நவீன முறையில் நூல் நூற்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்கிற செய்திகளெல்லாம் கேட்கிறபோது, கதர் கிராமக் கைத்தொழிலுக்கு ஒளிமயமான எதிர்காலம் இருக்கிறது என்பது சொல்லாமலே விளங்குகிறது!

பி.வி.கிரி

# வெண்பாப் போட்டி

## 2. நலிந்தாரும் பெற்றார் நலன்

பண்பாட்டு வாழ்வில் பகுத்தறிவை ஊட்டியே
எண்ணத்தில் பெற்ற எழுச்சியால் - மண்ணில்
வலிமையாய்த் திட்டம் கலைஞர்தான் தீட்டவே
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-பாவலர் இராவணதாசன்,
சென்னை-23.

இமிழ்கடல் சூழுலகில் இன்னலெலாம் ஏற்றுத்
தமிழொடு தனினமும் காத்தார் - அமிழ்தாய்ப்
பொலிந்திலங்கும் பெம்மான் கலைஞராட்சி தன்னால்
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-இ.பொ. நடராசன்,
சென்னை-12.

நல்லரசை நாமும் நலமாகப் பெற்றதனால்
பல்துறையும் பாங்காய்த் திகழ்ந்திடவே - வல்ல
கலைஞர் செயல்திறனால் காரிருள் நீங்க
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-வே. அருணாதேவி,
வடமாதிமங்கலம்.

பொங்கும் பசுமைப் புரட்சி; அறிவியல்
எங்கும் வளர்ந்தே இருப்பது - இங்கு
பொலிந்திருக்கும் நல்லாட்சி எல்லாம் பொருந்த
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-மு. கோபால்,
பழையூர்.

அண்ணலாம் காந்தியும் ஏசும் நபிகளும்
அண்ணாவும் ஆற்றியதை நம்கலைஞர் - எண்ணி
பலியானோர் உய்யப் பணித்த விதியால்
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-ஞா. முத்துக்கிருட்டிணன்,
மெய்த் தலைவன் பட்டி.

சொல்லமனம் தித்திக்கும் வையமெலாம் வாழ்த்துரைக்கும்
நல்லமன நம்கலைஞர் நல்லரசால் - அல்லல்
மலிந்தாரும் முந்துபுகழ் தன்னைமறந் தாரும்
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-மன்றவாணன்,
சென்னை-5.

ஊனர் மகளிர் ஒளிக்கண் மழலையர்
மானமொடு வாழ வகைசெய்தார் - மானே!
வலிந்தாரும் போற்றிவர வண்கலைஞர் தம்மால்
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-வெ. இராமச்சந்திரன்,
பெரம்பூர்.

புலியும் மறியும் பகைத்துநிற்கும் காலம்
கலிநீங்க நம்கலைஞர் திட்டம் - அளித்தார்
பழித்தாரும் மெச்சிப் புகழவே இங்கு
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-பூ.மு. பக்கீர்முகமது,
மேலப்பாளையம்.

தாழ்கின்ற நம்நாட்டைத் தாங்கி வழிவகுப்பார்
தாழ்விலா நற்றலைவர் தண்கலைஞர் - ஆழ்ந்து
வலிந்துசெயும் நல்லாட்சி வாகுபார்; வாழ்வில்
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-கவிஞர் தீர்த்த. வஜ்ஜிரவேலு,
சந்தைப்புதுப்பாளையம்.

பொழிமழையால் நல்லாட்சி பூத்தலால் நல்லார்
வழிச்செலலால் இன்னிசை வாய்ப்பால் - செழிப்பின்
மலிவிலையில் மாண்பொருள் கிட்டலால் இங்கே
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-புலவன் வை. வீறாண்டான்,
தாஞ்தூர்.

இயற்கையவள் ஏமாற்ற இன்னலுற்றோர், ஏழ்மைத்
துயரினிலே என்றும் துவள்வோர் - உயர
வலிமைசேர் வாழ்வளித்த வள்ளலால் இன்று
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-லூ. சேகராசா,
இடைக்காட்டூர்.

வலியார் பொருள்குவிக்கும் வல்லமையால் நாட்டில்
மெலிந்தார்மேன் மேலும் மெலிந்தார் - நிலைகண்டு
ஒளியாட்சி பூத்தமையால் ஓடிற்(று) இருளே!
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-மைதிலிராகவன்,
திருக்கழுக்குன்றம்.

இருபான் விழுக்காட்டை எம்மினத்தார் பெற்றார்!
வறியோர் திருநாளில் வாழ்ந்தார்! - சிறியோர்
மெலிந்தோர் உணவுஉடை மேதினியில் வாய்த்து
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-ச. அருட்செல்வன்,
சிலம்பூர்.



உனக்குப் பெருமை வேண்டுமானாலும், உற்சாகம் வேண்டுமானாலும் பிற மனிதனுக்குத் தொண்டு செய்வதில் போட்டி போடுவதன் மூலம் தேடிக் கொள்.

-தந்தை பெரியார்

காட்சிக் கெளிய கலைஞர் தமிழ்நாட்டின்
ஆட்சிக்கு வந்தே அடுக்கடுக்காய் - மாட்சி
பொலிநல்வாழ் வுத்திட்டம் தந்தார்; அதனால்
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-மு. கோமதி,
கூகலூர்.

பெண்கள் பெரும்பேறு பெற்றார் பெருமுதியோர்
கண்ணொளி பெற்றுக் களித்தார்இம் - மண்ணின்
கலிதீர வந்த கலைஞரால் இங்கு
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-மு. வெங்கடேசன்,
துறையூர்.

பொல்லாத் தனியுடைமை போற்றும் நிலைமாற்ற
எல்லோர்க்கும் எல்லாமென் றாக்கிட - ஒல்லும்
வலிவுடைய ஆட்சி அமைந்ததால் இங்கே
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-மு. அழகிரிசாமி
உதயமார்த்தாண்ட புரம்.

கூழுக்கே ஏங்குகின்ற ஏழைக்கும், எல்லோர்க்கும்
வாழையெனத் தந்தார் பலனெல்லாம் - பாழும்
கலியதனைத் தீர்த்த கலைஞர்தம் ஆட்சியில்
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-கவிரவி,
சென்னை-49.

நல்லரிசி, சேலை, நயம்வேட்டி நம்மரசில்
இல்லார் இலவசமாய் ஏற்கின்றார் - நல்லோய்!
வலிந்தார் வளங்கண்டு வாழ்கின்ற நாளில்
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-ப.அ. இசுமாயில்,
மேலப்பாளையம்.

கண்ணீரின் வேரறுக்கும் காக்கும் கரங்களில்
பொன்மலராய்த் திட்டங்கள் பூத்தனவே - மண்ணில்
ஒளிமிக்க ஆட்சியின் உண்மைசேர் தொண்டினால்
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-ரமணகுமார்,
சென்னை-1.

முதியோர், பதியிழந்தோர், ஊனமுற்றோ ரெல்லாம்
கதியற்று வீழ்ந்திடாமல் காக்க - நிதியை
நலப்பணிக்கும் ஈந்த நமதரசா லின்று
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-சொ. பத்மநாபன்,
சென்னை-4.

அஞ்சா நெஞ்சம் படைத்த இலட்சியவாதிகள் தான் ஒரு நாட்டிற்குக் கிடைக்கக்கூடிய ஒப்பற்ற செல்வங்கள். ஏனெனில், பணம் வெறும் இரும்புப் பெட்டியில்தான் தூங்கும். ஆனால் இந்தச் செல்வங்களோ மக்களின் இதயப் பெட்டியில் வாழ்வர்.

-பேரறிஞர் அண்ணா.

தீங்குற்ற மக்களெல்லாம் தீதின்றி வாழ்ந்திடவே
பாங்காய் உழைத்த பெரியாரால் - ஈங்கு
கிலிபிடித்தே மாய்ந்தோரும் கீழ்நிலையுற் றோரும்
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-இரா. பழனிசாமி,
மூகாசெம்சம்பட்டி.

அடித்தள மக்களின் ஆட்சி மலர
கொடியேற்றி யேவகுத்தார் கொள்கை - நொடியில்
வலியோரின் வஞ்சகத்தால் வாழ்விழந்தே போன
நலிந்தாரும் பெற்றார் நலன்

-சு.கா., சுந்தரராசன்,
நாரைக்கிணறு.

இயற்கை கதிரவன் இன்மழை காற்றாய்
செயல்திற னாற்றிச் சிறக்கும் - துயர்கொல்
கலைஞரின் ஆட்சிக் கனியின் சுவையால்
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-கவிஞர் இரா. சௌந்தரம்,
பண்டாபுரம்.

முதியவர் ஏற்றமுற மூவைந்தைச் சேர்த்து
நிதியுதவி தந்தகரு ணைசேர் - நிதியே
மெலியாமல் நீயாளும் மேதினியில் இன்று
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-கவிஞர் இரா. ஆ. ஆனையப்பன்,
புதூர்.

சொன்னதைச் செய்து சரித்திரம் கண்டவரே
அன்னத்தை நாளும் அளிக்கின்ற - மன்னா
பொலிவான உம்முகத்தைப் பார்த்த பிறகே
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-அனக்குடி சீதா,
அழகிரிநாதன் பேட்டை.

அன்னைத் தமிழை அரியணையில் தானமர்த்தித்
தன்னையே தீபமாக்கும் எம்தலைவன் - அன்பால்
மலிவான திட்டங்கள் மக்கட்(கு) அளித்ததால்
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-மு. தம்புசாமி,
பெருந்தோட்டம்

அழகியாம் பெண்ணுக்கு ஆஸ்தியில் பங்கு
உழவரின் நீர்க்கடன் நீக்கம் - பழைய
பொலிவுடனே தோன்றிய நற்கலைஞர் தொண்டால்
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-புலவர் க. மனோகரன்,
காஞ்சிபுரம்.

பெண்ணினம் முன்னேறப்பேரார்வம் கொண்டதனால்
கண்ணொளி தந்த கலைஞரும் - கண்ட
நலமான திட்டத்தால் நாடுயரும்! வாழ்வில்
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-கவிஞர் அருவி,
திருக்குவளை.

தமிழ்மக்கள் தோற்றுவித்த தன்மான ஆட்சி
தமிழருக்கு நல்வாழ்வு தந்த - அமிழ்தாம்!
பொலிவான சட்டமே போட்டதா லிங்கு
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-புலவர் சோ. பால்சாமி,
விருதுநகர்.

திருமணமே ஆகாது சீரழியும் பெண்டிர்
பெறுகின்றார் பேருதவி பேறாய் - அரசால்;
வலிவிழந்தோர் பெற்றிட்டார் மாங்கல்யத் திட்டம்;
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-வண்ணைமூர்த்தி,
சென்னை-8.

பொற்காலம் இன்று புதிதாய்ப் பிறந்தது;-
நற்குணமு தல்வர் நதியென - வற்றாப்
பொலிவுறும் திட்டம் பலதந்தார்; நாட்டில்
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-தாகிரா மொகிதீன்,
சென்னை-4.

கண்ணுள் கனவுகளாய் வாழ்ந்தோரின் ஏக்கங்கள்
எண்ணங்கள் இன்ப நனவுகளாய் - மண்ணில்
பொலிவுற நற்றமிழன் பொன்னொளி ஆட்சியிலே
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-கவிஞர் ச. இளமதி,
பங்காருப்பேட்டை.

வல்லரசாய்த் தாயகம் வாழாத போதிலும்
நல்லரசாய் ஏற்கவும் நற்றமிழில் - வல்ல
கலைஞரின் திட்டத்தால் காலத்தின் போக்கால்
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-இரா. அன்பழகன்,
உளுந்தூர்ப்பேட்டை.

அரிசியோ டாடை அமுதுமீந்த சீர்சால்
குரிசில்கோ லோச்சும் அரசில் - பரிவால்
வலியிழந்து வாழ்க்கை வளங்குன்றி நின்ற
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-ம. ஆனந்த அபூர்வசாமி,
விருதுநகர்.

குடும்பத் தலைவர் "இறப்புநிதி" நாளும்
இடுக்கண்ணில் வாழ்வோர்க்கு நல்லரிசி - படித்த
எளியநம் பாவை "மணஉதவி" இங்கு
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-புலவர் வெட்டிவயல் வளவன்,
வெட்டி வயல்.

அன்னைத் தமிழ்நாட்டை ஆள்வதற்கு யார்வருவார்
என்று திகைத்திருந்த இந்நாட்டின் - முன்னே
தெளிவாய்த் தமிழ்மக்கள் தீர்ப்பளித்த தால்தான்
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-இரா. மதனகோபால்,
நகரப்பட்டி.

பொன்னான ஆட்சியிதில் பூத்துவந்த திட்டங்கள்
எந்நாளும் நன்மைதரும் ஏழைக்கே - மின்னும்
களிப்பெங்கும் பொங்க கலைஞரவர் எண்ண
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-குவளை ம. பாலசுப்பிரமணியன்,
வந்தவாசி.

எத்தனையோ ஆட்சிகளை இந்நாடு கண்டதுண்டு
அத்தனையும் விளைத்தபயன் கொஞ்சம்தான் - மெத்த
கலைஞரின் ஆட்சியிலே காண்பதெல்லாம் இன்பமயம்
நலிந்தாரும் பெற்றார் நலன்.

-எம். ரங்கநாதன்,
உளுந்தூர்ப்பேட்டை.

# நீதிமான் எழுந்து நிற்பான்!

"சற்குணம் அவர்கள் எனக்குத் தந்த பைபிள் புத்தகத்தைப் புரட்டிப் பார்த்தேன். 784வது பக்கத்தில் ஒரு வாக்கியம் இருப்பதைக் கண்டேன். 13 ஆண்டுக் காலம் சோதனைகளை, வேதனைகளைச் சந்தித்த நான், எப்படி இப்போது எழுந்து நிற்க முடிகின்றது என்று எனக்கு நானே கேட்டுக் கொண்டு, அந்தப் பைபிள் புத்தகத்தைப் புரட்டிப் பார்த்தபோது, அதிலே பதில் அடங்கியிருந்தது.

"ஏழு தரம் விழுந்தாலும் நீதிமான் திரும்பவும் எழுந்து நிற்பான்" என்று பைபிளிலே எழுதப்பட்டிருக்கின்றது.

"நான் நீதிமானோ இல்லையோ - நான் நீதிக் கட்சியைச் சேர்ந்தவன்.

"திராவிடர் இயக்கத்தின் தொடக்கம் நீதிக் கட்சிதான். எனவே, எங்களுடைய அடித்தளம் நீதிக்கட்சி என்ற காரணத்தால், எத்தனை தரம் விழுந்தாலும் எழுந்து நிற்போம் என்பதை எங்களுக்குப் பைபிளே உறுதியாக எடுத்துக் காட்டியிருக்கின்ற காரணத்தால், இன்றைக்கு எழுந்து நிற்கின்றோம்!

"நான் எம்மதத்தையும் சார்ந்தவன் அல்ல. ஆனால், எம்மதத்திற்கும் விரோதியல்ல. எல்லா மதங்களையும், அந்த மதத்திலே உள்ள நல்லவைகளை எல்லாம் எடுத்துக்கொண்டு - அந்த மதங்களைப் பின்பற்றி வாழுகின்ற மக்கள் மனம் புண்படாத அளவிற்கு, எதிர்க்கட்சி வரிசையிலே இருந்தாலும், ஆளுங்கட்சிப் பொறுப்பிலே இருந்தாலும், அவர்களுக்காகப் பாடுபடுவது என்று தீர்மானித்துக் கொண்டவன். அதனால்தான் அன்றைக்கும் சொன்னேன், இன்றைக்கும் சொல்கிறேன்.

*"நான் திருநீறு பூசாத சைவன் ...*
*நாமம் தரிக்காத வைணவன் ...*
*ஜுல்கி கட்டாத முஸ்லிம்,*
*சிலுவை அணியாத கிறிஸ்தவன்*

அந்த உணர்வோடுதான் இந்த ஆட்சிப் பொறுப்பினை அன்றைக்கும் ஏற்று நடத்தினோம்!

சிறுபான்மை மக்கள், பெரும்பான்மை மக்கள் என்ற பேதம் காட்டாமல், ஆனால் சிறுபான்மை மக்களை வாழ வைக்க வேண்டும், அவர்களுக்குப் பாதுகாப்பு அரணாகத் திகழவேண்டும் என்ற உணர்வோடு இந்த அரசு செயல்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்."

*சென்னை வள்ளுவர் கோட்டத்தில், 14.6.89 அன்று கிறிஸ்துவ அமைப்புகள் நடத்திய பாராட்டு விழாவில், மாண்புமிகு கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.*



## மாணவர் பக்கம்

# ஓநாய்

ஓநாய் பார்ப்பதற்கு நன்கு வளர்ந்த அல்சேஷன் நாயைப் போல் காணப்படும். இது ஒரு மீட்டர் உயரமும், 2 மீட்டர் நீளமும் கொண்டது.

ஓநாயின் கால்கள் நீளமானவை. நீண்டதூர ஓட்டத்துக்கு ஏற்றவை. இதன் தலை பெரியதாக இருக்கும். நீண்ட முகத்தை உடையது. பூனை, நாய் ஆகியவற்றின் கண்கள் போல இதன் கண்களும் ஒளியைப் பிரதிபலிக்கக்கூடியவை. இதற்குக் கழுத்தும், தாடையும் உறுதியாக அமைந்துள்ளன. ஒரு ஆட்டையே கவ்வித் தூக்கிச் செல்லும் வலிமை படைத்தது.

ஓநாயின் உடலிலும், வாலிலும் சொர சொரப்பான மயிர்கள் அடர்த்தியாகக் காணப்படும். இது 15 முதல் 20 ஆண்டுகள் உயிர் வாழக்கூடியது.

எவ்விதக் களைப்பும் இல்லாமல் நீண்டதூரம் ஓடக்கூடியது ஓநாய். ஓநாய் ஒரே இரவில் இரைக்காக 50 முதல் 60 கிலோ மீட்டர் வரை பிரயாணம் செய்யும். சில சமயங்களில் 100 கிலோ மீட்டர் தூரம் வரைகூட பிரயாணம் செய்யுமாம்! இரவில்தான் வேட்டையாடக் கிளம்பும். பகல் பொழுதை அடர் புதர்ப்பகுதிகளிலோ அல்லது குகைகளிலோ தூங்கிக் கழிக்கும்.

ஓநாய்கள் இரையைத் தேடிச் செல்லும்போது, பின்னால் வரும் தனது மற்ற கூட்டத்துக்கு வழி தெரிய வேண்டும் என்பதற்காக ஒரு முறையைப் பின்பற்றுகின்றன. அது இதுதான். போகும் பாதையிலுள்ள ஒரு மரத்தின் அடியிலோ அல்லது பாறையின் அருகிலோ சிறுநீர் கழித்துவிட்டுச் செல்லும். பின்னால் வரும் ஓநாய்கள் இம்மாதிரியான மரத்தின் அடியிலோ அல்லது பாறையின் அருகிலோ வரும்போது சற்று நின்று மோப்பம் பிடிக்கிறது. அந்த மோப்பத்தைக் கொண்டு, முந்திய கூட்டம் எந்த வழியாகப் போயிருக்கிறது என்று தெரிந்து கொண்டு அந்த வழியைப் பின்பற்றிச் செல்லுகின்றன.

இரைகளைக் கண்டு விட்டால் ஓநாய்கள் அவற்றைவிடாமல் கிலோ மீட்டர் கணக்கில் துரத்திக் கொண்டு செல்லும். தப்பியோட முயற்சிக்கும் பிராணி நீண்ட தூரம் ஓட முடியாமல் களைத்துப் போய் நிற்கும்போது ஓநாய்கள் கூட்டம் நாலாபுறமும் அதைச் சூழ்ந்து கொண்டு தாக்கிக் கொன்று விடும். பின்பு அப்பிராணியை, எல்லாம் ஒன்றுகூடி உண்ணும், ஏதாவது மிச்சம் மீதி இருந்தால் அதை அப்படியே விட்டு விட்டுப் போகாமல் கவனமாக ஓரிடத்தில் புதைத்தோ அல்லது மறைத்தோ வைத்து விடுமாம்.

குளிர்காலத்தில் ஓநாய்கள் இரை கிடைக்காமல் தவிக்கும். அப்போதுதான் இவை கூட்டங் கூட்டமாக அருகிலுள்ள கிராமங்களுக்குள் நுழைந்து இரை தேட ஆரம்பிக்கின்றன.

ஓநாயின் முக்கிய உணவு கலைமான், முயல், ஆடு ஆகியவற்றின் மாமிசம் தான். இரையே கிடைக்காத போது, பலவகைப் பழங்களையும், கிழங்குகளையும்கூட உணவாக உட்கொள்கிறது.

பெண் ஓநாய், இளவேனில் காலத்தில் ஒரு குகையைத் தேடிச் சென்று விடும். அதில் சேறு, பாசி, இலைகளைக் கொண்டு அழகாக ஒரு பஞ்சணையைத் தயாரித்துக் கொள்ளும். மொத்தத்தில் தனது இருப்பிடத்தை ஒரு வீடு போல ஆக்கிக் கொள்ளும். இந்த வீட்டில்தான் பெண் ஓநாய், குட்டிகளைப் போடுகிறது. ஒரு தடவையில் 4 முதல் 9 குட்டிகள் வரை ஈனும். பிறந்து 10 நாட்கள் வரை குட்டிகளுக்குக் கண்கள் தெரியாமல் இருக்கும். அந்த நாட்களில் தாய் ஓநாய்தான் குட்டிகளுக்கு உணவளித்துப் பாதுகாக்கும். குட்டிகளுக்குத் தன்னாலேயே இரை தேடும் தகுதி வந்த பின், அவை தாயை விட்டுப் பிரிந்து சென்று விடுகின்றன.

—கிருஷ்ண முத்துராமலிங்கம்



## விளையும் பயிர்



ஈரோடு சிக்கைய நாயக்கர் கல்லூரியில் பி.ஏ. தமிழ் மூன்றாம் ஆண்டு பயிலும் மாணவர் எண்ணமங்கலம் அ. பழனிச்சாமி.

இவர் கதை, கட்டுரை, கவிதை, பேச்சு, நடிப்பு ஆகிய துறைகளில் ஆர்வங்காட்டி வருகிறார். இவற்றில் பங்கு கொண்டு பரிசுகளும் பெற்றுள்ளார்.

வானொலி, பத்திரிகைகளில் எழுதிவரும் இவர், அண்மையில் எழுதி வெளியிட்டுள்ள நூல்: 'ஏங்கும் இதயம்'

## அறுவைச் சிகிச்சை செய்யும் ரோபாட்

பழுதுபட்டுப்போன 'இடுப்பெலும்பு' மூட்டுக்குப் பதிலாக, இரும்பு மற்றும் பிளாஸ்டிக்கினால் செய்யப்பட்ட செயற்கை இடுப்பெலும்பு மூட்டுக்களைப் பொருத்தும் பணியைச் செய்யக்கூடிய ரோபாட் ஒன்றை, டேவிஸ் என்னுமிடத்திலுள்ள கலிபோர்னியா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

நோயாளியின் பழுதடைந்த மூட்டுப்பகுதி பற்றிய தகவல்களை எக்ஸ்-ரே படங்களிலிருந்து இந்த ரோபாட் பெறுகின்றது. பின்பு, அந்தத் தகவல்களை வைத்து, அந்நோயாளியின் இடுப்பில் பொருத்தப்படவேண்டிய செயற்கை மூட்டின் மாதிரிப் படம் ஒன்றைக் கம்ப்யூட்டரைக் கொண்டு இந்த ரோபாட் தயாரிக்கின்றது. பின்னர், அப்படத்தின் அளவுக்கும் வடிவத்துக்கும் ஏற்றபடி "செயற்கை மூட்டு" ஒன்றை இரும்புப் பாளம் ஒன்றிலிருந்து இந்த ரோபாட் வெட்டி எடுக்கின்றது.

இந்தச் செயற்கை மூட்டினை, நோயாளியின் இடுப்பெலும்பில் பொருத்துவதற்கு, அந்த எலும்பில் மூன்று இடங்களில் துளை போடும் பணியையும் இந்த ரோபாட் கச்சிதமாகச் செய்கிறது. இதன்பிறகு, அந்நோயாளியின் இடுப்பெலும்பில் இந்தச் செயற்கை மூட்டைச் சுலபமாகப் பொருத்த முடியும்.




இமய பாரதி

ஒவ்வோர் நாளும் உன்றன் பொழுதை
வீணாய்ப் போக்காதே!—பயன்
ஒன்றும் இல்லா வெட்டிப் பேச்சில்
நேரம் நீட்டாதே!

செவ்வாய் புதன்வி யாழன் என்றே
செயலைத் தளர்த்தாதே!-உன்
சிந்தை தன்னில் சேற்றை நிரப்பி
நொந்து வருந்தாதே!

இயலா தென்றே எந்தப் பணியும்
ஒதுக்கித் தள்ளாதே!—தேசம்
ஏற்றம் காணப்போற்றும் வகையில்
உழைக்க மறவாதே!

சுயமாய் வெல்ல துணிவு தன்னைக்
காக்க மறவாதே!-வீண்
சோம்பல் தீயில் விழுந்து புரண்டு
உயர்வைக் கெடுக்காதே!

நல்ல நூலே நல்ல நண்பன்
என்றும் மறவாதே!-இந்த
ஞால அறிவைப் புகட்டும் கல்வி
பயில மறக்காதே!

கல்லா மூடர் உறவை நாடித்
தீமை விளைக்காதே!-மிகு
கடமை தன்னை உடைமை யாகத்
துதிக்க மறக்காதே!

## மாணவ மணிகளே !

மாணவ மணிகளே! இது உங்கள் பக்கம். குட்டிக்கதை, கட்டுரை, துணுக்குகள் முதலானவற்றை நீங்கள் எழுதி அனுப்பலாம். ஆனால் ஒன்று, அவை உங்கள் சொந்தக் கற்பனையாக இருக்க வேண்டும். எழுதப்படும் துணுக்குகளுக்கு ஆதாரம் இருத்தல் வேண்டும். போதிய அஞ்சல் தலை இல்லாதவற்றைத் திருப்பி அனுப்புவதற்கில்லை.

—ஆசிரியர்.

# அறிவுச்சுடர்

மிகவும் மரியாதைக்குரியவர் அன்னையே!
மிகவும் கசப்பானது தனிமையே!
மிகவும் துயரமானது மரணமே!
மிகவும் அழகானது அன்புணர்வே!
மிகவும் கொடுமையானது பழிவாங்குதலே!
மிகவும் கவலைதருவது செய்நன்றி மறப்பதே!
மிகவும் மகிழ்ச்சியானது சிறந்த நட்பே!
மிகவும் வெறுமையானது இல்லை என்பதே!
மிகவும் ரம்மியமானது நம்பிக்கையே!
நம்பிக்கையானது நாம் இறைவனிடம் வைக்கும் விசுவாசமே!

வில்பிரட்ஃபங்க்

# அதிசயச் சிறுவன்

கி.பி. 1836 முதல் 1901 வரை அமெரிக்காவில் வாழ்ந்தவர் ட்ருமன் ஹென்றி சாபோர்டு என்னும் அதிமேதாவியாகும்.

பத்தாவது வயதில் 365, 365, 365 365 என்பதன் கன சதுர வர்க்க மூலத்தை மனதிலேயே கணக்கிட்டு ஒரு நிமிடத்தில் கூறினார்.

கி.பி. 1846-ஆம் ஆண்டு அமெரிக்க வானத்தில் முதன் முதலாக ஒலி சிந்தித் தோன்றிய நீள்வட்டக் காமட்டின் ஆதாரம் பற்றிய படம் வரைந்து விளக்கினார்.

பதினோராவது வயதில், சித்தாந்தங்களை விளக்கி இரண்டு பஞ்சாங்கங்களை வெளியிட்டார்.

இதனால் கணிதத்தில் இவருக்கிருந்த திறமை பிரமிப்பூட்டக்கூடியதாக இருந்தது என்று அமெரிக்காவே புகழ்ந்தது.

பிற்காலத்தில் இவர் சிகாகோ பல்கலைக் கழகத்திலும், வில்லியம் கல்லூரியிலும் வான சாஸ்திரப் பேராசிரியராக விளங்கினார்.





# வளரும் வேளாண்மை

### வேப்பம்பிண்ணாக்கு கலந்த யூரியாவை விவசாயிகள் பயன்படுத்துவது ஏன்?

நன்செய் நிலங்களில் தழைச்சத்தை இடும்பொழுது, தழைச்சத்தின் உபயோகத்தினை பயிருக்கு முழுமையாக கிடைக்கச் செய்வது தேவையான ஒன்றாகும். தற்காலத்தில் உபயோகத்திறனை உயர்த்துவதற்கும், பயன்படுத்துவதற்கும் மெதுவாக உரத்தினை பயிருக்கு கிடைக்கக்கூடிய உரவகைகளைப்பயன்படுத்துகின்றனர்.

இதில் தார் பூசப்பட்ட யூரியா, வேப்பம்புண்ணாக்கு கலந்த யூரியா ஆகியவை அடங்கும். இந்த வகையான உரங்கள் தண்ணீரில் யூரியா கரைந்து போவதையும், காற்றில் உள்ள வெப்பத்தில் யூரியா ஆவியாவதையும், மேலும் மண்ணிலுள்ள நுண்ணுயிர்க் கிருமிகளின் செயலாக்கத்தால் யூரியா வீணாவதையும் தடுப்பது போன்ற பலனைக் கொடுக்கவல்லவை. பொதுவாக, 100 கிலோ யூரியாவிற்கு 1 கிலோ சூடு செய்யப்பட்ட திரவ தார்க் குழம்பும் கலந்து அடியுரமாகக் கொடுக்கவும், மேலுரமாக இடும்பொழுது 1.5 என்ற விகிதத்தில் வேப்பம்புண்ணாக்கு யூரியா கலவையை இடும்படியும் சிபாரிசு செய்யப்படுகிறது.

இப்படிப்பட்ட மெதுவாக தழைச்சத்தை விடுவிக்கும் உர வகைகள் எந்த அளவு விவசாயிகளிடையே பிரபலமடைந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதை அறிய, வேளாண் விரிவினைத் துறையில், ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த நெல் பயிரிடும் விவசாயிகளிடையே நடத்தப்பட்ட இந்த ஆராய்ச்சியின் முடிவுகளாவன:-

மெதுவாக தழைச்சத்தைப்பயிர்களுக்குத் தரும் உரவகைகளில் ஒன்றான, வேப்பம்பிண்ணாக்கு கலந்த யூரியாவைப் பயன்படுத்துவதில் 80 சதவீத விவசாயிகள் நடுத்தர அளவிலும், 20 சதவீத விவசாயிகள் குறைந்த அளவிலும் பின்பற்றுபவர்களாக இருந்தனர். மேலும் வேப்பம்புண்ணாக்கு கலந்த யூரியாவை பயன்படுத்துவதற்கான காரணங்களைக் கண்டறிந்ததில் அதிக மகசூல் கிடைத்துள்ளதாகவும் (68%), எளிதாக கடைப்பிடிக்க முடிகிறதென்றும் (59%), பயிரை நல்லமுறையில் பராமரிக்க முடிவதாகவும் (53%), மண்வளத்தை அதிகரிப்பதுடன் (44%), பயிர் நல்ல பச்சை நிறமாகவும் (34%), இருப்பது போன்றதுதான் காரணம் என்பது தெரியவந்துள்ளது.

### தென்னையில் தஞ்சாவூர் வாடல் நோய்

தென்னையில் தஞ்சாவூர் வாடல் நோய் தமிழகத்தின் பல பகுதிகளிலும் பரவலாகக் காணப்படுகிறது. தென் ஆர்க்காடு, கோயம்புத்தூர், சேலம், கன்னியாகுமரி, புதுக்கோட்டை, அண்ணா, பசும்பொன் தேவர் திருமகன், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் 1988-89-இல் மேற்கொண்ட கணிப்பின் மூலம் வாடல் நோய் அதிகமாகக் காணப்படுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்நோய் கேனோடெர்மாலூசிடம் என்னும் பூசணத்தால் தோன்றுகிறது.

### நோயின் அறிகுறிகள்:

- ★ மரத்தின் அடிப்பாகத்தில் சாறுவடியும் புள்ளிகள் தோன்றுதல்
- ★ பழுப்பும் சிவப்பும் கலந்த நிறத்தில் சாறு வடிதல், சாறு வடியும் புள்ளிகள் திட்டாகப் பரவித் தண்டின் மேல் நோக்கிப் பரவுதல்
- ★ ஒன்றன் மேல் ஒன்றாக வெளிப்புறத்தில் இருந்து மட்டைகள் தொங்க ஆரம்பித்தல், நாளடைவில் மட்டைகள் காய்தல்
- ★ மரத்தின் அடிப்பாகத்தில் தண்டின் பட்டைகள் உரிதல்
- ★ குரும்பைகள், காய்கள் உற்பத்தியாவது தடைப்பட்டு குரும்பைகள் கொட்ட ஆரம்பித்தல்
- ★ தண்டின் உட்பகுதி அழுக ஆரம்பித்தல்
- ★ வேர்கள் நிறம் மாறி அழுகிவிடுதல்
- ★ மட்டைகள் ஒன்றன் மேல் ஒன்றாக உதிர்ந்து, இறுதியாகக் குருத்தும் காற்றில் ஒடிந்து விழுந்து, மரம் மொட்டையாகக் காட்சியளித்தல்
- ★ மரங்கள் காய்ந்தபின்போ காயும் தருவாயிலோ ஒருசில மரங்களில் கோனோடெர்மா என்ற பூசணத்தின் தட்டு வடிவக் காளான் தோன்றுதல்

### நோய்க்கட்டுப்பாடு:

- ★ ஒவ்வொரு ஆண்டும் மரம் ஒன்றுக்கு 50 கிலோ மக்கிய தொழு உரம் அல்லது தழையுரத்துடன் 5 கிலோ வேப்பம்பிண்ணாக்கு இடுதல்
- ★ கோடையில் 15 நாட்களுக்கு ஒருமுறை நீர் பாய்ச்சுதல்
- ★ மண்ணில் மரத்தின் வேர்ப்பகுதி நனையுமாறு 40 லிட்டர் ஒருசத போர்டோக் கலவையை மூன்று மாதங்களுக்கு ஒருமுறை தொடர்ந்து மூன்று முறை ஊற்றுதல் இதை 2-3 ஆண்டுகள் கழித்து மீண்டும் கடைப்பிடித்தல்.
- ★ ஆரியோ பஞ்சின-சால் 2 கிராமுடன் 1 கிராம் மயில் துத்தத்தைக் கலந்து 100 மில்லி நீரில் கரைத்துக் கொள்ள வேண்டும். ஒன்று அல்லது இரண்டு இளம்வேர்களைத் தோண்டியெடுத்து அவற்றின் நுனிகளைச் சாய்வாக வெட்ட வேண்டும். அவ்வேர்களின் மூலம் கீழ்க்கண்டவாறு மருந்துக் கரைசலைச் செலுத்த வேண்டும். ஒரு பாலித்தீன் பையில் மருந்தை ஊற்றி வேரின் நுனியில் கட்டி மருந்தை செலுத்த வேண்டும். இவ்வாறு மூன்று மாதங்களுக்கு ஒருமுறையாக மீண்டும் இருமுறை மேற்கொள்ள வேண்டும்.

### விசைக் கலப்பையால் இயங்கும் குழி தோண்டும் கருவி

மரங்களை நடுவதற்காக குழி தோண்டுவது கடினமானஒரு காரியம் ஆகும். இதனை விசைக் கலப்பையால் இயங்கும், குழி

# இராமநாதபுரம் மாவட்டத்தில் வரி தள்ளுபடி

"இந்த விழாவின் தலைவர், பேரவைத் தலைவர் தமிழ்க்குடிமகன் அவர்கள் இங்கே ஒரு கோரிக்கையை வைத்தார். மிக வறட்சியாக இருக்கின்ற இந்தப் பகுதியில் நிலவரியைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

"இரண்டு மூன்று நாட்களுக்கு முன்புதான், இந்த மாவட்டத்திலே வறட்சியை முன்னிட்டு நிலவரியைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்கின்ற ஆணையில் நான் கையெழுத்திட்டதாக நினைவு. அவர் அதுபற்றிப் பேசிய உடனேயே மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்டேன்-அந்த ஆணை வந்துவிட்டதா என்று. வந்துவிட்டது என்று அவரும் சொன்னார். ஆகவே நமது சபாநாயகர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேறிவிட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

"இப்பகுதி மக்களுக்குப் பெரிதும் பயன்தரவிருக்கும் பெரிய கண்மாயைச் சென்று நான் பார்வையிட்டேன். அதை இன்னும் ஆழப்படுத்த எவ்வளவு செலவாகும் என்று மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்டேன். அவர், பக்கத்திலுள்ள பொறியாளரையும் கலந்து கொண்டு-புல்டோசர் வைத்து மேலும் ஆழப்படுத்த வேண்டுமென்றால் இன்னும் பன்னிரண்டு இலட்சம் ரூபாய் தேவைப்படும் என்றார். அந்தப் பன்னிரண்டு இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்படுகிறது என்பதையும் இங்கே நான் மகிழ்வோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

-மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் (4-7-89 அன்று இராமநாதபுரத்தில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா உரையிலிருந்து)

தோண்டும் கருவியின் மூலம் எளிதாகவும் விரைவாகவும் செய்யலாம். இக்கருவி விசைக் கலப்பையின் முன்புறம் இணைக்கப் படுகிறது. இது 22.5 செ.மீ விட்டமும் 45 செ.மீ ஆழமும் உள்ள குழிகளைத் தோண்டும் திறன் கொண்டது. ஒரு மணி நேரத்தில் இக்கருவி 35 முதல் 40 குழிகள் வரை பறிக்கவல்லது.

இக்கருவியை இயக்குவதும் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்வதும் எளிது. இதனை இயக்க இருவர் தேவை. இக்கருவி விசைக் கலப்பையின் வருடாந்திர உபயோகத்தினை அதிகப்படுத்துகிறது. விசைக் கலப்பை என்சினை இயக்கி இந்த இணைப்பில் உள்ள கைபிடியைச் சுழற்ற சுழற்ற கருவி தோண்டும் குழியின் ஆழம் அதிகரிக்கின்றது. குழி தோண்டும் வேலை இல்லாத சமயத்தில் இந்த இணைப்பைக் கழற்றி வைத்து, விசைக் கலப்பையைப் பிற பண்ணை வேலைகளுக்குப் பயன்படுத்தலாம்.

இந்த குழி தோண்டும் கருவியின் விலை சுமார் ரூ.2,500/- ஆகும். இக்கருவியால் ஒரு குழி பறிக்க சுமார் 40 பைசா மட்டும் செலவு ஆகிறது. இந்த குழி தோண்டும் கருவி பற்றிய மற்ற விவரங்களுக்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக பண்ணை இயந்திரத் துறையை அணுகவேண்டும்.

**நெல் நாற்றங்கால் - வறட்சியைச் சமாளிக்கும் வழிமுறைகள்:-**

★ குறுவைப் பட்டத்திற்கேற்ற, வறட்சியை ஓரளவுக்கு தாங்கவல்ல நெல் ரகங்களைத் தேர்வு செய்து கொள்ள வேண்டும். குறுகிய கால வித்துக்களான ஐ.ஆர்.50, ஆடுதுறை 36, அம்பை-16 இராசி (ஐ.இ.டி. 1444), கோ.37 (வைகை) போன்ற ரகங்களைத் தத்தம் பகுதிக்கு ஏற்றவாறு தேர்வு செய்து கொள்ள வேண்டும்.

★ நெல் விதையை 10 மணி நேரம் தண்ணீரில் ஊறவைத்து வடிகட்டி, பின்பு ஒருசதம் (1%) பொட்டாசியம் கரைசலில் மேலும் 10 மணி நேரம் ஊறவைத்து, பின்பு, வடிகட்டி நன்றாக உலர்த்தி, சேமித்து வைக்க வேண்டும்.

வேளாண் தகவல் பணிமையம்,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்,
கோவை-3


★ நாற்றங்கால் தயாரிப்பில் புழுதி நாற்றங்கால் சிறந்தது.

★ விதை அளவில், செண்டுக்கு 3 கிலோவுக்குப் பதிலாக 4 கிலோ விதையைப் பயன்படுத்தலாம். இதனால் வளர்ச்சியும் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டு, வயதான நாற்றுக்களை நட்டபோதும், மகசூல் பாதிக்கப்படுவதில்லை. குறுகிய கால ரகங்களை 25 நாட்கள் வயதுள்ள நாற்றுக்களை நடவு செய்வதற்குப் பதிலாக, 35 நாட்கள் வரை நீட்டித்து நடவு செய்யமுடியும், மகசூல் பாதிக்காது.

★ நாற்றங்காலுக்கு நீர் பாய்ச்சும் முறையைக் கட்டுப்படுத்துதல் அவசியம். பாய்ச்சலும், காய்ச்சலும் மாறி மாறி வருமாறு செய்து நாற்றின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்த வேண்டும். இதனால் நாற்றங்காலில் களை வரும். அதனைக் கட்டுப்படுத்த நாற்று விட்ட 8 முதல் 10 நாட்களுக்குள் செண்டுக்கு 8 முதல் 10 மில்லி பூட்டாக்குளோர் அல்லது பென்தியோகார்ப் களைக் கொல்லி மருந்தைத் தேவையான அளவு மணலுடன் கலந்து, நாற்றங்காலில் (1-2 செண்டிமீட்டர் உயரம்) லேசான அளவு நீரை நிறுத்தி இடவேண்டும்.

மேற்கண்ட வழிமுறைகளை செம்மையாக கடைப்பிடித்தால், வறட்சி நிலையிலும், மகசூல் பாதிக்கப்படாத நாற்றுக்களைத் தயார் செய்ய முடியும்.





# கண்ணும் கடமையும்

எனது இல்லத்தில் "காலம் பொன் போன்றது, கடமை கண் போன்றது" என்று எழுதி வைத்து இருக்கிறேன். ஒரு காலத்தில் தவற விட்டுவிட்டால் மற்றொரு காலத்தில் பொன்னைச் சம்பாதித்துவிடலாம். ஆனால் ஒருவர் கண்பார்வை இழந்தால் மீண்டும் அதைப் பெறமுடியாது. அதைப்போலக் கடமையைச் செய்யத் தவறிவிட்டால், கடமையைச் செய்கிற வாய்ப்பு, திரும்பவும் கிடைக்காது. இந்தப் பொருளில் 15 ஆண்டுகளுக்கு முன்பு எழுதினேன்.

அது இப்போது பொருந்தாது. மீண்டும் கண்ணொளி பெறுவதற்கு ஏற்ற வகையிலான நவீன சிகிச்சை முறைகள் வந்து விட்டன. அதற்கு ஏற்ற வகையில் சிகிச்சை அளிப்பதற்கான திறமையான டாக்டர்களும் தோன்றி இருக்கிறார்கள்.

இந்த மருத்துவமனையில் ரூ.20 இலட்சத்துக்கும் மேற்பட்ட மதிப்புள்ள நவீன கருவிகள் நிறுவப்பட்டு இருக்கின்றன. இதைப் பார்வையிட்டுப் பணிகள் தொடங்கி வைக்கப்பட்டு இருக்கின்றன.

இந்த 20 இலட்சம் ரூபாய் என்பது பெரிது அல்ல. அரிமா சங்கத்தைச் சேர்ந்த ஜார்ஜ், "முன்மாதிரிக் கண்வங்கி" ரூ.10 இலட்சம் செலவில் அமைக்கும் முயற்சிக்குத் தவணையாக-முன்பணமாக 1 இலட்சம் ரூபாய் வழங்கி இருக்கிறார்; அவருடைய நல்ல உள்ளத்தைப் பாராட்டுகிறேன்.

அரசின் சார்பில் இத்தகைய நவீன கருவிகள் வாங்கினாலும் அவற்றைப் பயன்படுத்துவதில்தான் அந்தக் கருவிகளின் மதிப்பு அடங்கி இருக்கிறது.

மதுரை மருத்துவமனையில் 85-86 ஆம் ஆண்டில், 70 இலட்சம் ரூபாய் செலவில் நவீன கருவி வாங்கி, அங்கு அன்று தொடங்கி வைத்தார். 3, 4 ஆண்டுகளுக்கு முன்பு வாங்கப்பட்ட இந்தக் கருவி செயல்படாமல் இருந்தது. அமைச்சர் பொன்முடி, அந்த மருத்துவமனையில் திடீர் சோதனை போட்டபோது ஒரு பெட்டி இருந்து இருக்கிறது. அதைப் பார்த்தபோது ரூ. 70 இலட்சம் செலவிலான அந்தக் கருவி 3 ஆண்டுகளாகக் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தது, தெரியவந்தது. அந்தக் கருவியைப் பயன்படுத்தத் தேவையான முயற்சிகள் எடுக்கப்பட்டு, சமீபத்தில்தான் நான் மதுரை சென்றபோது அந்தப் பணியைத் தொடங்கி வைத்துவிட்டு வந்தேன்.

ரூ 20 இலட்சம், ரூ 25 இலட்சம் என்று நவீன சிகிச்சைக் கருவிகளை வாங்கி நிறுவுவது மகிழ்ச்சி அளிக்கிறது என்றாலும், சாதாரண ஏழை எளிய சாமானிய, நோயுற்ற மக்கள் அதனால் பயன்பெற வேண்டும்.

மருத்துவ நிபுணர்கள் அதற்கு ஏற்ற வகையில் கடமையாற்ற வேண்டுகிறேன்.

இந்தக் கண் மருத்துவ மனையுடன், எனக்கு 1953-ஆம் ஆண்டுமுதல் தொடர்பு உண்டு. எனக்கு 40 ஆண்டுக்கால நண்பர் என்று சொல்வதைப் போல அவ்வளவு தொடர்பு இருக்கிறது.

1953-இல் கார் விபத்தில் எனது கண்ணில் அடிபட்டது. அப்போது இந்த மருத்துவமனையைப் பற்றி எனக்குத் தெரியாது. சினிமாத் துறையின் மூலமாகச் சென்று ஒரு டாக்டரிடம் சிகிச்சை பெற்றேன். அவர் "லீச்சஸ்" என்று சொல்லக் கூடிய அட்டைப்பூச்சியை வைத்து ரத்தத்தை உறிஞ்ச வைத்து, கண்ணுக்குச் சிகிச்சை அளித்தார்.

அதற்குப் பிறகு கண் சிகிச்சை நிபுணர்தள் முத்தையா, ஆபிரகாம், செல்வம் ஆகியோர் அறிமுகமானார்கள். டாக்டர் முத்தையா எனக்குச் சிகிச்சை அளித்தார். 6 மாதம் இந்த மருத்துவமனையில் தங்கிச் சிகிச்சை பெற்றேன்.

கல்லக்குடிப் போராட்டத்தில் நான் கைதாகி 6 மாதம் சிறையில் இருந்தேன். அதன்பிறகு இந்த மருத்துவமனையில் 6 மாதம் என்னைப் (சிகிச்சைக்காக) பூட்டி வைத்து இருந்தார்கள். இந்த இரண்டு அனுபவமும் இரண்டறக் கலந்துவிட்டன.

எனக்குச் சிகிச்சை அளித்த பல நண்பர்களைப் பற்றி நினைவுகூர்கிற இந்த நேரத்தில், அவர்களில் சிலர் உயிரோடு இல்லை. டாக்டர் முத்தையா மறைந்த அன்று தூத்துக்குடி நகராட்சி மன்ற வரவேற்புக்காகச் சென்றேன். ஆட்சிப் பொறுப்பில் இல்லாத நேரம். எதிர்க்கட்சித் தலைவருக்கு நகராட்சி வரவேற்புக் கொடுப்பது என்பது சாதாரண காரியம் அல்ல.

எனவே வரவேற்பில் கல்ந்து கொள்ளச் சென்றிருந்ததை ரத்து செய்துவிட்டு முத்தையா இல்லம் சென்று, அவருக்கு அஞ்சலி செலுத்தினேன். "கண் கொடுத்தவர் கண் மூடினார்" என்று அன்று முரசொலியில் எழுதினேன். அத்தகைய பாசத்தைப்பெற்றவர் அவர். ஆயிரக்கணக்கான பேருக்குக் கண்ணொளி வழங்கிய முத்தையாவின் செல்வனுக்குக் கண் பார்வை போய்விட்டது என்று சொன்னார்கள். வேதனை அடைந்தேன். அவருடைய மணவிழாவுக்கும் சென்று வந்தேன். இத்தகைய நினைவுகள் இன்றைக்கும் பசுமையாக இருக்கின்றன.

இப்படி, கண் மருத்துவ மனையோடு தொடர்பு கொண்டு இருந்ததன் காரணத்தினால், ஆட்சிப் பொறுப்பில் இருந்த நேரத்திலும் இல்லாத நேரத்திலும் ஏழை, எளிய மக்களுக்குச் சிகிச்சை அளித்துக் கண்ணொளி வழங்க வேண்டும் என்று திட்டமிட்டுச் செயல்பட்டோம்.

## ஏழைகளுக்குக் கண்ணொளி

சென்னை மண்டல கண் மருத்துவ இயல் நிலைய இரண்டாம் ஆண்டு நிறைவு விழா ஜூலை 14-ஆம் நாளன்று சென்னை எழும்பூர் அரசு கண் மருத்துவ மனை வளாகத்தில் நடைபெற்றது.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு, விழாவைத் துவக்கி வைத்து உரையாற்றினார். (உரை பிறிதோரிடத்தில் இடம் பெற்றுள்ளது)

விழாவுக்குத் தலைமை ஏற்ற மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி அவர்கள் தமது உரையில் தெரிவித்ததாவது:

"கலைஞர் அவர்கள் முன்பு முதலமைச்சராக இருந்தபோது ஏழைகளுக்குக் கண்ணொளி வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்து ஆங்காங்கே முகாம்கள் நடத்தி அந்தத் திட்டத்தை நிறைவேற்றினார். இடைக்காலத்தில் அந்தத் திட்டத்தில் தொய்வு ஏற்பட்டிருந்தது. மீண்டும் முதலமைச்சராக வந்ததற்குப் பிறகு அந்தப் பணி வேகமாக நடைபெற உத்தரவிட்டிருக்கிறார்.

4 மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்து கண் புரையற்ற மாவட்டமாக இந்த ஆண்டுக்குள் ஆக்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தமிழ்நாட்டில் கண் புரையினால் பாதிக்கப்பட்டவர்கள் இல்லை என்று மிகவிரைவில் சொல்லும் அளவுக்கு, இந்தத் திட்டம் தீவிரமாகச் செயல்படுத்தப் படும்."

விழாவுக்கு வந்திருந்தோரை மண்டல கண் மருத்துவ இயல் நிலைய இயக்குநர் டாக்டர் மோ. குகானந்தன் வரவேற்றார். உதவி கண்காணிப்பாளர் டாக்டர் தி.ர. சுவாமிநாதன் ஆண்டு அறிக்கை வாசித்தார். நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் அ. கலாநிதி, சட்டமன்ற உறுப்பினர் பரிதி இளம்வழுதி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

அதன் அடிப்படையில் அண்ணா அறிவாலயத்தில் வெற்றிச்செல்வி அன்பழகன் கண் மருத்துவமனை ஒன்று அமைத்துத் தினமும் 50 ஏழைகளுக்குச் சிகிச்சை அளித்து வருகிறோம்.

கண்ணில் 4,5 முறை அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவன் என்பதால் ஊசி போட்டால் எவ்வளவு வலிக்கும் என்பதெல்லாம் தெரியும். கண் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றபோது, எனக்கு மயக்க ஊசி போட்டுப்' படுக்க வைத்து ஆபரேஷன் தியேட்டருக்குக் கொண்டு போய்விட்டார்கள். டாக்டர் முத்தையா பார்த்துவிட்டு "இவரை ஏன் கொண்டு வந்தீர்கள்? பரிசோதனை செய்ய வேண்டும் என்றுதானே சொன்னேன்?" என்று சிப்பந்திகளிடம் கேட்டு இருக்கிறார்?

கண் மருத்துவ நிபுணர்கள் எவ்வளவு தான் திறமையாகக் கண் அறுவை செய்தாலும் கடைசிவரை உள்ள சிப்பந்திகள் நல்ல முறையில் செயல்பட்டால்தான் நேர்மையான முறையில் சிகிச்சை கிடைக்கும். கண் அறுவைச் சிகிச்சை செய்து விட்டு டாக்டர்கள் சென்றுவிடுவார்கள். ஊழியர்கள்தான் பஞ்சுவைத்துக்கட்டுப் போடுவார்கள். நோயாளி மீது கோபம் இருந்தால் அழுத்திக் கட்டுப்போடுவார்கள். இதை உணர்ந்தவன் நான். சிப்பந்திகளுடைய ஒத்துழைப்பு இருந்தால்தான் நோயாளிகள் நல்லமுறையில் சிகிச்சை பெற முடியும். அந்த வகையில் நோயாளிகளிடம் அன்பு காட்டுங்கள்.

**—முதல்வர் கலைஞர்**

—மண்டல மருத்துவஇயல் மையத்தில் ஆற்றிய உரையிலிருந்து

### கலைஞருக்கு நன்றி

"ஐந்தாவது வகுப்பு வரை ஆசிரியைகளையே நியமிக்க வேண்டும் என்பது காமராஜர் வரவேற்ற நல்ல திட்டம்; அதைச் செயல்படுத்துவதாக முதல்வர் கருணாநிதி அவர்கள் இப்போது அறிவித்திருப்பதை மனமாரப் பாராட்டுகிறேன்.

"மாணவர்களுக்குத் தேவை அன்புதான். பெண்களை ஆசிரியர்களாக நியமித்தால், அந்தத் தாயன்பு அடிப்படையில் பாடம் சொல்லித்தந்தால்தான் குழந்தைகளுக்கு நன்கு பதியும். இந்தக் கருத்தை நான் பல காலமாகச் சொல்லி வந்திருக்கிறேன். அதை நிறைவேற்றியதற்காகக் கலைஞருக்கு நான் நன்றி தெரிவிக்கிறேன்.

-திரு. சி. சுப்பிரமணியம்

*(இந்திய தேசியவாதிகள் இயக்கம் சார்பில், 16.7.89 அன்று, சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற காமராஜர் பிறந்த நாள் விழாவில் ஆற்றிய உரையிலிருந்து)*



# இந்நாட்டுப் பெண்ணினம் என்றும் கடமைப்பட்டிருக்கிறது!



'அரசு வேலைவாய்ப்பில்,
மகளிருக்கு 30 சதவிகித இட ஒதுக்கீடு
செய்துள்ள தமிழக அரசு,
மகளிர் கல்வி மேன்மையுற
'ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு
மகளிர் இலவசப் பட்டப் படிப்புத் திட்டம்'
என்றோர் அற்புதத் திட்டத்தை
அமல்படுத்தியிருக்கிறது. இதன்படி -
தமிழ்நாட்டில் உள்ள
எல்லா ஏழை, நடுத்தரக் குடும்பங்களைச்
சேர்ந்த பெண்களுக்கும் நடப்புக்
கல்வி ஆண்டிலிருந்து (1989-90)
எல்லா அரசு மற்றும் தனியார்
கலை, அறிவியல் கல்லூரிகளில்
இளங்கலைப் பட்டப்படிப்பு வரை கல்வி
இலவசமாக வழங்கப்படுகிறது.

இப்பொழுது பட்டப்படிப்பில் சேரும்
பெண்கள் இந்த நல்வாய்ப்பினைப்
பயன்படுத்திக் கொள்ளலாம்.

இந்த உதவியைப் பெற, பெற்றோரின்
ஆண்டு வருமானம் 12,000 ரூபாய்க்கு
மேல் இருக்கக்கூடாது.

-தமிழ்நாடு அரசின்
இந்த அறிவிப்பையொட்டி, பி.ஏ.
பொருளாதாரப் பிரிவின் மூன்றாம்
ஆண்டு மாணவியும், இராணி மேரிக்
கல்லூரியில் மாணவிகளின் தலைவியுமான
செல்வி வெ. உமாராணி,
தமிழக அரசைப் பாராட்டி
நமக்கெழுதிய கட்டுரை விவரம் வருமாறு:

**வா**ழும் நிலையை ஒட்டியே மனிதன் வளர்வதும் வாழ்வதும் அமைகின்றது. வளர்கின்ற சூழ்நிலையில் சிந்தனையை உருவாக்குகின்றது. இச்சூழ்நிலை சாதாரண மனிதனை உருவாக்குகின்றது.

இதனின்று வேறுபட்ட மனிதர்கள் உருவாகி வாழ்ந்து மேதைகளாகவும், அறிஞர்களாகவும், கலைஞர்களாகவும் திகழ்கின்றனர். ஆசிய நாடுகளின் பொருளாதார வறுமையை ஒழித்து மனிதனின் அன்றாடத் தேவைகளை நிவர்த்தி செய்து மனிதன் வாழும் சூழ்நிலையை மாற்றி மனிதனை மனிதனாக்கும் ஒரு பொருளாதாரத் தத்துவத்தை உருவாக்கிய கார்ல்மார்க்ஸின் தத்துவங்களையொட்டி சிந்தித்த பேரறிஞர் அண்ணா அவர்கள்,



தமிழ்நாட்டு மக்களின் பொருளாதார மாற்றத்திற்கு வித்திட்டார். அதே வழியில் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் நடைபோடுவது பாராட்டத்தக்கதாகும்.

சமுதாயச் சூழ்நிலைகளை மாற்ற பழைய சிந்தனைகளை விரட்டி ஒரு புதிய கோணத்தைப் பறைசாற்றியவர் பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள். பகுத்தறிவுக் கொள்கையினால் விழிப்படைந்த மக்கள் பொருளாதார முன்னேற்றத்தின் காரணமாக, அந்நிலையைத் தக்க வைத்துக் கொள்ளுவதற்குக் காரணமான பொருளாதாரச் சீரமைப்புக்கு வழிகாட்டியவரும் தமிழக முதல்வர் கலைஞர் ஆவார்.

புராணங்கள், இதிகாசங்கள், தவறான மதக்கொள்கைகள், மூடநம்பிக்கை போன்றவற்றின் காரணமாக அமைந்த கடவுள் நெறிக் கொள்கையாலும், வாழ்க்கையில்

மக்கள் மிகவும் பின்தங்கிய சமூகமாக ஆக்கப்பட்டு, பொருளாதார முன்னேற்றத்தையே சுவைக்காத நிலைக்குத் தள்ளப் பட்டனர்.

ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவசப் பட்டப் படிப்புத் திட்டத்தின் மூலம், பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 12,000-க்கும் குறைவாக இருக்கும் குடும்பத்தைச் சேர்ந்த மாணவிகள், இந்த நடப்பு ஆண்டிலிருந்து பி. ஏ., பி. எஸ்ஸி., பி. காம். பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி பெறலாம் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதற்கு முந்திய வரம்பு ரூ. 9,000-ஐ விட இதனால் பயன் பெறுவோர் மிகவும் அதிகமாக இருப்பார்கள். இரண்டு, மூன்று குழந்தைகளுடன் ஆண்டு வருமானம் குறைவாக இருக்கும் குடும்பங்களில், உயர் கல்வி என்பது நினைத்துப் பார்க்க முடியாத சலுகையாக இருக்கலாம்.

ஆரம்பக் கல்வி என்றால் ஓரளவு சமாளிக்க முடியும், உயர்கல்வி என்னும் போது, இந்த வருமானத்தின் கீழ் இருப்பவர்கள் பணம் கட்டிப் பிள்ளைகளைப் படிக்க வைக்க நிச்சயம் முடியாது. அவர்கள் படித்த படிப்பானது ஒரு எழுத்தர் ஆவதற்கோ, குறைந்த ஊதியம் உள்ள வேலைகளுக்கோ போகத்தான் உதவும்.

தற்போது அமல்படுத்தவிருக்கும் இத்திட்டத்தினால், பெற்றோர்கள் குழந்தைகளின் பசிச்சுமையைத் தாங்கினால் மட்டுமே போதும்; கல்விச் சுமையை அரசாங்கம் தாங்கிக் கொள்ளும். மேற்பட்ட கல்வி முறையால் இளைய சமூகத்தினரின் வாழும் சூழ்நிலை மிகவும் ஏற்புடையதாகிறது.

இத்திட்டத்தினால், நாட்டில் மகளிர் கல்வி வளர்ச்சி பெருகும். கல்வித் திறன் அதிகமானால்-கலாச்சாரம், பண்பாடு போன்றவை மேம்பட வாய்ப்பு உண்டு. சாதாரண நிலையில் உள்ள குடும்பத்தாரின் வறுமை ஒழிப்புத் திட்டத்திற்கு இது சிறந்த கருவியாக அமையும். மாணவர்களின் எதிர்காலம் ஒருவித நம்பிக்கைக்குரிய திட்டமிட்ட கல்வித் தகுதியுடன் சுகமான வாழ்க்கையை நோக்கி வளர வழி பிறக்கும். இலவசக் கல்வித் திட்டத்தினால் அதிகமாக மதிப்பெண்கள் பெறும் பெண்கள் மிகவும் ஊக்கமடைவார்கள். பெண்கள் கல்வி பெற நிலையான உறுதியான ஒரு கற்பக விருட்சமாக இருப்பதனால், பெண்கள் கல்வியைப் பெற்றோரும் விரும்புவர். அரசு ஊக்கம் தருவதனால் பெற்றோர்கள் எதிர்த்தாலும் தங்களின் கல்வித் தகுதியை உயர்த்திக் கொள்ளும் வாய்ப்பு மாணவிகளுக்கு உண்டு.பெண்கள் தனித்தன்மையுடனும், சமூக விழிப்புடனும் சமூகத்தில் வாழ்வதற்கு இதன் வாயிலாக வாய்ப்பு உண்டு.

நம் நாட்டில் 70 சதவிகித மக்கள் கிராமங்களில் வறுமையில் வாழகின்றனர். அவர்களுக்கு இத்திட்டம் பயனுள்ளதாக அமைகின்றது. அரசுத் திட்டங்களை நன்கு அறிந்து அதன்படி செயலாற்றும் திறன் கிராம மக்களுக்கு ஏற்படும்.நாட்டு முன்னேற்றத்தின் முதற்காரணமான கிராம வளர்ச்சிக்கு இத்திட்டம் துணைபுரியும்.

உயர்கல்வியின் நன்மை குறிப்பிட்ட வசதி மிக்க சிலருக்கே உரியது என்ற நிலை மாறி இப்போது அனைவர்க்கும் உரியதாய் அமைய வாய்ப்பு உண்டு.

'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்' என்று தேசியகவி பாரதி கண்ட கனவை-'பெண்கள் படித்து முன்னேறத் தயங்கவே கூடாது' என்ற பெரியார் ஈ.வெ.ரா.வின் ஆணித்தரமான வேண்டுகோளை நிறைவேற்ற வழி செய்திருக்கிறது தமிழக அரசு.

இதற்காக-ஏழை எளிய மாணவிகளின் சார்பில் மட்டுமல்ல; அவர்கள் குடும்பத்தினர் சார்பிலேயே தமிழ்நாடு அரசுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் மிகவும் நன்றி தெரிவிக்க, இந்நாட்டுப் பெண்ணினம் என்றென்றும் இதய பூர்வமாகக் கடமைப்பட்டிருக்கிறது.

-வெ. உமாராணி,
பி.ஏ. மூன்றாமாண்டு (பொருளாதாரம்)
இராணிமேரிக்கல்லூரி,
சென்னை-4.

# அருவி





கலகல வென்று சிரிப்பாள் - அவள்
களங்க மில்லாப் பாவை!

பளபள வென்று மின்னும் - வெள்ளிப்
பாளமாய் அவளுடல் துள்ளும்!

சலசல வென்னும் ஓசை - காலின்
சலங்கை ஒலிபோல் கேட்கும்!

மேலே யிருந்து குதிப்பாள் - கொஞ்சம்
மெதுவாய் நிலத்தில் நடப்பாள்

செடி கொடி கண்டால் மிதிப்பாள் - எரியும்
தீயினில் பட்டால் கொதிப்பாள்!

மேகலை போல சொலிக்கும் - அவள்
மேனியில் தொட்டால் சிலிர்க்கும்

தாகம் எடுத்தால் தணிப்பாள் - அந்தத்
தாயே கொட்டிடும் அருவி!

கவிக்கொண்டல் மா. செங்குட்டுவன்





# பெரியார் மாவட்டம்: பல்துறைப் பணிவிளக்க முகாம்

பெரியார் மாவட்டத்தில் அரசின் சார்பில் "பல்துறைப் பணிவிளக்க முகாமின் தொடக்க விழா 7-7-89 அன்று கோபி வைரவிழா மேல்நிலைப் பள்ளித் திடலில் நடைபெற்றது.

பல்துறை, பணிவிளக்க முகாமினையும், அதை ஒட்டிய கண்காட்சியையும் தொடக்கி வைத்து, அரசின் நலத் திட்ட உதவிகளை வழங்கி, மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் விழாப் பேருரையாற்றினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரையாற்றும்போது "அரசின் பல்துறைப் பணி விளக்க முகாமினைத் திறந்து வைக்கும் வாய்ப்பு கிடைத்தமைக்காக மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த முகாமின் மூலம் அரசின் எண்ணத்தையும் மக்கள் கருத்துக்களையும் பகிர்ந்து கொள்ள நல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. மக்களுக்கு நல்வாழ்வுத் திட்டங்களின் அடிப்படையில் வீட்டுமனைப் பட்டா, கடன் உதவித் தொகை, இலவச, தையல் இயந்திரம், முதியோர் ஓய்வூதியம், இலவச மரக்கன்றுகள் மற்றும் வேளாண்மை இடுபொருள்கள் வழங்குவது போன்ற நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளை அரசு அலுவலர்கள் சிறப்பாகச் செய்திருக்கிறார்கள்.

"பெரியார் மாவட்டத்தில் இம்முகாமினை முதன்முதலாக ஆரம்பிக்கக் காரணமே எரிமலை போன்ற எண்ணத்தையும் கருத்துக்களையும் உருவாக்கி நாடு முழுவதும் மக்களிடையே பகுத்தறிவைப் பரப்பிய தந்தை பெரியார் பிறந்த மண் என்பதால்தான் இங்கே இந்த முகாம் முதலில் தொடங்குகிறது. இது முதல் முயற்சியாகும். திட்டத்தின் வழிமுறைகளை அறியவும், இடைத்தரகர்களைத் தடுக்கவும் இம்முகாம் மூலம் பெறும் உணர்வு துணை புரியும்.

"இம்மாவட்டத்தில் 3 கோட்டங்களில் ஒவ்வொரு கோட்டத்திற்கும் 10 கிராமங்கள் வீதம் 30 கிராமங்களைத் தேர்ந்தெடுத்து நாள்தோறும் முகாம்கள் 16-7-89 முதல் நடைபெறவுள்ளன. அரசின் திட்டங்களை எடுத்துச் சொல்லவும், அரசின் திட்டங்கள் மக்களுக்குப் போய்ச் சேர்ந்துள்ளனவா என்பதை அறிந்து கொள்ளவும், குழுக் கூட்டங்கள், கலந்துரையாடல முதலானவை நடைபெறுகின்றன.

"இந்த அரசு பல்வேறு நலத் திட்டங்களையும் அறிவித்துச் செயல்படுத்தி வருகின்றது. தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு சமூக விஞ்ஞானி ஆவார்கள். ஏழை, எளிய, ஒதுக்கப்பட்ட, வஞ்சிக்கப்பட்ட, வறுமைக் கோட்டிற்கும் கீழ் உள்ள மக்களுக்காகப் பல்வேறு திட்டங்களை நாள் தோறும் அறிவித்து வருகின்றார்கள். கண் வியாதிக்கு இலவச சிகிச்சை அளிக்கப்படுகிறது. இலவசக் கண் முகாம்கள் சிறப்பாக நடத்தப்படுகின்றன.

"கிராமப் பகுதிகளில், மலைப் பகுதிகளில் வாழ்கின்ற அப்பாவி மக்களுக்கு அரசின் திட்டப் பணிகளை விளக்கி அவர்கள் பயன் பெறுவதற்காகவே இக்கண்காட்சி நடத்தப் படுகின்றது.

"கலை நிகழ்ச்சிகள், திரைப்படங்கள் மூலம் கிராம மக்களைத் திரட்டி, சாதாரண மக்கள் எவ்வாறு அரசின் திட்டங்களைப் பெற முயல வேண்டும், அரசின் நடவடிக்கைகளில் எவ்வாறு பங்கு பெறுவது என்பதை விளக்கவே இதுபோன்ற முகாம்கள் தொடர்ந்து நடத்தப்படவுள்ளன.

"ஏட்டுச் சுரைக்காய் கவைக்கு உதவாது என்பது போல, கடந்த கால அரசு கவர்ச்சிகரமான திட்டங்களை அறிவித்து நடைமுறைப் படுத்த இயலாத நிலையில் திட்டங்களை உருவாக்கினார்கள்.

"இன்று அரசு நிறைவேற்றுகின்ற திட்டங்கள் மக்களுக்குப் போய்ச் சேர்கிறது. இன்று கைத்தறி நெசவாளர்களுக்குக் கூலி நிர்ணயக் கமிட்டியும், கூலி நிர்ணயமும் முதல்வர் கலைஞர் ஆட்சியில்தான் அமைக்கப்பட்டது. மூடப்பட்ட மில் மற்றும் எஞ்ஜினியரிங் தொழிற்சாலைகளும் இந்த ஆட்சியில்தான் திறக்கப்பட்டன.

"சமுதாயத்திலுள்ள அனைத்துத் தரப்பினரும் ஏற்றம் பெற நித்தமும் சிந்திப்பவர் டாக்டர் கலைஞர். இப்படிப்பட்ட நல்லாட்சி நிலைபெற அனைவரும் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்."

இவ்விழாவில் 52 பேர்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்களையும், 2 பேர்களுக்கு முதியோர் உதவித் தொகைகளையும், ரூ. 2.80 இலட்சத்திற்கு 47 பேர்களுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடன் உதவிகளையும், 9 பேர்களுக்கு வேளாண்மை இடுபொருள்களையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இவ்விழாவில், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. வி. கே. சுப்புராஜ் இ.ஆ.ப., திட்ட விளக்க உரையாற்றினார்.. சட்டமன்ற உறுப்பினர்கள், திரு. அ. கணேசமூர்த்தி, டி.கே. சுப்பிரமணியம், வேடசந்தூர் முத்துசாமி மற்றும் கோபி நகரமன்றத் தலைவர் திரு. லட்சுமணன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

விழாவிற்கு வந்திருந்தோரை செய்தி - மக்கள் தொடர்புத்துறை துணை இயக்குநர் (நினைவகங்கள்) திரு. இரா. நடேசன் வரவேற்றார்.



மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள், 8.7.89 அன்று மாநிலச் சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் பங்கேற்றார்.


# படமும் செய்தியும்



மாண்புமிகு முதல்வர் அவர்களை மாண்புமிகு இலங்கை அமைச்சர் தொண்டமான் சென்னையில் சந்தித்துப் பேசினார். (11-7-89)



மாண்புமிகு தமிழகச் சட்டப் பேரவைத் தலைவர் டாக்டர் மு. தமிழ்க் குடிமகன் அவர்களை, மாண்புமிகு அரியானா சட்ட மன்றப் பேரவைத் தலைவர் திரு. எச்.எஸ். சத்தா அவர்கள் 7.7.89 அன்று தலைமைச்செயலகத்தில் சந்தித்தார்.



வள்ளுவர் கோட்டத்தில் 16.7.89 அன்று நடைபெற்ற பெருந் தலைவர் காமராஜர் பிறந்தநாள் விழாவில், மாண்புமிகு முதல்வர் அவர்கள், காமராஜரின் உதவியாளராக இருந்த திரு. வைரவனுக்குப் பணமுடிப்பு வழங்கினார். மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. ஆற்காடு வீராசாமி, முன்னாள் மத்திய அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம், திரு. நாத்திகம் ராமசாமி ஆகியோரும் இவ்விழாவில் கலந்து கொண்டார்கள்.

தேசிய மீன் வளத்துறைக் கூட்டத்தை சென்னையில் மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. பஜன்லால் அவர்கள் துவக்கி வைத்தார். மாண்புமிகு தமிழ்நாடு கால் நடைத்துறை அமைச்சர் திரு. டாக்டர் கே. சந்திரசேகரன் அவர்கள் அக் கூட்டத்தில் பங்கேற்றார். (8-7-89)





தென்னிந்தியாவிற்கான ஜப்பான் நாட்டுத் தூதர் திரு. எஸ். தனகா, 18-7-89 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்து உரையாற்றினார்.



சென்னை துரைமேடு அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியின் வெள்ளி விழாவில் மாண்புமிகு முதல்வர் கலைஞர், மாண்புமிகு கல்வி அமைச்சர் ஆகியோர் பங்கேற்றனர். பள்ளிக் கல்வி இயக்குநர் திரு. அ. முத்துக்கிருஷ்ணன், மற்றும் மேற்படி பள்ளியின் தலைமை ஆசிரியை உடன் உள்ளனர். (23.6.89).

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர் எ. இராமகிருஷ்ணன் அவர்கள் 5-7-89 அன்று, ராமகிருஷ்ண ராஜபேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் ஏழை எளிய ஆதி திராவிட மக்களுக்கான தொகுப்பு வீடுகளைத் திறந்து வைத் தார்.






மாண்புமிகு தமிழ்நாடு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்களை, மாண்புமிகு ஆந்திர மாநிலப் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. ராமநாராயண ரெட்டி அவர்கள் 5.7.89 அன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்தார்.

# காமராஜர் பிறந்த நாள் கற்றோர்க்குச் சிறந்த நாள்

**நான்காம் அட்டை சொல்லும் செய்தி:**

பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 87-வது பிறந்தநாள் விழாவும், பள்ளி இறுதி மற்றும் மேல்நிலைப் பள்ளித் தேர்வுகளில் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவியர்க்குப் பரிசுகள் வழங்கும் விழாவும் 15.7.89 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்றன.

விழாவில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் கலந்து கொண்டு, மாநில அளவில் பள்ளி இறுதி மற்றும் மேல்நிலைப் பள்ளித் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ மாணவியர்க்குப் பதக்கங்களையும், பரிசுகளையும் வழங்கினார். இதே போன்று மெட்ரிகுலேஷன் மற்றும் ஆங்கிலோ இந்தியப் பள்ளி மாணவ மாணவியர்க்கும் பரிசுகளை வழங்கினார். தமிழ்நாட்டில் முதல் இடத்தைப் பெற்ற மாணவர்களுக்கு ரூ.5 ஆயிரமும், இரண்டாவது இடத்தைப் பெற்ற மாணவர்களுக்கு ரூ.3 ஆயிரமும், மூன்றாவது இடத்தைப் பெற்ற மாணவர்களுக்கு ரூ. 2 ஆயிரமும் வழங்கப்பட்டது. 300க்கு மேற்பட்ட மாணவ மாணவியருக்கு ஏறத்தாழ ரூ. 4 இலட்சத்திற்கான பரிசுத் தொகைகளை வழங்கி மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பரிசு பெற்றோர்க்குப் பாராட்டுக்களைத் தெரிவித்து வாழ்த்திப் பேசினார்.

விழாவின் துவக்கத்தில், கல்வித் துறையின் ஆணையர் மற்றும் செயலர் டாக்டர் எச்.பி.என். ஷெட்டி இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரையாற்றுகையில், "இந்த நாளின் மகத்துவத்தை நீங்கள் அறிவீர்கள். ஏழைக் குழந்தைகளின் நல்வாழ்வுக்குப் பாடுபட்ட பெருந்தலைவரின் பிறந்த நாளில் இந்த விழாவை நாம் ஏற்பாடு செய்துள்ளோம். இதுவரை பிளஸ் 2, எஸ்.எஸ்.எல்.சி, ஓ.எஸ்.எல்.சி, ஈ.எஸ்.எல்.சி, மெட்ரிகுலேஷன் போன்ற வகுப்புகளில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்குத் துறை மூலமாகப் பரிசுகள் வழங்கி வந்தோம். இவ்வாண்டு முதல் ஒவ்வொரு பாடத்திலும் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்க வேண்டும் என்று முதல்வர் அவர்கள் ஆணையிட்டார்கள். அதற்கான நிதியை ஒதுக்கினார்கள். இவ்வாண்டு மட்டுமல்ல, ஆண்டு தோறும் இதுபோன்றே பரிசுகள் தரப்பட வேண்டும் என்று முதல்வர் அவர்கள் கூறியுள்ளார்" என்று கூறினார்.

வாழ்த்துரை வழங்கிய தலைமைச் செயலர் திரு. எம்.எம். இராஜேந்திரன் இ.ஆ.ப. அவர்கள், "அரசுப் பணியில் நான் சேர்ந்த ஆரம்ப காலத்தில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் சொந்த ஊரில் பணியாற்றினேன். குழந்தைகளின் கல்வி மீது அவர் எவ்வளவு ஆர்வம் கொண்டிருந்தார் என்பதை நான் நேரில் கண்டிருக்கிறேன். பெருந்தலைவரின் நோக்கமும் முதல்வர் அவர்களின் குறிக்கோளும் ஒன்றாக உள்ளது. மத்திய அரசில் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. அதனால் அவர்களால் ஊதிய உயர்வு கொடுக்க முடியும். மாநிலத்தில் ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகம். இருந்தபோதிலும் அதே அளவுக்கு ஊதிய உயர்வு அளிக்க வேண்டும் என்பதில் முதல்வர் அவர்கள் அக்கறை கொண்டார்கள். ஊதிய உயர்வுப் பயன்பெற்ற ஆசிரியர்கள் தங்கள் கடமையையும் பொறுப்பையும் உணர்ந்து நல்ல வகையில் கல்விப் பணி ஆற்றுவதுடன் கல்வியின் தரத்தையும் உயர்த்த வேண்டும்" என்று கூறி பரிசு பெறும் மாணவ மாணவியரை வாழ்த்தினார்.

தொடர்ந்து, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர் இராம கிருஷ்ணன் அவர்கள் வாழ்த்துரை நல்கினார். அமைச்சர் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது: "ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நாளிலிருந்து பல்வேறு கிராமங்களுக்குச் சென்று பார்த்தோம். பள்ளிகள் கட்டினோம் என்ற இடத்தில் எல்லாம் பள்ளிகள் இல்லை. மரத்தடியில் தான் வகுப்புகள் நடக்கின்றன. இந்த நிலை நீடிக்கக்கூடாது என்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் கல்வித்துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்திவரும் முதல்வர் அவர்கள் மாணவர்களை ஊக்கப்படுத்த இந்தப் பரிசுத் திட்டத்தை அறிவித்து, அதை இந்த ஆண்டிலிருந்தே செயல்படுத்தத் தொடங்கிவிட்டார்கள். கல்வி வளர்ச்சிக் காகச் சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகை ரூ.690 கோடி. தற்போது ரூ.900 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. மாணவர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு நிறைய மதிப்பெண்கள் பெறவேண்டும்".

மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் விழாவிற்குத் தலைமை ஏற்று, தென்காசி, அருப்புக்கோட்டை, பரமக்குடி ஆகிய கல்வி மாவட்டங்களுக்கு அறிவியல் ஊர்திகளை வழங்கும் வகையில் அவற்றுக்கான சாவிகளை அளித்து உரையாற்றினார். அவரது உரையில் "பரிசு பெறும் மாணவர்கள் இந்த நாளை மறக்க மாட்டார்கள். பரிசுபெறுவோரை நான் பாராட்டுகிறேன். வாழ்த்துகிறேன். பள்ளி இறுதி வகுப்பில் 5 இலட்சத்துக்கு மேற்பட்டோரும், மேல்நிலைத் தேர்வில் ஏறத்தாழ 2.5 இலட்சம் மாணவர்களும் தேர்வுகள் எழுதினர். அவ்வளவு மாணவர்

களிலும் முதல்நிலை பெறத் தகுதியுள்ள திறமையான மாணவர்களை உருவாக்கிய பள்ளிக்கு என் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். பரிசுத் தொகையை அவர்கள் நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்வார்கள் என நம்புகிறேன். உயர் படிப்புக்கு இந்தத் தொகை மூலதனமாகப் பயன்படும். நூற்றுக்கு நூறு என்ற வீதத்தில் தேறிய பள்ளிகளுக்குப் பாராட்டு விழா வேறு இடங்களில் நடைபெற உள்ளது. 100-க்கு 20 பேர் மட்டும் தேறிய பள்ளிகளும் உள்ளன. அடுத்த ஆண்டு மாணவர்களை ஏமாற்றாத வகையில் - பெற்றோரை ஏமாற்றாத வகையில் இந்தப் பள்ளிகள் நல்ல மாற்றத்தை உருவாக்கித் தரவேண்டும்.

"எங்கெங்கு ஆசிரியர்கள் பொறுப்பில்லாதவர்களாக இருக்கிறார்களோ, அங்கெல்லாம் மாணவர்கள் அதிக அளவில் தோல்வி அடைகிறார்கள். ஒரு கோடிக்கு மேல் மாணவர்கள் பயில்கிறார்கள். ஆசிரியர்கள் 3 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் பணி ஆற்றுகிறார்கள். ஒரு கோடி மாணவர்களையும் நல்ல வகையில் உருவாக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு ஆசிரியர்கள் சிறந்த முறையில் கடமை ஆற்றவேண்டும். பெற்றோர் ஆசிரியர் கழக அமைப்பு எவ்வளவுக்கெவ்வளவு செயல்படுகிறதோ அந்த அளவுக்கு மாணவர்களின் தேர்ச்சி உண்டு.

"அடித்தளச் சமூகம் முன்னேற வேண்டும் என்பதில் அதிக ஆர்வம் காட்டியவர் பெருந்தலைவர் காமராஜர் என்பதற்கு எத்தனையோ உதாரணங்களைக் கூறமுடியும். இந்த விழாவை நடத்துவதற்கு அவரின் பிறந்த நாளைத் தேர்ந்தெடுத்தது மிகவும் பொருத்தமானதாகும்" என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் மாணவ, மாணவியர்களுக்குப் பரிசுகள் வழங்கி வாழ்த்துரை வழங்கினார்.

முதல்வர் அவர்கள் தமது உரையில் தெரிவித்ததாவது:

"காமராஜர் வேறொரு இயக்கத்தைச் சேர்ந்தவர். அவர் அந்த இயக்கத்தின் சார்பாக ஒரு ஆட்சியை அமைத்தார் என்றாலும் கூட, கல்வித்துறையில் அவர் ஆற்றிய அந்தக் கடமை இருக்கிறதே அது, என்றென்றும் இந்த நாட்டில் சரித்திரத்திலே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டு, அனைவரும் படித்து மகிழ்வது மாத்திரம் அல்ல. அதனைப் பின்பற்ற வேண்டும் என்கின்ற எண்ணத்தை உருவாக்குகின்ற ஒரு பணியாகும்.

"அவர், தமிழ்நாட்டில் பெண்கள் கல்வியில் உயரவேண்டும். பெண்கள் அனைவரும் கல்வி கற்றிட வேண்டும் என்பதில் எவ்வளவு ஆர்வத்தோடு இருந்தார் என்பதற்கு அவர் சொல்லித் தொகுக்கப்பட்ட ஒரு கருத்துரைத் தொகுப்பை நான் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

> நமக்கு அப்பாலுள்ள பேராற்றலை நான் அல்லா என்றோ, ஆண்டவன் என்றோ அழைக்கவில்லை. அதை நான் உண்மை என்றே அழைக்கிறேன்.
>
> — காந்தி அடிகள்
>
> மனிதனே உயிரினங்களுள் சிறந்தவன். அந்தச் சிறப்பை அவனுக்குத் தருவது அவனது சிந்தனைத் திறன். அதை முழுவதும் வளர்த்துக் கொள்வதே அவன் பிறவிப் பயனை அடைவதற்குத் திறவுகோல்.
>
> — அரிஸ்டாடில்
>
> வாழ்க்கைச் சங்கீதம் இரண்டு கம்பிகளின் இன்னிசையால் நிரூபிக்கப்படுகின்றது. ஒன்று தொண்டு, மற்றொன்று அன்பு. தொண்டு உலகத்தைக் களிக்கச் செய்கிறது. அன்பு மனத்தைக் களிக்கச் செய்கிறது.
>
> — காண்டேகர்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் மிக அழகாகப் பாடிக் காட்டினார்.

"கல்வி இல்லாத பெண்கள்
களர் நிலம் — அங்கு
புல் விளைந்திடலாம் — நல்ல
புதல்வர்கள் விளைவதில்லை"

என்றார் பாவேந்தர் பாரதிதாசன்.

அந்தக் கல்வி என்கிற கருப் பொருளைப் பெருந்தலைவர் காமராஜர் எந்த அளவிற்கு உணர்ந்திருந்தார், அதனை எவ்வாறு செயல்படுத்த வேண்டும் என்று விரும்பினார், என்பதற்கு எடுத்துக்காட்டாக அவர் சொன்ன கருத்தை இந்த நிகழ்ச்சியில் நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

"தாய்மார்கள் படித்துவிட்டால் நாட்டில் உள்ள தொந்தரவுகள் போய்விடும். நாம் சம்பாதித்த சுதந்திரம் நல்ல முறையில் பாதுகாக்கப்படும். சம்பாதிப்பது பெரிய காரியமல்ல. சம்பாதித்த சொத்தைப் பாதுகாத்து நல்ல முறையில் பயன்படுத்துவதுதான் கஷ்டம். அரசாங்கத்தை நடத்துவதைவிட குடும்பத்தை நடத்துவது சிரமமானது. பெண்களுக்குப் பொறுமை இருப்பதால்தான், அவர்கள் நல்ல முறையில் குடும்பத்தை நடத்த முடிகிறது. இன்றுள்ள நிலையில் நாட்டின் முன்னேற்றத்தைப் பற்றியும் சமுதாயத்தில் நாம் என்னென்ன செய்ய வேண்டியிருக்கிறது என்பது பற்றியும் தாய்மார்கள் உணர்ந்திருந்தால் எதிர்காலத்தில் இந்த நாட்டை ஆளக்கூடிய குழந்தைகளுக்கு அவர்கள் அதுபற்றி எடுத்துச் சொல்வார்கள்.

"அந்தக் காலத்தில் நல்ல கதைகளைக் குழந்தைகளுக்குச் சொல்லி நேர்மையாக நடந்துகொள்ளவேண்டும் என்ற மனப்பான்மையைக் குழந்தைகளுக்கு உண்டு பண்ணினார்கள். இப்போது கதை சொல்கிறவர்களும் இல்லை. சொன்னாலும் பாட்டி கதை என்று விட்டுவிட்டுப் போய் விடுகிறார்கள்.

"நம் குழந்தைகள் நல்ல முறையில் வளர்ச்சி பெற ஐந்தாவது வகுப்பு வரையிலாவது அவர்களுக்குப் பெண் ஆசிரியர்கள் மூலம் படிப்பு சொல்லித் தரவேண்டும்.

"இன்றைக்குக் கழக ஆட்சி பொறுப்பேற்ற உடனே நாங்கள் விடுத்துள்ள அறிவிப்பில் பிறப்பித்துள்ள ஆணைகளில்கூட-முதல் இரண்டு வகுப்புகளில் இனிமேல் நியமிக்கப்படுகின்ற ஆசிரியர்களெல்லாம் மகளிராகவே இருக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

"இந்தக் கருத்தை தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜர் அவர்களும் பல ஆண்டுகளுக்கு முன்பே எடுத்துக் கூறியிருக்கின்றார்கள்.


"அதிலும் காமராஜர் அவர்கள் முதல் இரண்டு வகுப்பு மாத்திரம் அல்ல. ஐந்தாவது வகுப்பு வரையிலாவது ஆசிரியைகள்தான் படிப்பு சொல்லித்தர வேண்டும் என்று கூறியிருப்பது, அவர்கள் பொறுமையாகப் படிப்பு சொல்லித் தருவது மாத்திரம் அல்ல, அன்போடு அரவணைத்து அந்த இளம் குழந்தைகளை எதிர்கால மன்னர்களாக ஆக்குவதற்குத் தகுந்த சிற்பிகளாகச் செயல்படுவார்கள் என்ற எண்ணத்தோடு தான் அவர் அந்தக் கருத்தைச் சொல்லியிருக்கின்றார்.

"அவருடைய பிறந்த நாள் விழாவில் இந்த அரசு ஒரு உறுதியை எடுத்துக் கொள்கிறது. இப்போது முதல் இரண்டு வகுப்புகளுக்குப் புதிதாக நியமிக்கப்படுகின்ற ஆசிரியர்களெல்லாம் பெண்கள் என்று எடுத்திருக்கின்ற அந்த முடிவை, எதிர்காலத்தில் அது ஐந்தாவது வகுப்பு வரையில் நியமிக்கப்படுவர்– இதனை படிப்படியாக நிறைவேற்ற, என்கிற வகையிலே இந்த அரசு உறுதி எடுத்துக் கொள்கிறது". இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது உரையில் தெரிவித்தார்.

பள்ளிக் கல்வி இயக்குநர் திரு. அ. முத்துக்கிருஷ்ணன் அவர்கள் நன்றி நவின்றார்.

விழாவில் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு ஆற்காடு வீராசாமி, முதலமைச்சரின் பேரவைச் செயலர் திரு. எல். கணேசன், முன்னாள் அமைச்சர் திரு. அன்பில் தர்மலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. வை. கோபால்சாமி, திரு. டி.ஆர். பாலு மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.








மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் **திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்**

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் 1988-89-ஆம் ஆண்டில் மட்டும் கிராமத் தொழில் பொருட்கள் ரூ. 195.15 கோடிக்கு உற்பத்தி செய்துள்ளோம். இதுவரை தமிழ்நாட்டில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் நடவடிக்கைகள் மூலம் 8.60 இலட்சம் கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இதில் 1.22 இலட்சம் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மலைவாழ் மக்களாவர். 1989-90-ஆம் ஆண்டில் மேற்கொண்டு 1 இலட்சம் கைவினைஞர்களுக்குக் கதர் கிராமத் தொழில்கள் மூலம் வேலை வாய்ப்பு அளிக்க வாரியம் திட்டங்களை வகுத்துள்ளது.

### ஊரகப்பகுதிகளைத் தொழில் மயமாக்குதல்

கிராமத் தொழில்களை உருவாக்குவதில் ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறையை நாம் முழுமையாக ஆதரிக்கிறோம். உண்மையாகவே தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும், கிராமத் தொழில்கள் வேகமாகச் செயல்படுத்தப்படுகின்றன. இதனால் அப்பகுதிகளில் ஒருங்கிணைந்த தொடர் வளர்ச்சியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் 34 புதிய தொழில்களைக் கதர் கிராமத் தொழில்பிரிவில் இணைத்திருப்பது வரவேற்கத் தக்கது. இதனால் கிராமத் தொழில்களை உயர்ந்தபட்சம் வளர்ச்சியடையச் செய்து ஊரகப்பகுதிக் கைவினைஞர்களுக்கு அதிக வேலைவாய்ப்பை அளிக்க இயலும்.

மாநில அரசின் கீழ் இயங்கும் வாரியங்களுடன், மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் பெரிய பொதுத்துறை நிறுவனங்களும் அவைகளுக்குத் தேவையான உபரி பாகங்களைக் கிராமத் தொழில் அலகுகளின் மூலம் உற்பத்தி செய்ய வாய்ப்பளித்தால் இந்த அலகுகளை ஊரகப்பகுதி துணைத் தொழில் அலகுகளாகச் செயல்படச் செய்யலாம். இதனால் நிச்சயமாக ஊரக வேலை வாய்ப்பு பல்கிப் பெருகும்.

கிராமத் தொழில்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிதியுதவி சலுகைகளுள், பெரிய நிறுவனங்களை, கிராமத் தொழில்களின் பால் . ஈர்த்து அவற்றிற்காகப் பணிகளை மேலும் பயன்படுத்திக் கொள்ள வாய்ப்பளிக்கும். கதர் கிராமத் தொழில்களில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களுக்கு இடையூறின்றி கச்சாப் பொருட்களைச் சலுகை அடிப்படையில் தங்கு தடையில்லாமல் கிடைக்கச் செய்ய வேண்டும்.

டிரைசம், நிலமற்றோருக்கு வேலை வாய்ப்பளிக்கும் திட்டம், தேசிய வேலை வாய்ப்புத் திட்டம், ஒருங்கிணைக்கப்பட்ட ஊரக வளர்ச்சித் திட்டம் போன்றவற்றிலிருந்து அதிக அளவு நிதி ஆதாரங்களைப் பயன்படுத்த வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது குறித்து நான் குறிப்பிடுவதெல்லாம், தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம், வறட்சி நிவாரணப் பகுதித் திட்டம், சிறப்புக் கூட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களிலிருந்து அதிக அளவில் நிதி ஆதாரங்களைப் பயன்படுத்துவதில் முன்னோடியாகத் தமிழ்நாடு விளங்குகிறது எனச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 11,280 கைவினைஞர்களுக்குப் பயிற்சி அளித்திட டிரைசம் நிதியிலிருந்து ஏறத்தாழ ரூ. 84.69 இலட்சம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தில் கிடங்குகள், பணிமனைகள் கட்டுவதற்கும், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், வாகனங்கள் வாங்குவதற்கும், ஏற்றுமதி விற்பனை நிலையம் கட்டுவதற்கும், இதர உள்ளமைப்புகளை நிர்மாணிப்பதற்கும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட நிதி அதிக அளவில் பயன்படுத்தப் படுகிறது. மேற்கண்ட பணிகளுக்காக ஏறத்தாழ இரண்டு கோடி ரூபாய் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி நிதியிலிருந்து பயன்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநில வாரியம் இராமநாதபுரம், பசும்பொன் தேவர் திருமகன் மற்றும் திருநெல்வேலி கட்டபொம்மன் ஆகிய மூன்று மாவட்டங்களில், தெரிவு செய்யப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களில், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், சிறப்புக் கூட்டுத்திட்டம், கதர் கிராமத் தொழில் ஆணைக் குழு ஆகியவற்றிடமிருந்து ஒருங்கிணைந்த நிதி பெற்று, பல சிறப்புத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. இதன் மூலம் இப்பகுதிகளில் அதிக அளவில் கைவினைஞர்கள் வேலைவாய்ப்புப் பெறுகிறார்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத் திட்டங்களை வகுக்கும்போது மேற்கண்ட திட்டங்களுக்குத் தேவையான நிதிகளை ஒதுக்கீடு செய்கின்றார்கள். பிறகு இந்த நிதி, கதர் கிராமத் தொழில் திட்டங்களை நிறைவேற்றி மாநில வாரியத்திற்கு வழங்கப்படுகிறது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட நிதியிலிருந்து கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு வழங்கப்படும் நிதி முழுவதும் மானியமாகவே வழங்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ்நாட்டில் கதர் கிராமத் தொழில்கள் வாரியம் வளர்ச்சி அடைவதற்கும், அதன் நடவடிக்கைகள் பரவலாக விரிவடைவதற்கும் தமிழ்நாடு அரசு கொள்கை அளவிலான ஆதரவினைப் பல ஆண்டுகள் தொடர்ந்து அளித்து வருகிறது என்பதை இங்கே குறிப்பிடுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். அவற்றில் ஒரு சிலவற்றை மட்டும் குறிப்பிட விரும்புகின்றேன்.

1. கதர் கிராமதொழில் பொருட்களுக்கு விற்பனையிலிருந்து வரி விலக்கு.

2. நிலக்கடலை, மற்றும் இலவம் பஞ்சு ஆகியவற்றிற்கு கொள்முதல் நிலையில் வரி விலக்கு.

3. கடை மற்றும் பணியாளர் சட்டத்திலிருந்து விலக்கு.

4. கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் இயங்கும் தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முத்திரைக் கட்டணத்திலிருந்து விலக்கு.

5. கைவினைஞர்களுக்கு முத்திரைத்தாள் கட்டணத்திலிருந்து விலக்கு.

6. போனஸ் சட்டத்திலிருந்து விலக்கு.

*விற்பனை செயல்முறைத் திறன்:*

கதர் கிராமத் தொழில்கள் செயல்படுத்துவதில் விற்பனை செய்வதுதான் தொடர்ந்து நலிந்த நிலையில் உள்ளது. இன்றைய நிகழ்ச்சி நிரலில் இப்பொருளுக்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டுள்ளது மன நிறைவளிக்கிறது. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்களின் பொருட்களை வாங்க தாராளமாகச் சலுகைகளை வழங்கியுள்ளது.

அரசு நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளிகள் முதலிய வழிமுறைகளைக் கடைப்பிடிக்காமல் கதர் கிராமத் தொழில் பொருட்களை முன்னுரிமை அளித்து வாங்கிட வழி வகை செய்யப்பட்டுள்ளது. இந்த அரசு சலுகை, மாநிலத்தில் கதர் கிராமத் தொழில்கள் பெரும் அளவில் வளர்ச்சியடைய பெரிதும் உதவியுள்ளது. இருப்பினும் இன்று கதர் கிராமத் தொழில்கள் மகத்தான வளர்ச்சி ஏற்பட்டுள்ள நிலையில் மாநிலங்களில் இயங்கும் மைய அரசுத் துறைகள் அதன் நிறுவனங்களுக்கும் தேவையான பொருட்களைக் கதர் கிராமத் தொழில் வாரியங்களிடமிருந்து வேண்டும் முன்னுரிமை கொடுத்து வாங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், குறிப்பிட்ட சில கதர் கிராமத் தொழில் பொருட்களை வளர்ச்சி அடையும் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய விரைவான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். எடுத்துக் காட்டாகத் தோல் பொருட்கள் மற்றும் பனை ஓலைப் பொருட்களுக்கும் மத்திய கிழக்கு நாடுகளிலும், தூரக் கிழக்கு நாடுகளிலும் நல்ல விற்பனை வாய்ப்பு உள்ளது.

தமிழ்நாடு அரசு கதர் இரகங்களுக்கு ஒரு ஆண்டுக்கு 90 நாட்களுக்கு 10 சதவீதம் தள்ளுபடி அளிக்கிறது. 1975-76-லிருந்து 1988-89 வரை தள்ளுபடிக்காக மட்டும் ஏறத்தாழ ரூ. 15 கோடி செலவு செய்துள்ளது.

விற்பனையும் விளம்பரமும் ஒன்றுடன் ஒன்று கைகோத்து வேகமாக முன்னேற வேண்டும். விளம்பரம் செய்வதற்கு கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு இன்னும் சற்றுத் தாராளமாக மாநில அரசுகளுக்கு உதவி செய்ய வேண்டும். இரயில்வே கோச்சுகளிலும், வானொலி மற்றும் தொலைக் காட்சிகளிலும் சலுகைக் கட்டணத்தில் விளம்பரம் செய்ய மத்திய அரசு உதவி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன். இதன் மூலம் தனியார் நிறுவனங்களுடன் கதர் கிராமத் தொழில் பொருட்கள்போட்டியிட முடியும்.

*ஆதி திராவிடர் மற்றும் ஆதி திராவிடர் பழங்குடியினரின் பங்கு:*

கதர் கிராமத் தொழில் திட்டங்களைச் சரியானபடி முழு ஆற்றல் உள்ளதாகப் பயன்படுத்தினால் ஆதி திராவிட மற்றும் ஆதி திராவிடப் பழங்குடியினரை ஊரகத் தொழில்களில் பங்கு பெறச் செய்யலாம். இத்திட்டங்கள் ஜாதி, மதங்களின் தடைகளை நீக்கி, சமுதாயத்திலுள்ள அனைத்து மக்களையும் ஊரகத் தொழில்களில் ஈடுபடச் செய்கிறது. இத்துறையில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் அனுபவம் பெருமைக் குரியது. மாநில வாரியத்தினால் இதுவரை பயன்பெற்ற கைவினைஞர்கள் 8.60 இலட்சம் பேர்களில் கிட்டத்தட்ட 1.22 இலட்சம்பேர்கள் ஆதிதிராவிடர் மற்றும் ஆதி திராவிடப் பழங்குடியினராவர். இந்தக் கைவினைஞர்கள் வேறு எந்த வரையறுக்கப்பட்ட தொழில்களின் மூலம் மட்டும் பயனடையாமல், மாநில வாரியத்தினால் செயல்படுத்தப்படும் அனைத்துத் திட்டங்களின்மூலமும் பயன் அடைந்துள்ளார்கள்.

'டிரைசம் மூலம் நடத்தப்படும் பயிற்சித் திட்டங்களில் குறைந்த அளவு 50 சதவீதம், ஆதி திராவிடர் மற்றும் ஆதி திராவிடப் பழங்குடியினர் பயன் பெறுகிறார்கள். ஆதி திராவிடர்கள் மாற்றுத் தொழிலினைச் செய்வதற்கு, அலகுகள் நிறுவுவதற்கும் பயிற்சித் திட்டங்களைச் செயல்படுத்தவும் ஆதி திராவிடர் நலனுக்காக அனுமதிக்கப்பட்ட சிறப்பு மைய உதவியினை மாநில வாரியம் முழுமையாகச் செலவிட்டுள்ளது.

1981-82 முதல் 1988-89-ஆம் ஆண்டு முடிய சிறப்பு மைய உதவித் தொகையான ரூ. 17.73 கோடியினை மாநில வாரியம் செலவு செய்து, நூற்பு, நெசவு, தச்சர், கருமார், கைமுறைக்காகித, ஷாம்பு தயாரித்தல் மற்றும் கையால் பின்னுதல் போன்ற பல தொழில்களின் மூலம் 29,501 நபர்களுக்கு வேலைவாய்ப்பளித்துள்ளது. மாநில வாரியம் பழங்குடியினருக்கு வேலைவாய்ப்பு அளிப்பதில் பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் செலவு செய்துள்ளது. இது வரை ரூ. 171.34 இலட்சம் நிதி இத்திட்டத்திலிருந்து செலவு செய்யப்பட்டு 5,307 பழங்குடியினர் பயன் அடைந்துள்ளனர்.

*பெண்களின் பங்கு:*

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் இதுவரை 3.31 இலட்சம் பெண்களுக்கு வேலை வாயப்பளித்துள்ளது. நூற்பு மற்றும் நெசவுத் தொழிலில் பெண்களின் பங்கு அதிகம். அதிகமான உடலுழைப்பு இல்லாத இதர கிராமத் தொழில்களிலும் பெண்கள் பங்கேற்றுள்ளார்கள்.

பரம்பரைத் தொழிலினைக் கொண்டுள்ள பெண் கைவினைஞர்களை மாற்றுத் தொழில்களில் ஈடுபடுத்தி அவர்களின் பங்கினை அதிகரிக்க, பெண்கைவினைஞர்களின் உதவிக்கெனத் தனியாக ஓர்அமைப்பு நிதியுதவித் திட்டத்தினைச் செயல்படுத்திட வேண்டுமென என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். கதர் கிராமத் தொழில் திட்டங்கள், தாழ்த்தப்பட்டோர் அபிவிருத்திக் கழகத்தின் திட்டங்களுடன் இணைத்து செயல்படுத்தப்படுவது போல் பெண்கள் அபிவிருத்திக் கழகத்துடன் தொடர்பு கொண்டு இத்திட்டத்தினைச் செயல்படுத்த வாய்ப்புள்ளது. 1988-89-ஆம் ஆண்டில் சிறப்பு மைய நிதியுதவியாக ரூ. 30 இலட்சம் பெறப்பட்டு, பல்வேறு தொழில்களின் மூலம் 1220 பெண் கைவினைஞர் பயன் அடைந் துள்ளார்கள்.

**(8-7-89 அன்று புதுடில்லியில் நடந்த, ஊரகத் தொழில்மய மாக்குதல் பற்றிய அனைத் திந்தியத் தொழில் அமைச்சர்கள் மாநாட்டில் ஆற்றிய உரையிலிருந்து.)**

மாநிலங்களவைக்கு

## அறுவர் தேர்வு

தமிழ்நாட்டிலிருந்து மாநிலங்களவைக்கு 6.7.89 அன்று நடைபெற்ற தேர்தலில், ஆறு இடங்களுக்கு ஆறுபேர் மட்டுமே போட்டியிட்டனர். அவர்கள் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டதாகத் தமிழ்நாடு சட்டப் பேரவை ஆணையர் செயலரும், மாநிலங்களவைக்கான தேர்தல் அதிகாரியுமான திரு. சி.கே. இராமசாமி அறிவித்தார்.

புதிதாக மாநிலங்களவைக்குத் தமிழ்நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் விவரம் வருமாறு:

திரு. முரசொலி மாறன் (தி.மு.க)
திரு. விடுதலை விரும்பி (தி.மு.க)
திரு. ஜி. வெங்கட்ராமன் (தி.மு.க)
திரு. ஜே. என். ராஜு (தி.மு.க)
திரு. ஏ. நல்லசிவன் (இ.கம். மார்க்)
திரு. என்.கே.டி. இராமச்சந்திரன் (இ.காங்)

24.7.89 முதல், ஆறாண்டுக்காலத்திற்கு இவர்கள் மாநிலங்களவையில் அங்கம் வகிப்பார்கள்.



# மனித நேயத்துடன் அரசு ஊழியர்க்கு அளிக்கப்பட்ட சலுகைகள்

இந்த அரசு பொறுப்பேற்றவுடன் ஏற்கெனவே பழிவாங்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் அறவே நீக்கப்பட்டிருக்கின்றன என்பதனை சில எடுத்துக்காட்டுகள் மூலமாக உங்களுக்கு விளக்க விரும்புகிறேன். இப்போது கூட அழைப்பு வைக்க வந்தபொழுது நண்பர் அப்பன் அவர்கள் பழிவாங்கப்பட்ட சிலருடைய பெயர்களையெல்லாம் குறித்துக் கொடுத்து அதற்கு உடனடியாக நிவாரணம் காண வேண்டுமென்று முதலமைச்சர் செயலகத்திலே தந்துவிட்டு வந்திருக்கிறார்.

நான் அதிலே சிலவற்றை நினைவிற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 22-6-88 முதல் 22-7-88 வரை ஒரு மாத காலம் "ஜாக்டீ" சார்பில் பெரும் போராட்டம் நடைபெற்றது. அதன் காரணமாக பல வழக்குகள் அரசின் சார்பில் ஜாக்டீ சங்கத்தினர் மீது போடப்பட்டிருந்தன

கழக அரசு ஏற்பட்ட பிறகு 22-3-89 அன்று நான் விடுத்த ஆணைக்கு இணங்க ஜாக்டீ சங்கத்தினர் மீது போடப்பட்டிருந்த அனைத்து வழக்குகளும்-ஒழுங்கு நடவடிக்கைகளும் ரத்து செய்யப்பட்டன.

அவர்கள் நடத்திய போராட்ட காலம் - தண்டனைக் காலம் அனைத்தும் விடுப்பாக கருதப் பட்டது.

ஆளுநர் ஆட்சிக் காலத்திலே அரசு அலுவலர்கள் மீது போடப்பட்டிருந்த 16 வழக்குகளை நீதி மன்றத்தின் முடிவிற்கு விடலாம் என்று முடிவெடுக்கப்பட்டிருந்தது.

ஆனால் கழக அரசு-27-3-89 ஆணையின்படி இந்த 16 வழக்குகளையும் திரும்பப் பெற்றது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பின்னர் வட ஆற்காடு மாவட்டத்தில் ஒரு வழக்கு மீதம் இருப்பதாக அறிந்து அந்த வழக்கும் திரும்பப் பெறப்பட்டது.

மேலும் ஜாக்டீ அமைப்பாளரின் வேண்டுகோளை ஏற்று ஒரு வழக்கிலே நீதிமன்றம் விதித்த 710 ரூபாய் தண்டனையும் தள்ளுபடி செய்து இந்த அரசால் உதவி செய்யப்பட்டது.

கழக அரசு ஏற்பட்ட பிறகு-திரும்பப் பெறப் பட்ட அரசு அலுவலர்கள் சம்மந்தப்பட்ட குற்ற, வியல் வழக்குகள் மட்டும்...92 ஆகும்.

இதனால் பயன் அடைந்தோரின் எண்ணிக்கை..4,837 ஆகும்.

துறை வாயிலான ஒழுங்கு நடவடிக்கை கைவிடப்பட்டதன் பயனாக பயன் பெற்றவர்கள் 1,180 பேர்.

இதில் தலைமைச் செயலகப் பணியாளர்கள்..14 பேர்

துறைத் தலைமைப் பணியாளர்கள்..300 பேர்

மாவட்டப் பணியாளர்கள்..866 பேர்

1985-ஆம் ஆண்டு போராட்டத்தில் திரும்பப் பெறப்பட்ட வழக்குகளால் பயனடைந்தோர்..35 பேர்.

22-6-88 முதல் 22-7-88 வரை நடைபெற்ற வேலைநிறுத்தத்திலே கலந்து கொண்ட மருத்துவத் துறை மற்றும் சின்கோனா துறையைச் சேர்ந்த அலுவலர்களுக்கு23, 24, 25-7-88ஆகிய மூன்று நாட்களுக்கு ஊதியம் வழங்கப்படவில்லை என்று கூறப்பட்டதையொட்டி-

கழக அரசு பொறுப்பேற்ற பிறகு 27-3-89 அன்று அரசு பிறப்பித்த ஆணையில் 23-7-88 அன்று ஈட்டிய விடுப்பாகவும்-24, 25-7-88 ஆகிய இரண்டு நாட்களையும் பணிக்காலம் ஆகவும் பாவித்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு விட்டன என்பதையும் மகிழ்ச்சியோடு இங்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது தெரியாமலேயே அப்பன் அவர்கள் தன்னுடைய முறையீட்டில் அதனையும் சேர்த்துக் கொடுத்திருக்கிறார். ஆனால் அந்த முறையீடு வருவதற்கு முன்பே இந்த ஆணைகள் பிறப்பிக்கப் பட்டுவிட்டன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் போராட்டத்திலே கலந்து கொண்ட வேளாண்மைத் துறையைச் சேர்ந்த 11 அலுவலர்கள் சென்னையிலிருந்து மாற்றம் செய்யப் பட்டு விட்டார்கள் என்று இன்னொரு முறையீடு.

இந்த முறையீடு குறித்து-ஏற்கனவே அரசு அலுவலர்கள் போராட்டத்தின்போது பழி வாங்

கும் நடவடிக்கையாக மாறுதல் செய்யப்பட்ட வர்கள் அவர்கள் அத்துறையிலே முன் பணி புரிந்த இடங்களில் மூன்றாண்டுகள் பணி முடிக் கப்பட்டிருந்தால், அவர்களை இனிவரும் கால இடங்களில் மீண்டும் மாறுதல் செய்யவும், பழைய இடத்திலேயே நியமனம் செய்யலாம் எனவும், இதுகுறித்து மனம் ஒத்த மாறுதலையும் அனுமதிக்க லாம் எனவும் ஆணைகள் பிறப்பிக்கப்பட் டுள்ளன.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சில கோரிக்கைகள் என்ற வகையில்

பி. நாகமணி, இளநிலை உதவியாளர், (சார்நிலைக் கருவூலம்) கொடைக்கானல்.

இவர் 1980-ஆம் ஆண்டில் வேலை நிறுத்தத் தில் பங்கு கொண்டதன் காரணமாக பணி நீக்கம் செய்யப்பட்டவர்.

இவர்மீது என்ன குற்றச்சாட்டு தெரியுமா? வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டதோடு- அலுவலக கோப்புகளிலிருந்து முக்கியமான விஷ யங்களை மற்றவர்களுக்குத் தந்ததாகவும்-பொய் யான பயணப்பட்டியல் தயாரித்து பணம் பெற்ற தாகவும்-அலுவலக நேரத்தில், அலுவலகத்தில் சிகரெட் பிடித்ததாகவும்-முன் அனுமதியின்றி அலுவலகத்திற்கு வராமல் இருந்ததாகவும் கூறி பணி நீக்கம் செய்யப்பட்டிருந்தது.

இவரது மேல் முறையீடு நிர்வாக தீர்ப்பாயத் தில் நிலுவையில் உள்ளது. இவரைப் பற்றி அப்பன் அவர்கள் நேற்று முன்தினம் காலையில் அழைப்பிதழுடன் குறிப்பையும் தந்தார்.

உடனடியாக முதலமைச்சர் அலுவலகத்தி லிருந்து பாதிக்கப்பட்ட அந்த அரசு அலுவல ரோடு தொடர்பு கொண்டு-அவரிடம் அரசே ஒரு மனு தரும்படி கேட்டுப் பெற்று-அவரை மீண்டும் பணியிலே சேர்ப்பதற்கான உத்தரவை நிதித் துறைக்கு விடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் அப்பன் அவர்கள்-சி. துளசி என் பவர் மீதும், வணிகவரித் துறையைச் சேர்ந்த சுதந்திரம் என்பவர் மீதும் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை பற்றி தெரிவித்திருக்கிறார்.

சுதந்திரம் அவர்கள் போதிய அவகாசம் இருந் தும் இதுநாள்வரை ஆய்வு மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று அறிகின்றேன்.

இருந்தாலும் இவர்கள் இருவரும் அரசுக்கு முறைப்படி மனு செய்து கொள்வார்களே யானால் - அவர்களின் முறையீடுகள் மனித நேயத்துடன் இந்த அரசால் பரிசீலிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அகில இந்திய அளவில் நடைபெற்ற ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தில் பங்கேற்றதற்காக சென்னை சீர்திருத்தப்பள்ளி அலுவலக உதவி யாளர் சம்பத் என்பவரை தஞ்சைக்கு மாற்றி விட்டதாக ஒரு குறைபாடு கூறப்பட்டுள்ளது.

இது உண்மையாக இருக்குமேயானால் இது குறித்து துறை உடனடியாக விசாரித்து நியாயம் வழங்கும் என்பதையும் தெரிவித்துக் கொள் கிறேன்.

1980-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் கரு வூலத்துறையில் நடந்த 17 நாள் வேலை நிறுத் தத்தை ஊதியத்துடன் கூடிய விடுப்புக் காலமாக அறிவிக்க வேண்டுமென்று ஒரு கோரிக்கை.

1980-ஆம் ஆண்டு கருவூலத் துறையில் நடந்த வேலை நிறுத்த நாட்களை — Leave to which eligible - என்ற முறையில் கருதப்படும். அதைப்போலவே தஞ்சை மாவட்டத்தில் 1982-இல் கருவூலத் துறையில் நடந்த 33 நாட்கள் வேலை நிறுத்தத்தை யும் Leave to which eligible என்ற முறையில் கருதப் படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்து இதன் மூலம் அவர்கள் ஊதியம் பெறக்கூடிய சூழ்நிலை ஏற்படும் என்பதையும் தெரிவித்துக் கொள் கிறேன்.

மேலும் நான் ஐந்தாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகள் வெளிவந்தவுடன் காலதாமத மில்லாமல் தேர்தல் நேரத்தில் தி.மு. கழகத்தின் தேர்தல் அறிக்கையில் உறுதியளித்தவாறு மத்திய அரசு அலுவலாளர்களின் ஊதியத்திற்குச் சமமாக மாநில அரசினுடைய ஊழியர்களுக்கும் வழங்கப் படுமென்பதைக் கொள்கை அளவில் ஏற்றுக் கொள்கிறோம், ஊதியக்குழுவினுடைய பரிந் துரைகள் வந்த பிறகு அது அறிவிக்கப்படுமென்று சொன்னதற்கேற்ப அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நான் அதனை மீண்டும் நினைவுபடுத்தத் தேவையில்லை. என்னதான் நினைவுபடுத்தினா லும் உங்களுடைய உள்ளத்திலே உறுத்திக்கொண் டிருக்கிற குறையை இவைகளை நினைவுபடுத்து வதன் மூலமாக இப்பொழுது அகற்றிவிட முடியா தென்பது எனக்கு மிக நன்றாகத் தெரியும். இருந் தாலும் நினைவு படுத்த விரும்புகிறேன்.

**அலுவலக உதவியாளர்கள் மொத்தம் 1,41,577 பேர்**

| | |
|---|---|
| தமிழ்நாடு அரசின் பழைய ஊதிய விகிதம் | 450 - 720 |
| மத்திய அரசு | 750- 940 |
| தமிழ்நாடு புதிய விகிதம் என்றுதான் அறிவித்திருக்கின்றோம் | 750 - 940 |
| ஆந்திரா | 740 - 1150 |
| கர்நாடகம் | 780 - 1040 |
| மகாராஷ்டிரா, குஜராத், அரியானா (தமிழ்நாட்டைப் போல) | 750 - 940 |
| ராஜஸ்தான் | 700 - 865 |
| மத்தியப் பிரதேசம் | 725 - 900 |

கேரளாவில் ஊதியக்குழு நியமிக்கப்பட்டு இன்னும் ஊதியம் திருத்தப்படவில்லை. எனவே அந்தப் புள்ளி விவரத்தை இங்கே சொல்லத் தேவையில்லை.

**சந்தோஷம் வரும்போது; அதைப்பற்றிச் சிந்தனை செய்யாதே! அது போகிறபோது அதைப்பற்றிச் சிந்தனை செய்.**

**—அரிஸ்டாட்டில்**

**இளநிலை உதவியாளர்கள் 43,568 பேர்**

| | |
|---|---|
| தமிழக அரசு பழைய ஊதிய விகிதம் | 610 - 1075 |
| மத்திய அரசு ஊதியம் | 950 - 1500 |
| தமிழ்நாடு புதிய ஊதியம் | 975 - 1500 |
| ஆந்திரா | 910 - 1625 |
| கர்நாடகம் | 960 - 1760 |
| மகாராஷ்டிரா, குஜராத், அரியானா (மத்திய அரசைப் போல் அவர்கள் தருகிறார்கள்) | 950 - 1500 |
| ஆனால் தமிழ்நாட்டில் | 975 முதல் 1500 வரை |
| இராஜஸ்தான் | 880 - 1680 |
| மத்தியப் பிரதேசம் | 870 - 1420 |

**உதவியாளர்கள் 25,811 பேர்**

| | |
|---|---|
| தமிழ்நாடு பழைய விகிதம் | 705 - 1230 |
| மத்திய அரசு | 1200 - 2040 |
| தமிழ்நாடு புதிய விகிதம் | 1200 - 2040 |
| ஆந்திரா | 1100 - 2050 |
| கர்நாடகா | 1190 - 2200 |
| மகாராஷ்டிரா, குஜராத், அரியானா | 1200 - 2040 |
| இராஜஸ்தான் | 1120 - 2050 |
| மத்திய பிரதேசம் | 925 - 1650 |

**செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் 1,72,612 பேர்**

| | |
|---|---|
| தமிழ்நாடு பழைய ஊதிய விகிதம் | 610 - 1075 |
| மத்திய அரசு | 1200 - 2040 |
| தமிழ்நாடு புதிய விகிதம் | 1200 - 2040 |
| ஆந்திரா | 1010 - 1800 |
| கர்நாடகம் | 1040 - 1900 |
| மகாராஷ்டிரா, குஜராத், அரியானா | 1200 - 2040 |
| இராஜஸ்தான் | 880 - 1680 |
| மத்தியப் பிரதேசம் | 975 - 1650 |

**கிரேடு 1 - கான்ஸ்டபிள்ஸ் 5,702 பேர்**

| | |
|---|---|
| தமிழ்நாடு பழைய விகிதம் | 555 - 970 |
| தமிழ்நாடு புதிய விகிதம் | 950 - 1500 |
| ஆந்திரா | 810 - 1420 |
| கர்நாடகம் | 960 - 1760 |
| மகாராஷ்டிரா, குஜராத், அரியானா | 825 - 1280 |

நான் இவைகளையெல்லாம் குறிப்பிடுவதற் குக் காரணம் உங்களுடைய ஒருசில பிரிவுகளில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளையும் அல்லது நண் பர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல இதிலே இளநிலையிலே உள்ளவர்களுக்குத்தான் - அதிக ஆதாயம், முதுநிலையிலே உள்ளவர்களுக்கு, அதிக ஆண்டுகள் சர்வீஸ் செய்தவர்களுக்கு, அதிக ஆதாயம் இல்லை என்கிற உங்களுடைய குறை பாட்டை நான் உணராதவன் அல்ல.

வீட்டு வாடகைப்படி

நகர ஈட்டுப்படி - ஆகிய இரண்டிலும் அப் படியே மாற்றங்கள் செய்யப்படவில்லை.

புதிய விகிதங்களுக்கு ஏற்ப இந்த இரண்டு படிகளிலும் கிடைக்கக் கூடிய பலன்களில் குறைவு ஏற்படாத வண்ணம் 'ஸ்லாப்ஸ்' மாற்றி அமைக் கப்பட்டுள்ளது.

ஒரு சிலர் இதிலே குறைவு ஏற்படுகிறது என்று தெரிவித்திருக்கிறீர்கள். அவர்கள் இந்தப்படிகளை கணக்கிடும் முறையை சரியாக புரிந்து கொள்ள வில்லையோ என்று அரசுக் கருத்து இருக்கின்றது.

எனினும் இந்தப் படிகளிலே ஓரளவிற்கு குறை ஏற்படாமல் இருக்க விளக்கமான ஒரு சுற்றறிக்கை நிதித்துறையின் சார்பில் அனுப்பப்படும்.

மேலும் இந்த 'ஸ்லாப்ஸ்' கணக்கிடும்போது சிறப்பு ஊதியத்தையும் கணக்கில் எடுத்துக் கொள் ளப்படும்.

எனவே படிகளில் ஓரளவிற்கு குறைவு ஏற் படாது என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*(9.7.89 அன்று சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநாட்டில் கலந்து கொண்டு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து)*

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களும், மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களும் 5.7.89 அன்று மதுரை காமராசர் பல்கலைக் கழக 'முப்பெரும் விழா' நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்கள். அப்போது அறிஞர்கள் ச. தண்டபாணி தேசிகர், அருணைவேல் முதலியார், அ.ச. ஞானசம்பந்தன், க. வெள்ளைவாரணன் ஆகியோருக்குப் பொற்பதக்கங்கள் வழங்கப்பட்டன.



# தமிழினத்தின் ஒற்றுமையே தகுந்த பரிசாக அமையும்!

## மாண்புமிகு முதல்வர் கலைஞர்

ஈழத் தமிழ் மக்களுடைய அன்பைப் பெற்றவரும், அதற் கொப்ப தமிழ்நாட்டு மக்களுடைய பேரன்பிற்கு உரியவராகத் திகழ்ந்தவரும், தமிழ் ஈழத்தின் தந்தை செல்வா அவர்களுடைய அருமைச் சீடராக விளங்கியவரும், நம்மோடு அன்பொழுகப் பேசி நல்ல பண்பாளராகப் பழகியவருமான அமிர்தலிங்கம் அவர்கள் கொலையுண்டார். அவருடைய ரத்தத்தோடு அவருக்கு அருகாமையிலேயே இருந்த அருமை நண்பர் யோகேஸ்வரன் அவர்களின் ரத்தமும் கலந்து, அவர்கள் சுடப்பட்ட அறையிலே நிறைந்திருந்த காட்சியை ஏடுகளிலே நாம் படமாகப் பார்க்கும் போது இருதயம் விம்மிற்று.

தமிழீழ ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவர் சிவ சிதம்பரம் தப்பிப் பிழைத்திருக்கிறார். எனினும், அவருடைய உயிருக்கும் குறி வைக்கப்பட்ட நிலையிலேதான் அவருடைய வாழ்க்கை ஏடு ஒவ்வொரு நாளும் புரட்டப்பட்டுக் கொண்டிருக் கின்றது. அதைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் உள்ள மக்களுக்கு நன்கு அறிமுகமான வீர வாலிபர்களில் ஒருவராக இருந்த உமா என்றும் முகுந்தன் என்றும் புனைப் பெயரிலே அழைக்கப் பட்ட உமாமகேஸ்வரன் தீர்த்துக்கட்டப்பட்டுவிட்டார்.

ஏற்கெனவே, மதுரை மாநகரிலே அகில இந்தியத் தலைவர் களை எல்லாம் அழைத்து இலங்கைப் பிரச்சினையிலே அலட் சியமாக இருக்கின்ற இந்தியாவின் மத்தியப் பேரரசுக்கு கவனம் ஊட்டவும் - மத்திய அரசினுடைய எண்ணத்தை இலங்கைத் தமிழர்பால் திருப்பவும் பெரிய அளவிலே 'டெசோ' இயக்கத் தின் சார்பாக ஒரு மாநாடு நடத்தப்பட்டபோது - அந்த மாநாட் டினுடைய எழுச்சியை - அது தர இருக்கின்ற வெற்றியைக் கனவு கண்டு கொண்டிருக்கும்போதே 'டெலோ' இயக்கத்தின் தலைவர் - நான் என்னுடைய அருமைத் தம்பியாக கருதிப் பழகிய சபாரத்தினம் போர்க்களத்திற்குச் சென்று அங்கே பகைவர்களால் அல்ல - நம்மவர்களாலேயே கொல்லப்பட்டார்.

இலங்கையிலே உள்ள தமிழீழ மக்களுடைய நல்வாழ்வு ஒன்றுதான் நமது குறிக்கோள். இதிலே எந்தப் போராளிகளின் இயக்கத்தின் பக்கம் நாம் இருக்கிறோம் என்பதைவிட எந்தப் போராளி இயக்கம் நம்மை நாடி வருகின்றது என்பதைவிட, எந்தப் போராளி இயக்கம் நாம் தேடிப் போனாலும் கண்ணில் படாமல் ஓடிப் போகின்றது என்பதைவிட-எல்லாப் போராளி இயக்கங்களுமே அவர்களிடையே ஒற்றுமை இல்லாவிட்டாலுங் கூட உரிமைக்காக, விடுதலை வேட்கைக்காகப் போர் முனையில் நிற்கின்ற காரணத்தால் அவர்கள்பால் தமிழ்நாட்டு மக்களுடைய அன்பும் ஆதரவும் நிரந்தரமாக இருக்க வேண்டும், அதற்குச் சிறு ஊனமும் ஏற்பட தி.மு. கழகம் காரணமாக இருத்தல் ஆகாது என்ற அழுத்தந்திருத்தமான கருத்தை நாங்கள் அனைவரும் சிந்தித்துச் செயல்படுத்துகின்ற வகையிலேதான் இத்தனை ஆண்டுக் காலமும் நடத்து வருகிறோம் என்பதைத் தமிழ்நாட் டிலே உள்ள அனைவரும்-அரசியல் காழ்ப்புணர்வின் காரண மாக சிலர் மறுத்தாலும்கூட நன்றாகவே உணர்வீர்கள்.

அமிர்தலிங்கம் அவர்களும், யோகேஸ்வரன் அவர்களும் சுட்டுக் கொல்லப்பட்டபோது, நான் தெரிவித்த இரங்கல் செய்தியிலேகூட-எல்லோரும் சேர்ந்து இலங்கைப் பிரச்னைக்கு ஒரு முடிவு காணவேண்டுமென்று குறிப்பிட்டுவிட்டு, இதிலே இந்திய அரசு தன்னுடைய பொறுப்பைத் தட்டிக் கழித்துவிட முடியாது என்று நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன்.

அவர்கள் ஒற்றுமையாக இருக்கவேண்டும், போராளிக் குழுக்களிடத்திலே புகைச்சல் கூடாது, அவர்கள் ஆயுதங்களை ஏந்தித்தான் தீரவேண்டும் என்கின்ற ஒரு தவிர்க்க முடியாத கட்டாயத்திற்கு வந்திருந்தாலும்கூட, அது அவர்கள் விரும்பு கின்ற விடுதலையைப் பெற்றுத் தருவதற்காகப் பயன்பட வேண்டுமேயல்லாமல் ஒருவரையொருவர் சுட்டுச் சாய்த்துக் கொள்ள, அழித்துக் கொள்ளப் பயன்படக் கூடாது என்ற கருத்து எல்லாத் தீர்மானங்களிலும்-கழகம் நிறைவேற்றிய செயற்குழு, பொதுக்குழு, நிர்வாகக்குழு ஆகியவற்றின் எந்தத் தீர்மானமாக இருந்தாலும், அந்தத் தீர்மானங்களில் மைய இழையாக ஓடுவதை நீங்கள் காண முடியும். அந்தக் கருத்தைத் தான் இன்றைய இரங்கல் கூட்டத்திலும் தி.மு.கழகத்தின் சார் பாக நான் எடுத்துவைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இவ்வளவு காலம் அவர்களுக்காக-இலங்கைத் தமிழர்களுக் காக-தமிழீழத்து மக்களுக்காக எத்தனையோ போராட்டங்களை நடத்தி-எத்தனையோ தியாகங்களைச் செய்து-எத்தனையோ பேர் தீக்குளித்து-தி.மு. கழகம் அரும்பணியாற்றியிருந்தும்கூட, இன்னமும் என்னதான் உதைத்தாலும், உதைத்த காலுக்கு முத்தம்தான். ஏனென்றால் உதைக்கின்ற கால் எங்கள் குழந்தை யின் கால் என்கின்ற அந்த அளவிலே கருதுகின்ற இந்த இயக்கத் தினுடைய அழைப்பை-இந்த இயக்கத்தின் கருத்தை ஏற்றுக் கொள்வதற்குப் போராளி இயக்கத்தின் தலைவர்கள் தயாராக இல்லை. அதற்கு எந்தப் பதிலும் இல்லை

எனவேதான், கழகத்தின் பொதுக் குழுவிலே நாங்கள் நிறைவேற்றிய தீர்மானத்தில் சூசகமாக ஒரு கருத்தை வெளியிட் டிருந்தோம்-அவர்களோடு தொடர்பு கொள்ள முடியவில்லை என்று. அந்த அளவிலே வெளியிடப்பட்ட அந்தக் கருத்தின் பின்னணி என்னவென்றால் பிரதமர் ராஜீவ் அவர்களோடு நான் பேசி எடுத்த சில முடிவுகளை அவர்களுக்குத் தெரிவிப்பதற்கான சூழ்நிலையே உருவாகவில்லை. நாம் தொடர்பு கொள்ள முடியாத காரணத்தால் அந்தச் சூழ்நிலையே ஏற்படவில்லை.

விடுதலைப் போராட்டம் வெற்றி பெறவேண்டும் என் பதிலே இருவேறு விதமான கருத்துகளுக்கு இடமில்லாத நெஞ்சம் படைத்த அமிர்தலிங்கம்-அவரைப் போன்றே இதயம் படைத்த யோகேஸ்வரன்-அவரைப் போல, ஆனால் தீவிர வாதமாக அதைத் சிந்தித்த உமாமகேஸ்வரன் இவர்கள் எல்லாம் இன்றைக்கு மறைந்திருக்கிறார்கள் என்றால், அவர்களுடைய ரத்தத்தின் சாட்சியாக நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய உறுதி -இலங்கையிலே இருக்கின்ற தமிழீழப் போராளிகள் கடைபிடிக்க வேண்டிய நிலை என்னவென்றால், இனிமேலாவது, இந்த உயிர்ப் பலிகளுக்குப் பிறகாவது ஒற்றுமையோடு செயல் படுவோம், ஒன்றுபட்டு இருப்போம் என்று தமிழ் இனம் உறுதி எடுக்க வேண்டும். குறிப்பாகத் தமிழீழத்திலே உள்ள போராளிகள் உறுதி எடுக்க வேண்டும்.

அந்த வகையிலே இந்த மூன்று பேருடைய சாவு பயன்பட் டால் அதுவே அவர்கள் உலகத்திலே வாழ்ந்ததற்கு அவர்கள் பெற்ற பரிசாக இருக்கும் என்று கூறி என்னுடைய ஆழ்ந்த இரங்கலை அவர்களுடைய குடும்பத்தாருக்கெல்லாம் தெரி வித்துக் கொள்கிறேன்.

(19-7-89 அன்று சென்னையில் நடந்த இரங்கல் கூட்டத்தில் ஆற்றிய உரையிலிருந்து)

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

/ அதி / நவீன / பாலியெஸ்டர் / வகைகள் /



உங்கள் மனதைக் கவர்ந்தவை மலர்கள்.
அவைகளின் அற்புத வண்ண ஜாலங்களை
உங்களுக்கு கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது,
மிக நவீனமாக அழகு மிளிரும்
பாலியெஸ்டர் புடவை வகைகளில்!

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் —
உங்கள் இனிய நேரங்களில்!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி
இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங்
• பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.


DPR/1766/MS88/HTA


பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)PP-












கோவை பாரதியார் பல்கலைக் கழகத்தில் மகாகவி பாரதியாரின் திருவுருவச் சிலையை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 18.7.89 அன்று திறந்து வைத்தார்.





மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் கோவையில் சேரன் போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கு ரூ. 5 கோடி செலவிலான 568 குடியிருப்புகளை 18.7.89 அன்று திறந்து வைத்தார்.

## இந்த இதழில்

22 ஆக 1989


| | |
|---|---|
| விடுதலை நாள் பரிசு (மாண்புமிகு முதல்வர் செய்தி) | ... 2 |
| சக்தி பிறக்குது (கவிதை) | ... 6 |
| நிலவளம் நீர்வளம் பெருகிட | ... 7 |
| முதல்வர் தொடங்கி வைத்த நலத்திட்டங்கள் | ... 9 |
| எங்கும் அவன் (பேரறிஞர் அண்ணாவின் சிறுகதை) | ... 12 |
| கண்டி நாயக்க மன்னன் கல்லறை | ... 15 |
| மரம் வளர்ப்போம் வளம் பெறுவோம் (கவிதை) | ... 17 |
| மரம் வளர்க்க அரசு உதவிகள் | ... 18 |
| ஆவணப் பாதுகாப்பு— ஒரு சவால் | ... 20 |
| மஞ்சள் மகிமை | ... 23 |
| முத்தான முத்தல்லவோ! | ... 24 |
| பண்டைத் தமிழ் மக்களின் கடல் வாணிகம் | ... 27 |
| பெரியார் மாவட்டத்தில் பல்துறைப் பணி விளக்க முகாம் | ... 33 |
| மாவட்டச் செய்திகள் | ... 35 |
| வளரும் வேளாண்மை | ... 38 |
| கடலூர் சிப்காட் தொழில் வளாகம் தொடக்க விழா | ... 41 |
| நலிவுற்றோர் நலம் பெற்றிட | ... 42 |
| கொல்லிமலையில் கோலாகல விழா | ... 43 |



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2020

சுக்ல - ஆடி 32

மலர்: 20 இதழ்: 4

16-8-1989




# வீர வணக்கம் செலுத்துவோம்!

## -பேரறிஞர் அண்ணா

இந்தியத் துணைக் கண்டத்தில் 200 ஆண்டுகளுக்கு மேலாகப் பறந்து கொண்டிருந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியக் கொடி, இந்தியா, பாகிஸ்தான் இரு அரச வட்டாரங்களிலிருந்தும் கீழே இறங்குவதுடன், இரு இடங்களிலும் சுதந்திரக் கொடிகள் பறக்க விடப்படுகின்றன.

அந்நிய ஆட்சி ஒழிந்து, புதுச் சுதந்திர ஆட்சிகள் ஆரம்பமாகும் இந்த நாளில், அந்நியர் ஆட்சியின் விளைவுகளாக இருந்து வரும் தொல்லைகளையும், அல்லல்களையும் நீக்கி, மக்களுக்கு நலன் ஏற்படும்படியான ஆட்சி நடத்தும்படி கேட்கும் உரிமையும், பலமும், வசதியும் மக்களுக்குத் தானாகவே பிறக்கின்றன.

நாட்டு விடுதலைக்காகச் சிறையில் வாடியவர்கள், தீவுகளுக்குத் துரத்தப்பட்டவர்கள், மண்டை பிளக்கப்பட்டவர்கள், குடும்பச் சுகத்தை இழந்தவர்கள், தடியடியால் இறந்த குமரன், தூக்குமேடை ஏறிய பகத்சிங், சொத்தைப் பறிகொடுத்த சிதம்பரம் பிள்ளை போன்ற வீரத் தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்த வேண்டும். அவர்கள் சிந்திய இரத்தமும், கண்ணீரும் நமது வீர வணக்கத்திற்கு உரியன. அவர்கள் நமக்கு வழிகாட்டிகள்.

பெரியார் காங்கிரசில் தலைமை வகித்து பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்து கஷ்ட நஷ்டமடைந்திருக்கிறார். ஆகவே, விடுதலை விழாவைக் கொண்டாடப்பாத்யதை கொண்டவர்களிலே அவர் மிக முக்கியமானவர்.

நியாயத்தை மட்டுமே கவனித்து எந்த நாட்டிலும் ஆட்சியாளர்கள் நடப்பதில்லை. நியாயத்தை நிலை நாட்ட, பலம் துணையாக இருக்கிறது என்றால் மட்டுமே காரியம் பலிக்கும்.

ஒரு நாட்டை மற்றொரு நாடு ஆளுவது அக்ரமம்-எந்த நாடும் சுயாட்சி கேட்பது நியாயம். இந்த நியாயத்தை எடுத்துக் கூறிய உடனே காங்கிரசை மதித்து சுயராஜ்யம் கொடுக்க, எந்தக் கிரிப்சும், மவுண்ட்பேட்டனும் முன்வரவில்லை. ஏனெனில் பேசும் சர்ச்சில்களாகத்தான் சகல பிரிட்டிஷாரும் இருந்தனர். நியாயத்தின் பக்கபலமாகத் தியாகம், கிளர்ச்சி, பணபலம், பத்திரிகை பலம், இவ்வளவுக்கும் மேலாக உலகச் சூழ்நிலையில் மாறுதல், பிரிட்டிஷ் பலச் சரிவு என்பவை ஏற்பட்டதால் தான் மந்திரிகள் பறந்து வந்தனர், நியாயம் வழங்க!

—10.8.1947

# பரிசு

**மாண்புமிகு முதல்வர் கலைஞர்**

இந்தியப் பெருநாடு விடுதலை பெற்ற இந்தத் திருநாளில் என் அன்பு வாழ்த்துக்களைத் தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரிவித்துக் கொண்டு, வீர சுதந்திரம் வேண்டி நின்று விடுதலைப் போரில் வீழ்ந்து பட்ட மாவீரர்களுக்கும் தியாகச் செம்மல்களுக்கும் வணக்கத்தைச் செலுத்துகிறேன்.

மண்மீட்க எழுந்த போராட்டத்தின் முடிவில் வெற்றிக் களிப்புடன் விண் முட்டப் பறந்து பட்டொளி வீசும் இந்திய தேசீயக் கொடியை, மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட மாநிலத்தின் முதலமைச்சர்கள் தான் இந்நாளில் ஏற்றி வைக்க வேண்டுமென்று தமிழக அரசு எழுப்பிய உரிமைக் குரல் புறக்கணிக்கப்படாமல் ஒப்புதல் தந்த மத்திய அரசுக்கும் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையாருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"உழவுக்குக் கை கொடுப்போம் — உரிமைக்குக் குரல் கொடுப்போம்" என்ற நமது உறுதிப்பாட்டுக்கு உணர்த் திறத்துக்குக் கிடைத்த வெகுமானப் பரிசு" இதுவென எண்ணி மகிழ்கிறேன்.

அண்ணல் காந்தி அடிகளும், ஆசிய ஜோதி நேருவும், திலகரும், தேசபந்துவும், தென்னகச் சிதம்பரனாரும், தியாகச் செம்மல் பெரியவரும், மூதறிஞர் ராஜாஜியும், வீரர் நேதாஜியும் — எண்ணற்ற இந்தியப் பெருவீரர்களும் சிந்திய ரத்தத்தில் பூத்த புரட்சி மலர் தான் இந்நாட்டின் சுதந்திரம்.

அந்த மலரின் மணம், மாநிலங்களின் பலவண்ண வடிவாக, தென்றலின் தோள் மீது ஏறி, வசதி படைத்தோர்க்கு மட்டுமே கிட்டும் என்ற நிலை மாறி, ஏழை வீட்டுச் சாளரங்களிலும் நுழைந்திடும் வண்ணம் செய்திட வேண்டும்.

இதைத்தான் அறிஞர் அண்ணா அவர்கள், 1947 ஆகஸ்ட் 15 - அந்நிய ஆதிக்கத் துக்கு விடைகொடுத்த திருநாள் என்றும், ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படும் ஆகஸ்ட் 15 - சுதந்திரத் தின் பயன்களைக் காக்கப் பாடு படும் நாள் என்றும் குறிப்பிட்டார்கள்.

சுதந்திர முழக்கம் செய்த தியாக சீலர்கள் வெறும் இந்த அரசு மாற்றத்தைக் கருதவில்லை — மதித்துத் தவறவில்லை.

வெள்ளையனை எதிர்த்து முழங்கிய அவீரத்த வீரபாண்டியக் கட்டபொம்மனின் அழிந்து போன பாஞ்சாலங்குறிச்சியை இதோ - மீண்டும் உருவாக்கிவிட்டோம்; அந்தத் தீரனின் நாமம் என்றும் மறையாதிருக்கும் வகையில்!

தில்லையாடி வள்ளியம்மைக்கு நினைவுச் சின்னம் எழுப்பியிருக்கிறோம்.

சிதம்பரனார் புகழ்பாட, அவர் சிறையில் இழுத்த செக்கைக் கண்டு பிடித்துச் சென்னை மாநகரில் காட்சிக்கு வைத்திருக்கிறோம்.

கவிதை வழியில் விடுதலைப் போர்க் கருவிகளைத் தயாரித்துத் தொடுத்த கவியரசன் பாரதிக்குத் திட்டமென்ன; எட்டயபுரத்தில் அவர் பிறந்த வீட்டை நினைவுச் சின்னமாக்கியிருக்கிறோம்.

மூதறிஞர் ராஜாஜிக்கு நாம் எழுப்பும் நினைவாலயம் முழுதும் தயாராகிவிட்டது.

ஆயிரத்துக்கு மேற்பட்ட தியாகிகளுக்குத் திங்கள் தோறும் மானியம் — தமிழக அரசின் சார்பில் விடுதலைப் பட்டயம் — இப்படிக் கடமை தவறாது — அந்நாளில் சுதந்திரப் போர்க் களம் கண்டவர்க்கு வழங்கிடும் அன்புக் காணிக்கையை இந்த அரசு திட்டமிட்டுத் தயங்காமல் வழங்கி வருகிறது.

வெள்ளையர் ஆதிக்கத்தை வெளியேற்றியது மட்டும் சுதந்திரத்தின் நோக்கமல்லவே! மக்களுக்குச் சுகவாழ்வு அளித்திடத் தொண்டாற்றி அதில் வெற்றி காண்பதும் முக்கியக் குறிக்கோளன்றோ!

ஒரு நாட்டுக் குடிமகனின் இன்றியமையாத் தேவைகளான உணவு, உடை, உறையுள் — இவைகளை நிறைவு செய்வதில் நாம் முழு வெற்றி பெற்று விட்டோமா? இல்லை என்று தானே பதில் எழுந்து தோன்றுகிறது மனத்துக்கு!

தமிழகத்தைப் பொறுத்த வரையில் — நமது அதிகாரம், நமது வசதி வாய்ப்புக்கேற்ற வாறு இயன்றவரையில் ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண முயன்று வருகிறோம்.

அடித்தளத்து மக்கள், தாழ்த்தப் பட்டமக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், ஏழை எளியோர் மேன்மை பெற நமது திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

[illegible]

[illegible]

[illegible]



## சுதந்திரத்தின் உயிர்நாடி


- பொருளாதாரச் சமத்துவம்தான் சுதந்திரத்தின் உயிர்நாடி. முதலாளிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் இடையே உள்ள நிரந்தரப் பூசலை அகற்றுவதுதான் பொருளாதாரச் சமத்துவத்திற்கான ஒரே வழி.
- சுயராஜ்யப் போராட்டம் என்பது வெறும் அரசியல் துறையில் மட்டும் விழிப்பு ஏற்படுவது அல்ல. சுற்றியுள்ள எல்லாத் துறைகளிலும், சமூகம், கல்வி, ஒழுக்கம், பொருளாதாரம், அரசியல் ஆகிய துறைகள் அனைத்திலுமே விழிப்பு ஏற்படுத்தும் போராட்டத்தையே குறிப்பதாகும்.
- தூய்மையான வழிகளின் மூலம் பெற்ற அதே சுதந்திரத்தை, அதே தூய்மையான, நேர்மையான வழிகளின் மூலம் காப்பாற்றி வர வேண்டும்.

[illegible]

சென்னைக் கோட்டைக் கொத்தளத்தில் (15-8-1974) விடுதலை நாள் விழாவில் முதன் முதலாக நாட்டுக் கொடியை ஏற்றி வைத்து மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை.

# சக்தி பிறக்குது...

சுரபி



கிழக்கு வெளுக்குது பாருங்கடி - எங்கள்
கீர்த்தி முளைக்குது பாருங்கடி
சழக்குகள் யாவும் தொலைந்திடவே - ஒரு
சக்தி பிறக்குது பாருங்கடி

குண்டு பீரங்கிகள் தோற்றதடி - பொல்லாக்
குள்ளக் குயுக்திகள் வீழ்ந்ததடி
சண்டப் பிரசண்ட பேரி கொட்டி - எங்கள்
சத்தியம் வென்றது பாருங்கடி

ஆட்டிப் படைத்திட்ட அந்நியனும் - இன்று
அள்ளிச் சுருட்டிக்கொண் டோடுகிறான்
வேட்டு கிளம்புது கோட்டையிலே - நாலு
வேதம் முழங்குது ராட்டையிலே

அவசரச் சட்டத்தை வீசியவன் - இன்று
அன்புத் தம்பிப் பேசுகிறான்
குவலய மெல்லாம் திகைத்திடவே - உடன்
கூடியிருந் தர சாளுகிறான்

லத்தி பிடித்தெம்மை ஆண்ட கரம் - இன்று
லக்கான் பிடித்திட வேண்டுதடி
கொத்திக் கொடியைப் பிடுங்கிய கை - இன்று
கும்பிட்டு நின்று பணியுதடி

மாயவன் காந்தியின் ஜாலமடி - அது
வானுற ஓங்கிப் பறக்குதடி
தூயவன் உள்ளம் துணிந்துவிட்டால் -கொல்லத்
தோன்றும் அணுவும் பணியுமடி

ஐய வடிநிழல் வீற்றிருந்தே — அவன்
ஆசை நிறைவேறச் செய்திடுவோம்
கையிற் கிடைத்த கனியதனை - உண்டு
கற்ப காலம்மட்டும் வாழ்ந்திடுவோம்.

சாந்தியென் றென்றும் முழங்கிடும் மந்திரம்
சகல திசையும் பரப்பிடுவோம்
காந்த மலை யெங்கள் காந்தி வதனத்தில்
காந்தி நிலைபெறச் செய்திடுவோம்!

-'சக்தி பிறக்குது' என்னும்
நூலிலிருந்து

# நிலவளம் நீர்வளம் பெருகிட...

சென்னை-600 008.
127078

## — தமிழ்நாடு பாசன மேம்பாடு - நீர்வள நிலைக்குழு தொடக்க விழாவில் மாண்புமிகு முதல்வர்

தமிழ்நாட்டின் பாசனம் பண்டைய தமிழ் மன்னர்கள் காலத்திலேயே முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வளர்ச்சியடைந்து வந்து உள்ளது. நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்னரே, பெரியாறு, கோதையாறு, மேட்டூர் போன்ற நீர்த்தேக்கங்கள் கட்டப் பட்டன. நாடு சுதந்திரம் அடைந்த பின்னர், ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் 49 பெரிய மற்றும் நடுத்தர நீர்த்தேக்கங்கள் அமைக்கப்பட்டன. இது தவிர, பல சிறு பாசனத்திட்டங்களும் நிறைவேற்றப்பட்டு உள்ளன. இவைமூலம், தற்போது பயிரிடப் படும் பரப்பில், சுமார் 52 சதவீதம் பாசன வசதி பெறுகிறது. மீதமுள்ள 48 சதவீதம் மழையையே நம்பியுள்ளது.

தமிழ்நாட்டின் நீர்வளம் மிகக்குறை வானதே. இந்திய நாட்டிலேயே இராஜஸ் தானுக்கு அடுத்தபடியாகத் தமிழ்நாட்டின் நீர் வளம் மிகக்குறைந்த அளவானது ஆகும். இதிலும், சுமார் 95 சதவீதம் நாம் பயன் படுத்திவிட்டோம். பாசன வசதிகளை மேலும் பெருக்குவதற்கு இரு வழிகளே உள்ளன. ஒன்று அண்டை மாநிலங்களி லுள்ள உபரி நீரைக் கேட்டுப் பெறுவது, மற்றொன்று கிடைக்கும் நீரைச் சிக்கனப் படுத்தி பல முன்னேற்ற வழிகளைக் கடைப் பிடித்து உபயோகத்தை உச்ச நிலைக்குக் கொண்டு வருவது.

கேரள மாநில அரசுக்கும், தமிழ்நாடு அரசுக்கும் இடையில் நிலவிவந்துள்ள நேச மனப்பான்மையையொட்டி மேற்குப்புறம் ஓடும் ஆற்று நீரைத் திசை திருப்பி கிழக்கு முகமாகக் கொணர்ந்து தமிழ்நாட்டில் பயன் படுத்த இரண்டு மாபெரும் திட்டங்கள் செய லாக்கப்பட்டன. அவை பெரியாறு நீர்த் தேக்கத்திட்டமும், பரம்பிக்குளம் ஆழியாறு நீர்த்தேக்கத் திட்டமும் ஆகும். இனியும், அத்தகைய மேற்கு நோக்கி ஓடும் நீரை கிழக்கே திருப்பி, தமிழகத்தில் வறட்சியால் மிகவும் பாதிக்கப்படும் தென்மாவட்டங் களின் குடிநீர்த் தேவைக்கும் பாசனத்திற்கும் பயன்படுத்த சாத்தியக்கூறுகள் உள்ளன என்று ஆய்வு செய்ததில் தெளிவாகின்றது. இதுகுறித்து கேரள அரசுடன் பேச்சு வார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு தொட ரப்பட்டு வருகின்றன. மற்றும் பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்திற்காக ஏற்பட்ட ஒப் பந்தத்தை மறு ஆய்வு செய்து புதுப்பித்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொண்டிருக் கிறோம்.

அடுத்து தமிழ்நாட்டின் உயிர்நாடியாக இருந்துவரும் காவிரி நதி நீர்ப்பங்கீட்டில் படுகை மாநிலங்களுக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டினால் எழுந்த இந்த நதி நீர்ப் பிரச்சினை பலவருடங்களாக நடந்துவரும் பேச்சுவார்த்தைகளினால் தீர்க்கப்படாமல் தமிழ்நாட்டில் காவிரிப்படுகையில், குறிப் பாக டெல்டாப்பகுதியில், பாசனம் வெகு வாகப் பாதிக்கப்பட்டு வருகிறது.

மேலும் நம் ஆற்றுப் படுகைகளிலும், நிலத்தடியிலும் கிடைக்கப்பெறும் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தவும், முழுமை யாகப்பெற்று பயனுறச்செய்யவும், பல்வேறு திட்டங்களை வகுக்க வேண்டியுள்ளது. நவீன முறைகளைக் கடைப்பிடிக்க பாசனத்தில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் யாவருக்கும் தகுந்த யோசனைகளைக் கூறவேண்டி உள்ளது.

ஒவ்வொரு ஆற்றுப்படுகையிலும் உற் பத்தியாகும் நீரின் அளவு, அப்படுகையில் பல்வேறு இனங்களுக்கான நீர்த்தேவை, மிஞ்சியிருக்கும் பயன்படுத்தத் தகுதியான நீரின் அளவு இவற்றையெல்லாம் நன்கு ஆராயப் படுகைவாரியாகப் புள்ளி விவரங் களைச் சேகரித்து, தொகுத்து அறிய வேண்டி யுள்ளது. நீர்வளங்களை விஞ்ஞான ரீதியில் மதிப்பிட்டு கட்டுப்படுத்தி, அளவிட்டு, பகிர்ந்து பலருக்கு பயன்படுத்தத் தக்கதாகச் செய்து, செயல்படுத்த ஒரு நீர் ஆய்வு நிறு வனம் (Institute of Water Studies) தமிழ் நாடு அரசால் 1974-ஆம் ஆண்டில் தர மணியில் நிறுவப்பட்டுள்ளது. மேலும் தமிழ் நாட்டின் நிலத்தடி நீரை முழுமையாகப் பயன்படுத்தும் வகையில் தக்க புள்ளி விவ ரங்களை பொதுப்பணித் துறையின் நிலத்தடி நீர்ப்பிரிவு கிராமவாரியாகச் சேகரித்து வருகிறது.

தமிழ் நாட்டில் உள்ள 17 ஆற்றுப்படுகை களில் இதுவரை 9 UNDP உதவியுடன் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 8 ஆற்றுப் படுகைகளில் கி.பி. 2000 வருடத்தில் முழுதுமாக முடிக்கப்படும். இனி நிலத்தடி நீர் மேலும் பயன்படுத்த எங்கெல்லாம் அனுமதி வழங்கலாம், நிலத்தடி நீரையும் மேற்பரப்பு நீரையும் ஒருங்கிணைத்து பயன்படுத்த எந்த சாதனங்களை உருவாக் கலாம் என்றெல்லாம் கண்டறிய வேண்டி உள்ளது.

நீரைச் சிக்கனப்படுத்துவதென்றால் முதலில் எங்கெங்கு விரயமாகிறதோ அவற்றையெல் லாம் தெரிந்து தடுக்க வேண்டும். தமிழ் நாட்டில் பல காலமாகப் பயனளித்துவரும் பாசனக் கால்வாய்கள் போதிய பராமரிப்பு இன்றி சீர்கெட்டு நீர்ப்போக்கிற்கு உகந்தவை களாக இல்லை. இவைகளில் நீர்ச் சேதம் ஏற்படுகிறது. இப்பாசன அமைப்புகளை மேம்படுத்தி, நீர்ச் சேதத்தைத் தவிர்த்து நீர் விநியோகத்தைச் சிக்கனப்படுத்த நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறிப்பாக உலக வங்கி உதவியுடன் பெரியாறு-வைகை கால்வாய்கள் மேம்படுத் தும் திட்டம் செயல்பட்டு வருகிறது. முதல் கட்டப் பணிகள் ரூ.46.40 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டப் பணி ரூ.70 கோடி செலவில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 1990 செப்டம்பரில் முடிவடையும். தேசீய நீர் நிருவாகத் திட் டத்தின் கீழ், தாமிரபரணி, சாத்தனூர், கோதையாறு, அமராவதி, கம்பம் பள்ளத் தாக்கு ஆகிய பாசனப்பகுதிகளில் உற்பத்தித் திறனையும் பண்ணை வருவாயையும் அதி கரிக்க சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன.

இந்தத் திட்டம் ரூ.52.70 கோடி செல வில் 1986-87 முதல் செயல்படுத்தப்படு கிறது. 1992-93-ஆம் ஆண்டு முடிவடை யும். மேலும், கிராமங்களில் பாசன உயிர் நாடிகளான ஏரிகள் தூர் அடைந்து போதிய கொள்ளளவின்றியும் ஆக்கிரமிப்புகளால் பெரிதும் பாதிக்கப்பட்டும் இருக்கின்றன. இவற்றை நவீனப்படுத்தி அவைகளின் பயனைப் பெருகிடச் செய்ய நாம் பல திட் டங்களை அந்நிய நாட்டு நிதி உதவிபெற்று செயலாக்கி வருகிறோம். அவைகளின் பயன் திறனை மேம்படுத்துவதற்கும், ஏற்கெனவே உள்ள பாசன அமைப்புகளைச் சரிவரப் பராமரிப்பதற்கும், செயல்படுத்துவதற்கும் நல்ல உத்திகள் தேவைப்படுகின்றன.

மேற்கூறிய பணிகளைச் செம்மையாக வும், வெற்றிகரமாகவும் சீராகவும் செய

லாக்க, பாசனத்திலும், வேளாண்மையிலும் செயல்படும் அலுவலர்களும், விவசாயிகளும் ஒருங்கிணைந்து செயல்படவேண்டும். இதற்கான பயிற்சியளிக்கும் நோக்கத்துடன் அமெரிக்க அரசின் பன்னாட்டு வளர்ச்சிக்கான நிதி உதவி நிறுவனத்தின் (USAID) உதவியோடு 'பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம்' (Irrigation Management Training Institute) ஒன்று 1984-இல் நிறுவப்பட்டு தற்போது திருச்சியில் செயல்பட்டுவருகிறது.

மத்திய அரசால் உருவாக்கப்பட்ட தேசிய நீர்வளக்கொள்கை, நீர்வள அமைப்புகளைத் திட்டமிடுவதிலும், செயல்படுத்துவதிலும் நீர் ஒதுக்கீட்டு முன்னுரிமைகளைக் கூறியுள்ளது. இதன்படி குடிநீர், பாசனம், மின் உற்பத்தி, நீர்வழிப் போக்குவரத்து மற்றும் தொழில்களுக்கு என்ற வரிசையில் முறைப்படுத்தப்பட்டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு நம் மாநிலத்திலும், இம்முன்னுரிமைகளுக்கேற்ப பலதரப்பட்ட தேவைகளுக்கும் நீர்ப் பங்கீடு செய்யப்படவேண்டும்.

இதுபோன்ற பிரச்சினைகளை நன்கு ஆராய்ந்து அரசுக்குத் தகுந்த ஆலோசனை கூற அனுபவம் வாய்ந்த பாசனப் பொறியாளர்கள், விவசாயத் துறை நிபுணர்கள், நிர்வாக வல்லுநர்கள் போன்றவர்களை இவ்வரசு பயன்படுத்திக்கொள்ள எண்ணியுள்ளது.

இதுகாறும் மத்திய அரசுதான் பாசனக் குழுக்களை 1903-ஆம் ஆண்டிலும், 1972-லும் அமைத்தது. ஒவ்வொரு மாநிலத்தின் நீர்வளத்தையும் பாசன வளர்ச்சியையும் ஆராய்ந்து வருங்காலத்தில் மேற்கொள்ளவேண்டிய பாசன வளர்ச்சிக்கான அணுகுமுறைகள் பற்றி பொதுவான பரிந்துரைகளை அளித்ததுடன் இவற்றின் பணிகள் முடிவடைந்துவிட்டன. ஆனால் தமிழ்நாட்டின் நிலை வேறு. குறைவான நீர்வளத்துடன், அதுவும் முற்றிலும் பயன்படுத்தப்பட்ட நிலையில், நீர்த்தேவைகள் ஆண்டுக்காண்டு அதிகரித்துக்கொண்டுவரும் நிலையில், நீர் ஆதாரங்களை வளப்படுத்தவும், நீர் உபயோகத்தைச் சிக்கனப்படுத்தவும், தக்க நடவடிக்கைகள் எடுக்க அவ்வப்போது ஆராய்ந்து தொடர்ச்சியான பரிந்துரைகளை வழங்க, ஒரு நிலையான பாசன மேம்பாடு — நீர்வளக் குழுவை அமைக்க வேண்டும் என தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தோம்.

ஆட்சிப் பொறுப்பேற்றதும் அந்தக் குழுவில் பணியாற்ற, தகுந்த நிபுணர்களைத் தேர்ந்தெடுத்து ஜூன் 1989-இல் ஆணை பிறப்பிக்கப்பட்டு இந்தக் குழு செயல்படத் தொடங்கியுள்ளது. இக்குழுவின் உறுப்பினர்களுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புவது என்னவென்றால், மேற்கூறிய சில பிரச்சினைகள் பொதுவாக மக்களிடையே, குறிப்பாக நம் விவசாயிகளிடையே எழுவன - அவர்களின் முன்னேற்றத்திற்காகத் தீர்க்கப்படவேண்டியன. நீங்கள் இந்தத் துறைகளில் பல ஆண்டுகள் பணிபுரிந்தவர்கள், அனுபவம் பெற்றவர்கள். உங்கள் அனுபவத்தின்பேரில் தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கும், நிலவளத்தையும், நீர்வளத்தையும் மேம்படச்செய்யவும், உணவு உற்பத்தியைப் பெருக்கவும், மக்கள் வாழ்க்கைத் தரம் உயரவும் ஆவன செய்யவேண்டும், அரசுக்கு உறுதுணையாகப் பணியாற்ற வேண்டும் என்று சொல்லி, நீங்கள் செய்வீர்கள் என நம்பிக்கை தெரிவித்து இக்குழுவின் பணிகளைத் தொடங்கிவைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

**—2.8.1989 அன்று ஆடிப் பெருக்கு நன்னாளில் சென்னைத் தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு பாசன மேம்பாடு-நீர்வள நிலைக் குழு தொடக்க விழாவில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.**











# முதல்வர் தொடங்கி வைத்த மக்கள் நலத் திட்டங்கள்

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 18.7.89 அன்று கோவை மாவட்டத்திற்கு வருகை புரிந்து பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு அரசின் ஆக்கப் பணிகளுக்கு ப்புதிய வேகத்தை ஊட்டினார். காலையில் பாரதியார் பல்கலைக் கழகத்தில் பாரதியார் சிலையைத் திறந்து வைத்து பாரதி கண்ட ஒளிமயமான எதிர்காலம் உருவாக இளைய சமுதாயம் முயலும் வண்ணம் எழுச்சியுரை ஆற்றினார். மாலை 4.00 மணியளவில் விளாங்குறிச்சிக்கு அருகில் சேரன் மாநகரில் ரூ.5 கோடி செலவில் 568 சேரன் போக்குவரத்துப் பணியாளர் குடியிருப்புகளைத் திறந்து வைத்ததுடன், இரண்டு புதிய பணிமனைகளுக்குக் கால்கோள் நாட்டி 6 புதிய பேருந்துகளையும் துவக்கி வைத்தார்.

முடுக்கி விடப்பட்ட நிர்வாகத்தின் மூன்றாம் கட்டப் பணியாக மாவட்டத்தில் 20,000 பேருக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா பல்லடத்தில் மாலை 6 மணி அளவில் பெருந்திரளான மக்கள் கூட்டத்துடன் துவங்கியது.

கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மா. இராமன், இ.ஆ.ப., அவர்கள் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களையும், விழாத் தலைவர் மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு. எஸ்.ஜே. சாதிக்பாட்சா அவர்களையும், மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் திரு. மு. கண்ணப்பன் அவர்களையும், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்களையும், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி. சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்களையும், பொதுமக்கள் அனைவரையும் வரவேற்றார்.


மாவட்ட ஆட்சித் தலைவர் தனது வரவேற்புரையில், "இன்றைய சிறப்புமிகு விழாவில் மத்திய அரசின் திட்டங்களின் கீழும், பெரும்பாலான மாநில அரசு நலத்திட்டங்களின் கீழும்/40,000 பேருக்கு உதவிகள் வழங்கப்பட்வுள்ளதாகவும், மொத்தமாக 23 திட்டங்களின் கீழ் இந்த உதவிகள் வழங்கப்படுவதாகவும், இதில் முக்கியமான திட்டமாக விளங்குகிற இலவச கண்ணொளி சிகிச்சை வழங்கும் திட்டத்தின் கீழ் நமது மாவட்டத்தில் டாக்டர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்களின் சிறப்பான பணி காரணமாக இவ்வாண்டில் இது வரை 1,411 பேருக்கு கண் அறுவைச் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளதாகவும், தமிழக அரசு இவ்வாண்டு அறிவிக்கப்படவுள்ள கண்புரை நோய் இல்லாத (Cataract free districts) நான்கு மாவட்டங்களில் நமது மாவட்டம் ஒன்றாக அறிவிக்கப்படாமல் போனாலும் கூட தற்போதைய வேகத்தில் இத்திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டு வந்தால் கோவை மாவட்டத்தில் கண்புரை நோயால் பாதிக்கப்பட்டவர் யாரும் இல்லை என்ற நிலையை அடைந்து விடலாம் என்றும் கூறினார்.

மேலும் அவர் பேசும் போது "முதியோருக்கு உதவித்தொகை வழங்குகின்ற திட்டத்தின் கீழ் ரூ.35 அரசு அறிவித்தபடி ரூ.50 ஆக உயர்த்தப்பட்டு இதைப் பெறுவோர்களின் அதிகபட்ச வரம்பு நீக்கப்பட்டு இம்மாவட்டத்தில் காத்திருப்போர் பட்டியலில் உள்ள தகுதியுள்ள எல்லோருக்கும் வழங்கப்பட்டுவிட்டதாகவும், ஒருங்கிணைந்த அரசு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடனுதவி இன்று 4,000 நபர்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும், இதில் மாவட்ட இலக்கான 10,400 என்பது அண்மையில் நடந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் அறிவுரையின்படி இவ்வாண்டு டிசம்பருக்குள் முடிக்கப்பட வேண்டிய ஒன்றாக இருந்தாலும், கோவை மாவட்டத்தைப் பொருத்தவரை இந்த இலக்கு அக்டோபர் அல்லது நவம்பருக்குள் அடையப்பட்டு விடும் என்றும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண நிதி உதவித் திட்டத்தின் கீழ் 250 பேர்கள் தேர்வு செய்யப்பட்டு அதில் முதல்வரிடமிருந்து 5 பேர்கள் இன்று இவ்வுதவியைப் பெறுவார்கள் என்றும், டாக்டர். முத்துலட்சுமி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ் 500 பேர்கள் தேர்வு செய்யப்பட்டு இதில் 5 பேர் முதல்வரிடமிருந்து உதவியைப் பெறுவார்கள் என்றும், முதல்வர் அவர்கள் வலியுறுத்தியபடி முடிக்கப்பட்டு உடனடியாக மக்களுக்குப் பயனளிக்கக்கூடிய மொத்தம் ரூ.2 கோடி மதிப்பில் உள்ள பல திட்டங்கள் இன்று துவக்கி வைக்கப்படவுள்ளதாகவும்" குறிப்பிட்டார்.

சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாழ்த்துரை வழங்கியதைத் தொடர்ந்து, மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள்.

மாண்புமிகு சட்ட அமைச்சர் தலைமையுரை ஆற்றியபின், மாண்புமிகு முதல்வர்

> எல்லையில்லாப் பொறுமை, எல்லை காணாத் தூய்மை, எல்லையற்ற விடா முயற்சி - இவைகளே நல்ல இயக்கமொன்றின் வெற்றிக்கு இரகசிய மானவை.
>
> — விவேகானந்தர்.



கலைஞர் அவர்கள், அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கிப் பல்வேறு திட்டப் பணிகளையும் துவக்கி வைத்தார். மாண்புமிகு முதல்வர் அவர்களின் விழாப் பேருரை பின்வருமாறு:-

இன்று இருபதாயிரம் பேர் நான்கு கோடி ரூபாய் அளவிற்கு உதவி பெறுகிறார்கள். இதைத் தவிர ஏறத்தாழ ஒன்றரைக் கோடி ரூபாய் அளவிற்கான திட்டங்கள் இங்கே தொடங்கப்பட்டும், சில திட்டங்கள் அடிக்கல் நாட்டப்பட்டும் இந்த நிகழ்ச்சியிலே இணைக்கப்பட்டு அவற்றின் பயனையும் பெரும்பாலான மக்கள் துய்க்க இருக்கிறார்கள்.

"அதைப் போலவே பல்வேறு திட்டங்கள் என்னுடைய மனப்புழுக்கத்தைத் தீர்க்கின்ற வகையில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களாகும். இங்கே இருநூற்றி ஐம்பது பேருக்கு மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டம் என்ற பெயரால் பனிரெண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் இன்றைய தினம் வழங்கப்படுகிறது. மேடையிலே அடையாளமாக ஒரு பெண்மணிக்குத்தான் அந்தத் தொகை தரப்பட்டதென்றாலும் கூட மொத்தம் இருநூற்று ஐம்பது பெண்களுக்கு ஒவ்வொருவருக்கும் ஐயாயிரம் ரூபாய் வீதம் மொத்தம் பன்னிரெண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. அடையாள பூர்வமாக இங்கே நிதி உதவியைப் பெற்றோர் தவிர இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அதிகாரிகளின் மூலமாக மற்றவர்கள் பெறவிருக்கிறார்கள். அது ஒழுங்காகச் செம்மையாக நடைபெறும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.



"மற்றொன்று டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித்திட்டம். பிரசவ காலத்தில் பிரசவத்திற்கு இரண்டு மாதத்திற்கு முன்பும், பிரசவத்திற்குப் பிறகு இரண்டு மாதத்திற்கும் ஆக மொத்தம் நான்கு மாதங்களுக்கு மாதம் ஐம்பது ரூபாய் வீதம் இருநூறு ரூபாய் தருகின்ற திட்டம். கடந்த காலத்திலே இந்தத் திட்டம் வெறும் அறிவிப்போடு இருந்தது. இன்றைக்கு அந்தத் திட்டத்தை பல மாவட்டங்களில் செயல்படுத்தி வருகிறோம்.

"அதிலே மிக முக்கியமாக இன்றைக்கு அறுநூறு பேர் அந்த உதவியைப் பெறுகிறார்கள். ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய், அந்த வகையில் இன்றைக்கு அறுநூறு கர்ப்பவதிகளுக்கு வழங்கப்படுகிறது. இது எல்லா மாவட்டங்களையும்விட உயர்ந்த எண்ணிக்கை ஆனாலும் நான் அந்த கர்ப்பவதிகளையும் கோவை மாவட்டத்திலுள்ளவர்களையும் கேட்டுக் கொள்கிறேன், குடும்பக் கட்டுப்பாடு என்று ஒன்று இருக்கிறது, அதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள் என்று இந்த அறுநூறு எண்ணிக்கையைப் பார்க்கும் பொழுது சொல்லத் தோன்றுகிறது.



"அடுத்து இரண்டு கோடி ரூபாய் அளவிற்கு ஏழை, எளிய பிரிவைச் சேர்ந்த நான்காயிரம் பேர்களுக்குக் கடன் உதவி வழங்கப்படுகிறது. அடுத்து இந்த அரசின் புதிய திட்டமான ஏழைத் தொழிலாளர்களுக்கு ஆட்டோ ரிக்ஷா, மற்றும் டாக்சிகளை ஓரளவு அரசு மானியம் தந்து - கடன் தந்து, கடன் பெறுவதற்காக உதவியைச் செய்து ஆட்டோ ரிக்ஷாக்களை, டாக்சிகளை அவர்களுக்கே சொந்தமாக்கும் திட்டம், அதன்படி இன்றைக்கு ஏறத்தாழ அறுபது பேருக்குப்பத்து இலட்சம் ரூபாய் அரசு உதவியோடு இந்தத் திட்டம் இன்றைக்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

"கலப்பு மணத் தம்பதிகளுக்கு உதவி அளிக்கும் திட்டம் 1976-க்கு முன்பே நான் அப்பொழுது முதலமைச்சராக இருந்த பொழுது நான்காயிரம் ரூபாய் அவர்களுக்கு உதவியாகத் தரப்படுமென்று அறிவித்த திட்டம். அந்தத் திட்டத்தின் கீழ் பதினைந்து பேர் உதவியைப் பெறுகிறார்கள். அதைப் போலவே விதவைகளைத் திருமணம் செய்து கொள்கிறவர்களுக்குச் சேமிப்புப் பத்திரங்கள் மூலமாகப் பண உதவி செய்யப்படுகிற திட்டம். இப்படி இருபதாயிரம் பேருக்கு ஏறத்தாழ நான்கு கோடி ரூபாய் மதிப்பீட்டில் உதவிகள் இன்றைக்கு வழங்கப்பட்டிருக்கின்றன.

எவ்வளவுதான் நன்மைகளை ஒரு அரசு செய்தாலும்கூட மக்களுக்கு தேவைகள் முழுமையாக நிறைவு அடைந்து விடுவதில்லை. நீங்கள் இங்கே மேடையிலேயே பார்த்தீர்கள். இங்கே உதவிகளைப் பெற வந்தவர்கள் என்னிடம் அதற்கான கவர்களைப் பெறுகிற நேரத்தில் அவர்களும் ஒரு கவரை, மனுவினை, கோரிக்கையை, என்னிடம் கொடுத்தார்கள். ஆக உதவிகள் போதுமானவைகள் அல்ல; நான் உணருகிறேன். நாற்பதாண்டுக்காலமாகச் சுதந்திரம் பெற்ற இந்தியத் திருநாட்டில் இன்னமும் மக்கள் ஏழ்மையோடு போராடிக் கொண்டிருக்கிறார்கள். வறுமைத் தேள் கொட்டக் கொட்ட வாடிக் கொண்டிருக்கிறார்கள். வறட்சி தீர்ந்தபாடில்லை. விவசாயிகள் பெருமூச்சுவிட்ட நிலையில் தான் இருக்கிறார்கள் சுதந்திரம் பெற்று நாற்பதாண்டுகள் ஆனபிறகும்கூட!

'இருந்தபோதிலும் எல்லா' வகையிலும் ஏழை, எளிய மக்களுக்கு, நலிந்தவர்களுக்கு இயன்ற வரையில் உதவிகளைச செய்ய வேண்டுமென்று சபதம் எடுத்துக் கொண்டு தான் தி.மு.கழக ஆட்சி அண்ணா அவர்கள் தலைமையில் 67-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு அதற்குப் பிறகு இடையில் பனிரெண்டு, பதிமூன்று ஆண்டுக்காலம் ஏற்பட்ட தொய்விற்குப் பிறகு மீண்டும் தி.மு. கழகம் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்து- இன்றைக்கு முடிந்த அளவிற்கு பாலைவனத்திலே பயணம் செய்கின்றோம் என்கிற ஆதங்கத்தோடு பயணத்தைத் தொடங்கி உங்களைப் போன்றவர்கள் தந்துள்ள பெரும் ஆதரவினால் ஓரளவு காரியங்களைச் செய்ய முடிகிறது. ஆனால் இன்னமும் எங்களுக்குப் பூரணமான மனத்திருப்தி கிடையாதென்பதை ஒத்துக் கொள்கிறேன். இதுவரையில் செய்யப்பட்டிருக்கிற காரியங்கள் எழுதப்பட வேண்டிய பெரிய வரலாற்றுப் புத்தகத்திற்கான முன்னுரையே தவிர முடிவுரை அல்ல! அந்த முன்னுரையைத் தொடர்ந்து காரிய மாற்றுவதற்குத் தமிழ்ப் பெருங்குடி மக்கள் மேலும் எங்களுக்கு உதவிகரமாக இருக்க வேண்டும்.

"இன்றைக்கு நான் இந்த மேடையிலே அப்படிப்பட்ட ஒத்துழைப்பு எல்லாத் தரப்பிலிருந்தும் கிடைக்குமென்ற எண்ணத்தைப் பெறுகிறேன். காரணம் இதற்கு முன்பு கோவைக்கு அருகில் சிங்காநல்லூர் தொகுதியில் நடைபெற்ற ஐநாறுக்கும் மேற்பட்ட இல்லங்களைக் கொண்ட சேரன் மாநகரைத் திறந்து வைக்கும் விழா நிகழ்ச்சியில் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த நண்பர்களெல்லாம் வந்து கலந்து கொண்டார்கள். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒன்றியத் தலைவர்கள் வந்து எனக்கு மாலை அணிவித்து என்னை வரவேற்றார்கள்.

"அ.தி.மு.க.வைச் சேர்ந்த தொழிற்சங்க நிர்வாகிகள் எனக்கு மாலை அணிவித்து என்னை வரவேற்றார்கள். இங்கேயும் நம்முடைய அருமை நண்பர் அ.தி.மு.கவைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் அண்ணா நம்பி கலந்து கொண்டிருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நண்பர்களெல்லாம் இங்கு வந்து கலந்து கொண்டிருக்கிறார்கள். எல்லாக் கட்சிகளின் ஒத்துழைப்பும் நல்ல காரியத்திற்கு, பொதுக்காரியத்திற்குத் தேவை."

-நிகழ்ச்சித் தொகுப்பு
அ. சந்திரசேகரன்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கோவை மாவட்டம்

## உணவுப் பங்கீடு ஒழுங்காக நடைபெற....

அரிசி போன்ற அத்தியாவசியப் பொருள்களை ஒழுங்காக விநியோகம் செய்ய வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். ஆனால் இன்னமும் சமுதாயத் துரோகிகள் சிலர் நாட்டில் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் பெரும்பாலும் ரேஷன் கடைகளில் இருக்கிறார்கள். இவ்வளவு நல்ல காரியங்களை நாம் இன்றைக்கு நான்கு கோடி ரூபாய் அளவிற்கு ஏழை, எளிய மக்களுக்கு உதவுகிறோம். பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுகிறோம். கல்லூரிகள் என்ற பெயரால் கொள்ளையடித்துக் கொண்டிருக்கும் சில கூட்டத்தின் மீது நடவடிக்கை எடுக்கிறோம். அரசின் சொத்துக்கள் பறி போனதைக் கூட அரசுக்கே உடமையாக ஆக்குகிறோம். இவ்வளவு நல்ல காரியங்களைச் செய்கிற நேரத்தில் இன்னமும் ஆங்காங்கு எலிகளும் பெருச்சாளிகளும், மூஞ்தூறுகளும் ரேஷன் கடைகளிலே இருக்கின்றன.

"அண்மையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நான் மிகுந்த திட்டவட்டமாக மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் வலியுறுத்தியிருக்கின்றேன். இனிமேல் பொது விநியோகத்தில் அரிசியோ, மண்ணெண்ணையோ, சர்க்கரையோ வழங்கப்படுவதில் எங்கே ஊழல் நடைபெற்றாலும் யார் அந்த முறை கேட்டைச் செய்தாலும் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுங்கள் என்று கூறியிருந்தேன்.

"முதற்கட்டமாக கோவை மாவட்டத்தில் ஒரு நாற்பத்தி ஐந்து பேரைப் பிடித்து சிறைக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்ற செய்தி ஒரு புறத்திலே வேதனைதரக் கூடியதென்றாலும் கூட, இப்படியும் சமுதாயத் துரோகிகள் இருக்கிறார்கள் என்று எண்ணி அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்பதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. நாங்கள் இப்படித்தான் செய்வோம் என்று உறுதி எடுத்துக் கொண்டு யாராவது ரேஷன் கடைகளிலே இருப்பார்களேயானால் அவர்களெல்லாம் தாமாக ஒதுங்கிவிட வேண்டும். அப்படிப்பட்டவர்கள் சில இடத்திலே சொல்கிறார்களாம். பொருள்களை எல்லாம் மறைமுகமாக கொடுத்துவிட்டு மக்கள் கேட்கிற நேரத்தில் சில சிப்பந்திகள் 'கருணாநிதியிடம் போய்' கேள்' என்று சொல்கிறார்களாம். அப்படிப்பட்டவர்கள் தாராளமாக ஒதுங்கி விடலாம். வீட்டிற்குப் போய் விடலாம். இல்லாவிட்டால் முன் ஒரு காலத்தில் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். ஒரே நாள் இரவில் கிராம அதிகாரிகளையெல்லாம் வீட்டிற்கு அனுப்பினார் அல்லவா அதைப்போல இவர்களும் வீட்டிற்கு அனுப்பப்படுவார்கள் என்பதை நான் அவர்களுக்கு எச்சரிக்கக் கடமைப்பட்டு உள்ளேன்.

"ஊழல் இல்லாத ஒரு ஆட்சி. நேர்மையான ஒரு ஆட்சி. நாணயமான ஒரு ஆட்சி, மக்களுடைய தேவை, மக்களுக்குப் போய்ச் சேர வேண்டுமென்பதற்காக மும்முரமாக, முனைப்போடு நடைபெறுகிற ஒரு ஆட்சிக்கு குந்தகம் விளைவிக்க யார் நினைத்தாலும் அவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் அவர்கள் நிச்சயமாக தண்டிக்கப்படுவார்கள்

—மாண்புமிகு முதல்வர்
(18.7.89-இல் பல்லடம் பொதுக்கூட்டத்தில்)

# எங்கும் அவன்

“சோளக் கொல்லைதானேடா மூக்கா ஏக்கரு, உங்க அப்பனுக்கு.

“ஆமாங்க! மூணு ஏக்கர் இருந்ததுங்க முன்னாடி. அம்மாவுக்கு சீக்கு வந்தப்ப, போயிடுச்சி...”

“உங்க ஆத்தாளும்தானே போயிட்டா...”

“வருஷம் மூணு ஆகுதுங்க, அம்மா காலமாயி. அப்பாரு அப்ப இருந்து பித்துப் பிடிச்சவர்போலக் கிடக்கறாரு...”

“சரி, சரி! இப்ப இந்த முக்கா ஏக்கர் பேர்லே, மூணு நூறு கேக்கறியே கடன் — எப்படிடா கொடுக்கறது?”



“பாடுபட்டு வயத்தைக்கட்டி, வாயைக் கட்டி, பணத்தை மிச்சம் பிடிச்சி கடனைக் கட்டிவிடுவேனுங்க...”

“கடனைக் கட்டற ஆசாமியைப் பாரு, கலியாணமானதும், வசவசன்னு பெத்துத் தள்ளப்போறே, கொழந்தைகளை! குடும்பம் பெருகுமே தவிர காசு எங்கேடா மிஞ்சப் போவுது?”

“இல்லிங்க! வரப் போறவளோட அதிர்ஷ்டம், எங்க குடும்பத்தை வாழ வைக்கும்னு...”

“ஜோசியம் சொல்லிட்டாங்களா! யாரு? அந்தப் பூஜாரியா? சரி, எக்கேடோகெட்டுப் போ, கலியாணத்துக்குன்னு கேட்கறப்ப, இல்லைன்னு அபசகுணம் மாதிரிச் சொல்லக்கூடாது என்பாங்க. அமாவாசை கழிச்சி வா, தர்ரேன்... கூடவே பத்திரம் எழுதறாம் பாரு...”

“பண்டாரி ஐயாதானுங்களே... கட்டிக் கிட்டு வாரேன்!”



## பேரறிஞர் அண்ணா

சொக்கன், சோளக்கொல்லையைக் காட்டிக் கடன் வாங்கியாவது சொர்ணத்தைக் கலியாணம் செய்து கொள்ளத் தீர்மானித்ததற்குக் காரணம், பணம் சேர்த்துக் கொண்டிருக்கும் பட்டாளம், சொர்ணத்தின் மீது ஒரு கண் வைத்திருந்தான் என்பதுதான்.

“அக்கா சொல்லிச்சி, மாமா வர்றாங்களாம் மதறாஸ் பட்டணத்திலே இருந்து...”

“வரட்டுமே! என்னை என்ன ஊருக்கெல்லாம் மேளம் கொட்டிச் சொல்லச் சொல்லுதா சொர்ணம், ராஜா வர்றாரு ராஜா வர்றாருன்னு.”

சொர்ணத்தின் தம்பியிடம் இப்படிப் பேச்சு — அடிக்கடி கோபம்.

கோபத்தைத் தாங்கிக் கொள்ளும் வேலையை, உழவு வேலையோடு சேர்த்து ஏற்றுக் கொண்டது எருது. ‘வரட்டுமே!’ என்று சொக்கன் அலட்சியமாகப் பேசினானே தவிர, உள்ளூரப் பயந்தான். பட்டாளம் ஒவ்வொரு தடவை வருகிறப்போதும் ஒவ்வொரு விதமான புது உடையுடன் வருகிறான். போன வருஷம் வந்தபோது கையிலே தங்க முலாம் போட்ட கடியாரம்! விரலிலே மோதிரம் பளபளத்தது! வாயிலே, வழக்கமான சிகரெட்டு! பேச்சிலே குறும்பு!

“சொக்கோய்! தொலைவிலே இருந்து பாத்தா, நிற்கிறது நீயா, உன் கொல்லையிலே இருக்கிற பொம்மையான்னு சரியாப் புரியலைபோய்!”

“ஏன், கண்ணிலே அத்தனை மப்பு! பட்டணத்திலே கண்ணாஸ்பத்திரி இல்லே? காட்டிக்கறதுதானே!”

“குறும்பாடா செய்யறே பே! மாடுகூட பழகறவன்தானே! புத்தி வேறே எப்படி இருக்கும்?”

“தெரியும், சும்மா கிடடா! தெருப் பொறுக்கி நாய்களோட சுத்தறவனுங்க ரொம்பபேரு, இப்படித்தான் தேசம் ஆன்ற ராஜாப் போலப் பேசறது. போ! போ!” இப்படிச் சில தடவைகளில் சச்சரவுகூட மூண்டுவிடும். பட்டாளம் பேச்சை வளர்த்துவதில்லை; சொக்கனுடைய தட்டுக்கு எருதே ‘ததிங்கினத்தோம்’ போடுகிறபோது, நம்ம முதுகு எம்மாத்திரம் என்ற பயம்.

எப்போதாவது சந்தை கூடும் இடத்துக்கு, சொர்ணத்துடன் சேர்ந்து போகும் வாய்ப்புக் கிடைக்கும் சொக்கனுக்கு. ஒரே மகிழ்ச்சி, பெருமை. பார்ப்பவர்கள் எலோருமா நல்ல இயல்பினர்? பலவிதமான பேச்சு, காதில் விழும்.

“பய, சொக்குப்பொடி போட்டுட்டாண்டா...”

“கிளிபோல பொண்ணு இருக்குது. இவன் இருக்கிறான் தடியனாட்டம்.”



“கட்டிகிட்டா மாடி வீடு கட்டித்தாரேன்னு சொல்லி இருப்பான்.”

“மாடி வீடு கட்டற முகத்தைப் பாரு...”

“பொண்ணு பாரேன்! என்னமோ ஒரு பெரிய இளவரசன் கூடப் போறதுமாதிரி, நடை நடக்கறதை!”

கோபத்தை அடக்கிக் கொள்வான் சொக்கன்.

ஒரு எண்ணம் மட்டும் தோன்றும். சொர்ணம் கண்டு பெருமைப்படக்கூடிய விதமாக, வாழ்ந்து காட்ட வேண்டும். ஊரார் புகழ்ந்திடும்படியாக நடந்து, ஊரே தன்னைப் புகழ்வதைக் கேட்டு சொர்ணம், பெருமை கொண்டிட வேண்டும் என்ற எண்ணம்.

கடனைப் பெற்றுக்கொண்டான். ஊர்ப் பெரியவரை அனுப்பி வைத்தான் சொர்ணத்தின் தந்தையிடம், சொர்ணத்தைத் தரச் சொல்லிக் கேட்டிட, சொர்ணத்தின் தகப்பனார் துளியும் பிடி கொடுக்கவில்லை. “சோளக்கொல்லை பேர்லேகூடக் கடன்! இவனை நம்பி எவன் ஒரு பெண்ணை ஒப்படைப்பான்? மனசு இடம் கொடுக்கல்லே. மேலும் பட்டாளம் நம்ம பெண்ணைக் கட்டிக் கொள்ளணும்னு ஒரு எண்ணம் கொண்டிருக்கிறதா தெரியுது” என்றார் அந்த முதியவர். ஊர்ப் பெரியவர், பட்டாளம், பட்டணம் போய் நாலுகாசு சம்பாதித்திருந்தாலும் நடவடிக்கை சரியில்லை என்கிற பேச்சு இருப்பதையும், ‘தொடுக்’ ஒன்னு இருப்பதாகக் கேள்வி

என்பதையும் சொல்லிப் பார்த்தார். "எவ்வளவோ ஆடிக்கிடந்ததுகளெல்லாம் ஒரு கால்கட்டுப் போட்டதும், தன்னாலே அடங்கிப் போகல்லியா, பட்டாளமும் அப்படித்தான்" என்று தீர்மானமாகக் கூறிவிட்டார் சொர்ணத்தின் தந்தை.

இந்தச் சமயமாகப் பார்த்து, சொக்கனுடைய அப்பா, எங்கோ சொல்லிக் கொள்ளாமல் போய்விட்டார். அவரைத் தேடி அலைவதும், சொர்ணத்தை எண்ணி ஏங்குவதுமே சொக்கனுடைய வேலையாகி விட்டது. கடன் வாங்கி வைத்திருந்த பணத்தைக் கொண்டு, வேறோர் சிறு கொல்லையை வாங்கினான். அதிலே ஒரு வழக்கு முளைத்தது! புதிதாக வந்த கொல்லை, பழைய கொல்லையையும் சேர்த்து இழுத்துக் கொண்டு போய்விட்டது. சொக்கன், கூலிக்கு உழுபவனானான்.

கடன் கொடுத்து, கொல்லை மேட்டை எழுதி வாங்கிக் கொண்டாரே, ஏலகிரி — அவருடைய வீட்டிலே எடுபிடி — அவர் நிலத்தைக் கவனித்துக் கொண்ட நேரம் போக.

ஏலகிரியின் ஒரே மகள் — விதவை — இளவயது, படித்த பெண், பண்பு மிக்கவள். பெயர் கனிமொழி. உனக்கு நேரிட்டு விட்ட கதியால் மனம் உடைந்த நிலை என்றாலும், இனி உயிர் வாழ ஏதேனும் தொண்டாற்றி வருவது என்ற உறுதிகொண்டு, ஒரு இலவச மருத்துவமனை அமைத்து, அதிலே வேலைக்கமர்ந்த டாக்டர் கமலாவுடன் பணிபுரிந்து வந்தாள் — முதலுதவி முறை பயின்று.

ஒவ்வோர் சமயம் சொக்கனுக்கு ஒரு எண்ணம் வரும் — சொர்ணத்தைப் பற்றி டாக்டரம்மாவிடமாவது, எஜமானியம்மாவிடமாவது சொல்லி உதவி கேட்கலாமா என்று. உடனே ஒரு 'ரோஷ' உணர்ச்சி குறுக்கிட்டு அந்த எண்ணத்தை விரட்டிடும்.

மருத்துவ மனையில், சொக்கன் பணியாளாக வாய்ப்புக் கிடைத்தது. அதை மிகவும் விரும்பி ஏற்றுக் கொண்டான். வேலை நேரம் போக, டாக்டரிடம் பேசுவதிலே அவனுக்கு ஆர்வம். உலகின் நிலையைத் தெரிந்து கொள்ளும் பள்ளிக்கூடமாக்கிக் கொண்டான் அந்த மருத்துவ மனையை.

டாக்டர் கமலாவின் கணவன், இந்திய விமானப்படையில் வேலை பார்த்து வருபவர். ஆகவே, அவரைப் பற்றிய பேச்சு கிளம்பும் போதெல்லாம், போர் - படை - பாதுகாப்பு - நாட்டைக் காத்திடும் கடமை - இவை பற்றிய விளக்கம் கிடைக்கும் சொக்கனுக்கு. ஒரு ஆர்வம் அரும்பிற்று அவன் மனதில் - நாட்டைக் காத்திடும் படையில் சேர்ந்தால் என்ன என்ற எண்ணம்.

'பாய் - பாய்' என்றும், பஞ்சசீலம் என்றும், பாசம் காட்டிப் பேசிவந்த சீனா, இந்தியாவைத் தாக்கிற்று என்ற செய்தி கிடைத்ததும், சொக்கன் மனதிலே அரும்பிக் கொண்டிருந்த எண்ணம் மலர ஆரம்பித்தது. அவன் படையில் சேர முடிவெடுக்கச் செய்தது, டாக்டர் கமலாவின் கண்ணீரும் கனிமொழியின் புன்னகையுந்தான்.

ஒரு தந்தி, டாக்டர் கமலா அதனைப் படித்ததும் முகத்தில் அறைந்து கொண்டு 'கோ'வெனக் கதறக் கண்டாள். "சொக்கா! என் கணவர்... யுத்தத்தில்... மரணம்..." என்று விம்மியபடி கூறிடக் கேட்டுக் கதறினான். டாக்டருக்கு என்ன ஆறுதல் கூறுவது என்று தெரியாமல் திகைத்தான்; அவனுடைய கண்களிலும் நீர் துளிர்த்தது.

*நாட்டுக்காக உயிரை ஈந்தார்!*

*வீரமரணமடைந்தார்.*

*அவர் பெயர் நிலைத்து நிற்கும்!*

*நாடே புகழ்கிறது அந்த வீரனை!*

சொக்கன் இதுபோல எண்ணிட எண்ணிட, படையில் சேர்ந்தாக வேண்டும் என்று எண்ணம் உறுதியாகிவிட்டது.

ஏலகிரியிடம் சொல்லிவிட்டுப்படையில் சேரச் சென்னை செல்வது, டாக்டரிடம் சிபாரிசுக் கடிதம் வாங்கிக்கொண்டு, என்று தீர்மானித்து ஏலகிரியின் வீடு சென்றான். அங்கு அவர் கண்டதும், கேட்டதும், அவனுடைய நெஞ்சினை நெகிழ வைத்தது.

ஏலகிரி கண்ணீர் சிந்தியபடி ...

அவர் எதிரில் புன்னகை உதிர்த்தபடி கனிமொழி.

"அப்பா, நாட்டுக்குப் பேராபத்து வருகிறபோது, நம்மைப் போன்ற விவரம் அறிந்தவர்கள்கூட வீறுகொண்டு எழாவிட்டால், நாடு என்ன கதியாவது அப்பா! பயனற்ற வாழ்வு எனக்கு என்று எண்ணிக் கிடந்தேன்; இப்போது நாட்டுக்குப் பயன்படும் நல்ல வாய்ப்புக் கிடைக்கிறது. கலங்காதீர்கள். களிப்புடன் விடை கொடுத்து அனுப்புங்கள். களத்திலே போராடிக் காயமுற்று உயிருக்கு மன்றாடும் உத்தமர்களுக்குத் தொண்டாற்றுவதைக் காட்டிலும் தூய்மையான தொண்டு இல்லை" என்று கேட்போர் நெஞ்சம் நெகிழும்படிக் கூறிடக் கேட்டான். அதற்குப் பிறகு, அவனுக்குப் படையிலே சேருவதற்குத் துளியேனும் தயக்கம் எழத்தான் முடியுமா? சொக்கன் படை வீரனானான்.

சொக்கன் - டாக்டர் கமலா - கனிமொழி இவர் போன்றார் பல்லோர் நாடு காத்திடக் கிளம்பியதால் ஏற்பட்டதோர் மகத்தான எழுச்சியின் முன் நிற்கொணாது, பாய்ந்து வந்த சீனப் படை பதுங்கிக் கொண்டது. போர் ஓய்ந்தது. டாக்டர் கமலாவும் கனிமொழியும் வீடு திரும்பினர். சொக்கன் படையிலேயே தங்கிவிட்டான்.

கடன்பட்ட நெஞ்சம் கரைவது போலக் காலம் கடு வேகத்துடன் கரைந்தது. காஷ்மீருக்குள் பாகிஸ்தான் புகுந்தது; தாக்குதலை முறியடிக்கக் கிளம்பிய ஆற்றல் மறவர் படையில் சொக்கன்!

வெற்றிமேல் வெற்றி பெற்று, பாகிஸ்தானிய தளங்களை அழித்து, இந்தியப் படைகள் முன்னேறி வருவதனை இதழ்கள் மூலம் அறிந்து, டாக்டரும் கனிமொழியும், இந்த வீரப்படையில் ஏதாவதொரு பிரிவிலே தான் நமது சொக்கன் இருப்பான் என்றெண்ணிப் பெருமிதம் கொண்டிருந்தனர்! சீனப்படை எடுப்பின்போது சென்று பணியாற்றியது போன்றே இப்போதும் சென்றிட விரும்பினர். அதற்கான ஏற்பாடுகளைத் கவனித்துக் கொண்டிருந்தபோது, எதிரியின் இலக்குகளைத் தாக்கித் தகர்த்திடும் போரில் வீரம் காட்டி வெற்றி கண்ட சொக்கன், களத்தில் மாண்டான் என்ற செய்தி கிடைத்தது; கண்ணீர் புரண்டது. ஆனால் தலை நிமிர்ந்தது.

நம்ம ஊர் சொக்கன், போரிலே மாண்டு போனானாம்! பெரிய வீரன்; தீரன், தியாகி என்று சர்க்கார் பாராட்டியிருக்கிறது என்று கிராமத்தார் பேசிக் கொண்டனர்.

மருத்துவமனை விழாவின் போது, பலர் சேர்ந்து எடுத்துக்கொண்ட புகைப்படத்தில், சொக்கன் காணப்பட்டான். சொக்கன் படத்தைப் பெரிய அளவுள்ளதாக்கி ஊர்ப் பொது இடத்தில் வைத்து, மாலையிட்டு வணக்கம் செய்தனர். டாக்டரும் கனிமொழியும் வந்திருந்த பலரும் கசிந்துருகி நின்றனர்.

சொர்ணம், அந்தப் படத்தைக் கண்டு சிலையானாள்! 'அவரைத்தான் நான் மணம் செய்துகொள்ள இருந்தேன் - அவர் மறைந்தார் - இனி நான் விதவையேதான்' என்று எண்ணிக் குமுறி நின்றாள்.

சொர்ணத்தின் தம்பி மறுநாள் இதழ்களில், சொக்கனின் படம் வெளியிடப்பட்டிருந்ததைக் கண்டான். சொர்ணத்துக்குக் காட்டினான்; கண்டாள்; கண்ணீர் உகுத்தாள். இவர் எனக்கு ஏற்றவர் அல்ல என்றல்லவா அப்பா சொன்னார்! 'இவர் வீரர், நாடு காத்திட்ட தீரர், நாட்டுக்காக உயிரையே தந்த தியாகி!' என்றெல்லாம் எண்ணிக் குமுறினாள். அதே இதழில் மற்றோர் பக்கத்தில், போர்க்காலத்தைப் பயன்படுத்திக் கொண்டு கள்ளச் சந்தை நடத்தி பிடிபட்ட, பட்டாளம், ஆறு திங்கள் கடுங்காவல் தண்டனை பெற்றதாக ஒரு செய்தியும் வெளியாகி இருந்தது. சொர்ணம் அதைக் காணவில்லை. அவள் கண்களில் எதுவுமே தெரியவில்லை; எங்கு நோக்கினாலும் சொக்கனுடைய உருவமே தெரிந்தது!

### சிந்திக்கச் சில ...

வீட்டைத் துறப்பது, செல்வத்தை வழங்குவது, உயிரைக் கொடுப்பது இவைகளும் தியாகந்தான். ஆனால் அன்பானவர்கள் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழும் தியாகம் தான் பெரிய தியாகம்.

-டாக்டர் மு.வ.

சந்தர்ப்பம் வரும் என்று கூறுவதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். தங்களுக்குத் தேவையான சந்தர்ப்பங்களைத் தேடிப் பெறுபவர்தான் வாழ்வில் முன்னேற்றம் காண்கிறவர்.

- பெர்னாட்ஷா



# கண்டி நாயக்க மன்னன் கல்லறை

**வரலாற்றுச் சிறப்புமிக்க விக்கிரம ராஜசிங்கன் என்ற இலங்கையை ஆண்ட கடைசி தமிழ் மன்னனின் கல்லறையும் அவனுடைய குடும்பத்தினரின் கல்லறையும் வேலூர் பாலாற்றங்கரையிலே உள்ளன அந்த விக்கிரம ராஜசிங்கனின் கல்லறை அரசின் சார்பில் ரூபாய் ஒரு இலட்சம் முதல் 2 இலட்சம் செலவில் முத்துமண்டபமாக மாற்றப்படும் என மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 29-6-89 அன்று அறிவித்தார்.**

நடன. காசிநாதன்,
இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை.

நாயக்க மன்னர்கள் என்றாலே நமக்கெல்லாம் மதுரை நாயக்கர், தஞ்சாவூர் நாயக்கர், செஞ்சி நாயக்கர் ஆகியோர்களின் வரலாறுகள் தாம் நினைவுக்கு வரும். இவர்களைப் பற்றி வரலாற்று ஆசிரியர்கள் ஓரளவுக்கு முழுமையாக எழுதியுள்ளார்கள்.

ஆனால், இலங்கையில் உள்ள கண்டியில் தனி அரசு ஏற்படுத்தி நாடாண்ட மதுரை நாயக்க மன்னர்களின் வழித்தோன்றல்களை நாம் முழுமையாக அறிந்தோம் இல்லை. இலங்கை வரலாற்றை எழுதுபவர்களாயினும் சரி, மதுரை நாயக்கர் வரலாற்றை எழுதுபவர்களாயினும் சரி; கண்டியில் செங்கோலோச்சிய நாயக்க மன்னர்களின் வரலாற்றைத் தெளிவாக யாரும் அண்மைக்காலம் வரை எழுதவில்லை. இவ்வாண்டின் தொடக்கத்தில் தான் திருப்பதி வெங்கடேஸ்வரப் பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் எஸ். கோபால கிருஷ்ணன் இவர்களது வரலாற்றை ஓரளவுக்கு முழுமையாக எழுதியுள்ளார்.

**கண்டி நாயக்க மன்னர்கள்:**

கண்டியை ஆட்சிபுரிந்த இலங்கை அரசன் சிரீ வீரபராக்ரம நரேந்திர சிங்கன் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆட்சி புரிந்தவன். அவனுக்குப் பின் கண்டிப் பகுதியை அரசாள, மதுரை நாயக்க வமிசத்திலிருந்து தனது பட்டத்தரசியின் சகோதரனைக் கண்டிக்குக் கொண்டுசென்றான். அவனுக்கு சிரீ விசயராசசிங்கன் என்று பெயர் சூட்டி ஆட்சிக் கட்டிலேற்றினான். இம்மன்னன் கி.பி. 1739-லிருந்து 1747 வரை ஆட்சி புரிந்தான். அவருக்குப் பின்பு கீர்த்தி சிரீ ராஜசிங்கன் (கி.பி. 1747-82) ராசாதிராசசிங்கன் (கி.பி. 1782-1798) மற்றும் சிரீ ராசசிங்கன் (கி.பி. 1798-1815) ஆகியோர் கண்டியில் அரசாட்சி செலுத்தினர்.

**சிரீ விக்ரம ராசசிங்கன்:**

சிரீ விக்ரம ராசசிங்கன்தான் கண்டி அரசின் கடைசி மன்னன். இவன் மிகவும் சிறந்த முறையில் ஆட்சி செய்திருக்கிறான். அம்மன்னன் ஆட்சியின் தொடக்கப்பகுதி அமைதியான சூழ்நிலையிலும், இறுதிப் பகுதி போர் நிகழ்ச்சிகளிலும் கழிந்திருக்கிறது. இலங்கை அரசு வம்சத்தினர் எவ்வாறு மதுரை அரசோடு தொடர்பு கொண்டிருந்தார்களோ அதே போன்று இம்மன்னனும் தொடர்பு வைத்திருந்தான். இம்மன்னனின் பட்டத்தரசியும் மற்றும் இரு அரசிகளும் மதுரை நாயக்க வம்சத்தைச் சேர்ந்தவரேயாவர்.



**கண்டியை ஆட்சி புரிந்த கடைசித் தமிழ் மன்னன் விக்ரம ராசசிங்கன்**

இம்மன்னனின் செல்வாக்கையறிந்திருந்த ஆங்கிலேய ஏகாதிபத்தியம், தொடக்கக் காலத்தில் இவரோடு உறவு கொண்டிருக்கவே விரும்பியது. ஆனாலும் இம்மன்னனுக்குக் கண்டி குடிமக்களிடையே வளர்ந்து வந்த நன்னம்பிக்கையை ஊன்றிக் கவனித்து வந்த ஆங்கில அரசு இதை இப்படியே வளர விட்டால் தாங்கள் இலங்கை மண்ணிலேயே இருக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு விடுமோ என அஞ்சி, இம்மன்னனோடு போர் தொடுக்கக் காரணத்தை எதிர் நோக்கிக் காத்திருந்தது. இலங்கைக் கடற்கரைப் பகுதியிலிருந்த வணிகர்களிடம் பாக்கு மூட்டைகளைக் கண்டி வேந்தன் கைப்பற்றியது தவறு என்று ஒரு நொண்டிக் காரணத்தைக் காட்டிக் கண்டி மன்னர் மீது போர் தொடுத்தது.

இதை முன்னமேயே எதிர்பார்த்திருந்த விக்ரம ராசசிங்கர் கண்டியைவிட்டுத் தம் அரசியர் மற்றும் உறவினர்களோடு வேறொரு இடத்திற்குச் சென்றுவிட்டார். அரண்மனையை நோக்கி வந்த ஆங்கிலேயப் படையை எதிர்கொண்டு வரவேற்றவை குரைக்கும் நாய்களின் கூட்டமேயாகும்.

துரோகத் தளபதியின் உதவியால் மன்னன் இருக்குமிடத்தை அறிந்துகொண்ட படை அவ்விடம் நோக்கி அதிவேகமாக முன்னேறியது. அதனையும் எதிர்பார்த்த விக்ரம ராசசிங்கர் அவ்விடத்தையும் விட்டு அகன்று விட்டார். பின்னர் ஆங்கிலேயப் படை விடுத்த அழைப்பை ஏற்று ஒரு உடன்படிக்கைக்கு விக்ரம ராசசிங்கர் ஒப்புக் கொள்ள வேண்டியதாயிற்று. அதற்குப் பிறகு சில ஆண்டுகள் அமைதியாக ஆட்சி புரிந்தார். திரும்பவும் ஆங்கிலேயர்களுக்கும் கண்டி மன்னர் விக்ரம ராசசிங்கருக்கும் சண்டை மூண்டது. வழக்கப்படி மன்னரும் அவரது குடும்பத்தினரும் அரண்மனையை விட்டு வேறொரு பாதுகாப்பான இடத்துக்குச் சென்றுவிட்டனர். வழக்கம்போலவே இம்முறையும் ஆங்கிலேயப் படையை விலங்கினமான நாய்க் கூட்டமே வரவேற்றது. பின்னர் மன்னரும் அவரது அரசமாதேவியர்களும் இருக்கும் இடத்தையறிந்து ஆங்கிலேயப் படை வேகமாக முன்னேறியது. இம்முறை மன்னனால் அவர்களிடமிருந்து தப்பிக்க முடியவில்லை. கும்பினிப் படை அவர்களைக் கண்டுபிடித்து அவர்களது ஆபரணங்களைப் பறித்துக் கொண்டு பின்றி

களைப் பிணைப்பது போலப் பிணைத்து பதுங்கியிருந்த இடத்தை விட்டு வெளியே கொண்டுவந்தது.

ஆங்கில உயர் அதிகாரிகள் இத்தகைய கீழ்த்தரமான செயல்களை அனுமதிக்க வில்லை. அவர்களுக்கு உடுக்க உடை அளித்து பட்டத்தரசிகளைப் பல்லக்கில் கொண்டு வரும்படி ஆணை பிறப்பித் தார்கள். கண்டி அரசன் உரிய மரியாதைகளோடு கௌரவிக்கப்பட்டான்.

**கண்டி நாயக்கர் நாடு கடத்தப்படுதல்:**

அரசனும், அரசியரும் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டு வீட்டுச் சிறைகளில் பாதுகாப்பாக வைக்கப்பட்டனர். பின்னர் அங்கிருந்து கப்பல் மூலம் தமிழகத்துக்குக் கொண்டு வரப்பட்டனர். கொண்டு வரப் பட்டவர்களில் மன்னனும்,பட்டத்தரசிகளும் வேலூருக்கும், மற்ற உறவினர்கள் தஞ்சாவூ ருக்கும் அனுப்பி வைக்கப்பட்டனர். இந் நிகழ்ச்சி நடந்தது கி.பி. 1816-இல். வேலூரில் அமைதியாக வாழ்ந்து வந்த கண்டி மன்னர் விக்ரம ராசசிங்கர் 1832-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 30-ஆம் நாள் மண்ணுலக வாழ்வை நீத்தார். அவரது. அருமை மைந்தன் ரங்கராசா கி.பி. 1843-இல் உயிர் துறந்தார்.

**கல்லறைகள்:**


இவர்களது கல்லறைகள் இன்று வேலூரில் ஒரு ஒதுக்குப் புறத்தில் காணப்படுகின் றன. வேலூர் பேருந்து நிலையத்திலிருந்து பழைய காட்பாடி சாலையில் சுமார் இரண்டு கிலோ மீட்டர் தொலைவு சென் றால் தோட்டபாளையம் என்னும் இடத்தை அடையலாம். இப்பகுதியின் ரெவின்யூ பெயர் அருகந்தம் பூண்டி என்பதாகும். இங்குச் சுமார் 40 அடி சதுரத்தில் ஒரு சுற்று வளைவுக்குள் ஏழு கல்லறைகள் காணப்படு கின்றன. அவற்றில் பெரிதாக இருப்பது கண்டி வேந்தன் சிரீ விக்ரம ராசசிங்கன் கல்லறையாகும்.

"கண்டி மஹாராஜா
ஸ்ரீவிக்ரமராஜாசிங்கர்
மரணம் 1832"

என்று எழுதப்பட்டுள்ளது. மேலும் இக் கல்லறை அம்மன்னனின் கொள்ளுப் பெயரன் விக்ரம ராசசிங்கரால் 27-7-1932-இல் புதுப்பிக்கப்பட்டதாகத் தெரிகிறது. இதன் பக்கத்திலிருக்கும் இரு கல்லறைகளிலுள்ள கல்வெட்டுக்களிலிருந்து கண்டி மன்னன் சிரீ விக்ரமசிங்கரின் கொள்ளுப் பெயரன் சிரீ. வி. ரங்கராசா என்பதும் அவரது மனைவி சௌ. ராசலட்சுமி தேவி என்பதும் தெரிய வருகிறது. அதே போல் சிரீ விக்ரமசிங்கரின் மற்றொரு கொள்ளுப்பெயரன் சி.கே. நர சிம்மலுராசா என்பதும் உணர முடிகிறது.

**கண்டி மன்னர் வாரிசு:**

மேலே கூறப்பட்டுள்ள மூன்று கல்லறை களுக்குப் பின்னால் மூன்று கல்லறைகளும்




**விக்ரம ராசசிங்கரின் கல்லறை**

சிரீ விக்கிரமராச சிங்கரின் கல்லறைக்கு வலப்பக்கத்தில் சிறிது தூரத்தில் ஒரு கல் லறையும் காணப்படுகின்றன. இவை யாரு டையவை என்பது அறிந்துகொள்ள முடியா ததாக இருந்தது. இக்கல்லறைகளுக்குப் பக் கத்தில் வாழ்ந்து வரும் குடிசைவாசிகளை விசாரித்ததில் கண்டி மன்னரின் வழிவந்த வர்களில் ஒருவரான ஆர். பிருதிவிராசு என்பவர் அருகில் வசிக்கிறார். அவரைக் கேட்டால் முழு விவரம் கிடைக்கும் என்று கூறினார்கள். அதன் அடிப்படையில் அவரைச் சந்தித்தபோது பல புதிய செய்திகள் புலப்பட்டன.

கண்டி மன்னர்களின் பூர்வீகம் தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை என்றும் சத்தி ரிய வம்சத்தவர் என்றும், சூரிய குலத்த வர்கள் என்றும், தெலுங்கு மொழி பேசு பவர்கள் என்றும் அறிய முடிந்தது.

கல்லறைகளில் நான்காவது, ஐந்தாவது, ஆறாவதாக உள்ளவை சிரீ விக்ரம ராச சிங்கரின் மற்ற மனைவிகளுடையவை என் றும், ஏழாவதாகத் தனித்து இருப்பது சிரீ விக்ரம ராசசிங்கரின் பட்டத்தரசி சாவித்திரி தேவியுடையது என்றும் தெரியவந்தது. சாவித்திரி தேவி இலங்கையிலிருந்து கப்ப லில் வருகையிலேயே இயற்கை எய்திவிட்ட தாகப் பிருதிவிராசு கூறினார். அவரது உடல் வேலூர் கோட்டைக்கு முன் வைக்கப்பட்டுத் தகனம் செய்யப்பட்டு, சாம்பலைக் கொண்டு வந்து இங்கு வைத்துக் கல்லறை எழுப்பப் பட்டது என்றும் தெரிவித்தார்.

சிரீ விக்ரம ராசசிங்கரின் தந்தை அழகிய மணவாளசிங்கர் என்றும், அழகிய மண வாளசிங்கரின் தம்பி சி.கே. நரசிம்மலு சிங்கர் என்றும், அவர் மனைவி ராசலட்சுமி என்றும், பிருதிவிராசு கூறினார். மேலும் விக்ரம ராசசிங்கர் சாவித்திரியை மணந்தார் என்றும், அவரையடுத்துப் பட்டத்துக்கு வந்தவர், அவர் மைந்தன் ஓ.வி. ரங்கராசா என்றும், அவர் ராசலட்சுமியைத் திருமணம் செய்துகொண்டார் என்றும் பிருதிவிராசு புலப்படுத்தினார். பிருதிவிராசு 1938-இல் பிறந்தவர். இவருக்கு இரு புதல்வர்கள் உள் ளனர். ஒருவர் விக்ரமராசா, மற்றொருவர் விசயகுமார்; இவர்தான் வேலூரில் உள்ள இவர் வம்சத்தவர் கல்லறைகளுக்குச் சுண் ணாம்பு பூசிச் சுற்றுச் சுவரில் வடக்குப் பக்க முக்கிய வாயிலை அடைத்து விட்டு, தெற்குப் பக்கத்தில் சிறிய வாயில் ஏற்படுத்தி சிறு கதவு அமைத்திருக்கிறார்.

இந்தக் கல்லறைகளைத் தமிழ்நாடு அரசு பாதுகாக்கப்பட்ட சின்னமாக அறிவித்திருக் கிறது. இவற்றைச் சிறந்த முறையில் பாது காக்கத் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை யால் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

-நன்றி:'தினமணி'

## மணிமண்டபம் அமைக்கும் முதல்வருக்கு நன்றி

"உலகத்தின் பல பகுதிகளிலும் சிதறிக் கிடக்கும் தமிழர்களுக்கெல்லாம் வேண்டிய உதவியும், ஒத்துழைப்பையும் மனமுவந்து அளித்து வரும் முதல்வர் கலைஞர் அவர்கள், இப்பொழுது இலங்கை அரசு செய்யத் தவறிய ஒரு நல்ல காரியத்தை மனமுவந்து செய்ய முடிவு செய்துள்ளதை எடுத்துக் கூறுவது எனது கடமையாகும்.

"ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கனுக்குத் தமிழ்நாட்டில் அம் மன்னன் தனது கடைசி மூச்சை விட்ட வேலூரில், ஒரு சிலை அமைத்து மணிமண்டபம் நிர்மாணிக்க முடிவு செய்துள்ளதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

"தமிழினத்தலைவர் கலைஞர் ஒருவருக்கு மட்டும்தான் இந்தத் தொலைநோக்குப் பார்வை உதயமாகும். இந்த மணிமண்டபத்தை அவரது திருக்கரங்களினால் திறந்து வைக்கும் வாய்ப்பும் அவருக்குத்தான் கிட்டும். அதனை எண்ணி நான் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகிறேன்.

"இந்த நல்ல காரியத்தைச் செய்வதனாலும், அவரது பெயரும் புகழும் உலக வரலாற்றில் பொன் னேட்டில் பதிக்கப்படும் என்பது திண்ணம்."

-(இலங்கை கடைசியாக ஆட்சிபுரிந்த தமிழ்மன்னன் விக்கிரம ராஜசிங்கனின் பெயரன் ராஜசிங்கா 28-7-89 அன்று விடுத்த அறிக்கையிலிருந்து)



# மரம் வளர்ப்போம்! வளம் பெறுவோம்!




புலவர் தணிகை உலகநாதன்

மக்களினம் தோன்றுதற்கு முன்னே இந்த
மாநிலமே பெருங்காடாய் இருந்த தென்று
தக்கபல சான்றுடனே நிலநூல் வல்லார்
சாற்றுகிறார்; மரங்கள்நம் மூத்தோர் என்னும்
பக்குவத்தை நாம்உணர வேண்டும்; நல்ல
பயன்களையும் நன்றாக அறிய வேண்டும்.
மிக்கநலம் பெறலாமென் றவற்றை வெட்டி
வீழ்த்துவதால் நன்மைபல கெட்டுப் போகும்.

வானத்தில் பரவிபல நோயுண் டாக்கும்
மாசுகளைப் போக்குபவை மரங்க ளாகும்
கானத்தில் வல்லபல பறவைக் கூட்டம்
காதுக்கு விருந்தளிக்கும் அரங்க மாகும்
மோனத்தில் உயர்புத்தர் மரத்தின் கீழே
முந்திடுசீர் ஞானவொளி பெற்றார் அன்றோ?
தேனமரும் மலர்க்கூட்டம் சிரிக்கும் அந்தச்
சிங்கார மரக்கூட்டம் இயற்கைச் செல்வம்.

ஓரிடத்தின் தட்பவெப்பம் அவ்வி டத்தே
ஒன்றிடுநன் மரங்களையே பொறுத்து நிற்கும்.
சீரியநல் மண்ணரித்துச் செல்லா வண்ணம்
சிறப்பாகக் காப்பவையே வேர்கள் ஆகும்.
பாரிலுயர் வள்ளலைப்போல் நிழலும் மக்கள்
பசிதீர்க்கும் காய்கனிகள் மரங்கள் நல்கும்
ஊருணிபோல் எல்லார்க்கும் உதவும் என்றும்
ஓங்கியுயர் மரங்களைநாம் வளர்த்தல் வேண்டும்.

வீட்டுக்கோர் மரம்வளர்த்தல் வீதி ஓரம்
விரும்பிமலர் குலுங்குமரம் நடுதல் என்னும்
நாட்டமுடன் நாம் முயலல் வேண்டும் இந்த
நற்பணியால் மேகங்கள் மழையைக் கொட்டும்
காட்டுவளம் பெருக்குவதில் கவனம் வைப்போம்
காடுயர நாடுயரும் கருத்தில் கொள்வோம்
கூட்டிவரும் சுற்றுப்புறத் தூய்மை சேரும்
குலவிடுநற் பூஞ்சோலை யாகும் நாடே



# மரம் வளர்க்க அரசு உதவிகள்:

ச. பார்லிக்கீரேசன், இ.வ.ப.,
மாவட்ட வன அலுவலர்
சிவகங்கை

வான் மழையை ஈர்ப்பதற்கு வள மிகுந்த காடுகள் தேவை. அவ்வாறு ஈர்த்த மழைநீரைத்தாங்கி, வேர்களின் மூலம் மண்ணுள் இறக்கி, நிலத்தடி நீர் அளவை மேம்படுத்தி, ஊற்றாய் வெளிப்படுத்தி ஆறுகள் உருவாகிப் பெருகி ஓடி வந்து நிலத்தைச் செம்மைப்படுத்தவும், ஏரிகள், குளங்கள் ஆகியவற்றில் அணைகள் சேர்ந்து கால்வாய்கள் வழியாக விளை நிலங்கட்குப் பயன்படவும் ஆதாரம் காடுகளே. காடுகள் எனக்கூறப்பெறுவது மரக்கூட்டங்களே.

ஆறுகள் உற்பத்தியாகும் இடங்களான மலைப்பகுதிகளில் காடுகள் அழிவுபட்டதால், மழை அளவும் குறைந்து, தட்பவெப்ப நிலையில் பெரும் மாற்றங்களும் அதாவது வறட்சிக்காலம் கூடுதலாதலும், பெய்யும் மழை அளவும் மழை நாட்களும் குறைவதும், மண் அரிப்பு மிகுந்து ஏரிகள், குளங்கள், அணைகள் ஆகியவற்றின் கொள்ளளவு குறைபடுதலும் ஏற்பட்டு, வேளாண்மை பாதிக்கப்பட்டு வருவது நாம் பட்டுவரும் துன்பங்களாகும்.

இரண்டாவதாக, உழவர் பெருமக்கட்கு, விளைச்சலைப் பெருக்கிட உதவுவது தழை உரங்களாகும். செயற்கை வேதியியல் உரங்கள் காலப்போக்கில் மண்ணில் உள்ள உரச்சத்துகளை அளவிற்கதிகமாய்க் குறைத்து நிலங்களை வேளாண்மைக்குத் தகுதியற்ற தரிசு நிலங்களாக மாற்றியுள்ளதை யாரும் மறுக்க இயலாது. ஆனால் இயற்கை உரங்களில் ஒன்றான பசுந்தாள் தழை உரம் மண் வளத்தைப் பெருக்குவதில் பெரும்பங்கு பெறுகின்றது. அத்தழை உரங்கள் காடுகளில் இருந்து கிடைக்கின்றன என்பதை மலை அடிவார உழவர் பெருமக்கள் நன்கறிவர்.

மூன்றாவதாக, உழவர்களின் உற்ற தோழர்களாக இன்றும் உள்ளவை கால் நடைகளே. பால் தருபவைகளாகவும், உழுவதற்கும், பிற வேளாண்மைப் பணிகட்கும், தொழு உரம் தருவதற்கும் பயன்பட்டு வருகின்றன. இவற்றிற்கு மேய்ச்சல் களமாகவும், தீவனக்களஞ்சியமாகவும் திகழ்பவை காடுகளே!

நான்காவதாக, உழவர்க்கு வேளாண்மைக்கருவிகள், வண்டிகள் முதலியன செய்வதற்கு வேண்டிய சிறுமரத் தேவைகட்கு உதவுவன்வும் காடுகளே!

இவ்வாறு வேளாண்மைக்குப் பயன் தரும் காடுகளில் பரப்பளவு இயல்பளவுக்கும் குறைவாகவே உள்ளதால், வேளாண்மைக்குத் தேவையானவற்றை முழுவதும் காடுகளிலிருந்து பெற இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. இன்றைய நிலையில், தொழில் துறைக்கும் வேண்டிய மூலப்பொருட்களுக்கும் காடுகளே நிலைக்களமாக விளங்குவதால், உழவர் பெருமக்கள் தங்கள் தேவைகளுக்குக் காடுகளையே முழுதும் நம்பி இருக்காமல், தமது நிலங்களிலேயே அல்லது தமக்கு அருகிலேயே மரங்களை உற்பத்தி செய்து தன்னிறைவு பெறும் வகையில் "சமூக நலக்காடுகள்" எனும் பெயரில் மரவளர்ப்புப் பணிகள் நடைபெறுகின்றன.

சிறப்பாகத் தமிழகத்தில், பத்தாண்டுகட்கு முன் 17 சதவிகிதம் விழுக்காடாக இருந்த காடுகளின் பரப்பு, தற்போது 19 சதவிகிதம் விழுக்காடாக உயர்ந்துள்ளது.

சென்ற பத்தாண்டுக் காலத்தில் மரப் பயிர் வளர்க்க விரும்புவோர்க்கு 500 கன்றுகள் வரை இலவசமாகவும், அதற்கு மேலும் தேவைப்படும் கன்றுகளை மானிய விலையில் கொடுத்தும் மரப்பயிர் வளர்க்க உதவுகிறது அரசு. மரப்பயிர் வளர்ப்பில் ஓராண்டு ஈராண்டுகளில் அறுவடை செய்ய முடியாது ஆகையால், நட்ட பிறகும் மரக் கன்றுகளைத் தொடர்ந்து வளர்த்திட மரவளர்ப்பு ஊக்குவிப்புத் தொகை கொடுத்து மக்களுக்கு மரவளர்ப்பில் தொடர்ந்த ஈடுபாடு கொள்ளும் எண்ணத்தை வளர்க்க அரசு வழி வகுத்துள்ளது.

தொடக்கத்தில் வனத்துறை வழியாக மட்டும் நடைபெற்ற மர வளர்ப்புப் பணி, ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் வேளாண்மைத்துறை ஆகியவை வழியாகவும் தற்போது ஊக்குவிக்கப்பட்டு வருகின்றது.

நடப்பு ஆண்டில் புதியதொரு திட்டம் செயலாக்கத்துக்கு வந்துள்ளது. அதன்படி சிறு மற்றும் குறு உழவர்கள், வேலைவாய்ப்பு இல்லாத இளைஞர்கள், பெண்கள் ஆகியோர்க்குச் சுய வேலை வாய்ப்பு அளிப்பதுடன், வருவாயும் கிடைக்க வழி செய்யப் பட்டுள்ளது. தகுதியான நபர்களைத் தெரிவு செய்த பிறகு, அதிலும் குறிப்பாக மூன்றி லொரு பங்கினர், பெண்களாக மற்றும் ஆதிதிராவிட மக்களாகத் தெரிவு செய்த பிறகு, அவர்கள் தனியாகவோ, கூட்டாகவோ, மரக்கன்றுகள் வளர்த்திட, பைக்கன்று ஒன்றுக்கு முதலில் பைசா பதினைந்தும், மூன்று மாதங்கழித்து நன்கு வளர்க்கப்பட்ட மரக்கன்று ஒன்றுக்கு பைசா முப்பதும் மானியமாகத் தரப்பெறுகின்றது.

பாலிதீன் பைகள் வாங்குவது முதல், நாற்றங்கால் பணிகளில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகட்குப் பயிற்சியும் தரப்படுகின்றது. ஒரு நபருக்கு 5,000 கன்றுகள் முதல் 10,000 கன்றுகள் வரை வளர்க்க ஒப்பந்தம் செய்யப்படுகிறது. அதன்மூலம் ஒரு நபர் ரூ.2,250/- முதல் ரூ.4,500/- வரை மானியம் பெறத் தகுதி பெறுகின்றார். உருவாக்கப்பட்ட கன்றுகளைச் சிறு மற்றும் குறு உழவர்கள் தங்கள் நிலங்களிலேயே நட்டுக்கொள்ளலாம். நிலமற்ற பயனாளிகள் தாம் வளர்த்த கன்றுகளைத் தேவையானவர்க்கு எந்த விலைக்கும் விற்று வருவாய் பெற்றுக்கொள்ளலாம். இத்திட்டத்தில் சேர்ந்துள்ள பயனாளிகட்கு அவர்களுக்குரிய தொகை ரொக்கமாகக் கொடுக்கப்படுவதில்லை. பாலிதீன் பைகள், விதைகள் தருவதன் மூலம் கொடுக்கப்படுகிறது. இறுதித்தொகை கேட்பு வரைவோலை வழியாகத் தரப்படுவதால், அரசு மானியம் முழுதும் முறையாகப் பயனாளியைச் சென்றடைகிறது. பயனாளிகள் வரைவோலையைப்



## அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையால் மிகவும் பிற்படுத்தப்பட்ட இன மாணவர்கள் பெற்ற பலன்!

**மருத்துவக் கல்லூரியில் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர் சேர்க்கை**

| கடந்த ஆண்டு (1988-89) | இந்த ஆண்டு (1989-90) |
|---|---|
| 68 | 187 |

**இவர்களில் வன்னிய மாணவர்கள்**

| கடந்த ஆண்டு | இந்த ஆண்டு |
|---|---|
| 26 | 75 |

**பொறியியல் (இஞ்சினீயரிங்) கல்லூரியில் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர் சேர்க்கை**

| கடந்த ஆண்டு (1988-89) | இந்த ஆண்டு (1989-90) |
|---|---|
| 354 | 685 |

**இவர்களில் வன்னிய மாணவர்கள்**

| கடந்த ஆண்டு | இந்த ஆண்டு |
|---|---|
| 109 | 292 |

பணமாக்க ஏதாவதொரு வங்கியில் சேமிப்புக் கணக்கு வைக்கவேண்டிய கட்டாயம் ஏற்படுவதால் சேமிப்பு எண்ணமும் ஏற்பட ஏதுவாகிறது.

இத்தகைய புதுமையான புரட்சித்திட்டம் மூலமாகப் பசும்பொன் தேவர் திருமகன் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் ரூபாய் இரண்டரை இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு, பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டுவிட்டன. இதன் மூலம் நடப்பெற்றுவிடும் என நம்பிக்கையுள்ளது. குறிப்பிட்ட பகுதியில் வளர்க்கக் கூடிய, வளரக்கூடிய, பலன்தரத்தக்க, விற்பனை செய்யக்கூடிய விறகு, பூ மற்றும் பழ மரக்கன்றுகளை உற்பத்தி செய்திட தொழில் நுணுக்க உதவியும் வனத்துறை வழங்குகிறது. இத்திட்டம் முழுமையாக வெற்றிகரமாகச் செயல்பட்டால் 2.5 மீ x 2.5மீ இடைவெளியில் ஏறத்தாழ 3,600 ஹெக்டேர் பரப்பில் நடுவதற்கு வேண்டிய நாற்றுகள் கிடைக்கின்ற வாய்ப்பும் ஏற்படும். மக்கள் பணவருவாய் பெறுவதோடு, சுற்றுச்சூழலும் தூய்மை பெறும் வாய்ப்பு வலுப்பெறும் என்பதில் ஐயமில்லை.



தமிழக அரசின் மற்றொரு திட்டம், பசுமைச் செழிப்பிற்கும் சுற்றுச்சூழல் தூய்மைப் பாதுகாப்பிற்கும் உதவிடும் வகையில் பள்ளி, கல்லூரி, தொழிற்சாலை போன்ற நிறுவனங்களின் வளாகங்களில் அழகுதரும் பூ மரங்கள், நிழல் தரும் பெருமரங்கள் ஆகியவற்றை நட்டு வளர்க்கத் தேவையான மரக்கன்றுகளை இலவசமாகத் தந்து வனத்துறை உதவுகிற திட்டம்.

மரக்கன்றுகளை இலவசமாகப் பெற்றிட விதிக்கப்படும் ஒரே ஒரு நிபந்தனை, தரப்படும் மரக்கன்றுகளை நடுவதோடு மட்டும் நின்றுவிடாமல், அவை மரங்களாகும் வரை தொடர்ந்து பேணிப் பாதுகாத்திடுவோம் என்ற உறுதிமொழி மட்டுமே! சோதனை அளவில் இவ்வாண்டு சிவகங்கை வனக்கோட்டம் வழியாக ஏறத்தாழ 15,000 பல்வகை மரக்கன்றுகள் ஆயத்தமாய் உள்ளன. வருகின்ற மழைக்காலத்தில் அவற்றைப் பெற்று நட்டு வளர்த்திட விரும்பும் நிறுவனங்கள் சிவகங்கை மாவட்ட வன அலுவலரை அணுகலாம்.

# ஆவணங்கள் பாதுகாப்பு — ஒரு சவால்.

○○ புத்தகப் புழுக்களிடமிருந்து, புத்தகங்களைப் பாதுகாப்பது எப்படி ? அதற்கு வழி முறைகள் என்னென்ன? என்பது போன்ற நல்ல பல யோசனைகளைக் கூறுகிறார் இக் கட்டுரையாசிரியர்

புத்தகப் புழுக்கள் பேப்பர், அட்டை, துணி போன்ற ஆவணப் பொருட்களை உண்மையிலேயே சாப்பிடக்கூடியதாக இருக்கின்றன. புத்தகப்புழு மற்றும் புத்தக லைஸ் (lice) எனப்படும் ஒருவகையான புத்தகப் பூச்சி இவைகள் ஆவண மேற்பரப்பை உண்ணும் புழுக்களை விட ஆவணப் பொருட்களுக்கு அதிகமான பயங்கரச் சேதத்தை உண்டுபண்ணுகின்றன. "காஸ்ராநுவஸ்" (Gastrallous Indicus) என்று அழைக்கப்படும் புழு இனம் நமது நாட்டில் சாதாரணமாக காணப்படுகிறது.

புத்தகப் புழுக்கள் வழக்கமாக புத்தகப் பைண்டிங்கின் மேற்பரப்பில் முட்டையிடுகின்றன. இந்த முட்டைகள் 5 அல்லது 10 நாட்களில் குஞ்சு பொரிக்கின்றன. கூட்டுப் புழுவானது புத்தகத்தின் மேலிருந்து அதன் உட்பக்கம் வரை சென்று அதனைச் சாப்பிட்டுச் சேதப்படுத்துகிறது. 5 நாட்களுக்குப் பிறகு அது முழுதும் வளர்ச்சியடைந்த பூச்சியாக வெளிப்படுகிறது. ஆகையினால் அவைகள் புத்தகங்களுக்கு அதிகமான சேதம் உண்டாக்கி விடுகின்றவரை அவற்றைக் கண்டுபிடிப்பது கடினமாகும்.

புத்தகப் புழு அல்லது புத்தக வண்டு இவை இரண்டு வளர்ச்சி நிலையினைக் கொண்டுள்ளன. அதாவது கூட்டுப்புழு, முழு சிறகு அமைந்த கூட்டுப்புழு, புத்தகத் தொகுதியின் மேற்பரப்பிலிருந்து கீழ்வரை பொதுவாகச் செல்லக்கூடியது. இவை குண்டூசித் துவாரங்கள் போன்று துவாரமிட்டு புத்தகங்களைச் சேதப்படுத்தும். மேலும், சம அளவில் வளையிட்டு ஊடு துளை செய்கிறது. வண்டு பூச்சிகள், பாதிக்கப்பட்ட ஆவணங்களிலிருந்து பாதிக்கப்படாத ஆவணங்களுக்குப் பாதிப்பு பரவுவதற்கு முக்கிய காரணமாக இருக்கிறது.

புத்தகப் புழுக்களைத் தடுப்பதற்கு முன் எச்சரிக்கைக்காகக் காற்று உள்ளே செல்ல முடியாத மரத்தினால் செய்யப்பட்ட ஒரு நிலைப் பெட்டியில் உள்ளே துவாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதன் தட்டுகளில் ஆவணங்களை வைத்து, இரசாயனப் புகையூட்டுதல், செய்யப்படுகிறது. இரசாயனப் புகையூட்டுதலுக்காக ஆவணங்கள் நிலைப் பெட்டியில் உள்ளே அமைந்துள்ள தட்டுகளின் மேல் பரப்பில் வைக்கப்படுகின்றன.

புத்தகங்கள் கோப்புகள் 'T.V' வடிவில் அவற்றில் கட்டப்பட்ட பாகம் மேலே இருக்குமாறு விரித்து வைக்கப்படவேண்டும். "பாராடைகுளோரா பென்சான்" அல்லது தைமால் இவற்றில் ஒன்றை ஒரு சிறிய கிண்ணத்தில் நிலைப் பெட்டியின் உள்ளே அமைத்துள்ள நிலையத்தின் (Stand) மேல் வைக்க வேண்டும். ஒரு 10 வாட் மின் விளக்கு கிண்ணம் வைத்துள்ள நிலையத்தின் உட்பாகத்தில் அமைத்து அதனை எரியச் செய்ய வேண்டும். உஷ்ணத்தினால் வெளிக்காற்று உள்ளே போகாத முறையில் அமைந்துள்ள நிலையப்பெட்டியில் உள்ளே உள்ள இடத்தில் "பாராடைக்குளோரா பென்சன்" காற்றுவழி ஆவியாவது பரவி உயிரோடு இருக்கிற கூட்டுப் புழுக்களையும் உயிருள்ள வண்டுகளையும் அழிக்கிறது. 7 முதல் 8 நாட்கள் வரை ஆவணங்களில் அல்லது புத்தகங்களில் உள்ள புழுப் பூச்சிகளை அழிப்பதற்காக நிலையப் பெட்டியின் உள் வைத்திருக்க வேண்டும். சில சமயங்களில் வளர்ச்சியடைந்த பூச்சிகளை முழுதும் போக்குவதற்கு இரசாயனப் புகையூட்டுதல் முறையினை மறுபடியும் செய்ய வேண்டியதாக இருக்கிறது.

கரப்பான் பூச்சி மற்ற எல்லா வீட்டுப் பூச்சிகளையும்விட அதிக அளவில் வீடுகளில் இருக்கும். இப்பூச்சி, தாள், அட்டை, தோல், குறிப்பாக பசை மற்றும் பிசின் இவற்றைக் கொண்டு பயின்ட் (Bind) செய்யப்பட்ட துணி முதலியவற்றைச் சாப்பிடுகிறது. ஈரக்காற்று வெப்பம் மற்றும் இருட்டு இவைகள் இந்த பூச்சிகளின் வளர்ச்சிக்கு மிகவும் துணை புரிகிற சூழ்நிலையாகும். இவைகள், வெட்டுக்கிளி மற்றும் சில்வி வண்டு இவற்றை ஒத்திருக்கும். மேலும், இவைகள் இருண்ட காவி நிறமாகவும், இரண்டு முன் தள்ளும் உணர்கொம்பும் உடையதாகவும் இருக்கும். இவைகளின் இனத்தில் அனேக வகைகள் இருக்கின்றன. இவைகளில் வீட்டிலுள்ள சாதாரணக் கரப்பான் பூச்சி போன்று ஆவலாய் எல்லாப் பொருட்களையும், உண்ணும் தன்மையுள்ளதாயும், குறிப்பாக இனிப்பான மற்றும் மாவுச் சத்துடைய பொருட்கள் மீது ஒரு குறிப்பிடத்தக்க விருப்பம் உடையதாகவும் இருக்கும். பகலில் இவைகள் இருட்டாக உள்ள ஈரம் ததும்பும் நிலையிலுள்ள கீறல்களின் உள்ளே பதுங்கியிருக்கும். ஆனால், இரவு முழுவதும் உணவு தேடி சுற்றித் திரியும்.

கரப்பான் பூச்சிகளை ஒழிப்பதற்காக டி.டி.டி. போன்ற பூச்சிக்கொல்லி மருந்தை காலமுறையில் பயன்படுத்தவேண்டும். அல்லது 'பிலிட்' போன்ற பூச்சி மருந்துகளைப் பூச்சிகள் அடிக்கடி வருகின்ற இடங்களாகிய இருட்டான, மூலைகள், சுவர்கள், அடுக்கங்கள் (Racks) மற்றும் அலமாரியின் பின்புறங்களிலும் தெளிப்பது ஆவணங்களில் பூச்சிகள் உற்பத்தியாவதைத் தடுப்பதற்கு கையாளுகிற ஒரு நல்ல முன் எச்சரிக்கை முறையாகும். இந்த ஆவணக் காப்பகத்தைப் பொருத்தமட்டில், கரப்பான் பூச்சிகளின் தொல்லைகள் மிகக் குறைவு.

காளான் (Melden and Fungi) கூட்டமாக உருவாகும் தாவர இனமாகும். இவை சாம்பல் நிறமான கறும் பழுப்பு நிறத்திலிருக்கும் (Gray to dark Brown in colour) காகிதத்தையும், அட்டையையும் பாதிக்கச் செய்து அவற்றில் சாம்பல் நிற துருவுண்ணும் போன்ற ஒட்டுத்துண்டுகள் உண்டு பண்ணுகிறது. வழக்கமாக இரு பாக்ஸிங் புத்தகங்களின் பக்கங்கள் முதலியவற்றில் சாம்பல் நிறப்புள்ளிகளிட்டு நிறத் தோற்ற மாற்று என்று வழங்கப்படுகிறது.

இந்த நுண்ணிய தாவர அணுக்கள் குறைந்த தட்ப-வெட்ப நிலையில் (40 டிகிரி) பாரன்ஹீட் மிக மெதுவாக வளர்கிறது. ஆனால் அதிக உஷ்ண நிலையில் வெகு வேகமாக வளர்கிறது. பலவகை உயிரின வகைகளுககும் வெவ்வேறு சீதோஷ்ண நிலை தேவைப்படுகிறது. அதிகமான ஈரப்பதமும் மற்றும் மந்தமாகக் காற்றோட்டமும் இதன் வளர்ச்சிக்குச் சாதகமாக துணை புரிகின்றன. நொடியில் வளரும் காளான் (Melden) சாதாரணமாக தொகுப்புகளும் (Volumes) மற்றும் புத்தகங்களும் ஒன்றுக்கொன்று அழுத்தும் நிலையில் இருக்கும் பொழுது உண்டாகிறத. இது எவ்வாறு உண்மையாக இருக்கிறது.

ஏன் என்றால் புத்தகம் அல்லது தொகுப்புகள் ஒன்றுக்கொர்ன்று அழுத்தும்பொழுது இடையிலுள்ள வாயுமண்டலம் (Atmosphere) ஒரு லேசான மந்தமாகக் காற்றோட்ட இடமாகக் குறைக்கப்படுகிறது. இது நொடியில் உண்டாகும் காளான் வளர்ச்சிக்கு உறுதுணையாக உள்ளது. புத்தகங்கள் மேலும் தொகுப்புகள் இடைவெளியில் தட்டில் வைத்திருந்தால் அவைகளில் பொதுவாக நொடியில் உற்பத்தியாகும் காளான் உண்டாகாமல் இருக்கும்.

சாதாரணமாக, காற்றோட்டம், சீதோஷ்ண நிலையைக் கட்டுப்படுத்துதல் மேலும், இடத்தின் ஈரப்பதம் இவற்றை முறையே 22-24 டிகிரி நூறு கூறுகளுள்ள அளவை (சென்டிகிரேடு 72 டிகிரி-75 டிகிரி பாரன்ஹீட்) மற்றும் 44-45 சதவிகிதம் வைத்தால் நொடியில் வளரும் காளானின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தலாம். சீதோஷ்ண

*சு. முத்துசுப்பிரமணியன்*
*ஆராய்ச்சி அலுவலர்*

## பொது அறிவுத் தகவல்கள்

***ஐஸ்கிரீம் தயாரித்த முதல் நாடு***

முதன் முதலில் ஐஸ்கிரீம் தயாரித்தது சீனாவில்தான். சீனர்கள் பனிக் கட்டியுடன் எலுமிச்சம் பழம், ஆரஞ்சுப் பழம் மற்றும் பலவகைப் பழ வகைகளைச் சேர்த்து ஐஸ் கிரீம் தயாரித்திருக்கிறார்கள்.

***நத்தையின் வேகம்***

ஒரு கிலோ மீட்டர் தூரத்தைக் கடக்க நத்தைக்குச் சுமார் இருபத்து நான்கு மணி நேரமாகும்.

***மின்காந்த இரயில்***

மின்காந்த சக்தியால் இயங்கும் பறக்கும் ரயில் ஜப்பானில் ஓட்டப்பட்டது. இது மணிக்கு 400 கிலோ மீட்டர் வேகத்தில் பறக்கும். அந்த இரயிலின் பெயர் "லீனியர் கார்" எனப்படும்.

மின்காந்தச் சக்தியால் வெகு வேகமாய் மிதந்து செல்லும் அந்த ரயில். தண்டவாளத்தின் மேல் படாமல் சில அங்குலம் உயரத்தில் பறந்து செல்கிறது!

***வேகமாகப் பறக்கும் பூச்சி***

"ஹாக்மாத்" என்னும் பூச்சிகள் அதிவேகமாகப் பறக்கும் சக்தி பெற்றவை. இது மணிக்கு 50 கிலோ மீட்டர் வேகத்தில் தொடர்ந்து சுலபமாகப் பறந்து செல்லக் கூடியது.

***சாக்லேட் இசைத்தட்டு***

1903-ஆம் ஆண்டு சாக்லேட்டால் கிராமப்போனில் இசைத்தட்டு கண்டுபிடிக்கப்பட்டது. அதை, கிராமப்போனில் போட்டுத் தேவைப்படும்வரை பாட்டுக் கேட்கலாம். பாட்டைக் கேட்ட பிறகு, சாக்லேட்டால் உருவாக்கப்பட்ட அந்த இசைத் தட்டைச் சுவைத்துச் சாப்பிடலாம். ஆனால் இந்தச் சாக்லெட் இசைத்தட்டு பிரபலமடையவில்லை.

***தேவாங்கின் வேகம்***

இரண்டு மீட்டர் தூரத்தை மனிதனால் ஒரே விநாடியில் கடந்து விட முடியும். ஆனால், தேவாங்கிற்கு அந்தத் தூரத்தைக் கடந்து செல்ல அறுபது விநாடிகள் தேவைப்படும். அதாவது ஒரு நிமிடம் வேண்டும்.

*தமிழ்மணி எழுதிய "அறிவியல் கருத்துக் குவியல்கள்" என்னும் நூலிலிருந்து.*

## கொடி நாள் வசூல்: அகில இந்தியச் சுழற்கோப்பைகளைத் தமிழகம் வென்றது

ஆண்டுதோறும் பொதுமக்களிடமிருந்து முன்னாள் இராணுவத்தினர் நலனுக்கென கொடிநாள் நிதி வசூலிக்கப்படுகிறது.

கொடிநாள் நிதிக்கென அதிகத் தொகை வசூலித்த மாநிலத்திற்கு மத்திய அரசினால் சுழற்கோப்பை ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. 1985 மற்றும் 1986 வருடங்களுக்கான சிறந்த கொடி நாள் வசூலுக்கான சுழற்கோப்பையினைத் தமிழகம் ஏற்கெனவே வென்றுள்ளது. மேலும் மக்கள் தொகையின் அடிப்படையில் வழங்கப்படும் அதிகக் கொடிநாள் வசூலுக்கான சுழற்கோப்பையினையும் 1986 ஆம் ஆண்டு தமிழகம் வென்றுள்ளது.

1987-ஆம் ஆண்டு கொடி நாள் நிதியாக ரூ.81.97 இலட்சம் தமிழக மக்களால் வழங்கப்பட்டது. இதன் அடிப்படையிலே, 10.6.89 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற மத்திய முப்படை வாரியத்தின் குழுக் கூட்டத்தில் 1987க்கான சிறந்த கொடி நாள் வசூலுக்கான சுழற் கோப்பை மற்றும் மக்கள் தொகையின் அடிப்படையில் வழங்கப்படும் அதிகக் கொடிநாள் வசூலுக்கான சுழற்கோப்பை, இவ்விரண்டும் மாண்புமிகு மத்திய பாதுகாப்பு அமைச்சர் அவர்களால் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டன.

நிலையை ஒழுங்குபடுத்துதல் மேலும் இடத்தின் ஈரப்பதம் மேற்கூறிய வரையறைக்குள் கொண்டுவரமுடியாவிட்டால் இந்த நொடியில் வளரும் காளான்களின் உற்பத்தியை ஒரு குறிப்பிடத்தக்க நிலைவரை மின் விசிறிகள் மூலமாக அறையில் காற்றோட்டத்தைச் சீராகப் பராமரித்தால் குறைக்க இயலும். ஒருவேளை நொடியில் உண்டாகும் காளான்கள் ஏற்கெனவே புத்தகங்கள் மற்றும் தொகுதிகளைச் சேதப்படுத்தியிருந்தால், அதை அழிக்க ஒரே வழி அவற்றைத் "தைமால்" என்ற இரசாயனப் பொருளினால் புகையூட்ட வேண்டும். இது மாதிரி நடக்கிற சம்பவங்கள் இக்காப்பகத்தில் மிகவும் குறைவு. பூச்சியால் பாதிக்கப்பட்ட ஆவணங்கள் "பாரா-டி-குளோரா பென்சான்" இரசாயனப் பொருளைக் கொண்டு இந்த ஆவணக் காப்பகத்தில் புகையூட்டப்படுகிறது. இந்த இரசாயனப் பொருள் காளானின் உறுப்புக்களை அழிக்கிறது. ஆனால், அவற்றைப் போக்குவதில்லை அல்லது அதன் கரைகளை நிற வேறுபாடு செய்வதில்லை.

(Silver fish) ஆவணங்கள் மேற்பாகங்களை உண்ணக்கூடியது. இது பொதுவாக, தொகுதிகளின் வெளியே உள்ள பைண்டிங் துணி, தோல், அட்டை முதலியவற்றைச் சேதப்படுத்துகிறது. ஈரச் சுவர்களைத் தொடும்படியாக வைத்த ஆவணங்கள் ஈரமாவது அல்லாமல் வெள்ளி மீனால் சேதமும் அடைய வாய்ப்புடையாதாகிறது. வெள்ளி மீன் ஒரு சின்னஞ்சிறிய பூச்சியாக இருக்கும். இது சாம்பல் நிறமான மின்னக்கூடிய செதில்களை கொண்டிருக்கும் இது உலோகத்தால் செய்யப்பட்ட பளபளப்புத் தன்மையை இப்பூச்சிக்கு அளிக்கிறது. ஈரமான மற்றும் இருண்ட இடங்களில் மட்டும் அவைகள் சுறுசுறுப்பாக இருக்கும். ஆனால், வெளிச்சத்தில் சிறிய இடைவெளிகளில் மறைந்து கொள்ளும். இந்தப் பூச்சிகள் சீக்கிரத்தில் இனப்பெருக்கமாகாது. ஆனால், இவற்றை அழிப்பது கஷ்டம்.

ஒரு பொது முன்னேற்பாடாக இருக்க, ஆவணங்கள் சுவரைத் தொடாதபடி செய்ய வேண்டும். ஆவணக் கட்டுகள் சுவர்களில் சாயலாகாது. பொருத்தமான அளவு புத்தகத் தாங்கிகளைக் கட்டுகள் முடிவில் -சாயாமல் நேராக இருப்பதற்கு உபயோகப்படுத்தலாம். ஆவணங்கள் சுவர்களைத் தொடுவதை தவிர்க்க அடுக்கங்கள் (Racks) சுவரிலிருந்து 6 அங்குல தூரத்தில் அமைக்கப்படலாம். அடுக்கங்களையும், அலமாரிகளையும் சுவரிலிருந்து தூரத்தில் வைப்பது ஒட்டடையைச் சுத்தம் செய்ய வசதியாக இருக்கும். அடுக்கங்களும் மற்றும் ஆவணக் கட்டுக்களும் முறையாகவும் மற்றும் ஒழுங்காகவும் இந்த ஆவணங்கள் காப்பகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அப்படியிருந்தும் ஒரு சில இடங்களில் சில நேரங்களில் வெள்ளி மீன்கள் கண்டு பிடிக்கப்பட்டன. ஆனால் உடனடியாக மேற்சொல்லிய) முன் எச்சரிக்கை வழிமுறைகள் பின்பற்றப்பட்டு இந்த அபாயம் தடுக்கப்பட்டது. ஒரு கூடுதலான முன் எச்சரிக்கைக்காகக் "கற்பூரக்கல்" (Napthelene Bricks) திறந்த அடுக்கங்களில் வைக்கப்பட்டுள்ளது. இவைகள் நல்ல பூச்சி தடுப்புத் தன்மை கொண்டவையாக இருக்கின்றன.

கரையான் (Termite white Ants) வெள்ளை நிறம் கொண்டதாகவோஅல்லது உண்மையான எறும்பு வகையைச் சேர்ந்த சிறகு உள்ள பூச்சிகள் கூட்டங்களாகவோ இவைகள் இல்லை. இவற்றின் நிறமானது வெளுப்பான மஞ்சள் நிறத்திலிருந்து இருட்டான பழுப்பு நிறம் கொண்டதாகவும் இருக்கும். கரையான்களில் மூன்று வகைகள் உள்ளன. இவற்றில் எந்த வகையைச் சேர்ந்தவைகளாக இருந்தாலும் அவை ஆவணங்களை அழிக்கக்கூடிய அரித்துவிடக் கூடிய வல்லமை பெற்றவை ஆகும்.

ஆகவே, கரையான் பற்றிய ஆவணங்களைக் காப்பாற்ற இராணுவ நடவடிக்கை போன்ற துரித கதியில் செயல்பட வேண்டியது மிக அவசியம். முதலில் கரையான் பற்றிய ஆவணங்களைத் தனியாகப் பிரித்து எடுத்து அவற்றில் உள்ள கரையான்களை அகற்ற வேண்டும். அரைகுறையாக அரிக்கப்பட்டவைகளை வெய்யில் படச்செய்ய வேண்டும். அந்த இடத்தில் மீண்டும் ஆவணங்களை எக்காரணங்கொண்டும் வைக்காமல் இருத்தல் நல்லது.

கரையான் பிடிப்பதற்குமுதலும்முக்கியமுமான காரணம் ஆவணங்களின் அருகாமையில் சுவரிலோ, மரச்சாமான்களிலோ, தரையிலோ ஈரப்பசையாகும். இம்மாதிரி ஈரப்பசை ஆவண அறை அருகில் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

கரையான் பிடிக்காமல் தடுக்க கோல்தார் கிரியஸோட் (Coaltar reosate) என்ற கிருமி நாசினியை மண்ணெண்ணையுடன் ஒன்றுக்கு இரண்டு என்ற விகிதத்தில் கலந்து கரையான் பற்றிய இடங்களில் பூசலாம். இந்தக் கலவையைப் பூசியபிறகு தீ பிடிக்காமலும் பார்த்துக்கொள்வது அவசியமாகும். பினைலை, தண்ணீருடன் கலந்தும் பூசலாம்.

இரண்டு தடவைகள் ஆர்த்தோக்ளோ பெனில் (Orthochloro phenel) நாப்தல் (Napthel) மற்றும் பெட்ரோலியப் பொருள்களை ஒன்றுக்கு ஒன்று நாற்பது என்ற விகிதத்தில் கலந்து வார்னிஷுடன் பூசலாம்.

ஜிங்க் க்ளோரைட் (Zinc chloride) என்ற இரசாயனத்தை 20 சதவீதம் தண்ணீரில் கலந்து பூசலாம். அல்லது வெறும் சூடுபடுத்திய கிரியஸோட்டை கரையான் பற்றிய மரச்சாமான்களின் மீதும் சுவர் மற்றும் தரைகளின் மீதும் பூசலாம். இவற்றை அடிக்கடி மிகவும் கண்காணிப்புடன் தொடர்ந்து செயல்படுத்திவந்தால் கரையானின் பிடியிலிருந்து ஆவணங்களைப் பாதுகாக்கலாம்.



# மஞ்சள் மகிமை

—டாக்டர் எஸ். சிதம்பரதாணுப்பிள்ளை

மஞ்சள் செடி கிழங்குப் பிரிவைச் சார்ந்தது. சம சீதோஷ்ணப் பிரதேசத்தில் செழிப்பாக வளரும். மஞ்சள் செடி சுமார் மூன்றடி உயரம் வரை வளரும். இதன் தண்டு கூவைச் செடியின் தண்டைப் போன்றது. இலை, கூவைச் செடியின் இலையைப் போன்றுமிருக்கும். சாதாரணமாய் மஞ்சள் கிழங்கை நாம், வீடுகளில் கறி வகைகளுக்கும், உடல் பூச்சுக்கும் உபயோகப்படுத்துகிறோம். உடல் நலத்துக்கும் மிகச் சிறந்தது.

இதன் இலையைக் கசக்கி முகர்ந்தால் மாங்காய் வடு பிஞ்சு மணம் உடையதாய் இருக்கும். மஞ்சளின் சுவை கார்ப்பும், துவர்ப்பும் கலந்தது.

மஞ்சளில் பல இனங்கள் உண்டு. அவைகளில் முக்கியமானதும், உபயோகப் படக்கூடியதுமானவை: (1) கறி மஞ்சள் (2) கஸ்தூரி மஞ்சள் (3) மர மஞ்சள் (4) காட்டு மஞ்சள் (5) குரங்கு மஞ்சள் (6) பலா மஞ்சள் (7) காஞ்சிரத்தின் மஞ்சள் (8) நாக மஞ்சள். இன்னும் வேறு சில பிரிவுகளும் இருக்கின்றன. அவை பொன்குறட்டு மஞ்சள் பழுக்காய் மஞ்சள், குட மஞ்சள் முதலியனவாகும்.

மருத்துவப் பாகங்களுக்கு, முதலில் கூறிய முக்கியப் பிரிவு மஞ்சள்கள் சாதாரணமாய் பயன்படுத்தப்படுகின்றன.

கறி மஞ்சளில் ஆண், பெண் என இருபாலுண்டு. குடம் போன்ற வடிவமான மஞ்சளை பெண்ணென்றும், விரல் போன்ற மஞ்சளை ஆணென்றும் சாதாரணமாய் மக்கள் நிர்ணயமாய் கூறுவார்கள்.

பொன்னிறமான மஞ்சள் கிழங்குக்குப் புலாலின் துர்நாற்றத்தை அகற்றும் தன்மை உண்டு. பெண்கள் மஞ்சளைப் பூசி, நடமாடினால், பித்தம், வாந்தி தோசங்கள், வாதம் முதலிய நோய்கள் நீங்கும்.

அதுமட்டுமன்று, தலைவலி, நீர் ஏற்றம், கொடிய மேக நோய்கள், பீனிசம், உடலில் ஏற்படும் வலிகள், கடி விஷம், விரணங்கள் முதலானவற்றைப் போக்கும் பொதுக் குணங்களும் மஞ்சளுக்கு உண்டு.

விரல் போன்று நீண்டு உருண்டு இருக்கிற் வறட்டு (விரல்) மஞ்சளுக்கு, உடம்பில் ஏற்படும் சொறி சிரங்கு, நீர்த் தோசங்கள், ...ள்வலிப்பு, விஷம், உடல் சூடு, கண் சூடு முதலிய நோய்களை அகற்றும் தன்மை உண்டு. இது தேகத்தை அழகுப்படுத்தவும் செய்யும்.

குட மஞ்சளை, பெண்கள் தொடர்ந்து பூசி வர, முகத்தில் மினுமினுப்பு உண்டாகும். உடலிலுண்டான சிலந்தி நோயும் மாறும்.

மஞ்சள் செடியின் இலைக்கு - மூக்கிலிருந்து வடியும் நீர், பீனிசம், தீராத சொறி சிரங்குகள், மேகம் கரப்பான், வெண் குஷ்டம், தோல், கிருமி, வெட்டை விஷம், வலிகள், புண் புரைகள் போன்ற பல நோய்களை மாற்றும் தன்மையுண்டு.

கஸ்தூரி மஞ்சள் மிக வாசனையுடையது. இதன் இலைத் தண்டின் நடுவில், ஒருவிதச் சிவப்பு நிறம் காணப்படும். கஸ்தூரி மஞ்சள் மிக வாசனையுடைய பொருளாகும். இதன் இலைச் சாற்றால், கிரந்திப் புண், கரப்பான், சில்விஷங்கள், சிரத்ரோகம், விக்கம், வலிகள் முதலியன தீங்கும்.

கஸ்தூரி மஞ்சளுக்கு, நீர் நோய்கள், மேகம், துர்நாற்றம், புண்புரைகள் போன்றவற்றைப் போக்கடிக்கும் குணமுண்டு. மர மஞ்சள் செடி கொடியினத்தைச் சார்ந்தது. இதன் இலை, வடிவத்தில் உலத்தி பனை இலையைப் போன்றும், ஆனால் சிறியதாயும் இருக்கும். மரமஞ்சள் ஒரு விதவாசனையாய் சுவையில் புளிப்பாயும் இருக்கும். மரமஞ்சள் புண்புரைகள், கண்நோய், சுரம், அம்மை நோய் போன்ற பல நோய்களை மாற்றும் பண்புடையது.

பலா மஞ்சள், பலா மரங்களில் ஒரு விதக் கட்டையாகவும் மஞ்சள் நிறமாகவும் பிடித்திருக்கும். இதற்கு இலை, வேர் முதலியவை இல்லை. இது சுருண்டு, மரத்தில் கட்டைக் கட்டையாகப் பற்றியிருக்கும். பலா மஞ்சளுக்கு, அம்மை நோய், வீக்கம், விஷம், ஈரல் நோய் முதலியனவற்றை மாற்றும் தன்மை உண்டு.

காஞ்சிரை மஞ்சள், காஞ்சிரை என்று வழங்கப்படும் எட்டி மரத்தின் கிளைகளில் பற்றி கணுக்களாகத் தென்படும். வெண் மஞ்சள் நிறமுடையதாய் இருக்கும். காஞ்சிரை மஞ்சளுக்கு, கடி விஷம், வாதக்கிருமி, வயிற்றுப்பொருமல், வலி, விக்கல் முதலியவைகளை மாற்றும் தன்மையுண்டு.

காட்டு மஞ்சள் இலை, கச்சோலத்தின் இலையைப் போன்று இருக்கும். இது பூண்டு இனத்தைச் சார்ந்தது.

காட்டு மஞ்சளுக்கு குன்மம், வயிற்றுவலி, வெட்டு, காயத்தினாலுண்டாகும் புண், வைசூரி (அம்மைநோய்) முதலியவைகளைத் தீர்க்கும் தன்மையுண்டு.

குரங்கு மஞ்சள் செடி ஒருவிதமான பூண்டு இனத்தைச் சார்ந்தது. இதன் இலை கச்சோலத்தின் இலையிலிருந்து கொஞ்சம் சிறிதாகவும், இருண்ட பச்சை நிறமாகவும் இருக்கும். குரங்கு மஞ்சள் செடி, காடுகளில் அடர்த்தியாகச் செழித்து வளரும். இதன் காய் நல்ல மிளகிலிருந்து சிறிது பருமனாய் இருக்கும். இந்த மஞ்சளுக்கு குரங்கு, ஊரல், தழுவணை, தேமல் முதலிய நோய்களை மாற்றும் சக்தியுண்டு. குரங்குகள், இதன் இலையைக் கிள்ளி தன் முகத்தில் தேய்த்துக் கொள்வதால், அந்த இலையின் மஞ்சள் நிறச் சாயம் குரங்கின் முகத்தில் படிந்து விடுகிறது.

நாக மஞ்சள் ஒருவிதக் கொடி இனத்தைச் சார்ந்தது. நறுநன்றி போன்ற சிறிய கிழங்கு வேர்களைக் கொண்டது. இவ்வேரை உரைத்துப் பார்த்தால் தங்கத்தின் நிறம் போல் தென்படும். நாக மஞ்சள் விஷ நோய்களுக்கு முக்கியமாக உபயோகப்படுத்தப் படும். முறுவு நோய் (சன்னி), வலி, சீதம், வெட்டுக்குத்துக் காயங்கள் முதலியவைகளுக்கு நாக மஞ்சளைத் தனித்தும், பல மருந்து வகைகளுடன் சேர்த்தும் பயன்படுத்தலாம்.

நாக மஞ்சள் கொடியின் பக்கத்தில் சென்றால், ஒருவித வாசனை வீசும். செடியின் இலைகளோ வாட்டமுற்றுக் காணும்.

"மஞ்சள் மருத்துவ மகிமை" என்னும் நூலிலிருந்து.

### தன்னம்பிக்கை தரும் வெற்றி

'என்னால் முடியும்' என்ற தன்னம்பிக்கையை வரவழைத்துக் கொள்ள முடிந்தால் எவ்வளவு கடினமான வேலையாக இருந்தாலும் சரி — அதைக் கண்டிப்பாகச் சாதித்து விடுவீர்கள்! மிக எளிய காரியமாக இருந்தாலும், அதை, 'நம்மால் செய்ய இயலாது' என்று நீங்கள் கற்பனை செய்து கொள்வீர்களேயானால் செய்ய முடியாமலே போய் விடும்! கரையான் புற்றுக்கூடக் கடக்க முடியாத மலையாகிவிடும்.

—எமிலிகூவே

# முத்தான முத்தல்லவோ!

சென்னை அண்ணா சாலையில் உள்ள பூம்புகார் கலைக் கூடத்தினுள் நுழைகிறோம்.

வகை வகையான நகைகள் வரிசை வரிசையாக வைக்கப்பட்டுள்ளன.

எப்பக்கம் திரும்பினாலும் அணிமணிகள், அலங்கார அணிகலன்கள்!

கண்ணையும் கருத்தையும் கவரும் இந்தக் கவின்மிகு அணிகலன்கள் கண்காட்சி, பூம்புகார் விற்பனை நிலையத்தில் ஜூலைத் திங்கள் 19-ஆம் நாள் தொடங்கி வைக்கப் பட்டது.

முதலில் நாம் பார்ப்பது, ஜெய்ப்பூர் கற்கள். வானத்து நட்சத்திரங்கள்போல் மின்னும் இந்தக் கற்கள் தங்க நகைகளில் பதித்தால் எப்படி இருக்கும்?



வண்ண மணிமாலைகள்தான் எத்தனை எத்தனை இங்கே குவித்து வைக்கப்பட்டிருக் கின்றன! அவற்றில் எதை வாங்குவது? எதை விடுப்பது?


இந்த மாலைகளில் குறைந்த விலை ரூ. 30. அதிக விலை எவ்வளவு தெரியுமா? ரூ. 5,000.

அங்கே, பளபளக்கும் வெண்முத்துக் களைப் பார்க்கிறோம். அவை அனைத்தும் ஐதராபாத்திலிருந்து வந்தவை. 20 கிராமி லிருந்து 100 கிராம் வரை முத்துக்கள் உள்ளன. இவை அனைத்தும் அசல் முத்துக் களே. இதேபோல, அசல் பவழங்களையும் இங்கே பார்க்க முடிந்தது. இவற்றையெல் லாம் கண்ணாரப் பார்க்கும்போது, இயற்கை இயற்கைதான், செயற்கை செயற்கைதான் என்று எண்ணத் தோன்றுகிறது!

ஆண்டவனுக்கு அணிவிக்கப்படும் 'கோயில் நகைகள்' கொள்ளை அழகுடன் காட்சியளிக் கின்றன.

வெள்ளியில் தங்க முலாம் பூசப்பட்ட கற்கள் பதித்த இந்த நகைகளை ஆரணங்கு களும் அணியலாமாம்! செயற்கை முத்து மாலை, அட்டிகை, ஜிமிக்கி, டாலர்கள், காசுமாலை, மகிரி ஆகிய நகைப் பட்டியலை இங்கே பார்க்கிறோம்.

அரக்குகள், வெறும் பார்சல் அனுப்பு வதற்கு மட்டும்தான் பயன்படுமா என்ன? அழகிய பூ வேலைப்பாடுகளுடைய வளை யல்கள் செய்யவும் பயன்படுகிறது என்பதை இங்கே பார்க்கும்போது வியப்பு ஏற்படு கிறது. ஆம். ஜோத்பூர் அரக்கு வளையல் தான் அவை!



நான்காம் அட்டை சொல்லும் கட்டுரை:

அந்தமான் தீவிலிருந்து வந்துள்ள நகைகள் என்ன தெரியுமா? தங்கம், வெள்ளி யால் செய்யப்பட்டவையல்ல அவை. எல் லாம் கிளிஞ்சல்கள்!

கடல் அன்னையின் வயிற்றில் பிறந்த அழகிய சிறிய பெரிய கிளிஞ்சல்கள், கன்னியருக்கு ஏற்ற கவின்மிகு நகைகளாக உருவம் பெற்றுள்ளன: 'மாலைகள், மோதி ரங்கள், நெக்லஸ்கள், காதணிகள் இப்படி...

நம் தமிழ்நாட்டுக் கடலூர் கோல்டு கவரிங் நகைகள், மதுரையில் தயாரான பஞ்சலோக நகைகள் பாவையரை மட்டும் அல்ல, பார்க்க வருவோரையும் தம் பக்கம் ஈர்க்கின்றன.

அசல் தங்க நகைகள் போலக் காட்சி யளிக்கும் அவற்றில் ஒன்றை எடுத்துப் பார்க்கிறோம். அவற்றைத் தயாரித்த திரு. சர்தார் குத்ரை சிங் அவர்களே கூறுகிறார்: "இவை தங்கம் அல்ல; தங்க முலாம் பூசப்பட்ட வெள்ளி நகைகள்" என்று. நுண்ணிய வேலைப்பாடுமிக்க இத்தகைய நகைகள் தயாரிப்புக்காக ஜெய்ப்பூரைச் சேர்ந்த இவர் பல பரிசுகளைப் பெற்றது மட்டுமல்ல, பத்மஸ்ரீ விருதும் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவருடைய சிறப்புத் தயாரிப்பு பூ வேலைப்பாடுடைய நகைப் பெட்டி மற்றும் எனாமல் தம்ளர்.

பழங்குடியினர் அணியும் நகைகளைப் பார்ப்போமா?

அதோ! அதற்குப் பெயர்தான் தோடா நகைகள். வெள்ளி மற்றும் தங்கமுலாம் பூசிய இந்த அணிகலன்களின் சிறப்பு வகை எவை தெரியுமா? குந்தன் டைப் மற்றும் மீனா நகைகள் (பூ வேலைப்பாடுடையவை). பெங் களூர் நகை வியாபாரி ஒருவர் கொண்டு வந்தவை இவை.

பொதுவாக பூம்புகார் கைவினைப் பொருள்கள் குறித்தும், இந்த நகைகள் கண் காட்சி குறித்தும், இதன் மண்டல மேலாளர் திரு. என். ஆர். இராமலிங்கம் கூறுகிறார்-

"இந்த நகைகள் கண்காட்சியைப் பொது மக்கள் ஆர்வத்துடன் வந்து பார்ப்பது மட்டுமல்ல, நகைகளையும் வாங்கிச் செல் கிறார்கள். இம்மாதிரியான கண்காட்சிக்கு மக்கள் ஆதரவு நிறைய இருக்கிறது" என்று கூறும் இவர், "பஞ்சலோகத்தால் ஆன நூறு








கைகள் உள்ள கணேசர் விக்கிரகம். ஒன்று கலை நுணுக்கத்துடன் செய்யப்பட்டிருப்பதையும் சுட்டிக் காட்டுகிறார்.

நூறு கைகள் உள்ள இந்தக் கணேசர் விக்கிரகம், இந்தியாவில் வேறெங்குமே இல்லை. தமிழ்நாட்டில் சுவாமிமலையில் தயாரான இந்த அற்புதச் சிலை, 3 அடி உயரமுள்ளது. இதன் விலை ரூ. 75,000.

பூம்புகாரில்-

தமிழ்நாட்டுக் கைவினைஞர்களால் உருவாக்கப்பட்டுள்ள ஏராளமான கலைப் பொருள்கள் உள்ளன. கல், மண், துணி, மரம், உலோகம் முதலியவற்றால் ஆன அழகிய சிற்பங்கள் கலையெழில் மிக்க வண்ணப் பொருள்கள் வகை வகையாக உள்ளன. அவை, தமிழகத்துக் கைவினைஞர்களின் திறமையினை உலகுக்கு எடுத்துக் காட்டுவனவாக உள்ளன.

மேலை நாட்டிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளையும் இவை வெகுவாகக் கவர்கின்றன. பூம்புகாரின் கடந்த ஆண்டு விற்பனை ரூ. 15 இலட்சம் என்றும், இந்த ஆண்டோ அது ரூ. 24 இலட்சமாக உயர்ந்துள்ளது என்றும் அறியும்போது, தமிழ்நாட்டுக் கலைப் பொருள்களின் உயர்ந்த தரம் சொல்லாமலே விளங்குகிறது.

பூம்புகாரில் உள்ள கலைப் பொருள்களின் குறைந்த விலை ரூ. 3. அதிக விலை ரூ. 90,000.

சிற்பங்களில் விநாயகர் சிலையே அதிகமாக விற்பனையாகின்றனவாம்.

பத்து நாட்கள் நடந்த இந்த அணிகலன்கள் கண்காட்சி, பலரையும் கவர்ந்திருக்கிறது என்பது ஒருபுறம் இருக்க, 'நாங்களெல்லாம் பார்க்க வாய்ப்பில்லாமல் போய் விட்டதே!' என்று பார்க்காதவர்கள் கேட்பதும் நமக்குக் கேட்கிறது.

இந்தக் கண்காட்சிதான் ஆண்டுதோறும் நடக்கிறதே!

-பி.வி. கிரி.

**அசல் முத்தைக் கண்டுபிடிப்பது எப்படி?**

(முத்து மாலை வாங்கக் கடைக்குச் செல்கிறோம். அது இயற்கை முத்தா? செயற்கை முத்தா என்று எப்படிக் கண்டுபிடிப்பது?

இயற்கையான நல்ல முத்துக்கள் — அதாவது அசல் முத்துக்கள் உருவத்தில், ஒழுங்கற்றவையாக (Unshaped), பளபளவென்று பளிச்சென்று இருக்கும்.

ஆனால், செயற்கை முத்துக்களோ, உருவத்தில் ஒரே மாதிரியாக, குண்டு குண்டாகக் காணப்படும்.



# பண்டைத் தமிழர்களின் கடல் வாணிகம்



-மா. சண்முகசுப்பிரமணியன்.

பண்டைத் தமிழர்களின் கடல் வாணிகம் பற்றிய செய்திகளைச் சங்க கால இலக்கியங்கள் பலவற்றிலும் காண்கிறோம்.

அன்றைய தமிழகத்தின் துறைமுகப் பட்டினங்களில் வாணிப வளம் எவ்வாறு இருந்தது என்று சிலப்பதிகாரம், புறநானூறு, அகநானூறு, பத்துப் பாட்டு ஆகிய இலக்கியங்கள் கூறுகின்றன.

"கடல் வழி வந்த நிமிர்ந்த குதிரைகள்; உள் நாட்டில் இருந்து வந்த கரிய மிளகு மூடைகள், வடக்கு மலைகளில் விளைந்த மாணிக்கக் கற்கள், பொன், பொதிகை மலையிற் பிறந்த சந்தனம், அகில், தெற்குக் கடலில் எடுத்த முத்துக்கள், கீழ்த்திசைக்கடலில் எடுத்த பவளங்கள், கங்கை, காவிரி நதிகளின் கரைகளிலே விளைந்தவை, ஈழநாட்டு உணவுப்பொருள்கள், கடாரத்தில் உண்டான நுகர் பொருள்கள் இன்னும் அரிய பெரிய பொருள்கள் இவை எல்லாம் மண்டிக் கிடக்கின்றன காவிரிப்பூம்பட்டினத்தில்" என்று பட்டினப்பாலை கூறுகின்றது:

"... ... ...
நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகி..."

(பட்டினப்பாலை - 185-193)

பூம்புகார்ப் பட்டினத்தில் பலமொழிகளைப் பேசும் அந்நிய நாட்டவர்கள் நேசத்துடன் கலந்து வாழ்ந்தார்கள் என்றும் பட்டினப்பாலை கூறுகின்றது:

"மொழிபல பெருகிய பழிதீர் தேயத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்து இனிதுறையும்
முட்டாச் சிறப்பின் பட்டினம்

(பட்டினப்பாலை -216-218)

கடல் வழி வரும் பண்டங்கள் மிகுதியாக இருப்பதால் அளப்பதற்கு இயலவில்லை; எனவே, மனத்தாலேயே அளந்து மதிப்பிட்டு சுங்க வரி விதித்து அதற்கு அடையாளமாகப் புலிச் சின்னத்தைப் (சோழ அரசின் சின்னம்) பொறிக்கின்றார்கள் பொதிகளின் மீது:

"அளந்தறியாப் பல பண்டம்
வரம் பறியாமை வந்து ஈண்டி
அருங்கடிப் பெருங் காப்பின்
வலியுடை வல்லணங்கினோன்
புலி பொறித்துப் புறம் போக்கி
மதி நிறைந்த மலி பண்டம்..."

(பட்டினப்பாலை - 131-136)

கப்பல் பாயைச் சுருக்காமலும், கப்பலின் சரக்குகளை அகற்றி அதன் பாரத்தைக் குறைக்காமலும், கப்பல் துறைமுகத்திற்குள் வரவேண்டுமெனில் அது ஆழ் கடல் துறைமுகமாக இருத்தல் வேண்டும். அப்படிப்பட்ட ஆழ்கடல் துறைமுகமாக இருந்தது பூம்புகார் என்று கூறுகின்றது ஒரு புறநானூற்றுப் பாடல்:

"மீப்பாய் களையாது மிசைப் பரம் தோண்டாது
புகார்ப் புகுந்த பெருங்கலம்..."

(புறநானூறு - 30-11,12)

அந்நாட்களில் தமிழகத்தின் பகுதியாக இருந்த சேர நாட்டின் மேற்குக் கரையில் முசிறி என்ற துறைமுகம் சிறந்து விளங்கிய பட்டினமாகும்:-

அதன் சிறப்பினை அகநானூற்றுப் பாடல் ஒன்று பகர்கின்றது.

சுள்ளி ஆற்றின் வெண்மையான நுரை சிதறி விலகும்படி, யவனர்களின் கலைமிக்க மரக் கலங்கள் பொன்னைக் கொண்டு வந்து கொடுத்து விட்டு மிளகை ஏற்றிச் செல்லும் வளம் பொருந்திய முசிறிப் பட்டினம் என்று பாடல் கூறுகின்றது:

"... ... ...
சுள்ளியம் பேரியாற்று வெண்நுரை கலங்க
யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறி..."

(அகநானூறு- 149:8-11)

முசிறி, பூம்புகார் ஆகிய பெரிய துறைமுகப் பட்டினங்களைத் தவிர சிறிய துறைமுகங்கள்

பற்றியும் பண்டைய இலக்கியங்கள் கூறுகின்றன.

புறந்தை, கொற்கை, குமரி, தொண்டி முதலியன அத் துறைமுகங்கள்.

"வீரம் பொருந்திய பாண்டியர்கள் காத்து நிற்கும் கொற்கைத் துறைமுகத்தில் எடுத்த முத்துக்களைப் போன்ற பற்களையுடையவளே," என்று தலைவியைத் தோழி புகழுவதாக அகநானூற்றுப் பாடல் ஒன்று உள்ளது:

"மறப்போர்ப் பாண்டியர் அறத்திற்காக்கும்
கொற்கையம் பெருந்துறை முத்தின் அன்ன
நகைப் பொலிந்து இலங்கும்..."

(அகநானூறு 27: 8-10)

"கழிகளில் மலர்ந்த மலர்களின் மணம் மண்டி நிற்கும் தொண்டித் துறைமுகம்", என்று குறிப்பிடுகின்றது ஒரு புறநானூற்றுப் பாடல்:

"மாக்கழி மலர்ந்த நெய்தலானும்
கள் நாறும்மே கானலந்தொண்டி"

(புறநானூறு-48: 3-4)

துறைமுகங்களின் சிறப்புக்களைப் பாடும் சங்க காலப் புலவர்கள் அக்காலத்து மன்னர்கள் கடற்படை கொண்டு பகைவர்களை வென்றார்கள் என்பதையும் பாடியுள்ளனர்.

நலங்கிள்ளி என்ற சோழ மன்னன் கடற்படை செலுத்திப் பகைவர்களை வென்றான் என்று அவனைப் புகழ்கின்றார் கோவூர்க்கிழார்:

"கடற்படை அடல் கொண்டி
மண்குற்ற மறனோன்றான்
நண்சோழ நாட்டுப் பொருநன்
அலங்குளை அணி இவுளி
நலங்கிள்ளி...

(புறநானூறு: 382:1-5)

சோழன் கரிகால் பெருவளத்தானைப் பாடும் புலவர்,

"நீர்செறிந்த கடலிலே கலங்களைச் செலுத்தி, காற்றின் போக்குக்கு ஏற்றவாறு போர் செய்து வென்ற மரபிலே வந்தவனே"

என்று போற்றுகின்றார்.

"நளியிரு முந்நீர் நாவாய், ஓட்டி
வளிதொழி லாண்ட உறவோன் மருக"

(புறநானூறு 66: 1-3)

இவ்வாறு, கடற்படை கொண்டு போர் செய்த தமிழர்கள், கடல் வாணிகக் கப்பல்களையும் செலுத்தினர் என்று கொள்ளலாம்.

பிறநாட்டு வரலாற்று ஆசிரியர்கள் கூறியுள்ளதில் இருந்தே தமிழகத்தின் கடல் வாணிகம் கி.மு. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தொடங்கியது என்பது தெளிவாகும், என்கிறார் ஆசிரியர் வி. கனகசபை.

வரலாற்றுப் புகழ் பெற்ற சாலமன் என்ற மன்னன் இஸ்ரேல் நாட்டை ஆண்டது கி.மு. பத்தாம் நூற்றாண்டில் என்பார்கள். அந்த மன்னனுக்குப் பரிசாக தங்கம், வெள்ளி, தந்தம், சந்தனம், மயில் போன்ற பொருள்கள் கப்பல்களில் வந்தன என்று அந்நாட்டு வேதநூல்கள் கூறுகின்றன. இப்பொருள்களில் சந்தனம், மயில் இவ்விரண்டும் தமிழகப் பொருள்கள்தாம் என்று வரலாற்று அறிஞர்கள் உறுதியாகக் கருதுகின்றனர். மேலும் ஹீப்ரு மொழியில் உள்ள பைபிளில் (Bible) குரங்கு என்பதை "கபிம்" என்றும், மயிலைத் "துகிம்" என்றும் குறிக்கப்பட்டுள்ளது. 'கவி' 'தோகை' என்ற தமிழ்ச் சொற்கள் தாம் "கபிம்" "துகிம்" என்று ஹீப்ரு மொழியில் மாறியுள்ளன என்று ஆசிரியர் வி. கனகசபை கருதுகின்றார்.

மேற்கு ஆசிய நாடுகளுக்கும் தமிழகத்திற்கும் இடையே கி.மு. ஏழாம் நூற்றாண்டில் இருந்தே வாணிகம் நடைபெற்று வந்தது என்பதற்குப் போதிய சான்றுகள் உள்ளன. மேற்கு ஆசியாவில் பாபிலோன் (Babilon) நாட்டில் தமிழக வணிகர்கள் குடியேறி இருந்தனர்.





கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் கிரேக்க நாட்டினர் கடல் வாணிகத்தில் இறங்கித் தமிழகத்துடன் தொடர்பு கொண்டனர். கிரேக்க மொழியில் " ஒரிசா" என்பது அரிசியைக் குறிக்கின்றது; "ஜிஞ்சிபர்" என்பது இஞ்சியைக் குறிக்கின்றது. தமிழகத்தில் இருந்து கிடைத்த அரிசிக்கும் இஞ்சிக்கும் தமிழ்ப் பெயர்களையே கிரேக்கர்கள் ஏற்றுத் தங்கள் மொழியில் எழுதிக் கொண்டனர் என்பது தெளிவாகிறது.

கிரேக்க மன்னன் அலெக்சாண்டர் எகிப்து நாட்டை வென்றபின், கிரேக்க வணிகர்கள் பெருமளவில் எகிப்து நாட்டில் குடியேறினார்கள். அதற்குப் பின்னர் அந்தக் கிரேக்கர்களுக்கும் தமிழகத்திற்கும் இடையே கடல் வாணிகம் மிகவும் பெருகியது.

ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழகம் மேற்குக் கடற்கரை வரையில் பரவி இருந்தது. இன்று கேரளப்பகுதியாக இருப்பது அன்று தமிழகத்தின் ஒரு பாகமாகவே இருந்தது. எனவேதான், மேற்குக் கடற்கரைப் பட்டினமான முசிறி பற்றியும் சங்கத் தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன.

சேர நாட்டுப் பகுதியில் விளைந்த மிளகு, ஏலக்காய், இஞ்சி, மஞ்சள், தந்தம், சந்தனம், அகில் முதலிய பொருள்களும், சோழ, பாண்டிய நாட்டுப் பகுதிகளில் கிடைத்த அரிசி, பருத்தி, முத்து, பவளம் முதலிய பொருள்களும் மேற்கு ஆசிய நாட்டினராலும், கிரேக்க, உரோமானிய நாட்டினராலும் பெரிதும் விரும்பப் பெற்றன. எகிப்து நாட்டில் இருந்து கப்பல்களில் வந்த கிரேக்க வணிகர்கள் பித்தளை, செம்பு, கண்ணாடி, மது முதலிய பொருள்களைக் கொண்டு வந்தனர். கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் இருந்து கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரை கிரேக்கர்களும் உரோமானியர்களும் தமிழகத்துடன் பெருமளவில் கடல் வாணிகம் செய்தனர். அந்நாட்களில் முக்கியமாக விளங்கிய காவிரிப்பூம்பட்டினம், முசிறித் துறைமுகம் இவை பற்றிய சிறப்பினைத்தான் சிலப்பதிகாரமும், புறநானூறு, அகநானூறு, பத்துப்பாட்டு முதலிய சங்க இலக்கியங்களும் கூறுகின்றன.

கி.மு. இருபத்து ஐந்தாம் ஆண்டில் செங்கடல் துறைமுகமான ஹார்முஸ் என்ற இடத்திலிருந்து 120 கப்பல்கள் இந்தியாவிற்குச் சென்றதாக ஸ்ட்ராபோ (Strabo) என்ற வரலாற்று ஆசிரியர் கூறுகின்றார். அவர், கி.மு. இருபதாம் ஆண்டில் பாண்டிய மன்னனின் தூதர், உரோமானியப் பேரரசர் அகஸ்டஸ் என்பாரை ஏதன்ஸ் நகரில் சந்தித்ததாக எழுதியுள்ளார். கிரேக்கர்களைப் பின்பற்றி உரோமானியர்களும் பெருமளவில் தமிழகத்துடன் வாணிபம் செய்தனர்.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆடம்பரப் பொருள்களுக்கென உரோமானியப் பேரரசு ஆண்டுதோறும் பத்து இலட்சம் பவுன்கள்' செலவிட்டதாகவும், அதனால் அந்நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டதாகவும் பிளினி (Piliny) என்ற வரலாற்று வல்லுநர் கூறுகிறார். அராபிய நாட்டுத் துறைமுகங்களில் தங்கித் தமிழ்நாட்டுக்குச் செல்லும் கப்பல் பயணம் பற்றி விரிவாக அவர் எழுதியுள்ளார். முசிறித் துறைமுகம், பாண்டிநாடு, மதுரை இவை பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

கி.பி. 80வது ஆண்டு வாக்கில் "Periplus of the Erythream'sea என்ற நூலை எகிப்து நாட்டைச் சேர்ந்த (பெயர் தெரியாத) ஒருவர் எழுதியுள்ளார். இதில் தென்னிந்தியத் துறைமுகங்கள் பற்றித் தாம் நேரில் கண்டவற்றைத் தொகுத்துக் கூறுகின்றார்.

அவர் தமிழகத்தை லெமூரிக் (Limurike) என்று குறிப்பிடுகின்றார். முசிறி, தொண்டி, வைக்கறை முதலிய மேற்குக்கரைத் துறைமுகப் பட்டினங்கள் அந்நூலில் குறிக்கப்பட்டுள்ளன. இங்கு மிளகு, தந்தம், பட்டு, முதலிய பொருள்கள் கிடைப்பதாகக் கூறுகின்றார். அடுத்து, குமரி, கொற்கை ஆகிய துறைமுகங்கள் வருகின்றன. கொற்கையில் முத்துக்கள் கிடைப்பதாகக் கூறுகிறார். பாண்டிநாடு பற்றியும், குமரித்தலத்தில் இருந்த சமய நிறுவனம் பற்றியும் விவரிக்கின்றார். பிறகு, கிழக்குக் கரையில் உள்ள காவிரிப்பூம்பட்டினம், பாண்டிச்சேரி, மக்காணம் (சென்னை அருகில் உள்ளது) ஆகிய துறைமுகங்களைக் கூறுகின்றார்.

இதற்குப் பின்னர், கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் அலக்சாண்டிரியா என்ற எகிப்து நாட்டுத் துறைமுகத்தில் வாழ்ந்த டால்மி (Ptolemy) என்பவர் "உலக வரை படம்" (Map of the world) என்ற நூலை எழுதினார். இந்நூலிலும், மேலே கூறப்பட்ட தமிழகத் துறைமுகப் பட்டினங்கள் பற்றிய குறிப்புகள் தரப்பட்டுள்ளன. கொற்கைத் துறைமுகத்தில் முத்துக்குளிப்பது பற்றியும், காவிரிப் பூம்பட்டினம் பற்றியும் அதில் கூறப்பட்டுள்ளது.

கிரேக்கர்களையும் உரோமானியர்களையும் "யவனர்கள்" என்று பண்டைத் தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. கைவேலைப்பாடுகள்

## உப்போ உப்பு...

கடந்த ஆண்டில் இந்தியாவிலிருந்து ஏற்றுமதியான உப்பின் அளவு ஐம்பது சதவீதம் அதிகரித்திருக்கிறது. 1987-88-ஆம் ஆண்டில் 4.3 இலட்சம் டன்னாக இருந்த உப்பின் ஏற்றுமதி, கடந்த ஆண்டில் 6.6 இலட்சம் டன்னாக அதிகரித்தது. ஜப்பானுக்கு மட்டும் 1.34 இலட்சம் டன் உப்பு ஏற்றுமதியானது. அடுத்த பத்தாண்டுகளில், இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் உப்பின் அளவை, பத்து இலட்சம் டன்னாக அதிகரிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

## படிப்பறிவுப் பாதையில்...

இந்தியாவிலேயே அதிகம் படிப்பறிவு கொண்ட மாநிலம் கேரளம். 1981 மக்கள் தொகைக், கணக்கெடுப்பின்படி, இம்மாநிலத்தின் 14 மாவட்டங்களிலும் 50 முதல் 82 சதவிகிதப் படிப்பறிவு காணப்படுகிறது. 82 சதவிகிதம் உள்ள கோட்டயம் மாவட்டம் படிப்பறிவில் மாநிலத்தில் முதலிடத்தை வகிக்கிறது. மிகக் குறைந்த படிப்பறிவு விகிதமுள்ள மாவட்டம் பாலக்காடு; அதாவது 50 சதவிகிதம்.

நிறைந்த கப்பல்களில் யவனர்கள் முசிறித் துறை முகத்திற்கு வருவதை அகநானூற்றுப் பாடல்,

"யவனர் தந்த வினைமான் நன்கலம்"

என்று கூறுவதை மேலே கண்டோம்.

முல்லைப் பாட்டில் யவனர்களின் தோற்றமும், கலைத் திறன் இவை பற்றியும் கூறப்பட்டுள்ளது. வலிமையான உடலையும் உறுதி கொண்ட உள்ளத்தையும் உடைய யவனர்கள் என்று குறிப்பிடுகின்றது.

"வலி புணர் யாக்கை வன்கண் யவனர்"

(முல்லைப்பாட்டு-61)

அழகிய பாவை உருவம், அதன் கையிலே தகளி, அந்தத் தகளியில் நெய் ஊற்றித் திரியிட்டு விளக்கு ஏற்றுகின்றனர். இத்தகைய அழகான அகல் விளக்குப் பாவையினைச் செய்தவர் யவனர் என்கிறது நெடுநல் வாடை என்ற சங்க இலக்கியம்.

"யவனர் இயற்றிய வினை மான் பாவை
கையேந்தை அகல் நிறைய நெய் சொரிந்து"

(நெடுநல் வாடை-101-102)

கடல் வாளேந்தி பாண்டியனின் அரண்மனை வாயிலில் காவல் நின்றனர் உரோமானிய வீரர்கள் என்பதைச் சிலப்பதிகாரம் கூறுகின்றது:

"கடிமதில் வாயில் காவலில் சிறந்த
அடல்வாள் யவனர்..."

(14-66,67)

யவனர்களின் கப்பல்களில் மதுவகைகளும் வந்தன என்பதைப் புறநானூற்றுப் பாடல் கூறுகின்றது.

பாண்டியன் நன்மாறனைப் பாடும் நக்கீரர், "யவனர் கலங்களில் கொண்டு வந்த நறுமணம் கமழும் மதுவினைப் பொற்கிண்ணங்களில் பெய்து மங்கையர்கள் ஊட்ட அதை மகிழ்வுடன் அருந்தி இனிது வாழ்வாயாக", என்று வாழ்த்துகின்றார்;

"யவனர் நன்கலம் தந்த தண்கமழ் தேறல்
பொன்செய் புனைகலத்து ஏந்தி நாளும்
ஒண்தொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்து
ஆங்கினி ஒழுகு மதி..."

(புறநானூறு 56: 17-21)

கிரேக்க நாட்டிற்குக் கிரேக்க மொழியில் "அயோனஸ்" (laones) என்று பெயர் உண்டு. அயோனஸ் என்று சொல் திரிந்து தமிழில் "யவனர்" என்று ஆகியது என்கின்றனர்.

காவிரிப் பூம்பட்டினத்தில் யவனர்கள் குடியேறி இருந்தனர் என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது.

"கயவாய் மருங்கில் காண்போர் தடுக்கும்
பயனறவு அறியா யவனர் இருக்கையும்"

(சிலப்பதிகாரம் 5:9-10)

தமிழ்நாட்டின் பல இடங்களில் உரோமானியரின் தங்கநாணயப் புதையல்கள் கண்டெடுக்கப் பெற்றன. இன்றும் ஆங்காங்கே புதைந்துள்ள அவ்வகை நாணயங்கள் கிடைக்கப் பெறுகின்றன. இதனால், உரோமானியர்கள் பெருமளவில் தங்க நாணயங்களை ஏற்றுமதி செய்து, தமிழகத்தில் இருந்து மிளகு, தந்தம், பட்டு, பவளம், முத்து போன்ற பொருள்களை இறக்குமதி செய்தனர் என்று பிளினி என்ற வரலாற்று வல்லுநர் எழுதியுள்ளது உண்மை என்பது நிலைநாட்டப் பெறுகிறது.

உரோமானியப் பேரரசர் அகஸ்டஸ் என்பார் காலமாகிய கி.மு. 27-ல் இருந்து செனோ (Zeno) என்ற மன்னரின் காலமாகிய கி.பி. 491 வரையுள்ள நாணயங்கள் தமிழகத்தில் கிடைக்கப் பெற்றுள்ளன. இதனால் இந்த 500 ஆண்டுக் காலம் உரோமானியரின் வாணிபம் தொடர்ந்து நடந்தது என்பது தெளிவாகிறது.

பாண்டிச்சேரிக்கு அருகில் உள்ள "அரிக்கமேடு" என்ற இடத்தில் நடக்கும் அகழ்வாராய்ச்சியின் பயனாக, அங்கு உரோமானியர்கள் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு வரை வாழ்ந்து வந்திருக்க வேண்டும் என்று தெரிகின்றது. அது, புகழ்பெற்ற வரலாற்று ஆராய்ச்சியாளர் மார்டிமர் வீலர் (Martimer Wheeler) என்பாரின் கருத்தாகும்.

இவ்வாறு, அரிக்கமேடு அகழ்வாராய்ச்சி, அண்மையில் பல இடங்களில் கண்டெடுக்கப் பட்ட உரோமானிய நாணயப் புதையல்கள், பிளினி, ஸ்ட்ராபோ போன்ற மேலைநாட்டு வரலாற்று வல்லுநர்களின் கூற்று, பண்டைத் தமிழ் இல்க்கியங்கள், கிரேக்க மொழியில் உள்ள தமிழ்ச் சொற்களின் திரிபுகள், இவையனைத்தும் தெளவுபடுத்தும் உண்மை உறுதியாக உள்ளது.



ஏறத்தாழ இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பே மேற்கு ஆசிய நாடுகளுடனும், அதற்குப் பின் கிரேக்க, உரோமானிய நாடுகளுடனும் தமிழகம் கடல் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தது, என்பதே அந்த உண்மையாகும். கி.பி. ஐந்து, ஆறாவது நூற்றாண்டுகளுக்குப் பிறகு அந்த வாணிபம் குறைந்து விட்டது என்று கருதுகின்றனர் வரலாற்றாளர்கள்.

சீன நாட்டுடன் இந்திய நாட்டின் வாணிபம் கி.மு. ஏழாம் நூற்றாண்டில் இருந்தே தொடங்கியது எனக் கருதுகின்றனர். சீனி, பட்டு இரண்டையும் சீன நாட்டில் இருந்து தமிழகம் இறக்குமதி செய்தது. 'சீனி' என்ற சொல், சீன மொழியில் இருந்து வந்தது என்பார்கள். பவளம், மிளகு, ஏலக்காய் இவற்றைத் தமிழகம் சீனாவிற்கு ஏற்றுமதி செய்தது. கர்நாடகத்தில் சந்திரவல்லி என்ற இடத்தில் கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த சீன நாணயம் ஒன்று கண்டெடுக்கப் பட்டுள்ளது.

பர்மா, ஜாவா, மலேசியா, சுமத்திரா, பிலிப்பைன்சுத் தீவுகள் இவற்றுடனும் பண்டைக்கால வாணிபம் தமிழகத்திற்கு இருந்ததாகக் கருதுகின்றனர். தென்னகத்தில் காணப்படும் கத்தி, கோடாரி, கண்ணாடி மணிகள், வளையல்கள் போன்றவை பிலிப்பைன்சுத் தீவுகளில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மலாய் மொழியில் சில சொற்கள் தமிழ்ச் சொற்களாகவே உள்ளன.

சீன நாட்டிற்கும் பிற கிழக்கு நாடுகளுக்கும் சென்ற உரோமானியக் கப்பல்கள் தமிழகத்தின் துறைமுகங்களில் தங்கி விட்டுத்தான் சென்றன. ஆதலால், மேற்கு நாடுகளுடன் வாணிபத் தொடர்பு ஏற்பட்ட காலத்தில் இருந்தே கிழக்கு நாடுகளுடனும் தமிழகத்திற்குத் தொடர்பு ஏற்பட்டிருக்க வேண்டும். தமிழகத்தை அடுத்துள்ள இலங்கையுடனும் நீண்ட காலமாகவே வாணிபத் தொடர்பு இருந்து வந்தது என்பதற்கு இலக்கியச் சான்றுகள் உள்ளன.

பண்டைத் தமிழரின் கடல் வாணிபம் பற்றி எதிர்காலத்தில் இன்னும் பல உண்மைகள் தெரியலாம்.

இவ்வாறு கடல் வாணிகத்திலே ஈடுபட்டிருந்த தமிழ்ப் பெருங்குடி வணிகர்களின் நேர்மைத் திறனைப் பற்றியும் பட்டினப்பாலை கூறுகின்றது.

"உழவர்களின் மேழி நுகத்தின் நடுவிலே பதித்துள்ள பகலாணி போன்று நடுவுநிலை பொருந்திய நல்ல நெஞ்சுடையவர்கள் அந்த வணிகர்கள், தமது குடிப்பெயருக்குக் குற்றம் ஏற்படக்கூடாதே என்று அஞ்சி உண்மையினை ஒளியாது மொழிபவர்கள். தாம் வாங்கும் சரக்கை, ஏமாற்றி அதிகமாக அளந்து வாங்குவதில்லை. அதுபோல, தாம் விற்கும் சரக்கையும் ஏமாற்றிக் குறைவாகக் கொடுப்பதில்லை. அது மட்டுமல்ல; தாம் விற்கும் பல்வகைப் பண்டங்களில் தமக்குக் கிடைக்கும் இலாபம் இவ்வளவு தான் என்பதையும் வெளிப்படையாகக் கூறியே விற்பார்களாம்!"

"கொடு மேழி நசை உழவர்
நெடு நுகத்துப் பகல் போல
நடுவு நின்ற நல் நெஞ்சினோர்
வடு அஞ்சி வாய் மொழிந்து
தமவும் பிறவும் ஒப்பநாடிக்
கொள்வதூஉம் மிகை கொளாது,
கொடுப்பதூஉம் குறை கொடாது
பல்பண்டம் பகர்ந்து வீசும்"


(பட்டினப்பாலை 205-211)

வாய்மை தவறாத வணிகநெறி நடுநிலை பிறழாத நன்னெறியாக அவர்களிடம் விளங்கியது.

இத்தகைய உயர்ந்த நாகரிகத்திலே ஒன்றிய தமிழர்கள் உலகளாவிய நோக்குடன்,

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

என்ற பரந்த பண்பாட்டினைப் பாராட்டிப் போற்றியது வியப்பில்லையன்றோ?



### அலட்சியம் வேண்டாம்

### அதில்தான் ஊட்டம்

வெளிநாடுகளிலிருந்து முக்கிய பிரமுகர்கள் வருகிறார்கள். விருந்து கொடுக்கிறோம். தட்டு நிறைய அழகாகத் துண்டு துண்டாகப் பழத்தை நறுக்கி ஜோடனை செய்து வைக்கிறோம். செக்கச் செவேலென்று கண்ணைப்பறிக்கும் அந்தப் பழத்துண்டுகளை வெளிநாட்டார் ஆசையோடு வாயில் போட்டுச் சுவைத்து மகிழ்கிறார்கள். இந்தப் பழம் ஒன்றும் விலை உயர்ந்த ஆப்பிளோ வேறு எதுவோ என்று மலைக்க வேண்டாம். குப்பை மேட்டில் விளைகிறது என்று நாம் அலட்சியப் படுத்துகின்ற பப்பாளிப் பழம்தான் அது.

பப்பாளிப் பழமா...நெருப்பு ஆயிற்றே; கர்ப்பம் கலைந்துவிடுமே என்றெல்லாம் இங்கே மிரட்டுகிறார்கள். நாமும் மிரள்கிறோம். ஆனால் இதே பப்பாளிப் பழம் 'பப்பிடா' என்று என்னைம் மாத்திரையாக உருமாறி வந்தால் ஐம்பது காசு, ஒரு ரூபாய் என்று கொடுத்து வாங்கிச் சாப்பிடுகிறோம்.

நம்ம ஊர் நிலக்கடலை, கொத்துக் கடலைகளில் உள்ள ஊட்டச்சத்து நமக்குப் புரியவே இல்லை. என்ன நிலக்கடலைதானே என்ற ஓர் அலட்சியம் நமக்கு.

அன்னாசிப் பழம், பப்பாளிப்பழம், கடலை வகைகள், கருப்பட்டி இனத்திலிருந்து எல்லாம் பெறமுடியாத எந்த ஊட்டச்சத்தை, டானிக்குகளும், ஆப்பிள்களும் தந்துவிட முடியும்?

# நூல்நயம்

## இது எங்கள் கிழக்கு

ஆசிரியர்: தாராபாரதி
வெளியீடு: வாசகி நூலகம்
விநாயகநல்லூர்,
வேடந்தாங்கல்-603 314

விலை: ரூ.20 பக்கம்:164

மரபுக் கவிதைகளால் தொடுக்கப்பட்ட மாலையாக இந்நூல் திகழ்கிறது.

உழைப்புக்கு மரியாதையும், பெண்ணினத்திற்குப் பெருமையும், சோம்பலுக்கு வழியனுப்பு விழாவும் கிடைக்கவேண்டும் என்னும் நோக்கம்-நூல் முழுதும் பரவிக் கிடக்கிறது. பல கவிதைகளில் சமுதாயத் திற்குச் சாட்டையடி கொடுத்திருக்கிறார் நூலாசிரியர்; பாரதியின் தூய உள்ளம்-வேக உணர்ச்சி இந்தக் கவிஞரின் கவிதைகளிலும் காணப்படுகிறது.

குமுறும் எரிமலையாகக் காட்சி தரும் நூலாசிரியர் பல இடங்களில் குளிர் தென்றலாகவும் பரிணமிக்கிறார்.

சில கவிதைகள் மெல்லிசைப் பாடல்களைப் போல் இனிக்கின்றன.

அகப்பொருளைச் சுமந்து வருவதுதான் கவிதை என்ற நிலையை மாற்றி, சமுதாயத்தை அகல விரித்துப் பார்ப்பதும் கவிதைதான் என்ற புதுமைப் போக்கை உருவாக்கியிருக்கும் நூலாசிரியர் பாராட்டுக் குரியவர்.

சிறந்த சொல்லாட்சி, சொற்செட்டு இந் நூலின் தனிச்சிறப்பு.

—தமிழ்ப்பித்தன்

## அட்டைப்பட ஓவியங்கள்

ஆசிரியர்: டொமினிக் ஜீவா
வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,
பிரைவேட் லிமிடெட்,
41- பி, சிட்கோ
இன்டஸ்டிரியல் எஸ்டேட்
சென்னை-600 098.

விலை: ரூ.15 பக்கம்: 168

'அட்டைப்பட ஓவியங்கள்' என்று தலைப்பைப் பார்த்ததும், ஓவியர்களைப் பற்றிய நூலாக இருக்குமோ என எண்ணத் தோன்றியது. ஆனால், இது எழுத்தோவியங்கள் தீட்டும் பேனா மன்னர்களைப் பற்றிய நூல் என்பதைப் படித்த பிறகு தான் உணர முடிந்தது.

இந்நூலில், ஈழத்துப் பேனா மன்னர்கள் பற்றிய சுவையான குறிப்புகளும், அரிய தகவல்களும் அடங்கியுள்ளன.

யாழ்ப்பாணத்தில் பிறந்து சர்வதேச எழுத்தாளராக விளங்கிய திரு அழகு சுப்பிரமணியம் முதல் சிங்கள மொழியில் உலகப் புகழ் பெற்ற மார்டின்விக்கிரமன் வரை மக்கள் மத்தியிலே பேரும் புகழும் பெற்ற 35 எழுத்தாளர்களின் வாழ்க்கைக் குறிப்புகள், இலக்கியப் பணிகள், தொண்டுகள் எல்லாம் தெளிவாகக் கூறப் பட்டுள்ளன.

ஈழ எழுத்தாளர்களைப் பற்றித் தெரிந்து கொள்ள விழைவோர் படித்துச் சுவைத்துப் பயன்பெறலாம்.

—பி.வி. கிரி

## பாவேந்தர்

## இலக்கியப் பாங்கு

ஆசிரியர் : மன்னர் மன்னன்
வெளியீடு: முத்துப் பதிப்பகம்,
20, வ.உ.சி, தெரு,
விழுப்புரம் - 605 602

விலை: ரூ.24 பக்கம்: 152

'மகளிர் உரிமை பெறவும், தமிழ்ச் சமுதாயம் தலைநிமிரவும், தமிழகத்தில் ஒரு பொற்காலம் மலரவும் புதிய ஆட்சி நிறுவிய முதல்வர் கலைஞர் அவர்களுக்கு இந்த நூல் வெற்றி மாலையாகப் படைக்கப்பட்டிருக் கிறது.' பாவேந்தர் பாரதிதாசனாரின் புதல்வரான திரு. மன்னர் மன்னன் உருவாக் கிய நூல் இது. இந்நூலுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் அணிந் துரை வழங்கியிருக்கிறார்.

புரட்சிக் கவிஞரின் எழுத்தோவியங் களில் பெண் விடுதலை பற்றி வரும் பகுதிகள் பற்றிய உண்மைகளும் நுண்மை களும் இந்நூலில் எடுத்து விளக்கி எழிலுற விமர்சிக்கப்படுகிறன்றன. அண்ணல் காந்தியடிகள், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்றோர், பெண்மை நலங் கருதி வெளியிட்ட கருத்துகளும் - பல்வேறு பத்திரிகைகளின் துணை கொண்டு சேகரித் துச் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த நூலில் பெண் விடுதலை பற்றிய பாவேந்தரின் முக் கியப் பாடலடிகள் எடுத்தளிக்கப்பட்டுள்ளன.

அடுக்கடுக்கான ஆதாரங்களோடு ஆசிரியர் நடத்தும் நடை எளிய தமிழில் இருப்பதோர் சிறப்பு. இலக்கிய விரும்பிகள் இதயங் கவரும் நூல் இது.

—பி.எல்.ஆர்

## அச்சம் தவிர்த்திடு!

ஆசிரியர்: பாவலர் மு. பாஞ்சபீர்
வெளியீடு: பர்சானா பதிப்பகம்
96, ஏழுகிணற்றுத் தெரு,
ஏழுகிணறு,
சென்னை-600 001.

விலை: ரூ.7.00 பக்கம்: 64

இஸ்லாம் மார்க்கம், பெருமகன் அல்லாவின் அருள், மதினாவின் சிறப்பு பற்றிக் கூறும் கவிதை நூல் இது. எளிய பாடல்கள் இத் தொகுப்பு நூலின் சிறப்பு.

நல்வழிகாட்டும் இந்த இறையருட் கவிதைகள், இஸ்லாமியர் மட்டுமின்றி எம்மதத் தாரும் படித்துப் பயன்பெறத்தக்கவை.

—வி. இராவணன்.

## சிறுவர் கதை அமுதம்

ஆசிரியர்: இராஜதேவன்
வெளியீடு: சாந்தினி-பதிப்பகம்
2, கண்ணப்பர் சாலை,
அசோக் நகர்
சென்னை-600 083.

விலை: ரூ.215/- பக்கம் 112

குழந்தைகளுக்கு எழுத வேண்டுமென்ற எண்ணம் எழுவது அபூர்வம். குழந்தைகளுக்கு எழுதுவதற்கு குழந்தையுள்ளம் வேண்டும். இந்நூலின் ஆசிரியர் குழந்தைகளுக்கு எழுதுவதில் வெற்றி கண்டுள்ளார்.

நட்பின் பெருமை பெண்மையின் உயர்வு, உழைப்பின் உயர்வு, ஒற்றுமையின் மேம்பாடு, ஊனமுற்றோருக்கு உதவும் எண்ணம், தெய்வ நம்பிக்கை, குடும்பக் கட்டுப்பாடு, கல்வியின் மகத்துவம், முயற்சியின் மகத்துவம், நாட்டுப்பற்று, தியாகியின் வீரம் என்று பலதரப்பட்ட கருத்துக்களை எளிமையாக, சின்ன சின்ன வாக்கியங் களில் குழந்தைகள் விரும்பிப் படிக்கும் வண்ணம் அழகாக எழுதியுள்ளார். குழந்தைகளுக்குச் சிறந்த அறிவுரை கூறும் நூல் இது.

—என். குமாரசாமி





# பெரியார் மாவட்டத்தில் பலதுறைப்பணி விளக்க முகாம்

பெரியார் மாவட்டத்தில் அரசின் சார்பில் பல்துறைப் பணி விளக்க முகாம் மற்றும் கண்காட்சி 7-7-89 முதல் 16-7-89 முடிய சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவினை, கோபிச்செட்டிப்பாளையம் வைர விழா மேல்நிலைப்பள்ளித் திடலில் மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் தொடங்கி வைத்தார்.

பெரியார் மாவட்டத்தில் உள்ள ஈரோடு, தாராபுரம் மற்றும் கோபிச்செட்டிப்பாளையம் முதலான கோட்டங்களில் கோட்டங்களுக்குத் தலா 10 இடங்கள் வீதம் தேர்ந்தெடுக்கப்பட்டு 30 இடங்களில் மாவட்டம் முழுவதும் முகாம்கள் நடைபெற்றன.

ஈரோடு கோட்டத்தில் சித்தோடு, வீரப்பன் சத்திரம், கருமாண்டி செல்லிப் பாளையம், குன்னத்தூர், காஞ்சிக்கோயில், கொடுமுடி, சிவகிரி, சென்னிமலை, மொடக்குறிச்சி, அரச்சலூர் முதலான 10 இடங்களிலும், தாராபுரம் கோட்டத்தில் தாராபுரம், அலங்கியம், பொன்னாபுரம் கன்னிவாடி, மூலனூர், குண்டடம், சங்கராண்டாம்பாளையம், நத்தக்காடையூர், வெள்ளக்கோயில், காங்கேயம் முதலான 10 இடங்களிலும், கோபி கோட்டத்தில் தாளவாடி, பவானி, கெம்பநாய்க்கன் பாளையம், தூக்கநாய்க்கன்பாளையம், பர்கூர், நம்பியூர், சத்தி, சிங்கம்பேட்டை, புஞ்சைபுளியம்பட்டி, கோபி முதலான 10 இடங்களிலும் ஆக 30 இடங்களில் மாவட்டம் முழுவதும் இம் முகாம்கள் நடைபெற்றன.

இம்முகாம்களில், நாள்தோறும் காலையில் குழந்தைகள், மாணவ மாணவிகளுக்கு இலவச மருத்துவப் பரிசோதனை, கருவுற்ற தாய்மார்களுக்கு இலவச ஊட்டச்சத்து, கால்நடைகளுக்கு இலவச மருத்துவம், முதியோர்களுக்கு ஓய்வூதியம் வழங்கத் தேர்ந்தெடுத்தல், மக்கள் குறை தீர்க்கும் மனுக்கள் மற்றும் வங்கிக் கடன் வழங்க மனுக்கள் பெறுதல், இலவசக் கண் பரிசோதனை, இலவச மரக்கன்றுகள்வழங்குதல், மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தகுதியுடையவர்களைத்தேர்ந்தெடுத்தல் மற்றும் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் கடன் பெற மனுக்கள் பெறுதல் முதலான திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டன.

பிற்பகலில் தீண்டாமை, மதுவிலக்கு, குடும்பநலம், சிறுசேமிப்பு, சட்டம் ஒழுங்கு, வரதட்சிணை ஒழிப்பு, மாதர் கல்வி, முதியோர் கல்வி, சுற்றுப்புறச் சூழல், சாலை விதிகளைக் கடைப்பிடித்தல், அரசின் நலத்திட்ட உதவிகள் பெறுதல், அரசு மற்றும் வங்கிகளின் மூலம் கடன் பெறுதல், அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் முதலானவை குறித்து குழு விவாதம் நடைபெற்றன.

மாலை நேரங்களில் கலைநிகழ்ச்சிகள், நாடகங்கள், மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சிகள், அரசின் சாதனைகள் திட்டங் களை விளக்கும் திரைப்படக் காட்சிகள் மற்றும் வீடியோ காட்சிகள் நடத்தப்பட்டன.

கோபி வைர விழா மேல்நிலைப் பள்ளித் திடலில் நடைபெற்ற பல்துறைப் பணி விளக்க முகாம் கண்காட்சியில் 30-க்கும் மேற்பட்ட அரசுத் துறை மற்றும் அரசு நிறுவனங்கள் அரங்குகள் அமைந்திருந்தன. அரசின் சாதனைகள் திட்டங்களை விளக்கும் வகையில் அரங்குகள் சிறப்புற அமைக்கப் பட்டிருந்தன. இக்கண்காட்சியிலும் நாள் தோறும் அரசின் சாதனைகள் திட்டங்களை விளக்கும் கலை நிகழ்ச்சிகள், நாடகங்கள், திரைப்படக் காட்சிகள் நடத்தப்பட்டன.

பல்துறைப் பணி விளக்க முகாம் மற்றும் கண்காட்சியின் நிறைவு விழாவிற்கு வந்திருந்தோரை, செய்தி-மக்கள் தொடர்புத் துறை துணை இயக்குநர் திரு. இரா. நடேசன் வரவேற்றார். பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. வி. கே. சுப்புராஜ், இ.ஆ.ப., விழாவிற்குத் தலைமை வகித்தார்.

இவ்விழாவில் பங்கு கொண்டு நிறைவு விழாப் பேருரையாற்றிய மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் பேசும் போது, "இம்மாவட்டத்தில் 3 கோட்டங் களிலும் 30 இடங்களைத் தேர்ந்தெடுத்து பல்துறைப் பணி விளக்கமுகாம் சிறப்பாக நடத்தப்பட்டிருக்கிறது. அரசாங்கம் தீட்டுகின்ற திட்டத்தின் பயன்களை அறிந்து கொள்வதற்கு மக்கள் அரசு அலுவலகங் களை நாடிச் செல்லும் நிலை மாறி திட்டப் பயன்களை விளக்குவதற்கு அனைத்துத் துறை அலுவலர்களும் கிராமங்களை நாடிச் சென்று விளக்குகின்ற ஓர் சிறப்பான முகாமை ஏற்பாடு செய்து அம்முகாம் வெற்றி பெற ஒத்துழைப்பு நல்கிய மாவட்ட ஆட்சித் தலைவரையும், அனைத்துத் துறை அலுவலர்களையும் மக்கள் சார்பில் பாராட்டுகின்றேன்; நன்றியும் தெரிவித்துக் கொள்கிறேன்."

"இங்கே ஒவ்வொரு அரசுத்துறையும், மக்களோடு தொடர்பு கொண்டு, அந்தத் துறை மூலம் மக்களுக்கு ஆற்றி வருகின்ற பணிகளை- திட்டங்களை மிகச் சிறப்பான முறையில் படிப்பறிவில்லாத ஏழை எளிய மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் கண்காட்சியை அமைத்துள்ளனர். இதுகண்டு நான் மகிழ்ச்சியும், மனநிறைவும் அடைகின்றேன். இன்றைக்கு நம் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஏழை எளிய மக்களுக்காக- வறுமைக் கோட்டிற்கும் கீழ் வாழ்பவர்களுக்காக எண்ணற்ற திட்டங் களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகின் றார்கள். நம் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்து நடைமுறைப் படுத்தி வரும் நல்வாழ்வுத் திட்டங்களைப் பல்வேறு துறைகளின் அலுவலர்கள் ஒரு முகப்படுத்தி இன்றைக்கு இம்முகாம் மூலம்



மக்களைத் தேடி அவர்கள் வாழும் கிராமங்களை நோக்கிச் சென்று விளக்கியிருக்கிறார்கள்'' என்றார்.

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள் 374 பேர்களுக்கு ரூ. 18.57 இலட்சம் உதவிகளையும், தொழிலாளர் நல சட்டுறுதித் திட்டத்தின் கீழ் தலா ரூ. 5,000 வீதம் 5 பேர்களுக்கும், 141 பேர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களையும், கிராமக் காவலர் குடும்பநல நிதி ரூ. 10,000-மும், சாலை விபத்து நிவாரணத் தொகை ரூ. 2,000-மும், திருமண நிதி உதவித் தொகை தலா ரூ. 5,000-வீதம் 6 பேர்களுக்கும், மூன்று சக்கர வண்டி ஊனமுற்ற 2 பேர்களுக்கும், தையல் இயந்திரம் 13 பேர்களுக்கும், குடும்பநல உதவி ஒருவருக்கும், உடல் ஊனமுற்றோருக்கான கடன் உதவித் தொகை 25 பேர்களுக்கும், சிறுசேமிப்பு ஊக்குவிப்புத் தொகை 75 பேர்களுக்கும், வீரிய இலவச விதைகள் 5 பேர்களுக்கும், கலப்புத் திருமணம் புரிந்த இருவருக்குப் பரிசுகளும், 3 ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஆதிதிராவிட நலத்துறையின் மூலம் வானொலிப் பெட்டிகளும், பட்டு வளர்ப்பு மானியக் கடன் 16 பேர்களுக்கும், சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் கடன் உதவி இருவருக்கும், மருத்துவ உதவி பெற்று குணமடைந்த தொழுநோயாளிகள் 15 பேர்களுக்குக் காலணி மற்றும் உடைகளும், இலவசக் கண்ணொளி பெற்ற 5 பேர்களுக்கு இலவசக் கண்ணாடிகளையும் வழங்கினார்.

சத்தியமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் திரு. டி.கே. சுப்பிரமணியம், பவானி ஊராட்சி ஒன்றிய முன்னாள் தலைவர் திரு. என்.கே.கே. பெரியசாமி ஆகியோர் சிறப்பு உரையாற்றினார்கள். பெரியார் மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு. கிருபால்தாஸ் ஜான் நன்றி கூறினார்.

-தொகுப்பு:
எஸ். நாகராசன்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி)
பெரியார் மாவட்டம்.

## மனித வள சக்தியை அதிகரிக்கக் குழு நியமனம்

அரசின் மனிதவளசக்தியினை அதிகரிப்பதற்கும், அரசு ஊழியர்களின் ஆற்றல்களை உரிய அளவில் பயன்படுத்துவதை உறுதி செய்வதற்கும், மனித ஆற்றல் பற்றி திட்டமிடுவதை மேற்கொள்ளும் நோக்கத்துடனும், மனித வள மேம்பாட்டுப் பிரிவு ஒன்றைப் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறையில் ஏற்படுத்த தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இப்பிரிவு, தேவை, உற்பத்தித்திறன் ஆகியவற்றையொட்டி அரசின் பல்வேறு துறைகள் நிறுவனங்களின் வெவ்வேறு நிலைகளில் மனித ஆற்றலைப் பயன்படுத்துவது பற்றி தொடர்ச்சியான ஆய்வை மேற்கொள்ளும்.

மேலும், இப்பிரிவு அரசுப்பணிக்காக நபர்களைத் தேர்ந்தெடுக்கிற தற்போதுள்ள முறையினைப் பரிசீலிப்பதுடன், மேம்பாட்டிற்கான கருத்துக்களையும், தெரிவிக்கும். இப்பிரிவு, அரசுப்பணியில் செலவு உயருவதையொட்டி தற்போதுள்ள சாதனை நிலையை ஆய்வு செய்து, தரங்கள் நியதி முறைகள் பற்றி கருத்து தெரிவிக்கும்

பணியிலமர்த்துதல், பணிமாற்றங்கள் செய்தல், பதவி உயர்வு அளித்தல் முதலியவை தொடர்பாகத் தற்போதுள்ள கொள்கைகளையும் விதிகளையும், ஒழுங்கு முறைகளையும் இப்பிரிவு ஆய்வு செய்து அரசுக்கு உரியவாறு பரிந்துரைக்கும். இப்பிரிவு, தற்போதுள்ள பயிற்சி வசதிகள், திட்டங்கள் பற்றி ஆய்வு செய்து, அவற்றை வலுப்படுத்துவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி கருத்து தெரிவிக்கும்.

தற்போது அரசுப் பணியாளர்களுக்குக் கிடைக்கப்பெறும் ஊக்க உதவித் தொகைகள் பற்றி ஆய்வு செய்து உற்பத்தித்திறனை அதிகரிக்கும் வகையில் செய்ய வேண்டிய மேம்பாடுகள் பற்றி கருத்து தெரிவிக்கும். இந்த உயர்அதிகாரக் குழு அரசு தலைமைச் செயலர் அவர்களின் தலைமையின்கீழ் இயங்கும்.



# மாவட்டச் செய்திகள்



## கோவை மாவட்டத்தில்...

கோவை மாவட்டம் பல்லடத்தில் 18-7-89 அன்று நடைபெற்ற அரசு நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழாவை ஒட்டி ஒரு கண்காட்சி நடைபெற்றது. அதில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பல்லடம் பகுதியில் செயல்படுத்தும் வறட்சி நிவாரணப் பணிகளைப் பற்றிய கண்காட்சியும் இடம் பெற்றது. தமிழ்நாட்டிலேயே மழை குறைந்த பிரதேசமாகிய பல்லடத்தில் எவ்வாறு வேளாண்மையை மேம்படுத்தலாம் என்றும், வருவாயை எப்படி அதிகப்படுத்துவது என்பது பற்றியும் கண்காட்சி விளக்கியது.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு கோ. சி. மணி, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. மு. கண்ணப்பன், மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. எம். இராமன் ஆகியோருடன் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், பல்கலைக்கழகக் கண்காட்சியினைப் பார்வையிட்டார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் சோலையப்பன் ஜெயராஜ் வரவேற்று, வறட்சி நிவாரணத்திற்குத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் செய்யும் பணிகளை விளக்கினார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் நடத்தும் 130 ஏக்கரில் ஒருங்கிணைந்த பண்ணைப் பராமரிப்புத் திட்டத்தின் மாதிரி ஒன்று அங்கு அமைக்கப்பட்டிருந்தது. இது முதல்வர் அவர்களின் கவனத்தைக் கவர்ந்தது.

கண்காட்சியில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், காய்கறி விதைகள், நுண்ணுயிர்ப் பொட்டலங்கள், மரக்கன்றுகளை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கினார். பல்கலைக் கழகம் இவ்வுதவிகளை .000 விவசாயிகளுக்கு வழங்கியது.

## திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்தில்

திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்தில் கிராமப்புறப் பகுதிகளிலும், நகர்ப் பகுதிகளிலும் புதிய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கும் திட்டத்தின்கீழ் நடப்பு ஆண்டில் 385 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்திட அரசு அனுமதி வழங்கி பணிகள் முடிவுறும் தறுவாயில் உள்ளன. இதில், இதரச் செலவினத் திட்டத்தின்கீழ் கிராமப் பகுதிகளிலும், நகர்ப் பகுதிகளிலும் 225 புதிய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க அரசு அனுமதித்து அனைத்தும் முடிக்கப்பட்டுவிட்டன.

ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள், பழனி நகராட்சி ஆகியவற்றில் 200 கிணறுகள் ஆழப்படுத்துவதற்கு ரூ.8 இலட்சமும், அதுபோல் அனைத்து ஊராட்சி ஒன்றியங்கள், பழனி நகராட்சி ஆகியவற்றிற்கு 194 ஆழ்குழாய்க் கிணறுகள் தூர் எடுக்க ரூ.1.55 இலட்சமும் அனுமதிக்கப்பட்டுப் பணிகள் முடிவடையும் தறுவாயில் உள்ளன.

திண்டுக்கல் நகராட்சி, பழனி நகராட்சி, கொடைக்கானல் நகரியம் ஆகியவற்றிற்கு லாரிகள் மூலம் குடிதண்ணீர் வழங்க ரூ. 14 இலட்சம் அரசு அனுமதித்து பணிகள் நடைபெற்று வருகின்றன.

புதிய குடிநீர்க் கிணறுகள் அமைப்பதற்கு ரூ. 5 இலட்சமும், இருக்கின்ற குடிநீர்த் திட்டத்திற்கு மராமத்துப் பணிகள் செய்வதற்கு ரூ. 3 இலட்சமும் அரசு அனுமதித்துப் பணிகள் நடைபெற்று வருகின்றன. குடிநீர்க் குழாய்களை மேலும் நீட்டித்துத் தருவதற்கு 37 இடங்களில் ரூ. 2 இலட்சமும் அரசு அனுமதித்துள்ளது.

### ரூ. 28.45 இலட்சம் மதிப்பீட்டில் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு:

வனத்துறை மூலம் 142 தடுப்பு அணை கட்டும் பணிகளுக்காகவும், கிணறு ஆழப்படுத்தும்பணி 1ம், கசிவு நீர்க் குட்டைகள் அமைக்கவும் ரூ. 9.65 இலட்சமும், பொதுப் பணித்துறை மூலம் குளங்களை மராமத்து பார்க்கவும், நீர்ப்பாசனக் கால்வாய்களை ஆழப்படுத்தும் பணிக்கும் ரூ. 7 இலட்சமும், 21 சிறு பாசனத் திட்டங்களுக்கு ரூ. 5 இலட்சமும், நெடுஞ்சாலைத் துறை மூலம் கிராமச் சாலைகள் மேம்படுத்த ரூ. 8 இலட்சமும் அரசு அனுமதித்து 21 பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஏற்கெனவே ரூ. 54.54 இலட்சம் செலவில் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கிராமங்களில் உள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் பொருட்டு 182 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் 35 கசிவுநீர்க் குட்டைகளும், ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் புதிய குளங்கள் வெட்டுதல், குளம் தூரெடுத்தல், மதகுகள் கட்டுதல், புதிய வாய்க்கால்கள் அமைத்தல் ஆகியவற்றிற்கு அரசு அனுமதித்த தொகை செலவழிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஆதிதிராவிடர்களுக்கு இம்மாவட்டத்தில் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் 1430 வீடுகள் கட்டுவதற்கு ரூ. 148 இலட்சம் அரசு அனுமதித்து 116 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

## இராமநாதபுரம் மாவட்டத்தில்

இராமநாதபுரம் மாவட்டம் கடலாடி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கன்னிராஜபுரம், கீழச்செல்வனூர், மேலசிறுபோது, கீழசிறுபோது ஆகிய கிராமங்களில் 10-7-89 அன்று பொதுமக்கள் கொடுத்த வரவேற்பை மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. எஸ். தங்கவேலு அவர்கள் ஏற்றுக் கொண்டார். சிக்கலில் நடைபெற்ற அரசு விழாவில் ஏழை, எளியவர்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். 11-7-89 அன்று நயினார்கோயில் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சிறுவயல் கிராமத்தில் 10 ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு அடிக்கல் நாட்டினார். இதன் மதிப்பு ரூ. 1,42,000 ஆகும்.

மேலும் பல நிகழ்ச்சிகளில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது, ''அரசின்

சார்பில் நடப்பு நிதியாண்டில் ஆதிதிராவிடர்களுக்கு 45,000 குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்படவுள்ளது. முதியோருக்கு வழங்கப்பட்டு வந்த முதியோர் உதவித் தொகைக்கான இலக்கினைத் தளர்த்தி தகுதியுள்ள அனைவருக்கும் முதியோர் உதவித் தொகை கிடைக்க ரூ. 35/-லிருந்து ரூ. 50/-ஆக உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது. மேலும் தமிழக அரசு ஏழை, எளியவர்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தால் 1 இலட்சம் நெசவாளர்கள் நிரந்தர வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர்'' என்று தெரிவித்தார்.

வேளாண்மைப் பட்டதாரிகள் சங்கம் அளித்த வரவேற்பில் கலந்துகொண்டு பேசும்போது,

''வேளாண் பட்டதாரிகள் இந்த நாட்டிற்கும், நாட்டு மக்களின் உயர்வுக்கும் வழி காட்டியாக இருக்க வேண்டும்'' என்றும் கேட்டுக் கொண்டார்.

பரமக்குடி-எமனேசுவரம் நெசவாளர்கள் சங்கங்கள் சார்பில் வழங்கிய வரவேற்பில் பேசும்போது,

''இன்சூரன்சுத் திட்டத்தின் மூலம் கைத்தறி நெசவுத் தொழிலாளி மரணம் அடைந்தால் ரூ. 5 ஆயிரம் வழங்கப்படுகிறது. அதை ரூ. 10 ஆயிரமாக உயர்த்துவது பற்றிப் பரிசீலனை நடக்கிறது என்றும், ஒரே ஆண்டில் 20 ஆயிரம் நெசவாளர்களைக் கூட்டுறவின் கீழ் கொண்டு வந்து நெசவாளர்களுக்கு 2,500 வீடுகள் கட்டும் திட்டம் நடைமுறைக்கு வரவிருக்கிறது''என்றும் தெரிவித்தார்.

## தஞ்சை மாவட்டத்தில்

''தஞ்சாவூர் மாவட்டத்திற்கு 350 ஆழ்குழாய்க் கிணறுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருந்தது. இவற்றில் 310 ஆழ்குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டு விட்டன. மீதம் உள்ளவை இன்னும் இரண்டு வாரங்களில் அமைக்கப்பட்டு விடும். கடலோரப் பகுதிகளில் அமைப்பதற்காக ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் பேரூராட்சி மன்றங்களுக்கு இம்மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள 90 உறை கிணறுகளில், 60 உறை கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. ஏற்கெனவே அமைக்கப்பட்டு பழுதடைந்த 78 ஆழ்குழாய்க் கிணறுகளில், 58 கிணறுகள் தூர் எடுக்கப்பட்டுவிட்டன. மீதமுள்ளவை ஆகஸ்டு மாத முதல் வாரத்திற்குள்ளாகத் தூர் எடுக்கப்பட்டு விடும்.''

''நாகப்பட்டினத்தில் மட்டுமே 150 வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட 990 வடிமுனைக்குழாய்க்கிணறுகளில் 444



இராமநாதபுரம் மாவட்டத்தில் மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்.

அமைக்கப்பட்டுவிட்டன. மாவட்டத்திலுள்ள 30 ஆயிரம் கைப் பம்புகளில் 257 பம்புகள் பழுதடைந்துள்ளன. இவைகள் உடனடியாகச் சரி செய்யப்படும்.''

''பொதுமக்களுக்கு வேலை அளிக்க வேண்டுமென்பதற்காகக் குளங்களை ஆழப்படுத்துதல், கரைகளைச் சீர்செய்தல், வாய்க்கால் தூர் வாருதல் போன்ற பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. இப்பணிகளில் 1900 வாய்க்கால்களும், 800 குளங்களும் சீரமைக்க எடுத்துக் கொள்ளப்பட்டன. இப்பணிகள் செப்டம்பர் மாதத்துக்குள்ளாக முடிக்கப்படும்.

''ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ.6 கோடியே 56 இலட்சம் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. இதில் இதுவரை ரூ.2 கோடியே 84 இலட்சம் செலவிடப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டு விட்டன. அதாவது 44% பணிகள் முடிக்கப்பட்டு தமிழகத்திலேயே தஞ்சாவூர் மாவட்டம் 2-வது இடத்தைப் பெற்றுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 11,565 பணிகளில் 2 ஆயிரம் பணிகள் முடிக்கப்பட்டு விட்டன. ஆதி திராவிடர்களுக்காக ஒதுக்கப்பட்ட 4,846 வீடு கட்டும் பணி மிக வேகமாக நடைபெற்று வருகின்றது.

''ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 17 ஆயிரத்து 300 நபர்களுக்குத் தஞ்சாவூர் மாவட்டத்தில் மானியத்துடன் கூடிய கடன் உதவிகள் அளிக்கப்படும். இதற்காக ரூ. 14 கோடி அனுமதிக்கப்பட்டு உள்ளது. இத்திட்டத்தின் கீழ் உதவிகளை அரசு இவ்வாண்டு டிசம்பர் மாத முடிவிற்குள் அளிக்க வேண்டும் என்று உத்தரவிட்டு உள்ளது.

—நிலச்சீர்திருத்தச் சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் திரு. சி.என். ராம்தாஸ் தஞ்சையில் செய்தியாளர்களிடம் கூறியது. (21.7.89)

## திருச்சி மாவட்டத்தில்

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள 4 ஆயிரத்து 964 சத்துணவுக்கூடங்களில் 5 இலட்சத்து 67 ஆயிரத்து 522 குழந்தைகள் இலவசச் சத்துணவால் பயனடைந்து வருகிறார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வரின் பிறந்த நாளான ஜூன் மூன்றாம் நாள் 5 இலட்சத்து 19 ஆயிரத்து 49 குழந்தைகளுக்கு இலவச முட்டை வழங்கப்பட்டது. இதற்காக 2 இலட்சத்து 59 ஆயிரத்து 525 ரூபாய் செலவு செய்யப்பட்டது. இதே போல் ஜூன் மாத இறுதியில் 5 இலட்சத்து 22 ஆயிரத்து 103 குழந்தைகளுக்கு இலவச முட்டைக்காக ரூ. 2 இலட்சத்து 61 ஆயிரத்து 52 செலவு செய்யப்பட்டது. இந்தத் திட்டம் தொடர்ந்து வெற்றிகரமாகச் செயல்பட 1989 ஜூலை முதல் சத்துணவுக் கூடங்களுக்கு முட்டைகள் வழங்க டெண்டர் கோரப்பட்டது.

### இலவச அரிசி

மாத வருமானம் ரூ.300ம் அதற்கும் குறைவாக உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வரின் பிறந்த நாளையொட்டி (2.6.89 முதல் 8.6.89 முடிய) குடும்ப அட்டை ஒன்றுக்கு 5 கிலோ வீதம் அரிசி இலவசமாக வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 7 இலட்சத்து 26 ஆயிரத்து 198 குடும்ப அட்டைகளுக்கு வழங்குவதற்காக 3 ஆயிரத்து 630 மெ.டன் அரிசி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஜூன் 2ந் தேதி முதல் 8ந் தேதி வரை 7 இலட்சத்து 5 ஆயிரத்து 148 குடும்பங்கள் 3 ஆயிரத்து 525 மெ.டன் அரிசியை நியாய விலைக் கடைகளின் மூலம் இலவசமாகப் பெற்றுள்ளனர். இது 97. விழுக்காடு ஆகும்.



### வறட்சியை மாற்றி வளர்ச்சிக்கு வழி வகுப்போம்

''நீரின்றி அமையாது உலகு'' என்ற வள்ளுவரின் வாக்குக்கு ஏற்ப மனிதனின் அடிப்படைத் தேவையான குடிநீரை வழங்க, திருச்சி மாவட்டத்தில் பல்வேறு வறட்சி நிவாரண நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளன.

நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளில் ஆழ் குழாய்க் கிணறுகள் 625 அமைக்கத் திட்டம் தீட்டப்பட்டு 543 அமைக்கப்பட்டு விட்டது. இதற்காக ஒரு கோடியே 85 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒரு கோடியே 39 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது.

### திறந்த வெளிக் கிணறுகள்

திறந்த வெளிக் கிணறுகளை ஆழப்படுத்த 22 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 428 பணிகள் மேற்கொள்ளப்பட்டு அதில் 351 கிணறுகள் 17 இலட்சத்து 87 ஆயிரம் செலவில் ஆழப்படுத்தப்பட்டுள்ளன.

பேரூராட்சிகளில் 4 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 40 பணிகள் மேற்கொள்ளப்பட்டு 30 கிணறுகள் ரூ 2 இலட்சத்து 75 ஆயிரம் செலவில் ஆழப்படுத்தப்பட்டு உள்ளன.

ரூபாய் 50 ஆயிரம் செலவில் நகராட்சிப் பகுதிகளில் 5 திறந்த வெளிக்கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டு பொதுமக்கள் பயன் பெற்று வருகிறார்கள்.

இது தவிர வாகனம் மூலம் ரூபாய் 7 இலட்சம் செலவில் பொதுமக்களுக்குக் குடிநீர் வழங்கத் திட்டமிடப்பட்டு, இதற்காக 4 இலட்சத்து 94 ஆயிரம் ரூபாய் செலவிடப்பட்டு வாகனங்கள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டது.

கிராமங்களில் 29 புதிய கிணறுகள் வெட்ட 8 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

### வேலைவாய்ப்புத் திட்டங்கள்

நமது மாநில அரசு தற்போதுள்ள வறட்சி நிலைமையினைக் கருத்திற்கொண்டு கிராமப்புற ஏழைமக்களுக்கு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் வேலை அளிக்க, இம்மாவட்டத்திற்கு ரூ.124 இலட்சத்து 67 ஆயிரம் ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் கசிவு நீர்க்குட்டைகள் வெட்டுவதற்காக ரூ 44.935 இலட்சம் ரொக்கமாக வேளாண்மைப் பொறியியல் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள ரொக்கம் ரூ 79.735 இலட்சம் தானியங்களின் மதிப்பு ரூ 34.172 இலட்சமும் சேர்த்து ரூ 113.907 இலட்சம் மதிப்பீட்டில் இம்மாவட்டத்தில் 32 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 888 ஊராட்சிகளிலும், ஊருணி, குளங்கள் தூர் எடுத்தல், வரத்து வாய்க்கால் தூர் எடுத்தல் மற்றும் நீர்ப்பாசன ஆதாரங்கள் தூர் எடுத்து ஆழப்படுத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளன.

461 ஊருணி, 599 சிறுநீர்ப் பாசனக் குளங்கள், 501 வரத்து வாய்க்கால் தூர் எடுத்தல் ஆக மொத்தம் 1561 வேலைகள் இத்திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை 103.456 இலட்சம் செலவு செய்யப்பட்டு 10 இலட்சத்து 34 ஆயிரத்து 560 மனித சக்தி நாட்களுடன் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் யாவும் விரைவில் முடிக்கப்படும்.

**தமிழ்நாடு ஆவணக்காப்பகச் சீரமைப்புக் குழு**

தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தின் நடைமுறையைச் சீரமைக்கும் பொருட்டு டாக்டர் எஸ். கோபால் தலைமையில் குழு ஒன்றைத் தமிழக அரசு நியமித்துள்ளது.

சென்னை கிறித்துவக் கல்லூரி வரலாற்றுப் பேராசிரியர் திரு. சிரஞ்சீவி என். நிர்மல், மதுரை காமராசர் பல்கலைக்கழக ஓய்வு பெற்ற வரலாற்றுப் பேராசிரியர் டாக்டர் அனுமந்தன், தமிழ்நாடு ஆவணக் காப்பக ஆணையர் ஆகியோர் இக்குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

இந்தக் குழு, தமது அறிக்கையை ஆறு மாத காலத்திற்குள் அரசிடம் வழங்கும்.

### ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம்

திருச்சி மாவட்டத்தில், நடப்பு நிதியாண்டில் (1989-90) ரூ 1136.37 இலட்சங்கள் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் மைய அரசு 80 விழுக்காடும், தமிழக அரசு 20 விழுக்காடும் எனப் பிரித்துள்ளது. மைய அரசின் ஒதுக்கீடாக ரொக்கமாக ரூ 709.61 இலட்சமும், மாநில அரசின் ஒதுக்கீடாக ரூ 327.27 இலட்சமும், தானியங்களின் மதிப்பீடாக ரூ 200.80 இலட்சமும் ஆகும். இந்த ஒதுக்கீட்டின்படி மைய அரசின் தவணைத் தொகையாக இதுவரை ரூ 423.86 இலட்சமும் மாநில அரசின் தவணைத் தொகையாக ரூ 124.67 இலட்சமும் கிடைக்கப் பெற்றது.

இம்மாவட்டத்தில் 157 கிராமங்களில் 3491 தொகுப்பு வீடுகள் ரூ 495.722 இலட்சம் மதிப்பீட்டில் திட்டமிடப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

திட்ட மதிப்பீட்டில் ரூ 139.640 இலட்சம் அணி வீடுகளுக்கு மேற்கூரை (ஆர்.சி.சி. கூரை) அமைக்கச் சிறப்பினமாக நடப்பாண்டில் மாநில அரசு நிதி ஒதுக்கீடு அனுமதிக்கப்பட்டுள்ளது. இதற்கான வரைபடம் அரசினரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்ட வரைபட நகல் அனைத்துத் திட்டச் செயலாக்க அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டு, பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

### கிராமச் சாலைகள் மேம்பாடு

ஊராட்சி மன்றங்கள் செயற்படுத்தும் பணிகளுக்காக ரூ. 4.52 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீட்டிலிருந்து 115 சாலைப் பணிகள் சாலை மேம்பாடு செய்ய எடுத்துக் கொள்ளப்பட்டு உள்ளன. இதற்காக ரூ.178.48 இலட்சம் செலவாகிறது. இதனால் 416 கிராமங்களில் 321.9 கி.மீ. தூரம் வரை சாலைகள் மேம்பாடு அடையும். மீதமுள்ள ரூ. 273.89 இலட்சம் ஒதுக்கீட்டுத் தொகைக்குப் பள்ளிக் கட்டடங்கள், சமுதாய மன்றக் கூடங்கள் மற்றும் வடிகால் வசதிகள் போன்ற பணிகள் செய்யப்படும்.

திருச்சி மாவட்டத்திற்கு, நடப்பாண்டில் ரூ.405.178 இலட்சம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுப் பணிகள் நடந்து வருகின்றன. இதில் மைய அரசிடமிருந்து முதலாவது தவணையாக ரூ 90.457 இலட்சம் வரப் பெற்றுள்ளது. அனைத்து ஊராட்சிகளிலும் மக்கள் தொகை அடிப்படையில் பயனாளிகள் ஒதுக்கீடு செய்ய அரசு குறிப்பிட்டுள்ளபடி, அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் (32 எண்ணிக்கை) 11,831 பயனாளிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளனர். மீதமுள்ள 3,943 பயனாளிகள் மாவட்ட அளவில் சிறப்பு ஒதுக்கீடுக்காக வைக்கப்பட்டு, அவ்வப்போது வரும் குறைகளுக்கு ஏற்ப ஒதுக்கீடு செய்யப்படுவர்.

### தனிப்படைக் குழு

சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டப்பேரவைத் தொகுதிக்கு உட்பட்ட ஒவ்வொரு ஊராட்சி அளவிலான தனிப்படைக் குழுவில் ஒரு உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, ஒவ்வொரு ஊராட்சியிலும் தனிப்படைக் குழுவினரால் 1989-90-ஆம் ஆண்டுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகள் தேர்வு நடைபெற்று வருகிறது. இப்பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு விடும்.

திட்டங்களை நிறைவேற்றுவதில் திருச்சி மாவட்டம் முன்னிலையில் இருந்து வருகிறது. கடந்த ஆண்டில் இருபது அம்சத் திட்டங்களை நிறைவேற்றுவதில் இம்மாவட்டமே முதலிடம் பெற்றது.

—மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் அனுப்பிய தகவல்களிலிருந்து




## மாடியில் வீட்டுக் காய்கறித் தோட்டம்

சமச்சீர் உணவிற்கு ஒவ்வொரு மனிதரும் பழங்களும் காய்கறிகளும் உண்ணுவது அவசியம். இவற்றில் புரதம், மாவுச் சத்து, வைட்டமின்கள், தாதுப் பொருட்கள் அடங்கியுள்ளன. தினமும் பொதுவான அளவாக, வளர்ச்சிபெற்ற மனிதர்கள் 300 கிராம் காய்கறிகளை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

நாம் விரும்பும் புத்தம் புதிய காய்கறிகளைக் குறைந்த விலையில் ஆண்டு முழுவதும் பெற, வீட்டுக் காய்கறித் தோட்டம் அவசியம். உபயோகம் குறைவாக இருக்கும் மொட்டை மாடிகளையும் இதற்குப் பயன்படுத்தலாம். வீட்டில் கிடைக்கும் டப்பாக்கள், கூடைகள், பலவகைப் பெட்டிகள், காலி டின்கள் போன்றவற்றை இதற்குப் பயன்படுத்தலாம்.

இப்பெட்டிகளின் அடியில் நீர் வடிவதற்கு இரண்டு மூன்று துவாரங்கள் போடவும். கூடைகள், வாளிகள், மரப் பெட்டிகள் ஆகியவற்றிற்கு மட்டும் பாலிதீன் காகிதத்தை உட்பக்கங்களில் ஒட்டினாற் போல் பரப்பி விடவும். இக்காகிதத்திலும் நீர் வடிய துவாரங்கள் வேண்டும். இப்பெட்டிகளில் செம்மண், மணல், மக்கிய உரம், இருபொறைமண் போன்றவற்றைச் சரிசமமாகக் கலந்து நிரப்பவும். பெட்டிகளின் மேல் விளிம்பில் இருந்து கீழே 3 அங்குலம் இடைவெளிவிட்டு நிரப்பவும். மொட்டை மாடியின் பரப்பிற்கு ஏற்றவாறு பல பகுதிகளாகப் பிரித்து தொட்டிகளையும், பெட்டிகளையும் வரிசையாக வைக்க வேண்டும்.

1. 6 அடி நீளம், இரண்டரை அடி அகலம், மூன்றரை அடி உயரம் கொண்ட பெட்டிகளில் முருங்கை, பப்பாளி, மேற்கிந்திய செர்ரி, கறிவேப்பிலை, தவசிக்கீரை, எலுமிச்சை ஆகியவற்றைப் பயிர் செய்யலாம். இதனால் 3-4 ஆண்டுகள் வரை பயன் கிடைக்கும். இப்பெட்டிகளின்மேல், சிறிய பந்தல் அமைத்து கொடிக் காய்களான பந்தல் அவரை, பீர்க்கு, பாகல் போன்ற பயிர்களை மூன்று நான்கு மாதங்கள் வரை வளர்க்கலாம்.

2. நான்கு அடி நீளம், 2 அடி அகலம், 2 அடி உயரம் கொண்ட பெட்டிகளில் கேரட், பீட்ருட், முள்ளங்கி, தக்காளி, கத்தரி, வெண்டை ஆகியவற்றை 3-4 மாதங்கள் வளர்க்கலாம்.

3. கூடைகள், வாளிகள்: இவற்றில் முளைக்கீரை, தண்டுக்கீரை, அரைக்கீரை போன்றவற்றை 25-30 நாட்கள் வளர்க்கலாம். தட்டப் பயறு, சீமை அவரை, வெங்காயம் போன்றவற்றை 2-3 மாதங்கள் பயிரிடலாம்.

4. காலி பெயிண்ட் டப்பாக்களில் வெங்காயத்தைப் பயிரிடலாம்.

காய்கறிச் செடிகளை நட்டு ஒரு மாதம் கழித்து மேலுரமிட வேண்டும். 6 அடி நீளம், 2½ அடி அகலம் கொண்ட மரப்பெட்டிகளுக்கு அம்மோனியம் சல்பேட், மூரியேட் ஆப் பொட்டாஷ், சூப்பர் பாஸ்பேட் ஆகிய ஒவ்வொன்றிலும் 100 கிராம் அளவு நீரில் கரைத்து ஊற்றவும். 10-15 நாட்களுக்கு ஒருமுறை சாணித் தண்ணீர் ஊற்றவும். மாலையில் 2-3 நாட்களுக்கு ஒருமுறை தொட்டியின் ஈரத் தன்மையைப் பொறுத்து தண்ணீர் ஊற்ற வேண்டும். சிறிய பாத்திரம் கொண்டு நீர் ஊற்றவும். சோப்பு நீரை உபயோகிக்க வேண்டாம். காய்கறிச் செடிகளைப் பூச்சிகளும் நோய்களும் தாக்கும். இதை ஆரம்பத்தில் இருந்தே மருந்து தெளித்துக் கட்டுப்படுத்த வேண்டும்.

## மிளகில் நோய்க் கட்டுப்பாடு

கீழ்ப்பழனி மலையில் காப்பியோடு மிளகும் கலப்புப் பயிராகப் பயிரிடப்பட்டு வருகின்றது. மிளகு பயிரிடும் தோட்டங்களில் விளைச்சல் கணிசமாகக் குறைய அதில் தோன்றும் நோய்களும் ஒரு காரணமாகும்.

திடீர் வாடல் நோய் பைட்டோப்தோரா பால்மிவோரா என்னும் பூசணத்தால் உண்டாகின்றது. இந்நோய் ஜூன் மாதத்திலிருந்து செப்டம்பர் மாதம் வரை அதாவது தென்மேற்குப் பருவக்காற்று வீசும் காலங்களில் அதிகமாகக் காணப்படும். இந்நோய் பரவுவதற்குக் குறைந்த வெப்ப நிலையும் (20-22) காற்றின் அதிக ஈரப்பசையும் ஏற்ற சூழ்நிலைகளாகும்.

இந்நோய் மிளகுக் கொடியை எல்லா வயதிலும் தாக்கும். ஆனால் வயதான கொடிகள்தான் அதிகமாகத் தாக்கப்படும். பூமியை ஒட்டியுள்ள கொடியின் அடிப்பாகம் அழுக ஆரம்பிக்கும். இலைகள் மஞ்சள் நிறமாக மாறி, வாடிவிடும். தாக்குதல் கீழ் நோக்கிச் செல்லும்போது வேர்களும் அழுக ஆரம்பிக்கும். கொடிகள் வாட ஆரம்பித்து இலைகளும், காய்களும் கொட்டிவிடும்.

### இவற்றை எப்படித் தடுப்பது?

நோய் தாக்கப்பட்டு இறந்த கொடிகளையும் உதிர்ந்த இலைகளையும் அப்புறப்படுத்தி எரிக்க வேண்டும். ஒருசத வீதம் போர்டோக் கலவையைத் தென்மேற்குப் பருவமழைக்கு முன்னும் பின்னும் தெளிக்க வேண்டும். தெளிக்கும்பொழுது அதை தண்டு பாகத்தில் நன்கு படுமாறு தெளிக்க வேண்டும்; ஒருசத வீதம் போர்டோக் கலவையை வேரைச்சுற்றி ஒரு சதுர மீட்டருக்கு இரண்டரை லிட்டர் என்ற அளவில், மண்ணின் வேர்ப்பாகம் நனையும் அளவு ஊற்ற வேண்டும்; போர்டோ பசையைப் பூமியிலிருந்து ஒரு மீட்டர் உயரம் வரை கொடியில் தடவுவதன் மூலம், நோய்த் தாக்குதலை ஆரம்பத்திலேயே தடுத்து விடலாம்.

## பயறு வகைப் பயிர்களின் அதிக விளைச்சலுக்கு நுண்ணுயிர் உரங்கள்

பயறு வகைப் பயிர்கள் பயிரிடும் நிலத்தில் ரைசோபியம் நுண்ணுயிர்கள் இலட்சக் கணக்கில் இருந்தாலும், அவைகள் அனைத்தும் வேர் முடிச்சுகளை உண்டாக்கி தழைச் சத்தைக் கிரகிக்கும் தன்மை பெற்றிருப்பதில்லை. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில், உளுந்து, துவரை, பச்சைப் பயறு, தட்டைப் பயறு போன்ற பயறு வகைப் பயிர்களுக்குத் தேவையான வீரியம் மிக்க ரைசோபியம் நுண்ணுயிர்களைத் தெரிந்தெடுத்து, அவற்றை நம் நாட்டின் பல பாகங்களிலும் களப் பரிசோதனைகள் செய்து, அகில இந்திய அளவில் ஒவ்வொரு வகைப் பயிருக்கும் ஏற்ற வீரிய ரைசோபிய நுண்ணுயிர்களை விவசாயிகளுக்குக் கொடுத்து வருகிறார்கள்.

துவரைக்கு சி.சி.1 (C.C.1) என்ற ரைசோபிய நுண்ணுயிரும், பச்சைப் பயிறுக்கு ஜி.எம்.பி.எஸ். என்ற ரைசோபிய நுண்ணுயிரும், உளுந்துப் பயறுக்கு பி.எம்.பி.எஸ். பி. 47 என்ற நுண்ணுயிரும் நம் நாட்டின் பல்வேறு பாகங்களில் ஐந்து ஆண்டுகளாக நடத்திய களப் பரிசோதனையில் தொடர்ந்து நல்ல பலன் அளித்து வருகின்றது.

கடந்த ஆண்டு, பச்சைப் பயறில் நடத்திய சோதனைகளில் ஜி.எம்.பி.எஸ். நுண்ணுயிர் டெல்லியில் 49 சதவீதம் வரை அதிக மகசூலும், துவரையில் சி.சி.1 இனம் குஜராத்தில் 84 சதம் வரை அதிக மகசூலும், உளுந்தில் பி.எம்.பி.எஸ்.பி. பி 47 இனம் பஞ்சாப்பில் 30 சதம் வரை அதிக மகசூலும், தட்டைப் பயிறில் கோ.சி. 15 இனம் பீகாரில் 35 சதம் வரை அதிக மகசூலும் கொடுத்துள்ளது.

விவசாயிகள் ஆடிப் பட்டத்தில் பயிரிடப் போகும் பயறு வகைப் பயிர்களுக்கு ரைசோபியம் நுண்ணுயிரைக் கலந்து விதைக்கலாம். தேவையான ரைசோபிய உரக் கலவை — தலைவர், நுண்ணுயிரியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை-3 என்ற முகவரியில் கிடைக்கும்.

200 கிராம் கொண்ட ஒரு ரைசோபியப் பாக்கெட்டின் விலை ரூ.2/- ஆகும். ஒரு ஏக்கருக்கு விதைப்பதற்கான விதைக்கு இரண்டு பாக்கெட் நுண்ணுயிர் தேவைப்படுகிறது.

> படிப்பவர்களுடைய நேரத்தை வீணாக்காமல், அதிகமான அறிவைப் புகட்டத்தக்க நூலை இயற்றும் ஆசிரியனே அதிகப் பயன் தருபவன் ஆவான்.
>
> —சிட்ஸ்மித்
>
> பேசாமலே இருப்பவன் ஊமை; எப்போதும் பேசிக்கொண்டிருப்பவன் வாயாடி; பேச வேண்டிய இடத்தில் மட்டுமே பேசுபவன் அறிவாளி.
>
> —நிகல்சன்.
>
> வாழ்வின் இலட்சியம் இன்பம் மட்டுமே அல்ல; நம்மையும் பிறரையும் நல்லோராக்குவதே.
>
> — மாஜினி

## கரும்பில் இளம் குருத்துப் புழுக்களைக் கட்டுப்படுத்தும் முறைகள்

தற்பொழுது தமிழ்நாட்டில் கரும்பு பயிர் செய்யப்பட்டுள்ள பகுதிகளில் இளம் குருத்துப்புழுக்களின் சேதம் பெருவாரியாகக் காணப்படுகிறது. குறிப்பாக பின்பட்டத்தில் (மார்ச் - ஏப்ரல்) நடவு செய்யப்பட்டுள்ள பயிரில் தாக்குதல் அதிகமாக உள்ளது.

தாய் அந்துப் பூச்சிகள் தோகைகளுக்கு அடியில் தட்டையான முட்டைகளைக் குவியல்களாக இடுகின்றன. முட்டையினின்று வெளிவரும் இளம்புழுக்கள் பூமி மட்டத்திற்கு சிறிது மேலாகத் தண்டில் துளையிட்டு உட்சென்று நடுக்குருத்தின் அடிப்பாகத்தை உண்பதால் நடுக்குருத்து காய்ந்துவிடும். காய்ந்த குருத்தை இழுத்தால் உடனே கைக்கு வந்துவிடும். புழுக்கள் ஒரு குருத்திலிருந்து மற்ற குருத்துக்களுக்குச் சென்று தாக்குவதால் சேதம் பரவலாகத் தென்படும். முழு வளர்ச்சியடைந்த புழுக்கள் பழுப்பு நிறத் தலையையும் உடலின் மேற்புறம் 5 வெண் பழுப்புக் கோடுகளையுடையனவாகவும் இருக்கும். இளம் குருத்துப் புழுக்களின் சேதத்தினால் 60% தாய்க் குருத்துகள் பாதிக்கப்படுவதுடன் வயல்களில் பயிர் இல்லாமல் இடைவெளி அதிகமாகக் காணப்படும். இக்குருத்துப் புழுக்களிலிருந்து கரும்பு பயிரைப் பாதுகாக்க முன்பட்டங்களில் அதாவது டிசம்பர், ஜனவரி மாதங்களில் நடவு செய்யப்படும் பயிர் இக்குருத்துப் புழுக்களின் சேதத்திலிருந்து தப்பித்துக் கொள்ள வாய்ப்புண்டு என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது; பூச்சி நோய் தாக்காத விதைக் கரணைகளை நடவுக்குப் பயன்படுத்தவேண்டும்; காய்ந்த தோகைகளைப் பார்களுக்கு இடையில் பரப்புவதால் சேதம் வெகுவாகக் குறையும்; அந்துப்பூச்சிகளின் நடமாட்டத்தைக் கணிக்க விளக்குப் பொறிகள் வைக்கவேண்டும்; விண்டேன் 10 சத குருணைகளை ஏக்கருக்கு 5 கிலோ என்ற அளவில் சமஅளவு மணலையும் சேர்த்து குருத்தினுள் இடவேண்டும். அல்லது எண்டோசல்பான் 1.125 லிட்டர் மருந்தை (2 மில்லி மருந்தை ஒரு லிட்டர் நீரில்) ஒரு எக்டருக்கு மாலை வேளைகளில் தெளிக்க வேண்டும்; இளம் குருத்துப் புழுக்களைக் 'கிரானுலோசஸ்' என்னும் நச்சுயிரி கொண்டும் உயிரியல் முறையில் கட்டுப்படுத்தலாம்.

## உளுந்துப் பயிரில் நச்சுயிரி நோய்கள்

தமிழ்நாட்டில் சாதாரணமாக உளுந்துப் பயிரில் மூன்றுரக நச்சுயிரி நோய்கள் பரவலாகத் தோன்றுகின்றன. மஞ்சள் தேமல் நோயும் நெளிவு நோயும் அதிக வெப்பக் காலங்களிலும், இலைச்சுருட்டை நோய் மழைக்காலங்களிலும் அதிகமாகத் தோன்றுகின்றன. செடியில் இந்நோய்கள் ஏற்படும் பருவத்திற்கேற்ப மகசூல் இழப்பு 30 முதல் 100 விழுக்காடு வரை இருக்கும். இம்மூன்று ரக நச்சுயிரி நோய்களை ஒரே செடியிலும் காணலாம்.

மஞ்சள் தேமல் நோயினால் பாதிக்கப்பட்ட செடிகளின் இளம் இலைகளில் ஆங்காங்கே, மஞ்சள் நிறப் பகுதிகள் தோன்றி, பரவலாகி, துளிர் இலைகள் முழுவதும் மஞ்சள் நிறமாக மாறிவிடுகின்றன. நோயுற்ற செடிகளின் காய்கள் சிறுத்தும், சுருண்டும், மஞ்சள் நிறமாகவும் தோன்றுகின்றன. இக்காய்களில் விதைகள் சுருங்கியும் சிறியவையாகவும், மஞ்சள் நிறமாகவும் உள்ளன. இந்நோயினைத் துவரை, சோயாமொச்சை, பாசிப்பயறு முதலிய பயிர்களிலும், கரிசிலாங்கண்ணி, மருள் ஊமத்தை, கம்பன்புல் போன்ற களைச் செடிகளிலும் காணலாம். பெமீசியா டெபாசி என்னும் வெள்ளைப் பூச்சிகள் இந்நச்சுயிரியையும் பரப்புகின்றன.


இலைச்சுருட்டை நோயினால் பாதிக்கப்பட்ட செடிகளில், இலைகளின் ஓரங்களிலுள்ள ஒருசில கிளை நரம்புகள் வெளுத்துத் தோன்றுகின்றன. பின்பு, இளம் இலைகளின், வெளுத்த அல்லது காய்ந்த வளைப் பகுதிகள் அல்லது புள்ளிகள் தோன்றுகின்றன. இவ்விதமாகப் பாதிக்கப்பட்ட இலைகள் கீழ் நோக்கிச் சுருண்டு விடுகின்றன. பின்பு விரைவில் உதிர்ந்து விடுகின்றன. இந்நோயினால் பாதிக்கப்பட்ட இளஞ்செடிகளின் மேற்பாகங்கள் காய்ந்து விடுகின்றன. இந்த நச்சுயிரி, இலைச் சாற்றின் மூலமும், விதைகளின் மூலமும், இலைப் பேன்கள் மூலமும் பரவுகின்றன.

இலைப்பரப்பு நெளிவு நோயின் அறிகுறிகள் சாதாரணமாக, நான்கு வாரப் பயிரில் தோன்றுகின்றன. பொதுவாக, மூன்றாவது அல்லது நான்காவது முக்கூட்டிலைகள் இளம் பச்சையாகவும், பெரியதாகவும் உள்ளன. அவற்றின் நரம்புகள் பெருத்தும் காணப்படுகின்றன. பின்பு ஒரு வார காலத்தில், இலைகள் நெளிந்து சுருட்டையாகிவிடுகின்றன. செடியின் மலட்டுத் தன்மை நோய் தாக்கப்படும் வயதைப் பொறுத்தது. மகரந்தத்தூள்கள் மலட்டுத் தன்மையைப் பெற்றிருக்கும். இந்நோயினால் பாதிக்கப்பட்ட செடிகள் அறுவடை வரையிலும் பசுமை நிறத்துடன் தோன்றுகின்றன.

### தடுப்பு முறைகள்

இலைச்சுருட்டை, இலைப் பரப்பு நெளிவு நோய்களை உண்டு பண்ணும் நச்சுயிரிகள், விதைகளின் மூலம் பரவுவதால், நோயுற்ற செடிகளிலிருந்து அறுவடை செய்த விதைகளை, விதைக்கப் பயன்படுத்தல் கூடாது; நோயுற்ற செடிகளை, விதைத்த முப்பது நாட்கள் வரை, உடனுக்குடன் களைந்து எறிந்து விட வேண்டும்; ஒரு எக்டருக்கு, மோனோகுரோட்டோபாஸ் 500 மில்லி அல்லது மீதைல் டெமெட்டான் 500 மில்லியை நீரில் கலந்து செடிகளின் மேல் தெளிக்க வேண்டும். தேவைப்பட்டால், மற்றொரு முறை 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்கலாம்; விதைத்ததிலிருந்து 45 நாட்கள் வரை நச்சுயிரி நோய்களினால் பாதிக்கப்பட்ட செடிகளைப் பிடுங்கி அழித்துவிட வேண்டும். ஏனெனில் அப்பருவத்தில், நோயினால் பாதிக்கப்பட்ட செடிகளை நிலத்தில் விட்டு வைத்திருந்தால் விதைகளுக்கும் நச்சுயிரி பரவுகின்றது.

வேளாண் தகவல் பணி மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்
கோவை-3




இந்தியாவின் மக்கள் தொகை 1951-இல் 361.09 மில்லியன்; 1981-இல் இது 685.18 மில்லியனாக அதிகரித்தது. 1987-இல் மக்கள் தொகை மேலும் உயர்ந்து 76.7 கோடியாக ஆகியது.

நாடு விடுதலையடைந்த போது 14 சதவிகிதமாக இருந்த எழுத்தறிவு விகிதம் 1951-இல் 16.67 சதவிகிதமாக அதிகரித்தது. தீவிர முயற்சிகளின் பயனாக 1981-இல் எழுத்தறிவு விகிதம் 36.23 சதவிகிதமாக அதிகரித்தது.

எழுத்தறிவு விகிதத்தில் முதலிடம் வகிப்பது கேரளம் (70.41%); குறைந்த எழுத்தறிவு விகிதம் உள்ள மாநிலம் அருணாசலப்பிரதேசம் (20.79%); நாட்டில் எழுத்தறிவு பெற்றோர் எண்ணிக்கை 1951-இல் 60.19 மில்லியனிலிருந்து 1981-இல் 247.55 மில்லியனாக அதிகரித்துள்ளது.

1951-இல் நாட்டில் மொத்தம் 27 பல்கலைகள் மட்டுமே இயங்கி வந்தன. 1986-87-இல் இவற்றின் எண்ணிக்கை 157 ஆக உயர்ந்தது.

1950-51-இல் 2,09,671 ஆக இருந்த துவக்கப்பள்ளிகளின் எண்ணிக்கை 1986-87-இல் 5,37,399 ஆகவும் உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 7,288 லிருந்து 64,240 ஆகவும், கல்லூரிகளின் எண்ணிக்கை 542 லிருந்து 4,151 ஆகவும் அதிகரித்தது.

கல்லூரி மாணவ-மாணவியர் எண்ணிக்கை 1950-51-இல் 0.36 மில்லியனிலிருந்து 1986-87-இல் 5.2 மில்லியனாக அதிகரித்தது.

1950-51-இல் 782 ஆசிரியர் பயிற்சி பள்ளிகளும் 53 ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளும் இயங்கி வந்தன. 1986-87-இல் இவற்றின் எண்ணிக்கை முறையே 973 ஆகவும் 462 ஆகவும் அதிகரித்தது.




# ஹோட்டல் சங்கம்

கலெக்டர் ஆபீஸ் ரோடு, திருச்சிராப்பள்ளி-620 001.

தொலைபேசி:41514 தந்தி: சங்கு டெலக்ஸ்:0455-221.

குளிர்படுத்திய நேர்த்தியான அறைகள்

- 'செம்பியன்' - சைவ அசைவ உணவகம்
- 'சோமா' - அங்கீகரிக்கப்பட்ட மது அறை
- 'நஞ்சை' - குளிர்ந்த கவின்மிகு அரங்கம்
- 'நிவந்தம்' - குளிர்படுத்திய நன்கு அலங்கரிக்கப்பட்ட சகல வசதிகளுடன் கூடிய மிகச் சிறந்த விழாக்கூடம்.

◎ - டெலிபோன் - டெலக்ஸ் - டி.வி. வீடியோ - நாணயமாற்று வசதிகள்.


◎ ரம்யமான சூழ்நிலையுடன் கூடிய புல்வெளி.

உங்கள் இல்லத் திருமணம் மற்றும் நிச்சயதார்த்தம்,
காதணி விழா, திருமணவரவேற்பு முதலிய
சுப நிகழ்ச்சிகளை இனிதே நடத்திட
சிறந்த இடம்

" சங்கம் ஹோட்டல்
திருமண மண்டபம் "

விருந்தோம்பலில் ஒரு உன்னத அனுபவம்.




## கடலூர் சிப்காட் தொழில் வளாகம் தொடக்க விழா

இந்தியாவில் மிகப் பின்தங்கியுள்ள தமிழகத் தொழில் வளர்ச்சியை முதலிடத்திற்குக் கொண்டு வரும் வகையில், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் கடலூர் 'சிப்காட்' தொழில் வளாகத்தினை 31.7.89 அன்று கடலூர் அருகே உள்ள குடிக்காட்டில் தொடங்கி வைத்தார்.

விழாவிற்கு வந்திருந்தோரை 'சிப்காட்' தலைவர் திரு. ஜே.ஆர். இராமநாதன் இ.ஆ.ப., வரவேற்றார்.

விழாவிற்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி அவர்கள் தலைமை தாங்கி உரையாற்றுகையில், "இப்பகுதி மக்கள் ஒத்துழைப்புத் தந்தால், இந்தப் பகுதி மேலும் மேலும் வளர்ச்சி அடையும்" என்றார்.

சட்டப் பேரவை உறுப்பினர் திரு. இள. புகழேந்தி அவர்கள் பேசுகையில், இந்தச் சிப்காட் வளாகத்தில் கடலோர மக்கள் வசதிக்காகப் படகுப் போக்குவரத்து, சாலை வசதியும் சிப்காட் நிறுவனம் அமைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

திரு. நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசுகையில், "இந்த வளாகத்தில் ஏறத்தாழ 2000 பேர்தான் பணியாற்றுவார்கள் என்று தெரிகிறது. சுமார் 10,000 பேர் பணியாற்றும் வகையில் இந்த வளாகம் வளம் பெறவேண்டும் என்று விரும்புகிறேன். இந்தப் பகுதிவாழ் மக்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அடிப்படையில் வழங்கிட வேண்டும்" என்றார்.

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் சிறப்புரையாற்றுகையில், "இந்த வளாகத்தில் அமைந்துள்ள தொழில்கள் சீரும் சிறப்புடனும் செயல்பட விரும்புகிறேன். தாம்பரத்தில் அமைந்துள்ள வர்த்தகத் தொழில் நிறுவனம் மிகவும் சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது. வெளிநாட்டினர் இந்தத் தொழில் நிறுவனத்தை மிகவும் பாராட்டுகின்றனர்" என்றார்.

சிப்காட் வளாகத்தைத் திறந்து வைத்து, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பேசுகையில் கூறியதாவது:

"கடலூரில் சிப்காட் வளாகத்தின் தொடக்கவிழா இன்று நடைபெறுகிறதென்று அறிவிக்கப்பட்டிருந்தாலும்கூட, தொடங்கப்பட்ட ஒன்றுக்குத் தொய்வில்லாமல் நடைபெறுவதற்கான தொடர்ச்சி விழாவாக இந்த விழா அமைந்திருக்கிறது என்பதை இங்கே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

"தொடங்கப்பட்ட ஒன்று சரிவர நடைபெறாததற்குக் காரணங்களை ஆராய்ந்து, அவற்றைச் சீர்செய்து, இந்த வளாகம் மேலும் வளம் பெறவும், பொலிவு பெறவும், ஏராளமான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பைத் தரவும், தமிழகத்தில் தொழில் வளம் சிறக்கின்ற பகுதிகளில் ஒன்றாக இந்தப் பகுதியும் அமையும்.

"தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் அதாவது சிப்காட் ஏற்கெனவே கழக ஆட்சி இருந்த காலத்தில், முதல் முதலாக இராணிப்பேட்டையில் தொடங்கப்பட்டது. இன்று இராணிப்பேட்டை தொழில் வளாகம் 1,300 கோடி ரூபாய் முதலீட்டில் நடைபெற்று வருவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

"இங்கே இந்த வளாகம் வெகு விரைவில் முன்னேறி ஏறத்தாழ 10,000 பேர் வேலை வாய்ப்புப் பெறுவோர்களேயானால், அரசினுடைய சுமை குறையும். தொழிலாளர்கள் நல்வாழ்வு எய்த முடியும். விரைவிலே இங்கு ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்கப்படும். சேரன் போக்குவரத்துக் கழகச் சார்பில் கோவைக்கு அருகில் சிங்கநல்லூர் பகுதியில் 'சேரன்மாநகர்' என்ற ஒரு நகரத்தை, சேரன் போக்குவரத்துக் கழகம் உருவாக்கியுள்ளது. அதேபோல், சேரன் மாநகரைப் போன்ற அந்தச் சிறிய நகரங்கள் தமிழ்நாட்டிலே ஒரு ஐந்தாண்டுக் காலத்தில் ஒரு ஐநூறு இடங்களிலாவது ஐநூறு சேரன் மாநகரங்கள் உருவாக வேண்டுமென்பது என்னுடைய ஆசை".

தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தேவேந்திரநாத் சாரங்கி இ.ஆ.ப. நன்றி கூறினார்.

—நமது செய்தியாளர்

> மக்களுடன் பழகி குறைகளை அறிந்து அவற்றைத் தீர்க்கும் வகையில் சர்க்கார் அதிகாரிகள் பணியாற்றினால், மாநிலத்தில் ஆள்கின்ற சர்க்காருக்கு சிறப்பு வரும்.
>
> ஒவ்வொரு சர்க்கார் அலுவலகமும் ஜனநாயகத்தின் பயிற்சிக் கூடமாக ஆக வேண்டும். அப்போதுதான் ஜனநாயகம் வளரும்.
>
> —பேரறிஞர் அண்ணா

## நலிவுற்றோர் நலம் பெற்றிட...



தென்பெண்ணை ஓடும் தென் ஆர்க்காடு மாவட்டம், கடலூர் நகராட்சி மைதானத்தில், நலிவுற்றோருக்கு நலத்திட்ட உதவிகளை 31-7-89 அன்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் வழங்கினார்.

விழாவிற்கு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் க. பொன்முடி அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில், "நலத் திட்டங்களை அறிவித்த முதல்வர் அவர்கள் மாவட்டங்கள்தோறும், பல நகர்களில் வழங்கி வருகின்றார்கள்" என்றார்.

விழாச் சிறப்புரையாற்றிய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பேசுகையில், "சுமார் 4 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகளை ஏறத்தாழ 2.5 இலட்சம் பேர் இந்த மாவட்டத்தில் இன்று பெறுகின்றனர். பல மாவட்டங்களில் நான் சுற்றுப் பயணம் செய்து நலத்திட்ட உதவிகள் பெற்ற மக்களின் புன்னகையைப் பார்த்து மகிழ்ச்சியடைந்துள்ளேன். 5 கோடி மக்களுக்கும் என்னால் உதவிகளைச் செய்ய முடியாது. என்னால் முடிந்த அளவிற்கு அண்ணா வழியில் திட்டங்களைத் தீட்டிச் செயல்பட்டு வருகிறேன்.

"அண்ணாவின் திட்டங்கள் ஏழை எளிய மக்களை மையமாகக் கொண்டே இருந்தது. நாங்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் மக்களுக்கு உதவி செய்து வருகிறோம். நீதிக் கட்சிக் காலத்திலே பிற்படுத்தப்பட்ட மக்கள் முன்னேற தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா பாடுபட்டனர்." என்றார்.

தொடக்கத்தில் விழாவிற்கு வந்திருந்தோரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தேவேந்திரநாத் சாரங்கி இ.ஆ.ப., வரவேற்றார்.

சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. இள. புகழேந்தி, திரு. கோவிந்தராசன், திரு. பூவராகன், திரு செஞ்சி ராமச்சந்திரன், மற்றும் திரு. நெல்லிக்குப்பம் கிருஷ்ண மூர்த்தி, முதலானோர் பேசினார்கள்.

-நமது செய்தியாளர்

## காணக் கண் கோடி வேண்டும்!

முதலாம் அட்டை சொல்லும் செய்தி:

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் எழில்மிகு மேற்குத் தொடர்ச்சி மலையின் தென்பகுதியில் கடல் மட்டத்திற்கு மேல் 550 அடி உயரத்தில் அருவிகளின் பேரெழிலாய் விளங்குவது குற்றால மலை.

மேகம் சூழ்ந்த அழகுமலைச் சிகரங்களும், பச்சைக் கம்பளம் விரித்தாற் போன்ற மரம் செடி கொடிகளும், உள்ளத்திற்கு மகிழ் ஊட்டும் காலநிலையும், தூய பால் போன்ற வெண்மைநிற நீர்வீழ்ச்சிகளும், மூலிகை மணக்க வழிந்தோடும் அருவிக் கூட்டங்களும் கொண்ட குற்றாலம், இயற்கை தமிழகத்திற்கு அளித்த இனிய கொடை ஆகும்.

இங்குப் பாய்ந்தோடும் சிற்றருவி, தேனருவி, செண்பக அருவி, வற்றாத வடஅருவி, ஐந்தருவி, புலியருவி, பழைய குற்றால அருவி, பழத்தோட்ட அருவி என்ற எட்டு வகை அருவிகளும் உடல் நோய்-உள நோயினைத் தீர்க்கும் ஆற்றல் பெற்றவை.

ஆண்டுதோறும் ஜூன் திங்களில், தொடங்கி செப்டம்பர் வரை குற்றாலத்தில் எழில் நுழுங்கும்.

காட்சிக்கும் மாட்சிக்கும் உரிய குற்றால அருவியின் கவின்மிகு தோற்றம் இவ்விதழ் அட்டையை அலங்கரிக்கிறது.







## கொல்லிமலையில் கோலாகல விழா!

தமிழ்நாடு அரசின் சார்பில், வல்வில் ஓரிவிழா கொல்லிமலையில் செம்மேட்டில் முப்பெரும் விழாவாக ஜூலைத் திங்கள் 31 மற்றும் ஆகஸ்டுத் திங்கள் 1, 2 ஆகிய நாட்களில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

முதல் நாள், மாணவர்கட்கு மலையேறும் போட்டி விழாவாக நடைபெற்றது. இரண்டாம் நாள் (1.8.89) செம்மேடு வல்வில் ஓரித் திடலில் நாமக்கல் பி.வி.என். நாதமுனி குழுவினரின் மங்கள இசையுடன் விழா தொடங்கியது. விழாவிற்கு வந்திருந்தோரை மாவட்ட வருவாய் அலுவலர் திரு. பி. சுப்பையா வரவேற்றார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சுர்ஜித் கே. சவுத்திரி இ.ஆ.ப. பேசுகையில், "மலைவாழ் மக்களும், நகர மக்களும் கலந்து கொள்ளும் விழாவாக இது அமைந்துள்ளது. மலைவாழ் மக்கள் தங்களுக்குரிய வசதிகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளக் கேட்டுக் கொள்கிறேன்" என்றார்.

மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் திரு. எஸ். ஜார்ஜ், இ.கா.ப. முன்னிலை வகித்துப் பேசுகையில், "கலாச்சாரம் மாறாமல் மலை வாழ்மக்களுக்கு அரசு உதவி செய்கிறது. மலைவாழ் மக்களை ஏமாற்றும் இடைத்தரகர்கள் மீது காவல்துறை நடவடிக்கை எடுக்கும்" என்றார்.

கொல்லிமலை ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு.பி. துரைசாமி, மலைவாழ் மக்கள் சார்பில் திருமதி கலாவதி, சட்டமன்ற உறுப்பினர் திரு.வி. இராமசாமி முன்னாள் மேலவை உறுப்பினர் பெரியண்ணன் முதலானோர் பேசினார்கள்.

மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு வீ. பெ. துரைசாமி அவர்கள் விழாவினைத் துவக்கி வைத்தும், பல்துறைக் கண்காட்சியைத் திறந்து வைத்தும் உரையாற்றுகையில், "இந்த விழா அமைவதற்கு மூலகாரணமாக இருந்தவர் முதல்வர் கலைஞர் அவர்கள். அன்று வல்வில் ஓரியைத் தேடி வந்து உதவி பெற்றார்கள், ஆனால் இன்றோ தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் கேட்காமலேயே உதவி புரிந்து வருகிறார்கள்" என்று கூறிய அவர், சாலை வசதிகள் போடுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், பச்சை மலை, கொல்லிமலை ஆகியவற்றை இணைக்க



உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும், நாமக்கல் வட்டம் மூன்றாகப் பிரிக்கப்படும்" என்றும் குறிப்பிட்டார்.

மாலையில் கலை நிகழ்ச்சி, கவியரங்கம், கிராமியக் கலை நிகழ்ச்சி, திரைப்படம் முதலானவை நிகழ்ந்தன.

விழா இறுதியில் சுற்றுலா அலுவலர் திரு எஸ். சதாசிவம் நன்றி கூறினார்.

மூன்றாம் நாள் (2.8.89) காலை; வழக்காடு மன்ற நிகழ்ச்சி நடைபெற்றது. அண்ணா போக்குவரத்துக் கழகக் குழுவினரின் இன்னிசையும் நடைபெற்றது. மாலை நிகழ்ச்சிக்கு வந்திருந்தோரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு சுர்ஜித் கே. சவுத்திரி இ.ஆ.ப., வரவேற்றார்.

விழாவுக்குத் தலைமை வகித்து மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு பொன். முத்துராமலிங்கம் அவர்கள் பேசுகையில், "வல்வில் ஓரி வாழ்க்கை மற்றவர்கட்குப் புத்துணர்ச்சி ஏற்படுத்த வேண்டுமென்று முதல்வர் கலைஞர் அவர்கள் விரும்பி விழா எடுத்தார்கள். இங்கு அரசு செய்யும் நற்பணிகள் பற்றிக் கண்காட்சி வைக்கப்பட்டுள்ளது. பேரறிஞர் அண்ணா அவர்கள் தெருக்கோடி மக்களுக் காகப் பாடுபட்டார். அதே வழியில் கலைஞர் அவர்களும் அந்த மக்கள் பயன் பெறத் திட்டங்கள் தீட்டிச் செயல்பட்டு வருகிறார்கள். ஏழை மக்கள் பயன் அடைய வேண்டுமென்பது தான் அரசின் இலட்சியம் ஆகும்" என்றார்.

சட்டமன்ற உறுப்பினர்கள் திரு கே. ஆர். ஜி. தனபாலன், திரு எஸ்.ஆர். சிவலிங்கம், திரு ஏ.எம். இராமசாமி, திரு எம். சீரங்கன், திரு ஏ. சுப்பு, திரு பி. வெங்கடாசலம் ஆகியோர் உரையாற்றினார்கள். மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் திரு வி.பெ. துரைசாமி அவர்கள் முன்னிலை வகித்துப் பேசினார்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு வீரபாண்டி எஸ். ஆறுமுகம் அவர்கள் சிறப்புரையாற்றிப் பேசுகையில், "மலைவாழ் மக்கள் தங்களுக்குச் சாலை வசதி பற்றி, வரும் அக்டோபர் மாதத்திற்குள் கருத்துக்களைத் தெரிவித்தால், அதன் அடிப்படையில் சாலை வசதிகள் செய்து கொடுக்கப்படும்" என்றார். மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர், அரசின் நல வாழ்வுத் திட்டங்களின் அடிப்படையில் பல்வேறு உதவிகளை மலைவாழ் மக்களுக்கு வழங்கினார்.

விழா இறுதியில் சேலம் மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர், திரு வை. புன்னியமூர்த்தி நன்றி கூறினார்.

-நமது செய்தியாளர்



## தமிழ்நாடு அரசு

*செய்தி & சுற்றுலாத்துறை-அரசின் பல்வேறு துறைகள் வெளியிடும் ஏடுகள் 'தமிழரசு' ஏட்டுடன் ஒருங்கிணைக்கப்படுதல்-ஆணை பிறப்பித்தல்.*

### செய்தி-சுற்றுலாத் (தமிழரசு) துறை

அரசாணை நிலை எண். 253 நாள் 14-6-1989.

அரசாணை நிலை எண். 586 சமூகநலம் (செய்தி & விளம்பரத் துறை நாள். 20-6-70.

**ஆணை:**

பார்வையில் கண்டுள்ள அரசாணையின்படி அரசின் பல்வேறு துறைகளால் வெளியிடப்பட்டு வந்த 'தமிழ்நாடு செய்தி', 'சீரணி', 'இண்ட்காம்' போன்ற ஏடுகள் அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டு அரசின் அதிகாரபூர்வ ஏடாக 'தமிழரசு' என்ற பெயரில் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிடப்பட்டு வருகின்றது. இந்து அறநிலையத்துறையின் 'திருக்கோயில்' என்ற ஏடு மட்டும் அதன் தனித்தன்மை கருதி விதிவிலக்கு அளிக்கப்பட்டு தனி ஏடாக வெளியிடப்பட்டு வருகின்றது. 'தமிழரசு' ஏடு சிறப்பாக வெளியிடப்பட வேண்டுமென்பதால் அதற்காகவே தனியாக அச்சகம் உருவாக்கப்பட்டது. எனினும் காலப்போக்கில் விளையாட்டு மடல் (இளைஞர் அணி மற்றும் விளையாட்டுத் துறை), உழைப்பவர் உலகம் (தொழிலாளர் நலத் துறை), தமிழகக் கல்வி (கல்வித்துறை), கோழி கூவுது (டாப்கோ), கிராம வளர்ச்சி (கிராம வளர்ச்சித்துறை), போன்ற ஏடுகள் அரசின் பல்வேறு துறைகளின் உதவியுடன் வெளிவரத் தொடங்கிவிட்டன.

2. அரசின் அதிகாரப்பூர்வ ஏடாகத் 'தமிழரசு' வெளிவந்து கொண்டு இருப்பதால், மற்ற ஏடுகளையெல்லாம் 'தமிழரசு' ஏட்டுடன் ஒருங்கிணைத்து அரசின் செய்திகளும், சாதனைகளும் 'தமிழரசு' வாயிலாகவே வெளியிடப்பட வேண்டுமென அரசு முடிவெடுத்துள்ளது.

3. இந்து அறநிலையத்துறை வெளியிடும் 'திருக்கோயில்' தவிர பிற ஏடுகள் அனைத்தும் 'தமிழரசு' ஏட்டுடன் இவ்வரசாணை மூலம் இணைக்கப்படுகின்றன.

4. அரசுத் துறைகளால் வெளியிடப்படும் பிற ஏடுகளின் ஆசிரியர்களும் துறையினரும் செய்தி - மக்கள் தொடர்புத்துறை இயக்குநரோடு தொடர்பு கொண்டு தமது துறைகளின் சாதனைகளையும், செய்திகளையும் 'தமிழரசு' ஏடு வெளியிட ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும் எனப் பணிக்கப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)



## முதன் முதலில் ...

இந்தியாவில் முதன் முதலாக நடந்த கள்ளுக் கடை மறியலை நடத்தியவர் தந்தை பெரியார்!

இந்தியாவில் முதன் முதலாக நடந்த வைக்கம் தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்திற்குத் தலைமை ஏற்று வெற்றி கண்டவர்,

காங்கிரஸ் பேரியக்கத்தில் போராட்ட வரலாற்றில் முதன் முதலாகத் தம் குடும்பத்துப் பெண்களையே ஈடுபடுத்தியவர்,

கதர் மூட்டைகளைத் தோளில் சுமந்து விற்றவர்,

தம் தோட்டத்திலிருந்து கள் கொடுக்கும் 500 தென்னை மரங்களை வெட்டி வீழ்த்தியவர்,

ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டு ஐம்பதாயிரம் ரூபாயை இழந்தவர் தந்தை பெரியார்.



- ஆடம்பரமும், சுதந்திரமும் ஒன்றாகாது. நம்முடைய நிதி நிலவரத்திற்கு ஏற்றபடிதான் வாழ்க்கை நடத்த வேண்டும்.
- சுயராஜ்யம் என்பது, இந்தியாவில் வசிக்கும் ஒவ்வொரு பிரஜையும் தன் சொந்தச் சகோதரனாகவும், சகோதரியாகவும் குறிக்கிற தன்மையாகும்.
- சுயநலம், பேராசை, கோழைத்தனம் முதலானவைதான் நம் சுதந்திரத்தை இழக்கச் செய்த ஜன்மச் சத்ருக்கள்.



## வெள்ளையனே வெளியேறு!

ஆகஸ்டு-8 தீர்மானம் என்ற இந்தியாவின் வரலாற்றிலும் உலக வரலாற்றிலும் பொறிக்கப்பட்ட "வெள்ளையனே வெளியேறு" என்னும் தீர்மானம் 1942-ஆம் ஆண்டு பம்பாயில் காங்கிரஸ் பெருங்குழுவில் கொண்டுவரப்பட்டது. அந்தத் தீர்மானத்தை முன்மொழிந்தவர் யார் தெரியுமா?

பண்டித ஜவகர்லால் நேரு.

அந்தத் தீர்மானத்தை வழிமொழிந்து பேசியவர் சர்தார் வல்லபாய் படேல்

## தாழ்த்தப்பட்ட/பழங்குடியினருக்கு மூன்று மாதங்களில் வேலை வாய்ப்பளிக்க சிறப்புத் திட்டம்



தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு அரசுப் பணிகளிலும், அரசு நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களிலும், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் போன்றவற்றிலும் வேலை வாய்ப்புகளில் இட ஒதுக்கீடு வழங்கும் முக்கிய நோக்கத்தின் அடிப்படையிலும், அதன்மூலம் அரசியலமைப்பில் கண்டுள்ளவாறு அரசுப் பணிகளில் அவர்களது பிரதிநிதித்துவத்தை 18% அளவிற்கு உயர்த்துவதற்காகவும், மற்றும் இந்த மக்களை சமூகப் பொருளாதார அடிப்படையில் மேம்படுத்துவதற்காகவும், சமூகத்தில் அவர்களுக்கென்று ஓர் இடம் பெறுவதற்கு வழி செய்யவும், அரசு, தீவிர பரிசீலனைக்குப்பின் கீழ்க்கண்ட ஆணையினைப் பிறப்பித்துள்ளது.

(1) இம் மாநிலத்தில், குருப் ஏ, பி, சி, மற்றும் டி-ன் கீழுள்ள பணிகளுக்கென நேர்முகப் பணியமர்த்துதலில் தாழ்த்தப் குடியினர் நபர் இல்லாவிட்டாலோ அல்லது பணியிடங்களை நிரப்பாமல் காலியாக விட்டு வைத்தால் நிர்வாகத்தில் சிரமங்கள் ஏற்படும் நிலை தெரிந்தாலோ, அரசு பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையினால் மட்டும் இந்த இட ஒதுக்கீடு இடத்திலிருந்து விதி விலக்கு அளிக்கப்படும்.

**வேலைவாய்ப்பளிக்கச் சிறப்புத் திட்டம்:**

18% இட ஒதுக்கீட்டு அளவை எட்டுமாறு தாழ்த்தப்பட்ட/பழங்குடியினருக்காக ஒதுக்கப்பட்ட எல்லா காலியிடங்களும் 15.10.89க்குள், மூன்று மாதக் காலத்தில், சிறப்பு திட்டமாக நிறைவேற்றி நிரப்பப்படும். காலியிடங்கள் என்பது பின்வருமாறு கணக்கிடப்படும்.

நீட்டிக்கப்பட்ட இடஒதுக்கீடு என்பது 1.4.89 அன்று கணக்கிடப்பட்டு 1.4.89

பட்டோர்/பழங்குடியினருக்காக ஒதுக்கியுள்ள இடங்களை ரத்து செய்வது தடை செய்யப்படுகிறது.

(2) இந்தத் தடை 1.4.89லிருந்து அமலுக்கு வருகிறது. இருப்பினும், ஒரு சில குருப் ஏ & பி பணிகளைப் பொறுத்தவரையில் தகுதியுள்ள தாழ்த்தப்பட்ட/பழங்


அன்றே அது தொடர்பான பட்டியலில் இறுதியாக்கம் பெறும். தாழ்த்தப்பட்ட/பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்டு இட ஒதுக்கீடு ரத்து செய்யப்படாமல் இருந்தாலோ அல்லது ரத்து செய்யப்பட்ட பின்னரும் தகுதியுள்ள ஏழை வகுப்பினர் இல்லாததாலோ காலியாக உள்ள பணியிடங்கள் 1.4.89 பட்டியலில் சேர்க்கப்படாமல் இருந்தால் இதில் சேர்க்கப்படும்.

(4) மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் இந்த இடஒதுக்கீடு ரத்து செயல்படுத்தப்படும்.

(5) இந்த வேலைவாய்ப்புச் சிறப்புத் திட்டத்தின்போது, வேலைவாய்ப்பகங்களிலிருந்து பெயர்கள் பெறப்படுவதில் வரம்பினைத் தளர்த்துவது கீழ்க்கண்டவாறு அமையும்:

"பெயர்களுக்காக வேண்டுகோள் பெறப்பட்டு ஏழு நாட்களுக்குள் வேலைவாய்ப்பகம் பதில் அளிக்காமலிருந்தாலோ, வேலைவாய்ப்பகம் பரிந்துரைக்கும் நபர்கள் போதுமான அளவிற்கு இல்லாமலிருந்தாலோ, பணியமர்த்தும் பொறுப்புள்ளோர் தாழ்த்தப்பட்ட/பழங்குடியினரிடமிருந்து மட்டும் விண்ணப்பங்களை வரவேற்று வெளியிலிருந்து பெயர்கள் பெற ஏதுவாக விளம்பரம் செய்யலாம். பணிகளுக்கான நேர்முகத் தேர்வின்போது, மாநிலத்தில் ஏதாவதொரு வேலைவாய்ப்பகத்தில் பதிவு செய்ததன் விவரம், பதிவு எண் ஆகியவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

# படமும் செய்தியும்



காவிரி நதிநீர்ப் பங்கீடு குறித்து சட்டமன்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் 27-7-89 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.



தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்கள் கூட்டம் 2-8-89 அன்று மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் தலைமையில் சென்னையில் நடைபெற்றது. மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களும் கலந்து கொண்டார்.




மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் சேப்பாக்கம் எம்.ஏ. சிதம்பரம் கிரிக்கெட் மைதானத்தில் 'அண்ணா அரங்கத்தை' (அண்ணா பெவிலியன்) 1-8-89 அன்று திறந்து வைத்தார்.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் வாகனப் புகைக் கண்காணிப்புத் திட்டத்தை 1-8-89 அன்று சென்னையில் நடத்தியது. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. மு. கண்ணப்பன் அவர்கள் வாகனப் புகை அளவைக் கண்காணிக்கும் கருவியை இயக்கி வைத்தார். விழாவிற்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி அவர்கள் தலைமை ஏற்றார்.



127078

பார்த்தோம் படித்தோம் .

## "தமிழரசு ஒரு கருத்துப் பெட்டகம்!"

16.7.89 இதழ் அட்டை - பெருந் தலைவர் காமராஜரின் திருவுருவத்தை அலங் கரித்தது. பாராட்டுக்கள்.

—டி. ரமேஷ் துளசி,
பரங்கிப்பேட்டை.

(இதேபோல பாராட்டி எழுதியிருப்பவர்கள்: ஆர்.ஜி. துரைராஜூ, கீழப்பழுவூர்; கே.எஸ். மாசிலாமணி, கேத்தாண்டபட்டி; ஆ.வே. உதயசூரியன், மேற்பனைக்காடு கிழக்கு; எஸ்.ஏ. சாமி, கீரனூர்; ஜி. பாளையமுத்து, சென்னை-52)

புதிய சம்பள விகிதங்கள் பற்றிய அட்ட வணை தந்திருந்தீர்கள். குழம்பிக்கொண் டிருந்த எம் போன்ற அரசு ஊழியர்க்கு ஒரு நிலையான தெளிவைத் தந்தது.

ப.மு. முருகேசபாண்டியன்,
கரப்பாடி.
ஆர். அத்தியப்பன்,
சேலம்.

'காட்டு நாயக்கன்' பற்றிய கட்டுரை அருமை.

ஏ. கந்தசாமி,
திருப்பூர்.

'காட்டு நாயக்கன்' கட்டுரை மிகவும் பயனுள்ளதாக இருந்தது. ஒரு தனிப்பட்ட இனமக்களின் வரலாறு, வாழ்க்கை முறை, தொழில் பற்றித் தெரிந்து கொள்ள முடிந்தது.

கி. பாண்டியன்,
வத்தலக்குண்டு.

வண்ணதாசன் எழுதிய 'வேர்' சிறுகதை அருமையாக இருந்தது.

அ. பூபதிகடக்கரை,
பன்னிமேடு.

(இதேபோல் பாராட்டி எழுதியிருப் பவர்கள்: மு.க. வெற்றிவேல், உதயமார்த் தாண்டபுரம்; எஸ். பிரபாகரன், மேல பாலானந்தல்)

'தமிழரசு' அனைவரும் படித்துப் பயன் பெற வேண்டிய கருத்துப் பெட்டகம். 'தமிழரசு' நன்கு வளர்ச்சியுற எனது வாழ்த் துக்கள்.

டாக்டர். எஸ்.பி. வேலுசாமி,
கே.பி. சத்திரம்.

1970 முதல் இதுவரை தமிழரசில் வெளிவந்துள்ள வெண்பாக்களைத் தொகுத்து நூலாக வெளியிடலாம்.

கந்ததாசன்,
உடுத்தப்பள்ளம்.

'தமிழரசு' ஒவ்வொரு இதழும் தமிழ் மணம் கமழ்கிறது.

கே.ஆர். ரவீந்திரன்,
சென்னை-1.

தமிழக அரசின் நலத்திட்டங்களைச் சிறப்பாக விளக்கும் தமிழரசுக்கு என் உளங் கனிந்த நன்றி.

ஆர். சென்னியப்பன்
சென்னிமலை.

மாணவர் பக்கத்தில், சார்லி சாப்ளின் பற்றிய கட்டுரை பயனுள்ளதாக இருந்தது.

ஷம்மி குமார்,
வேலூர்.

முதல்வரின் முத்தான திட்டங்கள் அருமையிலும் அருமை.

பா.மா. வெங்கடாசலபதி,
பாப்பாங்காட்டூர்.

'கல்விக் கண் தந்த காமராஜர் கவிதை' நன்றாக இருந்தது.

கோ. நேரு,
ஏரவலம்.

'தமிழரசு' ஒவ்வொரு இதழும் என்னைக் கவர்கிறது.

துரை வேணுகோபால்,
பரங்கிப்பேட்டை.

மறைந்த இலங்கைத் தமிழர் தலைவர்கள் திரு. அமிர்தலிங்கம், திரு. யோகேசுவரன் ஆகியவர்களின் அஸ்தி, சென்னை மத்திய நூலகக் கட்டடத்தில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப் பட்டது. மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார் (27.7.89)



ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

/ அதி / நவீன / பருத்தி / வகைகள் /




உங்கள் ஆடை அணிகள் பொலிவுடன் விளங்குவதில் உங்களுக்கு அதிக விருப்பம். ஆகவேதான் உயிரோட்டமான வண்ணங்களின் உன்னத்தை உங்களுக்குக் கோ-ஆப்டெக்ஸ் பருத்தி வகைகளில் அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் — உங்கள் இனிய நேரங்களில்!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி
இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங் • பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DPR/1766/MS88/HTA

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23











